சோமேசர்

முதுமொழி வெண்பா

மூலமும் உரையும்

Published by

South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

October 1921.

O 1C5:V3
Fil

Reser

[Price, Wrapper, Re 1—8.

சோமேசர்

முதுமொழி வெண்பா

மூலமும் உரையும்.

(1921)



ஆசிரியர்

மாதவச் சிவஞான யோகிகள்.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

திராவிட மாபாடிய ஆசிரியராகிய

மாதவச் சிவஞான யோகிகள்

அருளிச்செய்த

சோமேசர் முதுமொழி வெண்பா

மூலமும்

சென்னைக் கிறித்தவ கலாசாலைத்

தமிழாசிரியர்

வா-மகாதேவ முதலியா ரவர்கள்

இயற்றிய

உரையும்.

திருநெல்வேலித்
தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிட்டெட்.
தன்மதிஷ்ட ஐப்பசிமீ.

தாலுரிமை
பதிவு செய்யப்பட்டுளது. } (1921) [விலை 1—12—0.

Published by
The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.,
Tinnevelly.

ஆசிரியர் வரலாறு.

எண்டிய வளனுடைப் பாண்டி நன்னாட்டில், கதிகரு தமிழ்வரு பொதியிலின் சாரலில், தேவமேசர்கள் வாழ்

பாவ நாசத்தைச் சார்ந்த விக்கிரம சிங்கபுரத்

அவதாரம் தில் எழு கால்வழிவரை ஆழிபோற் பரந்த

புலமை நிரம்புமா று அகத்தியனுர்பால் வரம்

பெற்ற பாம்பரைச் சைவ வேளாளர் குலத்தில், கல்வியுஞ் செல்வமும் ஒருங்கமையப் பெற்றுச் சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்து விளங்கிய ஆனந்தக் கூத்தர் என்பார்க்கு

நிலத்துமா னிடர்க்கே

புரிய தாகி புரைதமுன் பெரிது

முற்றுழி நீங்குவ தொன்றுமாம் வேட்கை

யென்னு மதனுக் கென்றும்வே ருகி

மனத்தெதாடு மனத்திலை மன்றப் பிணிக்குங்

கட்புல னுகாக் கனிவெனுங் கயிறு

வென்டா தின்றெடர் மேதகு பட்டு

முடிச்சென வொருகலி முன்பணி பெறவே

கழுநீய கழிபெருங் காதன்மிக் கொத்த

கற்பினும் பொற்பினுங் கன்மகள் பொன்மக

ளென்ன லாகு மில்லக் கிழத்தி' யாகிய

மயிலம்மைபார் மணி வயிற்றிருந்து ஏழாவது கால்வழியாக நற்றமிழ் நாடு முற்றிய தவத்தால் ஆசிரியர் திருவவ

* பொதியமலை என்பது பாண்டி நாட்டில் திருநெல்வேலி நில்லாறைச் சேர்ந்த அம்பாசமுத்திரத்திற்கு ஏழுமைவில் உள்

தாரஞ் செய்து முக்களாலிங்கரென்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று, 'விளையும் பயிர் முளையிற் றெரியும்' என்பதற் கொப்ப அன்பும் அருளும் வாய்மையுந் தூய்மையும் பருவத்திற் பன்மடங்கு கொண்ட மதிநுட்பமும் உடையராய்ப் பெற்றார்க்கும் உற்றார்க்கும் அடங்கா மகிழ்ச்சி கந்து ஐந்தாவது ஆண்டடைந்தனர். அவ்வாண்டில் விததியாரம்பஞ் செய்யப் பெற்றுப் பாடசாலை சென்று வருவாராயினர்.

வித்தியாரம்பம்

அவ்வாறு சென்று வருங்கால் ஒருநாள் திருவாவடு துறையினின்றும் போந்து பரமன் எழுந்தருள்கின்ற பதிபல புக்கு வணங்கி விக்கிரமசிங்கபுரத்து வீதிவழி வந்த சில முனிவர்களைக் கண்டு விழ்ந்திறைஞ்சி முகமன் வழங்கித் தமது இல்லம் அழைத்துச் சென்று அருந்ததி யொத்த தமது அன்னையாரை அவர்கட்குத் திருவமுது அருத்துமாறு இரந்துகூற, அவ் வம்மையார் அதற்கு ஒருப்பட்டு அவர்களை இனிது அருத்த அதைக் கண்டு ஞானவிருத்தராகிய ஆசிரியர்,

திருவாவடு துறையினின்றும் போந்த முனிவர்களை யுபசரித்தல்

அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுக்

திருந்த வழுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
யானந்தக் கூத்தாகமெழுத் தொண்டுசெயு
மானந்தவாத மயில்'

என்னுஞ் செய்யுளை ஆண்டுக் கூறினர். அதன்பின் விடுபுக்க ஆனந்தக் கூத்தர் இவ்வருஞ்செயல் கேட்டுப்பேரின்பப் பரவையுட் படிந்து அரும்பெறற் புதல்வனை மார்புறத் தழீஇ 'கருணினிற் றிருவுடைக் காதல! திருவழுது செய்து சென்ற முனிவர்களை எனக்குக் காட்டுக. யானுய்ய அவர்கள் அடிகளிற் றுழ்தல் வேண்டும்' என, ஆசிரியர்

7

தமது தந்தையாரை அவர்கள் இருந்துழி அணைத்துச் செல்ல, அவரும் எட்டுறுப்பும் ஐந்துறுப்பும் நிலந் தோய வீழ்ந்து வணங்கி நின்றுழி அதி தீவிர பக்குவமுடையராகிய ஆசிரியர் தந்தை தாயாரை நீத்து அறவாழி யந்தணன் றுள் சேர்ந்து பிற வாழி நீந்தப் பரிந்து அம் முனிவர்களோடு தாஞ் செல்ல மனங் கொண்ட குறிப்பினை

தீக்ஷையும் சந்நியாசமும் பெறுதல்

யுணர்த்தச் சற்புத்திரைப் பிரியச் சற்றும் மனமின்றியும் அதற்கு ஒருப்பட்டு அவரை அங்கு விட்டுத் தமியராய்த் திருப்பி விடு புக்கார். ஆசிரியர் அம் முனிவர்களோடு வழிக்கொண்டு இடைப்பட்ட பல சிவதலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறை யடைந்து மடாலயத்தினுட் புகுந்து ஆதீன பரமாசாரியராகிய சுமர்ரிவாய மூர்த்திகளை

இறைஞ்சி அன்னர் அருமேணைக்குற்று, ஒடுக்கத்தின்க
ணெழுந்தருளியிருந்த ஞானசாரியராகிய பின் வேலப்ப

தேசிகரைக் கண்கள் களிகூடக்கண்டு வணங்கிச் சின்னாளில் அந்த ஞான தேசிகர்பாற் சிவதீக்ஷையும் சைவசாஸ்திரமும் சிவஞானயோகிக ளென்னும் தீக்ஷாநாமமும் பெற்று மெய்கண்ட சாத்திர பண்டார சாத்திரங்களைக் கற்று வட நூற் கடலுந் தென்னூற் கடலும் எல்லைகண் டுணர்ந்தனர்.

ஆசிரியருக்கு உபதேசகுரு வேலப்பதேசிகரென்பது,

'எவ்வெவ்வகோட் படுபொருளு மஞ்செழுத்தி
னடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை
யோதுமுறை விளங்கத் தோற்றி
யவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன்
செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்றன் சென்னி சேர்ப்பாம்'

8

னென்னுங் காஞ்சிப் புராணச் செய்யுளா னறிதற்பாற்று.

ஆசிரியர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுக ளென்பதற்குப் பல சான்றுக ளுண்டு. அவற்றுட் சில கூறுதும் :—

காலம்

(1) ஈண்டுப் பட்டத்தெழுந் தருளியிராநிற்கும் மகா சந்நிதானத்திற்கு அறுவர்க்கு முன் ஆண்டு எழுந்தருளி யிருந்த பின் வேலப்ப தேசிக ஞானசாரியர் மாணவர் என்பது.

(2) சற்றேறக் குறைய மூப்ப தாண்டுகட்கு முன்னர்ச் சென்னைக்கட் டமிழிலக்கணத்தைப் பன்னிலங்களின் விதைத்துப் பயிர் செய்த இராமாநுஜ கவிராய ரென்பார் ஆசிரியர் மாணாக்கர் பன்னிருவருள் இராமநாத புரம் சோமசுந்தரம் பிள்ளையவர்கள்பாற் கல்வி பயின்றன ரென்பது.

(3) விசுவாவசு ஆண்டு எங்கு நிறை நிலை யடைந்தன ரென்பது. இது சென்ற விசுவாவசுவிற்கு மூன்றும் விசுவாவசுவாதல் வேண்டுமாகலின், கி. பி. 1785 ஆண் டென்க.

திருநாவுக்கரசு நாயனார் கல்லைத் தெப்பமாகக்கொண்டு கடலினின்றுங் கரையேறிய திருப்பாதிரிப்புலியூர்ச் சிவாலயத்தின்கட் புலவர் சிலவரும் செல்வர் பலவருங் கூடிய அவையில் நாறு பொன்கொண்ட கிழி யொன்று தூக்கி, 'கரையேற விட்ட முதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ'

பாவன்மையும் பிரதிபையும்

என்னும் ஈற்றடி தந்து 'பாட்டினை நிரப்புநர் இக் கிழி பெறுக' என்றனர். ஆண்டு அங்கண் யாத்திரை வந்து எழுந்தருளிய ஆசிரியர் அச்செய்தி யறிந்து ஓ ரந்தணனை அக் கிழி கொள்ளுமாறு ஏவி,

9

'வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வருந்தினைவல் லின
[மென்றாலு
முரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கி
[லென்னா
நரையேற விட்டமுத னாளவனாக் கொண்டுநறும் புலிசை
[மேவுங்
கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண்
[டாமோ'

என்றொரு நொடிப் போதிற் பாட்டினை நிறைத்தன ரென்ப.

ஒருநாள் மடத்துச் சுயம்பாகி ஆசிரியரை யணுகி 'இன்று யான் என்ன கறி சமைப்பது?' என்றவுடன் தட்டொன்று மின்றி,

'சற்றே துவையலரை தம்பியொரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை—குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி'

என்ற வெண்பாவைக் கூறினரென்ப. ஆசிரியர் நிலைக்குத் தக்க ஊண் கொண்டனர் என்பதும் இன்மொழி வழங்கினரென்பதும் இதனால் விளங்குமாறு காண்க.

ஆசிரியர் காஞ்சிமாநகரத்து வீற்றிருந்துழி வைணவரொருசிலர் கம்பரையும் அவர் கவித் திறத்தையும் பலபடி புகழ்ந்து பேசித் தமிழ் மொழிக்கட் கம்பராமாயணத்தைப் போல்வதொரு காவியம் வேறின்றெனத் தருக்கிக் கூற, ஆசிரியர் அக் கம்பராமாயணத்து மங்கலமாகிய

'நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே'

10

என்னுஞ் செய்யுண் முற்றுங் குற்றமுடைத்தெனத் தடை பல கூற, அவற்றொன்றற்கேனும் விடை கூற வியலாது அவ்வைணவர்கள் விழிக்கத் தாமே அவை யாவற்றிற்கும் விடை கூறினரென்ப. அத் தடை விடைகளடங்கிய நூல் 'கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி' என்னும் பெயரொடு உலவுதலறிக.

ஆசிரியர் காஞ்சிமாநகர் வீற்றிருப்புழிச் சில புலவர்கள் ஒருங்குகூடி ஆசிரியரை நோக்கி நீவிர் காஞ்சிப் புராணஞ் செய்யப் புக்கு அதன்கட் கடவுள் வாழ்த்துள்,

'சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளு
மறைக்கோவுந் தழல்கால் சூல
மங்கேந்து மம்மானுந் சத்தமது
தொழிறலேநின் ரூற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
விருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்'

என்னுஞ் சபாநாயகர் துதியை முன்னர் அமைத்து,

'தணந்தபெருந் துயர்க்கடன்மீக் கூர்தலினுன்
மலைபயந்த தாள மூரற்
கணங்குழையாள் புரிபூசை முடிவளவுங்
தரியாம விடையே கம்பை
யணங்கினைத்து தெனவிடுத்து வலிந்திறுகத்
தழீஇக்கொள்ள வமையாக் காதன்
மணந்தருளிக் குறிபூண்ட வொருமாவிற்
பெருமானே வணக்கஞ் செய்வாம்'

எனத் தலநாயகராகிய ஏகாம்பரநாதர் துதியைப் பின்னர் வைத்தது தவறென்று சாதிப்ப ஆசிரியர் தமது மாணாக்கனைக் கொண்டு அவர்களைப் பங்கப்படுத்தலே தகுதியெனத்

11

திருவுளத் தமைத்து ஆண்டுச் சென்னைக்கண் வீற்றிருந்த உச்சிமேற் கொளத்தகு கச்சியப்ப முனிவரை ஆங்கு வரு

வித்து ஏகாம்பரநாத ராலய மண்டபத்திற் போலை யொன்று கூட்டித் தாம் எலியவாறு கச்சியப்ப முனிவர் பிரசங்கஞ் செய்யப் புகுமுன் அத் தலத்து ஓதுவாரைத் தேவாரப் பதிக மொன்றோதுமாறு பணிக்க அவர் 'திருச் சிற்றம்பலம்' என்று தொடங்கினர். அங்கு அவையோரை "ஓதுவார் 'திருச்சிற்றம்பலம்' என்ற தமக்கு உடன் பாடோ? இப் பிருதிவித் தலத்தில் தேவாரம் ஓதப்புகுங் கால் ஏன் 'பிருதிவியம்பலம்' எனத் தொடங்குமாறு செய்வித்த லாகாது?" என வினவுவித்துப் புலவர்களைத் தலை வணக்கினர் என்ப.

ஆசிரியர் அருளிச்செய்த நூல்களாவன :—

இலக்கணம்.

(1) தொல்காப்பியச் சூத்திர விருத்தி.

(2) இலக்கண விளக்கச் சூறாவளி.

(3) சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தி யுரைத் திருத்தம்.

இலக்கியம்.

(1) காஞ்சிப்புராணம் (முதற் காண்டம்).

(2) சோமேசர் முதுமொழி வெண்பா.

(3) திருவேகம்பரந்தாதி.

(4) திருமுல்லைவாயிலந்தாதி.

(5 கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

(6). இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

(7) கச்சியானந்தருத்ரேசர் பதிகம்.

(8) திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு.

12

(9) செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்.

(10) அழுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

(11) செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம்.

(12) திருத்தொண்டர் திருநாமக்கோவை.

(13) நமச்சிவாய மூர்த்திகண்மாலை முதலியன.

தருக்கம்.

இயற்றிய நூல்கள்

(14) தருக்க சங்கிரகமும் அன்னம் பட்டீயம் என்னுந் தருக்க சங்கிரக தீபிகையும்.

தத்துவம்.

(1) சிவஞானபோத மகாபாஷ்யம்.

(2) சிவஞானபோதச் சிற்றுரை.

(3) சிவஞான சித்தியார் (சுபக்ஷம்) உரை.

(4) சித்தாந்தப் பிரகாசிகை.

(5) 'எடுத்து' என்னுஞ் சொல்லுக் கிட்ட வயிரக் குப்பாயம்.

(6) சிவசமவாத வுரை மறுப்பு.

சமயம்.

(1) சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு.

(2) சிவதத்துவ விவேகம்.

சம்பிரதாயம்.

1. திருவாவடுதுறை மரபட்டவரீண மறுப்பின் மறுப்பு.

இவ்வாறு பல நூல்களையும் பலவுரைகளையும் பல கண்டனங்களைபுஞ் செய்து தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுந் தருக்கநூல் தத்துவநூல் சமயநூல் முதலியனவும் நன்மாணாக்கர்க்குப் போதித்து 'வான் செய்த வுதவிக்கு வையக மென் செய்யும்' என்றவாறு மாறில்லாத பேருத

வியை இவ் வையகத்திற்குச் செய்த 'ஆதீன குலதெய்வ' மென ஆன்றோர் போற்றுந் திராவிட மகாபாஷ்யங் நிறைநிலை கண்ட ஆசிரியர் சித்திரைமதி ஆயிலிய யடைதல் நகூடத்திரத்திற் சிவபரிபூரண தசை யடைந்தனர்.

இதனை,

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
றிருமேனி நீங்கு தினம்.

என்னும் வெண்பாவான றிக.

சிவஞான சுவாமிகள் சேவடி வாழ்க.

உரையாசிரியர் வேண்டுகோள்.

இவ்வுரைக்கண் அச்சுப்பிழை தோன்றினும் வேறு குறை காணப்படினும் அறிவுடையுலகம் அவற்றைப் பாராட்டாது பொறுக்கவென வேண்டுகின்றனன்.

சென்னை,
21—10—1921.

வா. மு.

திருத்தங்கள்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.

3	7	அழுதாம்பிகைப்	அழுதாம்பிகை
7	11	என்னும்	என்றும்
12	13	ஒரு சொற்றன்மைப் பட்டுப்	ஒருசொற்றன்மைப் படப்
12	24	என்றும்	என்னும்
16	11	பரிமேழகியார்	பழமேலழகியார்
17	16	மக்கள்	தம் மக்கள்
20	6	மணநது	மணந்து
22	5	ஸவர்நம்	ஸ்வர்நம்
28	1	மூலேவோலே	மூலவோலே
28	22	நா இழந்தான்	நா அயர்ந்தான்
29	2	செம்மாம்பா	செம்மாப்பர்
29	7	நாராணனே	நாரணனே
29	14	வாதாராயணனுங்	வாதராயணனுங்
31	17	பிறனிலவிழையாமை	பிறனில் விழையாமை
31	19	சோமேசா	சோமேசா
40	16	சொல்லககேட்ட	சொல்லக்கேட்ட
42	14	பன்டை	பண்டை
44	22	எச்சவுமமையும்	எச்சவும்மையும்
46	27	ஒன்பதின்மருக்குங்	ஒன்பதின்மருக்கும்
51	13	பிடர்பிடித்துத்	பிடர்பிடித்துத்,
67	16	ழழிவகற்று	ழறிவகற்று
77	27	நரைந்தலையான்	ஈரைந்தலையான்
87	20	வருலேன்	வருவேன்
123	28	உட்கார்ந்தார்	உட்காந்தார்
160	11	துளவீழ்ந்தக், பழங்குடி	துள்வீழ்ந்தக், பழங்குடி
182	1	சற்றுமிலீர்	சற்றுமிலீ
184	21	அவன்	அவன்
190	5	சூழ்ச்சியை	சூம்சியை

உ

திருச்சிற்றம்பலம்

குளத்தூர்ச்

சோமேசர் முதுமொழி வெண்பா.

காப்பு.

மதுவளரும் பூஞ்சடில மல்குசோ மேசர்
முதுமொழிவெண் பாவை மொழியப்—பொதுளு
மடம்பிடுங்கி யன்பர்க்கு வான்வீ டளிக்குங்
கடம்பொழி முக்கட் களிறு.

எடுத்துக்கொண்ட நூலிடையூறின்றி இனிது முடியுமாறு விநாயக வணக்கங் கூறுகின்றார்.

(இதன் பொருள்) மது வளரும் பூ சடிலம்—தேன் வளராநின்ற கோன்றைப் பூமாலை தரித்த சடையானது,

மல்கு—நிறைந்த, சோமேசர்—சோமேசரது, முதுமொழி வெண்பாவை—முதுமொழி வெண்பா என்கிற நூலை, மொழிய—(யான்) நன்கு இயம்ப, மடம் பிடுங்கி—அறியாமையை (வேரோடு) களைந்து, அன்பர்க்கு—(தன் திருவடிக்கண்) அன்பு வைத்தார்க்கு, வான் வீடு—(மற்றெல்லாவற்றிலும்) உயர்வுடைய முத்தியை, அளிக்கும்—அருள்கின்ற, கட்பொழி—மத நீரைப் பொழியும், முக்கண்

களிறு—மூன்று கண்களையுடைய யானைமுகன், பொதுளும்—(என் உள்ளத்தின்கண்) எழுந்தருளுவன் என்றவாறு.

தாமே பிரணவப்பொருளென்றுணர்ந்து உயிர்கள் தம்மையே வழிபட்டு எளிதின் உய்யுமாறு கருணைகொண்டு பிரணவ வடிவமாகிய கொன்றையைச் சடையிற் றரித்தவ ரென்பார் 'மதுவளரும் பூஞ்சடில மல்கு சோமேசர்' என்றும், தன்னை அன்பொடு வழிபடுவார்க்குப் பேரின்ப வீட்டையும் அளிக்கும் தயாநிதி என்பார் 'அன்பர்க்கு வான் வீடளிக்கும் களிறு' என்றும், அத்தகைய தயாநிதி தன் தந்தையின் தொடர்புடைய இந்நூல் இனிது முடியுமாறு என் உள்ளத்திலிருந்து உணர்த்தல் பெரிதன்றென்பார் 'சோமேசர் முதுமொழி வெண்பாவை மொழியப் பொதுளும்' என்றுங் கூறினரென்க.

'கடம்பொழிமுக் கட்களிறே காப்பு' என்பது பாடமாயின், பொதுளும் மடம் பிடுங்கி—நிறையும் அறியாமையை (வேரோடு)

களைந்து, அன்பர்க்கு வான் வீடு அளிக்கும்—(தன் திருவடிக்கண்) அன்புவைத்தார்க்கு உயர்வுடைய முத்தியை அருள்கின்ற, முக்கண் களிறே—மூன்று கண்களை யுடைய யானைமுகனே, காப்பு—காப்பாம்' என்றுரைத்துக் கொள்க; ஈண்டு ஏகாரம் பிரிநிலை. வான் வீடு—வானும் வீடும் என்றுமாம்.

கரும்பு பிடுங்குதல் யானைக்கு இயல்பாகலின், 'மடம் படுங்கி' என்றதன் பொருத்தங் காண்க. அந்தமில் இன்பத் தழிவில் வீடாகலின் 'வான் வீடு' என்றார்.

பூ, களிறு என்பன ஆகுபெயர். 'பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்' என்றிருத்தலின் 'பூஞ்சடிலம்' என்றார் யது.

'சோமேசர் முதுமொழிவெண்பா' என்னும் தொடர் மொழி 'சோமேசரது 'முதுமொழிவெண்பா' என விரியும்; இஃது ஆறாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர். 'சோமேசரது திருநாம சம்பந்தமுடைய முதுமொழி வெண்பா' என்பது பொருள்.

சோமேசர் முதுமொழி வெண்பா 3

'ஸோமேச' என்னும் வடமொழித் தொடர், ஸோம ஈச எனப் பிரிந்து, 'சந்திரனுக்கு இறைவன் என்பப் பொருள்படுமென்க. இது குணசந்தி பெற்ற தொடர். இனி, இத்தொடர் 'ஸ உமா ஈச' எனப் பிரிந்து, உமையோடு கூடிய இறைவன் எனப் பொருள்படுமாலோ வெனின், குளத்தூரொன்னும் இப்பதி

சந்திரனுக்கு அருள் புரிந்த திருப்பதி யாகலின், ஈண்டுப் படா தென விடுக்க. இந் நூலாசிரியருந் தாமியற்றிய அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழுள் 'தெளிக்குமெய்யன்பிலுல் வழிபட்ட நாளுனது செல்லலெய் தவிர்த்தளித்த, திருச்சோமநாதலூர்' என்றார். அப் பதியின்கண் தீர்த்தமும் 'சோமதீர்த்தம்' எனப்படுதலை, 'தேமலர்ச் சந்திர தீர்த்த மாடிநஞ், சோமநா தனுக்கலர் தூய்க்கு ளந்தையின், யாமமா யினும்வதிந் திருக்கப் பெற்றவர், காமனைக் காவனைக் காய வல்லரே' என்னுங் குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி விருத்தத்தா னறிக.

'முதுமொழி' என்பது பண்புத் தொகை நிலைத்தொடர்; 'முதுமையாகிய சொல்' என விரிதலின் [முதுமை—பழமை]. ஈண்டு இத் தொடர் திருக்குறட்பாவினைக் குறித்தமையின் அடையடுத்த வினையாகுபெய ரென்றுதல், பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யென்றுதல் இலக்கணங் கூறுப.

'முதுமொழி வெண்பா' என்பது 'முதுமொழியை யுடைய வெண்பா' என்றுதலின், இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன் றொக்க இதாதை என்க.

'வெண்பா' என்பது வெண்பாக்களாகிய நூலுக்குக் கருவி யாகுபெயராம்.

'சோமேசரே பாட்டுடைத்தலைவ ரென்றுணர்த்தல் வேண்டி ஒவ்வொரு பாவினும் 'சோமேசா!' என விளித்தா ரென்க. [இஃது ஆடூஉ முன்னிலை] இங்ஙனம் விளித்தல் ஒருவகைக் கவிமரபாம். தண்டலையார் சதகம், குமரேச சதகம், அறப்பளீசுர சதக முதலியவற்றுள்ளுங் கடவுண் முன்னிலை காண்க.

இனி, சோமேசர் என்பது தொண்டைநாட்டின்கணுள்ள 'குளத்தூர்' என்னும் சிவஸ்தலத்தில் திருக்கோயில் கொண்டருளும் பெருமானுர் திருநாமமென்றறிக. 'தென்குளத்தூர்' என்புழித் 'தெற்கு' என்பது இயைபின்மை நீக்கிய அடைமொழி எனக் கொள்க. இதனை வடநூலார் 'அயோகவியவச்சேதம்' என்ப. அன்றி, தென் அழகுமாம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுர் அருளிச்செய்த உத்தாவேதம் எனப் போற்றிக்கொள்ளப்பெறுவதாகிய திருக்குறளின்கணுள்ள நூற்றுமுப்பத்துமூன் றதிகாரங்களுள் அதிகாரத்திற் கொருபாட்டினைப் பின்னிரண்டடியினும், அப்பாட்டின் பொருளை இனிது விளக்குதற் கேற்ற கதையை முன்னிரண்டடியினும் அமைத்துச் சோமேசரை முன்னிலைப்படுத்து வெண்பாவின் யாத்ததொரு நூல் இது. ஆகலின், நீதிநூலாமென்க. ஒவ்வொரு பாவினும் இரண்டாமடியின் மூன்றுஞ்சீர் 'சோமேசா!' என் றோரிடமுறைபற்றி நிற்றல் காண்க.

நூல்.

1-ஆம் அதிகாரம்: கடவுள் வாழ்த்து.

சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வமீ யென்றெப்பாற்
சோர்விலடை யாற்றெளிக்தோஞ் சோமேசா—வோரில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (க)

அஃதாவது ஆசிரியர் தாம் வழிபடு கடவுளையேனும் எடுத்துக்

கொண்ட பொருளுக்கு எற்புடைக் கடவுளேயெனும் வாழ்த்துதல். இவ்வாழ்த்து அவ்விரண்டுமாம். வழிபடுகடவுள் என்றல் கூறுதே அமையும். சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களான் அறம், பொருள், இன்பம் என மூன்றுகிய உறுதிப்பொருட்கு அவற்றுன் அரி, அயன், அரன் என மூவராகிய சிவத்தொடு இயைபுண்மையின், அம் மூன்று பொருளையும் கூறப் புக்கார்க்கு அம் மூவரையும்

வாழ்த்துதல் முறைமையெனக்கொண்டு அம் மூவருமான சிவத்தை வாழ்த்துதலின் இஃது எற்புடைக் கடவுள் வாழ்த்துமாமென்க. மூவராகிய ஒரு முதலே வாழ்த்தின் அம் மூவரையும் வாழ்த்திய தாதலே 'மூவருக்குமு தற்பிறப்புநின் முக்குணக்கட லென்று முன், சேவடிக்கணி ருப்பர்சென்னி குவித்தசெங்கை பிரிக்கிலார், பூவெடுத்தவர் சென்னிவைத்திடு போதமுற்றவ ரம்மைநின், காவ லர்ப்பொதி தாளில்வைக்கவு மூவர்சென்னிக ளிக்குமே' என்னுஞ் ரங்காசாரியர் வாக்கு வற்புறுத்து மென்க.

1. (இ-ள்) சோமேசா—சந்திரனுக்கு அருள் புரிந்த இறைவ!—எழுத்து எல்லாம்—எழுத்துக்களெல்லாம் அகரம் முதல—அகரத்தை முதலாக வுடையன, (அதுபோல) உலகு,—ஆதிபகவன் முதற்று—ஆதிபகவனுகிய முதலை யுடைத்து, ஓரில்—(என்னும் பாவினை) ஆயின்; ஒப்பால்—உவமையாலும், சோர்வு இல் அடையால்—தவறில்

லாத அடைமொழியானும், (முறையே) சீர்கொள் இறை ஒன்று உண்டு (என்று)—சிறப்பைக்கொண்ட இறைவன் ஒருவன் உண்டு எனவும், அ தெய்வம் நீ என்று—அவ் விறைவன் நீயே எனவும், தெளிந்தோம்—(ஐயமின்றித்) தெளிவோம் (எ-று).

'எழுத்தெல்லாம்' என்பது அகரத்தை ஒழித்து 'முனிவர் வந்தார், அகத்தியரும் வந்தார்' என்புழிப்போல நின்ற தறிக. இதனை வடநூலார் வசிஷ்டமுனிநியாய மென்ப. தமிழெழுத் திற்கேயன்றி வடவெழுத்திற்கு முதலாதல் நோக்கி, 'எழுத்தெல் லாம்' என்றார். 'ஆதிபகவன்' ஆதிசத்தியையுடைய பகவன் என்னும் பொருட்டு; இவ் விரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் றொக்க தொகை வடநூன் முடிபாகலின் இயல்பாயிற் றென்க. இஃது எடுத்துக்காட்டுவமை; மறுபொருளுவமை யென்பது மது. வடமொழிவாணர் திருஷ்டாந்தாலங்காரம் என்ப; பிரதிவஸ்தூபமாலங்கார மென்பதும் அது. எடுத்துக்

காட்டுவமையாவது உவமான உவமேயங்களைத் தனித்தனி வாக்கி யங்களாக நிறுவி இஃதுவமானம் இஃதுவமேயம் என்பதுதோன்ற இடையில் 'அதுபோல' என்னும் உவம வுருபு கொடாது கூறுவ தென்ப. இலக்கண விளக்க முடையார் 'அகரமுதல வெழுத்

தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு' என்புழி இரண்டு பொருள் வேறு வேறு கூறிய தன்றி அகரமுதல வெழுத்தெல்லாம் அதுபோல என்றுணும், ஆதிபகவன் முதற்றே உலகு அதுபோல என்றுணும் ஒன்றுகத் துணியு மாற்றுன் உவமையும் பொருளும் நீதியின் நிறுவாமையின் அது வேறுபடவந்த உவமத் தோற்றமாய் இதன்பாற்படும் ; என்னை ? 'வேறுபடவந்த வுவமத்தோற்றங்— கூறிய மருங்கிற் சொள்வழிக் கொளாஅல்' [தொல். உவமவியல்— சூத். 33.] என்பவாகலின். மறுபொருளுவமை எனினும் எடுத் துக்காட்டுவமை எனினும் ஒக்கும்' என்றார்.

ஆசிரியர் பரிமேலழகர் அது தலைமைபற்றி வந்ததெனக்கொண்டு 'அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்ற முணர்தலானும் கொள்க' எனக்கூறி அதற்கேற்ப 'உலகென்ற தீண்டுயிர்க்கண் மேனின்றது. காணப்பட்ட வுலகத்தாற் காணப்படாத கடவுட் குண்மைகூற வேண்டுதலின் 'ஆதிபகவன் முதற்றே' என உல கின்மேல் வைத்துக் கூறினர். கூறினரேனும் உலகிற்கு முதலாதி பகவனென்பது கருத்தாகக் கொள்க' என முடித்தார். அகரத்திற் கும் ஆதிபகவற்கும் தலைமையே பொதுமை யென்பது அவர் கருத்தென்றுணர்க. இதனை வடமொழியாளர் 'ஆதிசாமான்யம்' என்ப. ஆசிரியர் நச்சினர்க்கினியர் அங்ஙனம் கொள்ளாது, நிறைவு பற்றி வந்ததெனக்கொண்டு 'மெய்யினியக்க மகாமொடு சிவணும்' [தொல். எழுத்து. மொழிமரபு— சூத். 13.] என்னும் சூத்திர வுரையில், 'இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் றன்மையாய் நிற்குமா

தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் றன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க்கெல்லா மொப்ப முடிந்தது. அகர முதல வென்னும் குறளான் அகரமாகிய முதலெயுடைய எழுத்துக்களெல் லாம் அதுபோல இறைவனுகிய முதலே யுடைத்துலகமென வள் ளுவனுர் உவமை கூறிய வாற்றுனும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யான்' எனக் கூறியவாற்றுனும் பிறநூல்க ளானும் உணர்க' எனக் கூறிப் போந்தார். அகரத்திற்கும் ஆதிபகவற்கும் நிறைவே பொதுமை என்பது அவர் கருத்தென் றுணர்க. இதனை 'ஆப்தி சாமாந்யம்' என்ப வடமொழியாளர். சீர் என்றது தோற்றக் கேடுக ளின்மையை. 'அகரமுதல வெழுத் தெல்லாம்' என்றதனை 'ஒப்பு' என்னும், 'ஆதி' என்றதனை 'அடை' என்றுங் கூறினுரென்றறிக. 'சோர்வில் அடை' என் றுர் 'பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என் பது கொண்டு மண்டுப் 'பகவன்' என்னுஞ் சொல் எத்தெய்வத் தைக் குறித்ததோ வென்றையுற்றுச் சோராமைக் கேதுவாகலின். 'சிவமெ னும்பொருளு மாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதாம்' எனச் சங்கராசாரியர் கூறியவாற்றுனும் பிறர் கூற்று னும் ஆதிசத்தி சிவத்திற்கே யுரித்தாதல் காண்க. தெளிந்தோம்— இது துணிவுபற்றி வந்த காலவழுவமைதி என்க.

2–ஆம் அதிகாரம் : வான்சிறப்பு.

நேய புகழ்த்துணையார் நீராட்டுங் கைதளர்த்துன்
றாயமுடி மேல்வீழ்த்தார் சோமேசா—வாயுங்கால்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். (உ)

அஃதாவது அக்கடவுளது ஆணையின் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம், பொருள், இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக்கூறுதல்.

2. (இ-ள்) சோமேசா—! ஆயுங்கால்—ஆராயுமிடத்து, வானம் வழங்காதெனின் — மழை பெய்யா

தாயின், வியன் உலகம்—அகன்ற உலகத்தின்கண், தானம் தவம் இரண்டும்—தானமும் தவமும் ஆகிய இரண்டறமும், தங்கா—உளவாகா,—(அதற்கு எடுத்துக்காட்டு அஃதாவது திருட்டாந்தம்)—நேயம் புகழ்த் துணையார்—அன்பினையுடைய புகழ்த்துணை நாயனார், நீர் ஆட்டும் கைதளர்ந்து — நீரை அபிஷேகம் செய்த கை சோர்ந்து, உன் தூய முடிமேல் வீழ்ந்தார்—உனது பரிசுத்தமான திருமுடியின்மேல் வீழ்ந்தனர் (எ. று).

தானமாவது அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழியிற் போகாமல் நிற்கும் பொருட்டு விரதங்களான் உண்டி சுருங்குதல் முதலியன. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன. மெய்ம் மறந்

தன்றி வீழாரென்பது தோன்ற 'நேயபுகழ்த்துணையார்' என்றார். நேயம்—நேசம். 'நேயபுகழ்த்துணையார்' எவ்வும் இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன்றொக்க தொகை நிலைத்தொடர் வடநூன் முடிபொத்து இயல்பாயிற்றென்க. 'தூயமுடி' என்றது ஊனடைந்த வுடம்புகொண்டு நினைத்தபோதெல்லாம். அன்பர்களுந் தீண்டற்கு ஒண்ணுமை தெரித்தற் கென்க. நேயமிக்குடையாராகலின் நினைத்தபோதெல்லாம் தீண்டலுஞ் செய்யாத திருமுடிமேல் மெய்ம்மறந்தமையின் வீழ்ந்தார் என்பது குறிப்பாதல் காண்க. இது வேற்றுப் பொருள் வைப்பணி. இந் நூலிற் பல பாக்கள் இவ் வணி கொண்டன. வேற்றுப் பொருள் வைப்பணியாவது பொதுப்பொருள் ஒன்றினைச் சிறப்புப் பொருள் ஒன்று கொண்டு விளக்குதல்.

கதை:—செருவிலிபுத்தூரின்கண் ஆதிசைவமாபில் அவதரித்த புகழ்த்துணை நாயனார் பன்னெடு நாள் மழை பெய்யாது பஞ்சம் மேலிட்டுழி, ஊணின்றியும் தங் கொள்கை விடாது சிவபூசை செய்யும்போது பசியால் அழிந்து மெய்ம்மறந்து தேவ

தேவன் திருமுடிமேல் வீழ்ந்தார். அந்நிலையில் நித்திரை வர, ஐயன் கனவின்கண் எழுந்தருளி, 'அன்ப! இப்பஞ்சம் நீங்கும் வரை உனக்கு நாடோறும் ஒரு காசு தருவன்; கொள்க' எனப் பணித்தனன். நாயனார் நாடோறும் பீடத்தின் கீழ் ஒரு காசு இருக்கக் கண்டு தமது திருத்தொண்டு வழாது நடத்திச் சிவனடிப் பேறு பெற்றார். [இது திருத்தொண்டர்புராணத் துளது]

ஆருடைய நம்பிகளும் தமது திருப்புத்தூர்த் தேவாரத்தில்,

அகத்தடிமைசெய்யு மந்தணன்முனரிசிற் புனல்கொண்டுவக்
தாட்டுகின்முன்
மிகத்தளர்வெய்திக் குடத்தைதும்முடிமேல் விழுத்திட்டு
நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற்படியும்வருமென் றெருகாசினை
நின்றநன்றிப்
புகழ்த்துணைகைபுகச் செய்துகந்தீர்பொழிலார் திருப்புத்தூர்ப்
புனிதனீரே'

என் றருளிச்செய்தவாறு காண்டறிக.

3-ஆம் அதிகாரம்: நீத்தார் பெருமை.

அத்திரவாக் காற்புத்தன் சென்னியறுத் தார்சண்பைச்
சுத்தனுர் தம்மன்பர் சோமேசா—நித்த
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (க)

அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை.

3. (இ-ள்) சோமேசா—! நித்தம்—என்றும் அழி
யாத, நிறைமொழி மாந்தர்—(பயன்) நிறைந்த மொழி
யினையுடைய துறந்தாரது, பெருமை — பெருமையை,
நிலத்து—நிலவுலகத்தின்கண், மறைமொழி—(அவர் ஆணை
யாகச் சொல்லிய) மந்திரங்களே, காட்டிவிடும்—கண்கூடா

கக்காட்டும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—சண்பைச் சுத்த னர்தம்—சீகாழிப் பிள்ளையாராகிய தூயவரது, அன்பர்—அன்பராகிய சம்பந்தசரணுலய சென்பார், அத்திரவாக் கால்—அத்திரமென்கிற திருவாக்கினுல், புத்தன்—புத்த நந்தி என்பவனுடைய, சென்னி அறுத்தார்—தலையை அறுத்து வீழ்த்தினர் (எ—று).

நிறைமொழியாவது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடு மொழி. காட்டுதல் பயனல் உணர்த்துதல். 'நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப' என்பர் ஆசிரியர் தொல்காப்பியனர். 'புறத்தார்க்குப் புலனுகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற் ருெடர்' என்பர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர். இவற்றுன் மறைமொழி என்பது மந்திரமாத லறிக. சம்பந்த சரணுலயர் புத்தன் தலையறுத்தற்கு ஓதிய 'புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச், சித்தத் தவர்க டெளிந்து தேறின, வித்தக நீறணி வார்வி னேப்பகைக், கத்திர மாவன வஞ்செ முத்துமே' என்னும் திருப்பாடலின்கண் 'அத்திரமாவன அஞ்செழுத்துமே' என்றிருத்தலின், அவ் வத்திரம் .என்னுஞ் சொற் பிரயோகத் தானே புத்தன் தலையறுத்தாரெனத் தெரித்தற்கு 'அத்திரவாக் கால்' என்ருர். திருத்தொண்டர்புராணத்தும், 'தலையுமெய் யும் அத்திரவாக்கதனு லன்ப ரறுத்ததுவும்' என்றிருத்தல் காண்க. 'அத்திரம்போலும் வாக்கால்' என விரிப்பினுமாம். பிள்ளை யார்க்கு ஆணவ மல பந்த மின்மையின், 'சுத்தனுர்' என்ருர். 'ஆர்' விகுதி உயர்வுபற்றி வந்த தென்க.

கதை:—ஸ்ரீ. ஞானசம்பந்தப்பிள்ளையார் திருத்தெளிச்சேரியைத் தரிசித்துப் பௌத்தர்கள் வாழ்ந்த போதிமங்கையைச் சமீபித்தார். திருச்சின்னங்கள் முழங்கின. பிள்ளையார் வரவறிந்த சிவனடியார் ஆரோஷஞ் செய்யப் பொறுத பௌத்தர்கள் தண்

டப் புத்தநந்தி என்னும் பிடகநூல் வல்லோன் சிவனடியார்களை நோக்கி 'எம்மை வாதின் வென்றன்றே திருச்சின்னம் முழக்கல் வேண்டும்?' என்று விலக்கினன். பிள்ளையார் 'அவன் வாதம் செய்வது காண்போம்' என, அவன் வாதத்திற்கு வருமுன் தேவாரபாசுரங்களை எழுதுஞ் சம்பந்தசரணாலய ரென்பார் 'புத்தர் சமண் கழுக்கையர்' என்று தொடங்குந் திருப்பாடலை ஓத இடி வீழ்ந்து புத்தன் தலையைத் துமித்தது.

[இதுவுந் திருத்தொண்டர்புராணத் துளது.]

4—ஆம் அதிகாரம்: அறன்வலியுறுத்தல்.

தக்கனூர் வேள்வித் தவத்தைதமேற் கொண்டிருந்து
தொக்கவற மாயிற்றே சோமேசா—மிக்க
அழுக்கா றவாவெகுளி யின்னுரைச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம். (சு)

அஃதாவது அம் முனிவரான் உணர்த்தப்பட்ட அவ் வறம்

பொருளின்பங்களுள் மற்றைப்பொருளும் இன்பமும்போலன்றி, அறன் இம்மை மறுமை வீடென்னும் மூன்றினையும் பயத்தலான் அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். 'சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு, மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல' எனப் புறப்பாட்டினும் இருத்தல் காண்க. 'அறன்' என்புழி, மகரத்திற்கு னகரம் ஈற்றுப்போலி என்க.

4. (இ-ள்) சோமேசா—! மிக்க—(மற்றைக் குற்றங்களின்) மிக்க, அழுக்காறு—பிறர் ஆக்கம் பொறுமையும், அவா—(ஐம்புலன்கண்மேற் செல்லுகின்ற) அவாவும், வெகுளி—(அவை எதுவாகப் பிறர்பால் வரும்) வெகுளியும், இன்னைச்சொல்—(அதுபற்றி வரும்) கடுஞ் சொல்லும் (ஆகிய), நான்கும்—இந் நான்கினையும், இழுக்கா—நீக்கி, இயன்றது—இடையறாது நடந்தது, அறம்—அறமாவது,

—(அதற்கு எடுத்துக்காட்டு)—தக்கனூர்—தக்கூனென்பான், வேள்வித் தவத்தை—யாகமாகிய தவவொழுக்கத்தை, மேற் கொண்டிருந்தும்—(செய்து முடிப்பதாக) ஏற்றுக் கொண்டிருந்தும்,(அவ்வேள்வி), தொக்க அறம் ஆயிற்றே—பொருந்திய அறமாயிற்றே, இல்லை, மறமாயிற்று என்றவாறு.

இக் குறளான் அழுக்காறு முதலியவற்றோடு கலந்து நடந்தது அறமெனப்படா தென்பதூஉம் அருத்தாபத்தியாற் கொள்க. அருத்தாபத்தியாவது கூறியதொரு பொருளோடு மற்றொரு

பொருளும் பெறுதல். அருத்தாபத்தி—பொருட்பேறு. அழுக்காறு என்பது முதனிலை திரிந்த தொழிற்பெயர்; 'அழுக்கறு' என்பது முதனிலை; இஃது 'எக்கற' என்பதுபோல ஒருசொல். இனி, அழுக்கு அறு என்ற இரு சொற்கள் ஒரு சொற்றன்மைப்பட்டுப் பசி, நிரப்பு, நல்குரவு முதலியனபோல எதிர்மறை இலக்கணை (விபரீத லக்ஷணை)யால் அழுக்கு உறு என்னும் பொருட்டாயிற்று என்பாருமுளர். உம்மை முற்றும்மை. தக்களூர்—'உடலினூர் கிடந் தூர்முனி பண்டமே' என்புழிப்போல, ஈண்டு 'ஆர்' இழிபு குறித்ததென்க. மேற்கொண்டிருத்தும் என்புழி உம்மை உயர்வு சிறப்பும்மை. தக்கன் அழுக்காறு முதலிய நான்குங் கொண்டிருந்தமையின் தவச் செய்கையாகிய வேள்வியும் புண்ணியம் விளைத்தலின்றிப் பாவத்தை விளைத்ததென்பது கருத்து. 'அரனடிக்கன்பர் செய்த பாவமு மறமதாகும், பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும், வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி, நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே' என்றும் சிவஞானசித்திக் திருவிருத்தத்தானும், 'புண்ணியம் பாதக மாகப் போற்றிய, அண்ணலந் தக்களு ரகத்து நாணிய, புண்ணியம் பாதக மாகப் போற்றிய, அண்ணலந் தண்டித னடிகள் போற்றுவாம்' என்னுந் தணிகைப் புராணச் செய்யுளானு மறிக.

கதை:—நான்முகன் புதல்வனென தக்கமுனிவன் வாங்கிடப் பத் தன்பாற் ரோன்றித் தாக்ஷாயணி யென்னும் பெயர்கொண்ட

உமையம்மையாரைச் சிவபெருமானுக்குத் திருமணம் புரிவித்துப் பின் அப் பெருமானெடு மாறுபட்டு யாகஞ் செய்கையில், தாக்ஷாயணீ தன் மணாளன் சொற் கேளாது அவன் யாகசாலை புகுந்து அவனால் அவமதிக்கப்பெற்றுத் தீக்குளித்துத் தக்ஷபுத்திரியான உருவம் நீங்கிவிட, அதனை யறிந்து கோபங்கொண்ட பெருமான் வீரபத்திரரைத் தோற்றித் தக்ஷனைத் தண்டித்தற்கு விடுக்க, அக் கடவுள் காளியோடும் பூதகணங்களோடுஞ் சென்று அந்த யாகத்தை அழித்து அங்கிருந்த தேவர்களை அங்கபங்கஞ்செய்து தக்ஷனைத் தலைதுமித்தார்.

[இது கந்தபுராணத் துளது]

5–ஆம் அதிகாரம்: இல்வாழ்க்கை.

இல்வாழ் தருமனியற்சந் திரசேனன்
றெல்வார்த்தை கீழ்ப்படுத்தான் சோமேசா—கல்ல
இயல்பிறை னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. (நு)

அஃதாவது மனைவியோடு கூடி வாழ்தலின் சிறப்பு.

ப. (இ-ள்) சோமேசா—! இல்வாழ்க்கை–இல்வாழ்க்கைக்கண் நின்று, நல்ல இயல்பிறைன் வாழ்பவன் என்பான்—(அதற்குரிய) நல் இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான், முயல்வாருள் எல்லாம்—

(ஐம்புலன்களையிட) முயற்சிசெய்வா செல்லாருள்ளும், தலை—மிக்கவன்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—இல்வாழ் தருமன்—மனைவியொடுகூடி வாழ்ந்த தருமனென்பான், இயல் சந்திரசேனன்—துறவியலை மேற்கொண்ட சந்திர சேனனுடைய, தொல் வார்த்தை-பழமையாகிய பெருமை யமைந்த சொல்லை, கீழ்ப்படுத்தான்—(தன் சொற்குத்) தாழ்வாக்கினன் (எ-று).

14 சோமேசர் முதுமொழி வெண்பா

'முற்றத்துறந்தவர் ஐம்புலன்களையும் விட்டமையின், முயல்வா ரென்றது வானப்பிரஸ்தரை யென்க. இவ் வாக்கிரமம் பலவகைப் படுதலின் 'எல்லாருள்ளும்' எனவும், அத்தகை முயற்சி செய்யா மலேபயனடைதலின் 'தலை' யெனவுங் கூறினர்.

'என்பான்' என்புழிப் 'படு' விகுதி தொக்கது. முயல் வாருள்—ஈண்டு எழுவருபு கூட்டிப் பிரித்தும் பொருட்டு. 'இயல் சந்திரசேனன்' என்றார் அவனும் தன் நிலைக்குத்தக ஒழுகினபடி குறித்தற்கு. தொன்மை—பழமை; அஃது ஈண்டுப் பழமையாகிய ஏற்றத்தை உணர்த்தி நின்றது.

கதை:—ஆடவதேயத்தில் மாலிய நகரில் சுபுத்தன் விபுல னென்னும் இரண்டு அந்தணர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் சுபுத்தனுக்குத் தருமன் என்னும் ஒரு மகனும்; விபுலனுக்குச் சந் திரசேனன், மிருதுசந்திரனென்னும் இரு மகாரும் உண்டு. இவர் களுள், தருமன் சந்திரசேனன் ஆகிய இருவரும் வித்தியானந்த னென்னும் அருந்தவனை அடைந்தார்கள். அவன் இல்லறத்தின்

இழிவையும் துறவறத்தின் உயர்வையும் எடுத்துக்கூறச் செவி யேற்று விடைபெற்று வீடு புகுந்தார்கள். சந்திரசேனன் தன் தந்தையினிடந் தான் துறக்க வேண்டினன். மற்றொரு மகனிருத் தலின் அவனும் அதற்கு இசைதலின், சந்திரசேனன் திரிதண்ட சந்நியாசியாயினன். அது கிடக்க. தருமன் தன் தந்தையினிடந் தான் துறக்க நின்றதை அறிவித்தான். சுபுத்தன் தன் கால்வழிக்கு வேறு பிள்ளையின்மையால், அது கூடாதெனப் பல படி கூறியுந் தருமன் அவன் சொற்களைச் செவியேற்றிலன்; துறக்க நின்றான். தாய் தந்தையரும் தமர்களும் அழுது வருந்தினர்கள். அப்போது அங்கு எழுந்தருளிய பிருகு முனிவர் தருமனுக்குப் பல ஏதுக்கள் காட்டித் துறவாது தடுத்து மணம்புரிவித்துப் பஞ்சாசூரோப தேசஞ்செய்து போனர். தருமனும் குருமொழி வழிநின்றான் சிலகாலஞ் சென்ற பின் துறந்து சென்ற சந்திரசேனன் அங்கு வரக்கண்டு தருமன் அவனெடு அளவளாவினன். அப்போது சந்திரசேனன் தான் பெற்ற பேற்றைப் பெரிதாகக் கூறித் தருமனை

இழித்துப்பேசி 'இந்திரனையும் இங்குத் தருகுவன்' என்றிறு மாந்து நிற்கவே, தருமன் 'அது காண்பன்' என, உடனே அவன் இந்திரனை அழைத்தான். இந்திரன் வந்து தன்னைப் பணிந்து நின்ற சந்திரசேனனுக்கு ஒன்று முரையாது அப்போதே சென்றான். சென்றபின், தருமனும் அவ்விந்திரன் அங்கு வரு மாறு நினைத்தான். நினைத்த வளவில் இந்திரன் அங்கு வந்து அவனை வணங்கிப் பலவாறு ஏத்தி விடைபெற்றுச் சென்றான். இவ் வேறுபாட்டைக் கண்ட சந்திரசேனன் அதிசயமடைந்து நிற் கையில் தருமன் 'யான் பிரமனையு மழைப்பன், காண்டி' என்று வரவழைப்ப, அது செய்யமுடியாத சந்திரசேனன் உளக்கமிழந்து

இரந்து அவனிடம் பஞ்சாக்ஷரோபதேசம் பெற்றான். இருவரும் சிவகதியடைந்தனர். [இஃது உபதேசகாண்டத் துளது].

6-ஆம் அதிகாரம்: வாழ்க்கைத் துணைநலம்.

மூவர் தடுப்பவுங்கொண் மூவைப் பணிகொண்டா
டுய வனசூயை சோமேசா—மேவுபிற
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. (சு)

அஃது அவ் வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியது நன்மை.

6. (இ-ள்) சோமேசா—! மேவு—பொருந்திய, பிற தெய்வம் தொழாஅள்—பிற தெய்வந் தொழாது, கொழுநன்—தன் தெய்வமாகிய கணவனை, தொழுது எழுவாள்—தொழுதுநின்று துயிலெழுவாள், பெய்யென—பெய்யென்று சொல்ல, மழை பெய்யும்,—(அதற்கு எடுத்துக் காட்டு)—தூய அனசூயை—அகத்தூய்மை புறத்தூய்மை களையுடைய அநசூயை, மூவர் தடுப்பவும்—அயன், அரி, அரனென்னும் மும்மூர்த்திகளும் தடுக்கவும், கொண்

மூவை—மேகத்தை, பணிகொண்டாள்—அடிமைப் படுத்தாள் (அஃதாவது) தன் ஏவலை மேற்கொள்ளச் செய்

தாள் (எ—று).

இவ் வருமைத் திருக்குறள் சீத்தலைச்சாத்தனார் என்னும் புலவர் பெருமான் தமது மகாகாவியமாகிய மணிமேகலையுள், மருதிக் கதை கூறப்புக்கவழி, 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை தேறுய்' என எடுத்தாண்டது. 'தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத் தாகலின் 'தொழுது எழுவாள்' என்றார். தொழாநின் றென்பது தொழுதெனத் திரிந்துநின்றது என் றுரைவகுத்தார் ஆசிரியர் பரிமேழகியார். எழுந்தன்றித் தொழுதல் கூடாமையின் 'தொழா நின்றெழுவாள்' என்றது பொருந்தா தென்பர் ஒரு சிலர். துயில் கூடுங் காலத்து எந் நினைவு அந்தக்காரணத்தின்கண் வாசனை வடிவாய் நிற்பதோ அந் நினைவு துயிலெழுங் காலத்து முன்பின் என்பதின்றி வெளிப்பட்டு நிற்குமென்பது நூலோர் துணிபாகலின் அவர் உரை வெற்றுரையென விடுக்க. மூவர்—தொகைக்குறிப்புமொழி. உம்மை உயர்வு சிறப்பும்மை. 'அநசூயை'—'ந அசூயா' எனப் பிரிந்து 'பொறாமை யில்லாள்' எனப் பொருள்படு மென்ப.

கதை:—திரிமூர்த்திகள் திருவுளப்படி வடநாட்டின்கண் ஒருபஞ்சாண்டு வானம் வழங்காது வற்கடங் கூர்ந்துழி, அத்திரி முனிவர் பத்தினியாகிய அநசூயை என்பார் உயிர்கள் வாடுதல் நோக்கித் தமது கற்பின் மாட்சியிற் கங்கை பெருகவும் செடி கொடி முதலியன தழைக்கவும் மழை பெய்வித்தார்.

[இஃது இராமாயண முதலிய நூல்களி னுளது.]

7-ஆம் அதிகாரம்: புதல்வரைப் பெறுதல்

பாடினர்மூ வாண்டினிற்சம் பந்தரென யாவோருஞ்
சூடு மகிழ்ச்சிமெய்யே சோமேசா—காடியிடில்
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. (எ)

அஃதாவது பிரம சுத்திரிய வைசிய ரென்னும் இருபிறப் பாளர் மூவராலும் இயல்பாக இறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியாலும், தேவர் கடன் வேள்வியாலும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாலும் அன்றி இறுக்கப் படாமையின், அக்கடன் இறுத்தற் பொருட்டு நன் மக்களைப் பெறு தல்.

'தனி மரந் தோப்பாகாது, தனிப்பிள்ளை குடியாகாது' எனவும், 'ஒரு பிள்ளை பெற்றவள் மலடி' எனவுங் கூறுபவாகலின், புதல்வரை எனப் பலர்பாலாற் கூறினர்.

7. (இ—ள்) சோமேசா—! காடியிடில்—ஆராய்ந்து பார்க்கில், மக்கள் அறிவுடைமை—தம் மக்களது அறி வுடைமை, மாநிலத்து—பெரிய நிலத்து, மன் உயிர்க்கு எல் லாம்—பொருந்திய உயிர்கட் கெல்லாம், தம்மின் இனிது —தம்மினும் இனிதாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—சம்

பந்தர்—ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையார், மூ ஆண்டினில் —மூன்றுவது பிராயத்தில், பாடினர்—(தேவாரத் திருப் பதிகங்கள்) பாடி யருளினர், என—என்று, பாவோரும் சூடும் மகிழ்ச்சி—உலகத்தார் எல்லோருங் கொள்ளும் மகிழ்ச்சி, மெய்யே—உண்மையானதே (எ—று).

ஈண்டு அறிவென்றது இயற்கையறிவோடு கூடிய கல்வியறி வினை. மன் உயிர் என்றது ஈண்டு அறிவுடையார்மேல் நின்றது; அறிவுடைமை கண்டு இன்புறுதற் குரியாரவராகலின். தம்மின் என்ற விடத்து 'இன்' உருபு எல்லைப் பொருளது. பாடுதலாகிய

அரிய பெரிய செயலையும் மூவாண்டாகிய அதற்கு எலாச் சிற்றஞ் சிறு பருவத்தையும் வியந்தார் அவற்றை மூதற்கட் கூறினர். நாடி யிடில்—'இடு' தொழிலினை. மெய்யே—ஏகாரம் தேற்றம்.

கதை:—சோழியில் சிவபாதவிருதயர் திருக்குமாராராய் அவ தரித்த ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்றுவது பிராயத்தில் ஒரு நாள் தமது தந்தையார் நீராடப் புறப்படுகையில் அழுது பின் தொடர, அவரும் உடன் அழைத்துச் சென்று சிவாலயத்தின் கணுள்ள பிரமதீர்த்தக் கரையில் பிள்ளையாரை யிருத்தி நீராடி அக மருஷண மந்திர செபஞ் செய்தற்கு நீரின் மூழ்கிச் சிறிது நேரம் இருப்ப, பிள்ளையார் தமது தந்தையாரைக் காணாது திருக்கோயிற் சிகரத்தைப் பார்த்து 'அம்மே! அப்பா!' என்று அழ, கருணைக் கடலாகிய சிவபெருமான் தேவியாரைப் பார்த்துத் திருமுலைப்பால்

ஊட்டுமாறு பணிக்க, அம்மையாரும் சிவஞானத்தைக் குழைத்துத் திருமுலைப்பால் ஊட்டச் சிவபெருமான் தாமே அழுகை தீர்த்து அனுக்கிரகஞ் செய்தருளினார். செபமுடித்துக் கரை ஏறின தந்தையார் பிள்ளையார் வாயிற் பால் வடிவது கண்டு "எச்சில் மயங்கிட உனக்குப் பால் தந்தது யாவர்?" எனப் பயமுறுத்துக் கேட்ப, பிள்ளையார் ஒரு கைவிரலாற் சுட்டி ஆகாயத்தி லெழுந்தருளிய பெருமானைக் காட்டித் "தோடுடைய செவியன் விடையேறியொர் தூவெண் மதிசூடிக், காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன், ஏடுடைய மலரான் முனநாள் பணிந்தேத்த வருள் செய்த, பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே" என்று தொடங்குந் திருப்பாசுரத்தை ஓதினார். அவ் வற்புதத்தைக் கண்டு விண்ணவர்கள் பூமாரி பொழிந்தார்கள், மண்ணவர்கள் கண்மாரி பொழிந்தார்கள்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது]

சோமேசர் முதுமொழி வெண்பா 19

8-ஆம் அதிகாரம்: அன்புடைமை.

'தோன்றா வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்
[ந்து
'தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா—தோன்று

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர் [கின்ற
புன்கணீர் பூச றரும். (அ)

● அஃதாவது அம் மனைவியும் மக்களுமாகிய தொடர்புடையா ரிடத்தே காதலுடையனுதல். இல்லறம் இனிது நடத்தலும், பிற வுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனுகலின், இது வேண்டப்பட்ட தென்க.

8. (இ—ள்) சோமேசா—! தோன்றுகின்ற—(மனத்திற்) பிறக்கின்ற, அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ—அன்பிற்கும் பிறரறியாமல் அடைத்து வைக் கும் தாழ் உளதோ? ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் —(தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பங் கண்டுழி) அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே (உள் நின்ற அன்பினை) எல்லாரும் அறியத்தூற்றும் ஆதலான்,— (அதற்கு எடுத்துக்காட்டு)-முன்பு-முற்காலத்தில், களன்-.) தோன்றுவகை காந்தும்—(தான் இன்னனென்று பிறர்க் குத்) தெரியாதிருக்கும்படி மறைந்தும், தோன்றலை கண்டு—தன் மகனைப் பார்த்தவளவில், உள் நெகிழ்ந்து —மனமுடைந்துருகி, தோன்ற நின்றுன்—(தானின்ன னென்று பிறர்க்கு) விளங்கும்படி (கண்ணீர் பெருக்கி) நின் றுன் (எ—று).

உம்மை சிறப்பின்கண் வந்தது. அன்புடையாரது புன்மை

அவர் கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது ; புன்மை—ஈண்டுத் தடுக்கும் வலியின்மை. அன்புடைமை காட்சியளவையான் அறியப்படா

தாயினும் அனுமானவளவையான் வெளிப்படுமென்பதாம். பூசல் தரும்—ஒரு சொல் நீர்மைத்து. 'காந்தும்' என்புழி உம்மையும் சிறப்பும்மையேயாம்.

கதை:—நிடத தேசத்தில் மாவிந்த நகரத்தில் அரசாண்ட நளசக்கரவர்த்தி, விதர்ப்பதேசத்துக் குண்டினபுரத்தில் அரசுபுரிந்த வீமராசனது மகளாகிய தமயந்தியை மணந்து இந்திரசேனன், இந்திரசேனை என்னும் இரண்டு மக்களைப் பெற்று இனிது வாழ்ந்திருக்குங்காற் கலிபுருஷன் பற்றப் புஷ்கரனெடு சூதாடியாவும் இழந்து வனம் புகுந்து தன் மக்களை ஓர் அந்தணனைக் கொண்டு வீமனிடஞ் சேர்ப்பித்து ஒரு கடுங்காடு சென்று நள்ளிரவில் உறங்கும்போது மனைவியைத் தனிக்கவிட்டு அகன்றான். வழியில் கார்க்கோடகனென்னும் மாநாகத்தாற் கடிக்கப்பட்டு உருக்குலைந்து வாகுகனென்னும் பெயரோடு அயோத்தி புகுந்து ருதுபர்ணராசனுக்குத் தேர்ப்பாகனாய் அமர்ந்தான். அது நிற்க. தன்னந் தனியாய் வருந்தித் தந்தையை யடைந்த தமயந்தி நளனைத் தேடப் புரோகிதனை விட அவன் எங்கெங்குந் தேடி அயோத்தி சேர்ந்து தேர்ப்பாகனைக் கண்டு அவன் மொழிகளால் அவன் நளனுதல் வேண்டுமென் றறிந்து மீண்டு தமயந்தியினிடம் அச்செய்தி கூற, அந்தப் பாகனை வரவழைத்தற்கு ஓர் உபாயமாகத் 'தமயந்திக்கு

இரண்டாவது சுயம்வரம்' என்று ருதுபர்ணனுக்குத் தெரிவி க்க, ஆசையொடு சுயம்வரத்திற்கு வந்த ருதுபர்ணனுக்குத் தேர் செலுத்திக்கொண்டு வாகுகன் குண்டினபுரம் சேர்ந்தான். அவ் வாறு சேர்ந்த பாகன் நளன் தானே வென்று துணிதற்குத் தம யந்தி தன் தோழி ஒருத்தியொடு கூட்டித் தன் மக்களை அவன் எதிரில் விளையாட விட, அம் மக்களைப் பார்த்த வளவில் வாகுகன் அன்பான் மனமுடைந்துருகி அடக்கமாட்டாது கண்ணீர் பெருக்க அதனால் அவனே நளனென்று துணிந்தார்கள். "மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப், புக்கெடுத்து வீரப் புயத்தணையா —மக்கணீர், என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான் வன்மக் களியானை மன்", "ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழி

வெய்தி, நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவில், வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன், உள்ளம்போற் கண்ணீ ருகுத்து" என்னும் நளவெண்பாப் பாக்களும், "அடைந்த மக்களைக் காண்டலு மனவிடு மெழுகி, னுடைந்த துள்ளந் ரூற்றிருந் தொழுகின நெடுங் கண், தொடர்ந்த மும்மல முருக்கிவெம் பவக்கட லெறலேயக், கடந்து ளோர்களுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்" என்னும் நைடதப் பாட்டும் கண்டு அறியத் தக்கன.

[இது நளவெண்பாவினும், நைடதத்தினு முளது.]

9—ஆம் அதிகாரம் : விருந்தோம்பல்.

பொன்னனையா ளன்பருக்கே போனகமீந் துன்னருளாற்
சொன்னமிகப் பெற்றுளே சோமேசா—பன்னில்
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. (கூ)

அஃதாவது விருந்தினரை யுபசரித்தல். தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்கிற ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கண்ணுக்குப் புலனுகாதாரை நினைந்து செய்வன ஆகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கீத லன்மையானும் இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற் றென்க.

9. (இ-ள்) சோமேசா.— . பன்னில் — ஆராயுமிடத்து, வருவிருந்து—(தன்னை நோக்கி) வந்த விருந்தை, வைகலும்—நாடோறும், ஓம்புவான்— உபசரிப்பானது, வாழ்க்கை—இல் வாழ்க்கை, பருவந்து—வறுமையான் வருந்தி, பாழ்படுத லின்று—கெடுத லில்லை,—(அதற்கு எடுத்துக்காட்டு)—பொன்னனையாள்—பொன்னனையாள் என்னும் மாது, அன்பருக்கே—அன்புடை அடியார் களுக்கே, போனகம் ஈந்து—அன்னமிட்டு, உன் அருளால்

—உனது திருவருளால், சொன்னம்—பொன்னை, மிகப் பெற்றுள்—மிகுதியாகப் பெற்றுள் (எ-று).

இக் குறளின் கருத்து நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனுற் பொருள் தொலையாது, மேன்மேற் கிளைக்கு மென்பதாம். அன்பருக்கே—எகாரம் பிரிநிலை. சொன்னம்—'ஸவர்ணம்' என்னும் வடசொற் றிரிபு.

கதை:— திருப்பூவணம் என்னும் திருப்பதியில் பொன்னனையாளென்னும் ஒரு வேசைமாது சிவனடிக்கண் அன்பு பூண்டு சிவபூசை வழுவாது நடத்திச் சிவனடியார்களைச் சிவனெனப் பாவித்து அருச்சித்து வழிபட்டு அவர் மனங்களிக்க அறுசுவையுண்டி அருத்தி, எஞ்சினதையே தான் உண்டுவரு நாளிற் சிவானுக்கிரகத்தால் தான் ஒரு விக்கிரகம் வார்க்கவேண்டுமென்ற ஆசை கூர்ந்தாள்; கருக்கட்டியும் வைத்தாள். நாடோறும் செய்யும் அடியார் பூசைக்கே தன் வருவாய் முற்றும் செலவழிந்தமையின் விக்கிரகம் வார்த்தற்கு இடம் பெறாது வருந்திளுள். அவள் ஆதரங் கண்ட சிவபெருமான் ஒரு சித்தராய் வந்து பொன்னனையாள் திருமாளிகைப் புறத் தொருபக்கம் வீற்றிருந்தார். அஃதுணர்ந்த அவள் அறை உள்ளே எழுந்தருளித் திருவமுது செய்யும்படி இரந்து வேண்டினுள். அப்போது அவர் அவள் தேக மினைத்திருத்தற்குக் காரணம் வினவ, அவளும் பெருமான் விக்கிரகம் அமைத்தற்கிடம் பெறுமையென விடுக்க அதன்மேல் வந்த சித்தர் உன் வீட்டிலுள்ள பித்தளை, ஈயம், செம்பு, இரும்பு முதலியவற்றுலாகிய பாண்டங்களை எல்லாம் கொணர்ந்து ஒரிடத்திடுகவெனப் பணித்து அவ்வாறு செய்தவுடன் அப் பாண்டங்களின்மேல் விபூதியைத் தூவி அன்றிரவு அவற்றை நெருப்பிலிடும்படி கட்டளையிட்

டார். அவள் அவரை நோக்கி, 'ஐயரே! நீர் இன்றிரவு இங்குத் தங்கித் திருவமுது செய்து காலைக் காலையிற் செல்லுக' "என்று குறையிரக்கவும், அவர் அதற்கு இசையாது மறைந்தார். அது கண்டு வியந்து பலவாறு எத்திப் பின் தான் எண்ணியவாறே விக்

கிரகம் அமைத்துப் பிரதிஷ்டைசெய்து திருவிழா நடத்தி மகிழ்ந்து சிலநாள் கழித்து வீடுபெற்றார்.

[இது திருவிளையாடற்புராணத் துளது.]

10–ஆம் அதிகாரம்: இனியவை கூறல்.

இன்சொ லிராம னியம்ப விரேணுகைசேய்
துன்பமொழி யேபுகன்றான் சோமேசா—வன்புடைய
இன்சொ லினிதின்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (கஎ)

அஃதாவது மனத்தின்கண் மகிழ்ச்சியை வெளிப்படுப்பன வாகிய இன்சொற்களைச் சொல்லுதல்.

10. (இ-ள்) சோமேசா-! அன்புடைய-அன்பொடு பொருந்திய, இன்சொல் — (பிறர்கூறிய) இன்சொல், இனிது என்றல்—(தனக்கு) இன்பம் பயத்தலை, காண்பான்

—அறுபவித்து அறிகின்றவன், வன்சொல் வழங்குவது—(அவ்வின்சொலிருக்கப் பிறரிடத்து) வன்சொல்லைச் சொல்லுதல், எவன்—என்ன பயன் கருதி?—(அதற்கு எடுத்துக் காட்டு)—இராமன்—தசரதராமன், இன்சொல் இயம்ப—இனிய சொற்களைச் சொல்ல, இரேணுகைசேய்—இரேணுகையின் புத்திரனை பரசிராமன், துன்பம் மொழியே புகன்றனன்—துன்பத்தைத்தருஞ் கடுஞ்சொற்களையே கூறினன் (எ-று).

'இனிது' என்பது குறிப்பு வினையாலணையும் பெயர். கடுஞ் சொல் பிறர்க்குந் துன்பஞ் செய்தலின், அது கூறலாகாதென்பது கருத்து. ரேணுகை—சூரிய வமிசத்து அரசனை ரேணு என் பான் மகள். பரசிராமன் விஷ்ணுவின் ஆறுவது அவதாரம், தசரதராமன் விஷ்ணுவின் ஏழாவது அவதாரம்.

24 சோமேசர் முதுமொழி வெண்பா

கதை:—இராமன் விசுவாமித்திரரோடு மிதிலைபுகுந்து சிவன் வில்லை ஒடித்துச் சீதையை மணந்து அயோத்திக்குப் புறப்பட்டு வருகையில் எதிர்ப்பட்டு இராமனை நோக்கிச் சமதக்னி புத்திரனை பரசிராமன் பலவகைத் தீமொழிகளைக்கூறி விஷ்ணு வில்லைத் தந்து அதனை ஒடித்தால் பின் தான் போர் செய்வதாகக் கூறினன்.

[இஃது இராமாயணத் துளது.]

11-ஆம் அதிகாரம்: செய்ந்நன்றி யறிதல்.

பன்னு மசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னளே யெளவைமுன்பு சோமேசா—மன்னுத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (கக)

அஃதாவது தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமை.

11. (இ-ள்) சோமேசா—! மன்னு—நிலைபெறுத, தினை துணை நன்றி செயினும்—தினையளவிற்றுகிய உப காரத்தை (ஒருவன் தமக்குச்) செய்தானுயினும், பனை துணையா . கொள்வர்—(அதனை அவ்வளவிற்றுகக் கரு தாது) பனையளவிற்றுகக் கருதுவர், பயன் தெரிவார்—அக் கருத்தின் பயனை அறிபவர்,—(அதற்கு எடுத்துக் காட்டு)—முன்பு — முன்நாளில், ஔவை — அவ்வைப் பிராட்டி, பன்னும் அசதி நன்றி பாராட்டி—(யாவரும் என்ன சிறப்புடையான் என்று) ஆயும் அசதி என்னும் இடையன் செய்த உபகாரத்தைப் பெரிதாக மதித்து, கோவை நூல் சொன்னள்—கோவை என்னும் பிரபந்தம் பாடினள் (எ—று.)

தினை, பனை என்பன சிறுமை, பெருமைகட்குக் காட்டுவன சில அளவை. உம்மை—இழிவு சிறப்பும்மை. ஆ—'ஆக' என்

பதன் விகாரம். அக் கருத்தின் பயன் என்றது செய்த நன்றி மிகச் சிறிதாயினும் மிகப்பெரிதாகக் கருதுவார்க்கு வரும் புகழ் புண்ணியங்களே. கோவை: கோ—பகுதி, ஐ—செய்யப்படு பொருண்மை விகுதி. அகப்பொருட்டுறைகளைக் கொண்ட நானூறு பாடல்களாற் கோக்கப்படுதலின், நூலுங் கோவையாயிற் றென்க. அகப் பொருளென்றது இன்பத்தை. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அகப்பொருணூல் 'திருக்கோவையார்' என்னும் பெயர்த்தாதல் காண்க.

கதை:—அவ்வைப்பிராட்டியார் ஒருகால் தென்பாண்டிநாட்டிலொரு காட்டுவழியாகச் செல்லும்போது பசியான்மிக வருந்தி ஆட்டிடையன் ஒருவனைக் கண்டடைந்து 'ஏதேனும் உணத்தருக' என, அவன் மருது தனக்கென வைத்திருந்த ஆட்டுப்பால் கலந்த கூழைக் கொடுத்து உபசரிக்க அதனைப் பெரிதும் பாராட்டிய பிராட்டியார் அவன் புகழை உலகின்கண் நிலைநிறுத்த நினைந்து அவன் பெயரை வினவ, அதை அவன் மறந்தமையால் 'அசதி' என்ன, பின் ஊனா வினவ அதையும் மறந்து 'ஊரில் ஐந்து வேலுண்டு' என்ன, கவிதொறும் 'ஐவேலசதி' என்றமைத்து 'அசதிக்கோவை' என்னும் நூலைப் பாடினர். அசதியை அரசனென்பாரு முளர்.

[இது புலவர்புராணத் துளது.]

12-ஆம் அதிகாரம்: நடுவுநிலைமை

வேதியனு ளாமோவென் றெள்ளாது வெண்ணெய்
[நல்லூர்ச்
சோதிவழக் கேபுகழ்ந்தார் சோமேசா—வோதிற்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைக்தொரு
[பாற்
கோடாண்மை சான்றோர்க் கணி. (கூ)

26 சோமேசர் முதுமொழி வெண்பா

அஃதாவது பகைவரிடத்தும், நண்பரிடத்தும், பிறரிடத்தும் அறத்தின் வழுவாது ஒருபடித்தாய் நிற்கும் நிலைமை.

12. (இ-ள்) சோமேசா —! ஓதில் — சொல்லின், சமன் செய்து —(முன்னே தான்) சமனுகநின்று, சீர்தூக்கும் கோல்போல்—பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாப்போல, அமைந்து — (இலக்கணங்களான்) அமைந்து, ஒருபால் கோடாமை—ஒரு பக்கத்தில் சாயாமை, சான்றோர்க்கு அணி—பெரியோர்க்கு ஈழகாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு) — வேதியன்—பிராமணன், ஆளாமோ என்று எள்ளாது—(பிறர்க்கு) அடிமையாவனே (ஆகான்) என்று இகழாது, வெண்ணெய் நல்லூர் சோதி—திரு வெண்ணெய் நல்லூரின்கண் எழுந்தருளி

யிருக்கின்ற பரஞ்சோதியாகிய சடையப்பரது, வழக்கே புகழ்ந்தார்—வழக்கையே (திருவெண்ணெய் நல்லூர் அந்தண ரலையத்தார்) புகழ்ந்து பேசினர்கள் (எ–று).

கோலிற்கு அடையாகிய சமன் செய்தலும் சீர்தூக்கலும் சான்றோர்கண்ணும், சான்றோர்க்கு அடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் கோலின்கண்ணுங் கூட்டுக. சான்றோர் சீர்தூக்கலாவது தடைவிடைகளாற் (ஆக்ஷேப சமாதானங்களாற்) கேட்டவற்றை முறையே உள்ளவாறுணர்தல். ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளவற்றை மறையாது பகைவர், நண்பர் மற்றையவரென்னும் முதறிறத்தார்க்கும் ஒரு படித்தாகக் கூறுதல். இலக்கணங்களான் அமைதல் கோலின்கண்ணும் சான்றோர்கண்ணும் ஏற்ற பெற்றி கொள்க. வேதியன்—சாதியொருமைப்பெயர். ஓகாரம் எதிர்மறை. எகாரம் பிரிநிலை.

கதை :—திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், ஆதிசைவமரபில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் திருக்குமாரராய் அவதரித்த சுந்தரமூர்த்தி நாயனார் நரசிங்கமுனைய ரென்னும் அரசற்குக் காதற்பிள்ளையாய் அந்தண ரொழுக்கமும் அரசர் திரு

வும் பொருந்தி யெளவன பருவமடைந்தார். அது நோக்கிப் பெற்றோரும் மற்றோரும் புத்தூர்ச் சடங்கவி என்னும் ஆதிசைவர் மகளை மணம்பேசி முடித்து முகூர்த்தநாளில் நாயனாரைக் குதிரை மீதேற்றி மிக்க ஆடம்பரத்துடன் புத்தூர் அழைத்துச் சென்றார்கள். நாயனார் சடங்கவி மனைபுகுந்து மணப்பந்தரின் எழுந்தருளின

வுடன் சிவபெருமான் கையிலையில் திருவாக்களித்தருளியபடி அவரைத் தடுத்தாட்கொள்ள வேண்டி ஒரு கிழப் பிராமணராகத் திருவுருக்கொண்டுவந்து மணப்பந்தர் புகுந்து, 'ஒரு வழக்குண்டு; அதை முடித்தே மணம் புரிதல் வேண்டும். மணச் சடங்குகளை நிறுத்துக' என்றார். நாயனார் யாது கூறுவரோவென்று விநயமாய் 'அப்படியே; தங்கள் வழக்கைத் தீர்த்தன்றி மணம் புரியேன்' என, கிழப் பிராமணர் சபையோரை நோக்கி, 'அந்தணீர்! இந்த மனமகன் எனக்கு வழியடிமை' என்றார். அதுகேட்ட நாயனார் நகைக்கவே, கிழவர் வெகுண்டு, 'உன் பாட்டன் எழுதித் தந்த அடிமையோலை இது. நகைத்ததென்?' என்றார். நாயனார் நகை ஒழிந்து 'ஐயரே! அந்தணர் அடிமையாதல் உண்டோ? நீர் பித்தரோ? அடிமையோலை உளதாயிற் காட்டுக' என்றார். கிழவர், "நீ அடிமை; அதைக் காணுதற்கு நீ அருகனல்லன்" என்று கூறிச் சபையோர்களுக்கு அதைக் காட்டவே, நாயனார் வெகுண்டு சீறி அவ் வோலையைப் பறித்துக் கிழித்தெறிந்தார். கிழவர் நாயனாருடையை இறுகப்பற்றி விடாதிழுத்து "இது தகுமோ! இது முறையோ! இது தருமந்தானே!" என்று அந்தணர்களை நோக்கிக் கூச்சலிடவே, அவ்வந்தணர் "நீர் எங்குள்ளீர்?" என வினவ, 'யான் திருவெண்ணெய் நல்லூர் உளன்' என இறுக்க, 'அங்ஙனமாயின் உமது வழக்கை அங்குச் சென்று தீர்த்துக்கொள்க' என்று யாவரும் உரைப்ப, கிழவர் அதற் கிசைந்து நாயனாரைப்பற்றிக் கொண்டு திருவெண்ணெய் நல்லூர் சென்று அங்கு அந்தணரவையத்தார் முன்பு நாயனாரை விட்டுத் தமது வழக்கைத் தெரிவிக்க அவ் வவையத்தார் அந்தணர்

துண்டெனத் தந்த மூலவோலையைக்கொண்டு காயனூர் பாட்டன் கையெழுத்தோடு ஒப்பு நோக்கிச் சிறிதும் வேறுபாடின்மை கண்டு "நீர் இவ் வந்தணர்க்கு அடிமையே' என்று தீர்ப்பளித்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது]

13-ஆம் அதிகாரம்: அடக்க முடைமை.

எல்லா முணர்ந்தும் வியாத னியம்பியவச்
சொல்லாலே காவயர்ந்தான் சோமேசா—வல்லமையால்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (கங)

அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீயவழியிற் செல்லாது அடங்குதல் உடையனுதல்.

13. (இ-ள்) சோமேசா—! யா காவார் ஆயினும்—(தம்மாற் காக்கப்படுவன) எல்லாவற்றையும் காக்கமாட்டா ராயினும், வல்லமையால்—(தமக்குள்ள) வன்மையால், நாகாக்க-நா ஒன்றனையுங் காக்க, காவாக்கால்—(அதனைக்) காவாராயின், சொல் இழுக்கப்பட்டு—சொற்குற்றத்தின் கட் பட்டு, சோகாப்பர் — (தாமே) துன்புறுவார்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—வியாதன்—வேதவியாச முனிவர், எல்லாம் உணர்ந்தும்—எல்லாப் பொருள்களையும் அறிந்துவைத்தும், இயம்பிய அ சொல்லால் — (தாம்)

கூறிய 'நாரணனே பரன்' என்னும் அவ் வொரு சொல் லால், நர இழந்தான் — (கை இழந்து) நாவெழாது நின்றார் (எ-று).

'யா' என்னும் அஃறிணைப்பன்மை விளிப்பெயர் ஈண்டு எஞ்சாமை உணர நின்றது. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. அஃதாவது 'யாவும்' என்றிருக்கற் பாலது 'யா' என்றாயிற்று.

சொற்குற்றம்-சொல்லின்கட் டோன்றுங் குற்றம். அல்லாப்பர், செம்மாம்பர் என்பன போலச் சோகாப்ப ரென்பது ஒரு சொல். வியாதன்-இதற்குச் சொல்லின்படி பொருள் 'பிரித்தவன்' என் பது. உம்மை சிறப்புமை. அகரம் உலகறிசுட் டென்க.

கதை :—காசி கேஷத்திரத்தில் கங்காதீரத்தில் முனிவர் களுக்கு அறிவுரைக்கவேண்டிப் பாரத்துவங் கூறப்புக்க வியாச முனிவர் மனந் தெளியாமையிற் கையெடுத்து 'நாராணனே பரன்' என்று கூற, அக் கையும் நாவு மெழாது நிற்ப, அவர் கூற்று முழுப் பொய்யென முனிவர் அறிந்தொழிந்தார். திருமால் வியாசமுனிவர் முற்றேன்றி 'யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான் சிவனே என்றறிதி' என்று கூறத் தெளிந்து பெரு மானைப் போற்றிசெய்து உய்ந்தார்.

'முன்னேநான் மறையு முறைப்பட நிறீஇய, மன்னிருஞ் சிறப்பின் வாதாரா யணனுங், கையிழந் தனனது பொய்மொழிந் தன்றே' என்னுங் குமரகுருபர சுவாமிகள் திருவாக்குங் காண்க.

[இது காசிகாண்டத் துளது.]

14–ஆம் அதிகாரம் : ஒழுக்கமுடைமை.

தீயனவே சொல்லுஞ் சிசுபாலன் முன்புகண்ணன்
றூயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (கச)

அஃதாவது தத்தம் வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் ஏதப் பட்ட ஒழுக்கத்தினை உடையாதல்.

14. (இ-ள்) சோமேசா—! ஆயின் — ஆராயின், வழுக்கியும் தீய வாயால் சொலல்–மறந்தும் தீயசொற்களைத் (தம்) வாயாற் சொல்லுந் தொழில்கள், ஒழுக்கமுடைய வர்க்கு ஒல்லா—ஒழுக்கமுடையவர்க்குமுடியா,—(அதற்கு

எடுத்துக்காட்டு)—தீயனவே—தீய சொற்களையே, சொல் லும் சிசுபாலன் முன்பு—சொல்லிய சிசுபாலனுக்குஎதிரில், கண்ணன்—கிருஷ்ணன், தூயது அலா சொல் உரையான் —குற்றமற்றதல்லாத (ஒரு) சொல்லும் சொல்லமாட்டா தானையினன் (எ-று).

தீய சொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய் முதலியனவும் வருணத்திற்கு உரியன அல்லனவுமாம். அவை பலவாகலின், சொல்லுதற் றொழில் பலவாயின. சொல்—சாதி யொருமைப் பெயர். சொல்லெனவே அமைந்திருக்க 'வாயால்'

என வேண்டாது கூறினர், அவர் வாய் நற்சொற்களையே பயின்ற தெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வட நூலார் தாற்பரிய மென்ப. கண்ணன்—கிருஷ்ணன் என்னும் வடசொற் சிதைவு. கிருஷ்ணன்—இதற்குக் 'காியன்' என்பது பொருள். ஈகாரம் பிரிந்ததே.

கதை :—சிசுபாலன் என்பான் வசுதேவன் உடன் பிறந்தாளும் அதனற் கண்ணற்கு அத்தையுமாகிய சேதி மன்னன் மனைவி சுருதசிரவை என்பாளுடைய மகன். விஷ்ணுவின் துவாரபாலகராகிய ஜய விஜயர்கள் ஒருகால் வைகுண்டம் புகுந்த ஸனகாதியரைத் தடுத்தமைபற்றி 'மூன்று பிறப்பு விஷ்ணுவிற் குப் பகைவராய்ப் பிறந்து அவ்விஷ்ணுவின் கையால் இறக்க' என அவராற் சபிக்கப்பட்டு இரணிய விரணியாகூராகவும், இராவண கும்பகர்ணராகவும், சிசுபால தந்தவக்ராகவும் பிறந்தாரென அறிக. இச் சிசுபாலன் பிறந்தபொழுது அவற்கு நான்கு கைகளும் மூன்று கண்களுமிருந்தன. 'யாவன் தொடில் அவை மறையுமோ அவனல் இவற்கு மரணம்' என்று ஆகாயவாணி கூற, அவ்வாறு பலரும் தொடுகையிற் கண்ணன் தொட்ட வப்போதே அவை மறையக் கண்ணனலவற்கு மரணம் என்று அறிந்தார்கள். கண்ண னும் அவன் அத்தை வேண்ட நூறு பிழை பொறுப்பதாக வாக் களித்தான். ஏற்கெனவே சிசுபாலற்குக் கண்ணனிடத்துள்ள பகை தனக்கென விருந்த ருக்மிணியைக் கண்ணன் மணந்தபின்

மேவிட்டது. தருமபுத்திரர் செய்த இராஜசூய யாகத்தில் அவர் கண்ணற்கு அக்ராபூஜை செய்தமை கண்டு மனம் புழுங்கிக் கொதித்துக் கண்ணனைப் பன்னூறுமுறை வைதமையின், அப்பெருமான் எதிரொன்றுங் கூறாது சக்கரத்தை விட அஃது அவன் தலையைத் துணிக்க, உடன் அவன் உடம்பினின்றும் ஒரு சோதி எழுந்து கண்ணன் திருவடியை அடைந்தது. " பூபால ரவையத்து முற் பூசை பெறுவார் புறங்கானில்வாழ், கோபால ரோவென்று ருத்தங் க திர்த்துக்கொ தித்தோதிலுன், காபாலி முனியாத வெங்காம னிகரான கவினெய்தியேழ், தீபால டங்காத புகழ்வீர கயமன்ன சிசுபாலனே, " திண்ணியநெஞ் சினனென சிசுபாலன் றன்னெஞ் சிற் றீங்கு தோன்ற, வெண்ணியமன் போவையி னியம்பியபுன் சொற்களெலா மெண்ணி யெண்ணிப், புண்ணியர்வந் தினி திறைஞ்சும் பூங்கழலோன் வேறொன்றும் புகலா னெகிப், பண்ணிய தன் புரவிநெடும் பருமணித்தேர் மேற்கொண்டான் பரிதிபோல் வான் " என்னும் வில்லிபுத்தூரார் பாரதக் கவிகள் காண்க.

[இது பாரத பாகவதங்களி னுளது.]

15-ஆம் அதிகாரம் : பிறனில விழையாமை.

ஆன்றவெழிற் சீதையைவேட் டைங்கான்கு
[திண்காத்தான்
றேன்றுபழி மாறிலனே சோமேசா—வேன்ற
பகைபாவ மச்சம் பழியென கான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண். (கடு)

அஃதாவது காம மயக்கத்தால் பிறனுடைய மனைவியை விரும்பாமை.

15. (இ—ள்) சோமேசா—! இல் இறப்பான் கண்—பிறன் மனையின்கண் நெறிகடந்து செல்வானிடத்து, என்ற—பொருந்திய, பகை பாவம் அச்சம் பழி என நான்

கும்—பகையும் பாவமும் அச்சமுங் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றமும், இகவா ஆம்—ஒரு காலும் நீங்கா வாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—ஆன்ற எழில்—மிக்க அழகுடைய, சீதையை வேட்டு—சீதையை விரும்பி, ஐந் நான்கு திண்கரத்தான்—இருபது வலிய கைகளையுடைய இராவணன், தோன்று பழி—(அன்று) தோன்றிய பழி, மாறிலன் எ—(இன்றளவும்) நீங்கினனில்லையே (எ—று).

பகை, பாவம், அச்சம் பழியெனவே, இம்மை மறுமையாகிய இருமையும் இழத்தல் பெற்றோம். சீதை—'ஸீதா' என்னும் வட சொற் றிரிபு. வடமொழியில் 'ஸீதா' என்பது கலப்பையிற் கொழு விரும்பிற்குப் பெயர். யாகத்திற்காகப் பூமியை உழுதபோது, கொழுவிரும்பினுல் வெளிப்பட்டமையின், அப்பெயர் ஜானகிக்கு உரித்தாயிற்றென்ப. எகாரம் இரக்கக் குறிப்பு.

கதை:—ரகுகுலோத்தமனை இராமன் தனது சிற்றன்னையாகிய கைகேசி சூழ்வினையால் நாடிழந்து காடடைந்து நின்ற நிலையில், இலங்குமணி மலர்ப்பறுப்புண்ட சூர்ப்பணகை என்னும்

அரக்கி சீதையை இராமனிற் பிரிக்கவெண்ணித் தன் தமைய னாகிய இராவணனிடம் போய்ச் சீதையின் பேரழகைப் பலபடி வருணிக்க, அவ்வருணனை கேட்ட இராவணன் சீதைபால் மோகங் கொண்டு சந்நியாச வேடத்தோடு சீதா ராம லக்குமணர்களிருந்த பஞ்சவடியை அடைந்து தன் மாமனாகிய மாரீசனைப் பொன் மானாகப் போக்கி இராமலக்குமணர்களைப் பிரித்துச் சீதையைப் பர்ணசாலையொடு பெயர்த்துக் கொணர்ந்து இலங்கைக்கண் அசோகவனத்திற் சிறைவைத்துத் தன் எண்ணம் முடிவுறுது நிற்க, இராமன் சுக்கிரீவன் நட்புப்பெற்று அனுமானை நாடவிட்டுச் சீதை இலங்கையிற் சிறை இருந்து வருந்துவ தனர்ந்து வானர வீரர்களோடு திருவணை கட்டிக் கடலைத் தாண்டி இலங்கை சேர்ந்து அரக்கர் யாவரையும் மடித்து முடிவில் இராவணனையும் தன் அம் பிற் கிலக்காக்கினன். [இஃது இராமாயணத் துளது.]

16–ஆம் அதிகாரம் : பொறையுடைமை.

மூட்டலன்செய் நீமைக் கொருதுகம மென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—மூட்ட
மூறுத்தார்க் கொருகாலை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (கசுர)

அஃதாவது காரணம்பற்றியாவது அறியாமையாலுவது ஒரு வன் தமக்குத் தீங்கு செய்த விடத்துத் தாமும் அதை அவன்கட்

செயியாது பொறுத்தலே உடையாதல்.

16. (இ—ள்) சோமேசா—! ட்ட—மிக, ஒறுத்தார்க்கு—(தமக்குத் தீங்கு செய்தவனை) வருததினவர்க்கு, (உண்டாவது) ஒரு நாளை இன்பம்—அவ் வொரு நாளை இன்பமே, பொறுத்தார்க்கு—(அதனைப்) பொறுத்தார்க்கு, பொன்றும் துணையும்—(உலகப) அழியுமளவும், புகழ்—புகழுண்டாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—சுட்டிய சீர்—பெருஞ்சுட்டோடு கூடிய சிறப்புடைய, மெய்ப் பொருளார்—மெய்ப்பொருள் நாயனார்—செய்தீமைக்கு, (தமது பகைவன்) செய்த தீங்கிற்கு, ஒருகா—(அவனை) வருத்தாது, நமர் என்று உரைத்தார்—(சிவதேவடமிருத்தலின் அவர்) நம்மவனென்று கூறினார் (எ—று).

ஒரு நாளை யின்பம்—அந்நாளொன்றினும் தினைத்தது முடித்தோமென்று தருக்கி இருக்கும் பொய்யின்பம். ஆதாமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், 'உலகம்' என்னும் தகுதியுடைய சொல் வருவிக்கப்பட்டது. 'நமரென்றுரைத்தார்' என்புழி 'ஒருவரும் ஒரு தீங்குஞ் செய்யலாகாதென்றார்' என்பது குறிப்பு.

கதை:—சேதி நாட்டில் திருக்கோவலூரில் மலையாளிகளுக்கு மன்னராய் அரசுபுரிந்த மெய்ப்பொருள் நாயனார் என்பார் சிவனடியார் திருவேடத்தையே மெய்ப்பொருளெனக்கொண்டு வழிபட்டு

3

வாழுநாளில், பலமுறையும் அவரை எதிர்த்துப் போர்செய்து தோற்ற முத்தநாத னென்னும் ஓ ராசன் வஞ்சனையால் அவரை வெல்லக் கருதிச் சிவசின்னங்கள் தாங்கி உடைவாளைப் புத்தகக் கவளியின் மறைத்துக் கட்டித் தவவேடத்தோடு அவர் அரண்மனை புகுந்து எனைய வாயில்களையெல்லாம் எளிதிற் கடந்துசென்று அந் தப்புர வாயில் காப்போனை தத்தன் தடுப்பவும் நாயனார்க்கு ஞானோபதேசஞ் செய்யப் போந்ததாகக் கூறி யுட்சென்று நாயனார் கட்டிலிற் றூங்கவும் அவர் திருத்தேவியார் பக்கத்திலிருப்பவுங் கண்டு அருகணையத் தேவியார் நாயனாரைத் துயிலுணர்த்த அவர் விரைந்தெழுந்து எதிரே வீழ்ந்து வணங்கினர். பொய்வேடத்த னாகிய முத்தநாதன் தான் ஞானோபதேசஞ் செய்யவந்தமையால் தேவியாரும் வேற்றிடஞ் செல்ல நாயனரும் தானுமே அங்கிருக்க வேண்டுமென்ன நாயனரும் தேவியாரை வேற்றிடஞ் செலுத்தி வஞ்சனை ஓர் ஆசனத்திருத்தித் தாம் எதிரில் வணங்கி நிற்ப, அப் பாதகன் புத்தகம் எடுப்பதுபோல உடைவாளை எடுத்துத் தன் எண்ணை முடித்தான். நடந்தவற்றை யெல்லாம் கருத்தொடு பார்த்திருந்த தத்தன் ஒரு கணப்பொழுதினுள் வந்து தன் வாளை ஓச்ச, பூமியில் வீழ்கின்ற நாயனர், 'தத்தா! நமர்' என்று தடுத்து வீழ்ந்தார். நாயனர் பணியை மேற்கொண்டு தத்தன் அவனை அழைத்து வெளிச்சென்று அவன் செய்கை யறிந்து அவனைக் கொல்லச் சூழ்ந்தவர்களை எல்லாம் விலக்கி அந்நகர் எல்லை யளவும் உடன் சென்று வழிவிட்டு மீண்டு வந்து 'சிவனடியாரை இடையூ றின்றி நகர்ப்புறத்து விட்டனன்' என்று சொல்லும் வரை உயிர் தாங்கி இருந்த நாயனர் 'திருநீற்றன்பு பாதுகாத் தளிப்பீர்'

என்று மந்திரி முதலியவர்களுக்கு உரைத்துச் சிவனடி நீழலடைந்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது.]

17–ஆம் அதிகாரம் : அழுக்காறுமை.

அன்பரைக் கண்டழுக்கா றுஞ்சமணர் தம்வாயாற்
றுன்பமுற்றூர் வெங்கழுவிற் சோமேசா—வன்பாம்
அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடென் பது. (கஎ)

இதனுள், அழுக்காறென்பது ஒரு சொல்லென மேலே உரைத்தோம். அச் சொல் பின் அழுக்காற்றைச் செய்யாமை என்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மை விகுதியும் பெற்று அழுக்காறுமை என நின்றது.

17. (இ-ள்) சோமேசா —! வன்பாம் — கடுமை யாகிய, அழுக்காறு—பொறுமை, ஒன்னுர் வழுக்கியும்—பகைவரை ஒழிந்தும், கேடு என்பது—கேடு பயப்ப தொன்று (ஆகலின்), உடையார்க்கு—அப் பொறுமை

புடையார்க்கு, அது சாலும்—(கேடு பயப்பதற்குப் பகை வர்வேண்டா) அதுதானே அமையும்,—(அதற்கு எடுத்துக் காட்டு)—அன்பரை—ஸ்ரீஞான சம்பந்தப் பிள்ளையாரை, கண்டு—பார்த்து, அழுக்காறு ஆம்—பொறுமைகொண்ட, சமணர்—சைனர்கள், தம் வாயால்—தமது வார்த்தை யால், வெம் கழுவில்—கொடிய கழுவினிடத்தே, துன்பம் உற்றார்—துன்பமடைந்தார்கள் (எ-று).

அது—பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் றொக்கது. வாய்—ஆகுபெயர்.

கதை :—பாண்டி நாட்டைச் சமணக்காடு மூடவே, கூன் பாண்டியனும் அவ்வழிப்பட்டான். அவன் மனைவியாகிய மங்கை யர்க்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறையாரும் மனமிக வருந்தி என்று பாண்டியன் நல்வழிப்படுவனென் றிருக்குங்கால், ஸ்ரீ ஞான சம்பந்தப்பிள்ளையார் திருமறைக்காட்டிற்கு எழுந்தருளிய தறிந்து

அவ் விருவரும் அங்குச்சென்று மதுரைக்கு வாவேண்டுமெனக் குறையிரந்தமையான், பிள்ளையார் அவர்க்கு விடைதந்து பின்னர்த் தாமும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு மதுரை யடைந்தார். அச் செய்தி யுணர்ந்த சமண முனிவர்கள் அவர் தங்கின படத்தில் இராப்போது தீயிடப் பிள்ளையார் அத் தீ, 'பையவே சென்று பாண்டியற் காகவே" என்று பணித்தார். அத் தழல் பாண்டியனைச் சுரநோயாகப் பற்றியது; அவன் அதன் கொடுமை யாற்றாது

துடித்தான். சமணர்கள் செய்த பரிகாரங்களெல்லாம் நோயை வளர்த்தன. பின் மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் பிள்ளையாரை வருவிக்க அவர் சுரநோயைத் தீர்த்தருளினர். அதன் பின்னும் சமணர்கள் பிள்ளையாரை வாதுக்கு அழைத்து அனல்வாதம், புனல்வாதங்களில் தோற்றுத் தாம் முன்னர்க் கூறிய வாறே கழுவேறினர்கள்.

[இது திருத்தொண்டர்புராணத்தும் பிரண்டு முளது.]

18-ஆம் அதிகாரம்: வெஃகாமை.

தின்னபிடே கப்பழத்தை நீண்மறையோர்க் கீத்தவிறை
துன்னுகுடி யோடழிந்தான் சோமேசா—பன்னில்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். (கஅ)

அஃதாவது பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை.

18. (இ-ள்) சோமேசா —! பன்னில் — ஆராயுமிடத்து, நடுவு இன்றி—'பிறர்க் குரியனவற்றைக் கொள்ளுதல் நமக்கு அறம் அன்று' என்னும் நடுவு நிலைமையின்றி, நன் பொருள்—(அவர்) நன்பொருளை, வெஃகின்—(ஒருவன்) வெளவக் கருதுமாயின், குடிபொன்றி—(அச்செய்கை அவன்) குடியைக் கெடச்செய்து, குற்றமும்—பல குற்றங்களையும், ஆங்கே தரும்—அப்பொழுதே (அவனுக்குக்)

கொடுக்கும், — (அதற்கு எடுத்துக்காட்டு) — நின் அபி டேகப் பழத்தை—உனது அபிஷேகத்திற்கு உரியவான (வாழைப்) பழத்தை, நீள் மறையோருக்கு—மிக்க அந்த ணர்க்கு, ஈந்த இறை—கொடுத்த அரசன், தன்னு குடி யோடு அழிந்தான்—பொருந்திய தனது குடியோடு அழி வடைந்தான் (எ-று).

அவர் குடியை வளரச்செய்து அவர்க்குப் பல நன்மையுந் தரும் தன்மைபற்றி 'நன்பொருள்' என்றார். 'பொன்ற' வென்பது பொன்றியெனத் திரிந்துநின்றது ; செய்தென்பது சொல்லெச்சம் என் றிலக்கணை முரைத்தார் ஆசிரியர் பரிமேலழகர். 'பொன்றி' என்பது 'பொன்றுவித்து' என்னும் பிறவினைப் பொருளில் வந்த தன்வினை யென்பது இலகு என்பர் பின்னோர்.

கதை:—விதாதா என்னும் அங்கநாட்டரசனொருவன் அசித் தன் என்னும் புரோகிதன் சொற்படி நடந்து செங்கோல் செலுத்துநாளில், ஒருநாள் நாரதமுனிவர் அங்கு எழுந்தருளி அரசனை நோக்கி, " உன் தந்தை இந்திரபதவிபெற் றினிது வாழ் கின்றான் ; உன்னை அறநெறிவழாது நடக்க வேண்டினான் " என வும், அசித்தனை நோக்கி, 'உன் தந்தை நாகின் வருந்துகின்றான். தான் தேடிய நிதியைப் புதைத்து வைத்த இடம் உனக்குச் சொல்லா திருந்தான். அது நாணடியின் உளதாம். அதனை எடுத்துத் தானஞ் செய்யச்சொன்னான் ' எனவுங் கூறிப்போயினர். அவ்வாறே அரசன் பல் அறம் புரிந்துநிற்ப, அசித்தனும் அந் நிதி யைத் தூணடியினின்றும் எடுத்துக் கோதானம், பூதானம், ஸ்வர்ண தானம், கன்னிகாதானம் முதலிய செய்தான். அசித்தன் தந்தை யும் நாகத்தின் நீங்கிச் சுவர்க்கம் அடைந்தான். இந் நிலையில் அர

சனும் அசித்தனும் விந்தியமலை சென்றார்கள். அங்குள்ள திவ்ய நதி தீரத்தில் பிராமண போசனம் செய்விக்க ஆசைகொண்டு பல பண்டங்களையும் வருவித்தார்கள். வாழைப்பழ மொன்றுமே கிடைத்திலது. பிராமணர்கள் வாழைப்பழமின்றி உண்ணே மென்ன, அரசன் வீமேச்சுரத்தில் திருக்கோயில்கொண் டெழுந்

தருளி யிருக்கும் பெருமானுக்கென விடப்பட்ட தோட்டமொன் றில் வாழைக்கனிகள் வேண்டியவளவு இருப்பதனை ஓர் அந்தணன் சொல்லக் கேட்டறிந்து அங்குள்ள குலகளைத் திருக்கோயி லதி காரிகள் கருத்திற்கு மாறுபட்டுக் கொணர்ந்து பரிமாறினன். இத னல் தேவராசனுயிருந்த அவன் தந்தை நிரயம் புக்கான்; அவனும் இறந்தபின் நிரயத் தழுந்தினன்; இக் காரியத்தின் இயைபுடைய யாவரும் நிரயத்திற் பயிர்போல வளர்ந்தார்கள்.

[இஃது உபதேசகாண்டத் துளது.]

---

19 - ஆம் அதிகாரம் : புறங்கூறுமை.

கூனியிரா மன்பிரிந்து போமாறே கூறினளே
தானறுமபூங் கொன்றையணி சோமேசா—தானே
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் ககச்சொல்லி
கட்பாட நேற்று தவர். (கசு)

அஃதாவது காணுதவழிப் பிறரை இகழ்ந்துரையாமை.

19. (இ-ள்) தூ நறு கொன்றை பூ அணி—சுத்தமான நல்ல அழகிய கொன்றை மாலையைத் தரிக்கின்ற சோமேசா—! பக சொல்லி—தம்மைவிட்டு நீங்கும்படி புறங்கூறி, கேளிர் பிரிப்பர்—தமது உற்றாரையும் பிரிப்பர்—தமது உற்றாரையும் பிரியப்பண்ணுவர்; நக சொல்லி நட்பாடல் தேற்றாதவர்—கூடி மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடு நட்புக்கொள்ளுதலை அறியாதார்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—கூனி—மந்தரை என்னும் கூனி, தானே—(வேறொருவர் தூண்டலின்றித்) தானே, இராமன்—இராமபிரான், பிரிந்துபோமாறு—(உற்றார் நட்டார் முதலிய யாவரையும் விட்டுப்) பிரிந்து போகும்படி, கூறினள்—(கைகேசிக்குச்) சொன்னள் (எ-று).

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கேளிரையும் பிரிப்பர் என்ற கருத்தான், 'அயலாரோடு' என்பது வருவித் துரைக்கப் பட்டது. அறிதல்—தமக்கு உறுதியென்றறிதல். தன் வினை பிற வினைகட்குப் பொதுவினையாகிய 'தேற்றுமை' ஈண்டுத் தன் வினையாய் நின்றது; 'கடியுமிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை'

என்னுங் கலித்தொகை யடியினும் அஃது அவ்வாறு நிற்றல் காண்க. இராமன்—(வடிவு குண முதலியவற்றுன் யாவரையும்) இரஞ்சிக்கச் செய்பவன் என்பது சப்தார்த்தம். ஏகாரங்களின் முத லது தேற்றமும் இடையது குறிப்பும் கடையது பிரிநிலையுமாம்.

கதை :—இக்ஷ்வாகுகுலோத்தமனை இராமபிரான்குப் பட்டாபி ஷேக முயற்சிகள் நடக்கையில், சிறுபோதில் விற்கொண்டெய்த உண்டை தற்செயலாய்த் தன் கூனின் மேற்பட வருந்திய மந்தரை என்னும் கைகேசியின் பணிப்பெண் அதனைத் தடுக்கத் துணிந்து, கௌசலை மகனுகிய இராமனிடத்தும் தன் மகனுகிய பரதனிடத் தும் வேற்றுமை நினையாத கைகேசியின் கொள்கையைத் தன் சொல் வன்மையின் மாற்றி இராமனைப் பதினுன்கு வருஷம் காட் டிற்குச்செல்ல ஏவிப் பரதனுக்கு முடி சூட்டும்படி கற்பித்தாள்.

[இஃது இராமாயணத் துளதென்பது வெளிப்படை.]

20-ஆம் அதிகாரம் : பயனில சொல்லாமை.

சேக்கிழார் சித்தா மணிப்பயிற்சி நீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா—நோக்கிற்
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். (20)

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பங்க ளாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கண்

20. (இ-ள்) சோமேசா—! நோக்கின்—ஆராயின், பயன் இல் சொல் பாராட்டுவானை—பயனில்லாத சொற் களைப் பலகாலுஞ் சொல்லுவானை, மகன் எனல்—மக னென்று சொல்லற்க, மக்கள் பதடி எனல்—மக்களுட் பத தென்று சொல்லுக,—(அதற்கு எடுத்துக்காட்டு)—சேக் கிழார்—சேக்கிழார் நாயனார், தூக்கி—ஆராய்ந்து, சிந்தா மணி பயிற்சி தீது ஏ என—சிவக சிந்தாமணி என்னும் நூலிற் பழகுதல் கெடுதியேயென்று, உபதேசித்தார்—இதோபதேசஞ் செய்தார் (எ-று).

'அல்' என்னும் வியங்கோள் விகுதி முன் எதிர்மறையி னும், பின் உடன்பாட்டினும் வந்தது. அறிவாகிய உள்ளீடு (பொருள்) இன்மையின் 'மக்கட் பதடி' என்றார். பிரிநிலை ஏகா ரம் பிரித்துக் கூட்டப்பட்ட தென்க.

கதை :—தொண்டை நாட்டில் குன்றத்தூரில் வேளாள மர பில் அவதரித்த சேக்கிழார் நாயனருடைய அறிவு ஆற்றல் முதலி யன பலர் சொல்லகேட்ட அநபாயன் என்னுஞ் சோழன் அவரை வரவழைத்து அவர் திறத்தைதத் தான் நேரே அறிந்து அமைச்ச ராக்கினன். அந் நாளில், சிவக சிந்தாமணி என்னும் சமண நூலைப் பலரும் ஆதாரத்துடன் கற்றார்கள். அரசவைக்கு வந்த சிலர் சிந்தாமணிப் பாக்களிற் சில எடுத்துச்கூறி அவற்றின்கண் நயங் களையுங் கூறினர்கள். அது கேட்டிருந்த சேக்கிழார் பெருமான் 'அந்நூற்கதை அவகதையாய் முடிதலின், அதனைக் கற்றலாகாது ;

சிவகதைகள் எத்தனையோ உள; அவற்றைக் கற்பின் இம்மை, மறுமைப் பயன் பெரிதுண்' டென்றார். அதபாயன், 'அங்ஙன மாயிற் சிவகதைகளிற் சில கூறுக' என்றான். சேக்கிழார் பெரு மான் நாயன்மார் கதைகளிற் சிலவற்றையும் அவற்றின் வரலாற்று முறைமையையுங் கூறவே, கேட்டு வியந்த சோழன் திருத்தொண் டர்புராணம் பாடும்படி வேண்டச் சிதம்பரத்திலிருந்து ஓராண்டின் முடித்து அரங்கேற்றினார்.

[இது சேக்கிழார்புராணத் துளது].

சோமேசர் முதுமொழி வெண்பா 41

21-ஆம் அதிகாரம்: தீவினையச்சம்.

குற்றொருருவர்க் கூறைகொண்டுகொன்றதிம்மையேகூடல்
சொற்றதுகை கண்டோமே சோமேசா—வற்றான்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. (உக)

அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்.

21. (இ-ள்) சோமேசா—! கூறைகொண்டு—துணி மூடையைக் கவர்ந்துகொண்டு, ஒருவனை குற்று கொன் றது—ஒருவனைக் குத்திக் கொன்றதன் பயன், இம்மையே கூடல்—இப்பிறப்பிலேயே வந்தடைதலை, சொற்றது—(ஆசாரிய சுவாமிகள்) அருளிச்செய்தது, கை கண்டோம்—லோகானுபவத்தின் (உண்மையெனக்) கண்டோம், அற்

ருன்—ஆனபடியான், பிறன் கேடு மறந்தும் சூழற்க—(ஒருவன்) பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுதொழிக, சூழின்—என்னுவானாயின், சூழ்ந்தவன் கேடு அறம் சூழும்—(அவ்வாறு எண்ணிய) தனக்குக் கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும் (எ-று).

கேடென்பன ஆகுபெயர். சூழ்கின்ற பொழுதே தானும் உடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படு மென்பது பெறப்பட்டது. அறக்கடவு எண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலும் ஆகாது என்பதாம். கொன்றது—ஆகுபெயர். எகாரம் பிரிநிலை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புறம்பயத்தி லருளிச்செய்த திருப்பதிகத்தில் 'குற்றெருருவரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாஞ், செற்றெருருவரைச் செய்த தீமைக ளிம்மை யேவருந் திண்ணமே' எனப் பணித்தமை காண்க. இங்ஙனம் பொருள் கூறின் கதை இன்றும்; ஆயின் என்? "ஓதாநா ளோதுகலை யொத்திலேத்தாள் சீதை யென்றருன், சுதாரா வான்மீகி சோமேசா" என்புழிப்

போல, மற்றுஞ் சில பாக்களினுங் கதை இன்றுதல் உற்றறிக. இனி, இம்மையே கூடச் சொற்றது' எனப் பாடமோதித் தன்னைக் கொல்லவந்த கள்வன் அப்போதே இறக்கும்படி வெகுண்டு

கூறின சாதிதருமந் தவறுதவளும் சிவபக்தியிற் சிறந்தவளுமான திருப்புறம்பயம் என்னுந் திருப்பதியில் வாழ்ந்த வசந்ததிலகை என்னும் வேசைமாதின் கதையைப் பொருத்திப் 'புறம்பயத்து மின்னேயுயிர் போக்கவந்தான் பட்ட, திறந்தெரி யாதோ சிவ சிவா' என்னும் வெண்பாவை மேற்கோள் காட்டுப ஒரு சிலர். கதை தெரித்தற்கு உரிப்பெயரேனும் பரியாயப் பெயரேனும் பிற குறிப்பேனுங் காணப்படாமையாற் கதை யாண்டையதென விடுத் தொழிக்க. 'கைகண்டோமே' என்னுஞ் சொற் பிரயோகமுங் கதை யுண்டெனற்குப் பாதகமேயாம்.

22-ஆம் அதிகாரம் : ஒப்புரவறிதல்.

பன்டைநிலை வெண்ணிகொந்தார் பாகஞ்செய் மாறராந்
தொண்டர் மனைவியார் சோமேசா—கண்டோ
கயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு. (22)

அஃதாவது உலக நடையினை அறிந்து செய்தல். உலக நடை வேத நடைபோல அற நூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யுந் தன்மைத் தாகலின், 'ஒப்புர வறிதல்' என்றார். ஒப்புரவு—உபகாரம்; ஒப்பு உரவு எனப் பிரிந்து உலகத்தாரொடு ஒத்துச் செய்யும் வன்மை எனப் பொருள்படுமென்பு.

22. (இ-ள்) சோமேசா—! நயன் உடையான் நல் கூர்ந்தான் ஆதல்—ஒப்புரவு செய்தலே யுடையான் வறிய ராதலாவது, செயும் கீர—தவிராது செய்யுந் தன்மைய வான அவ் வொப்புரவுகளே, செய்யாது அமைகலா ஆறு—செய்யப்பெறாது வருந்துகின்ற இயல்பாம், (என்னும்

உண்மையைக்) கண்டோம்—அறிந்தோம்,—பாகம் செய்—(வறுமை நிலையில் சிவனடியாரைத் திருவமுது செய்வித்தற்குச்) சமையல் செய்த, மாறர் ஆம் தொண்டர் மனைவியார்—இளையான் குடிமாற நாயனார் என்கிற அடியாரது மனைவியார், பண்டை நினைவு எண்ணி நொந்தார்—முன்னைய செல்வ நிலையின் ஞாபகத்தான் (இப்போதைக் குறையை) எண்ணி வருந்தினர் (எ-று).

தான் அனுபவிப்பனவற்றை அனுபவிக்கப் பெறுமை வறியராதல் அன்றென்பதாம். 'பாகஞ் செய் மனைவியார்' என முடிபு செய்க. நயன்—நயம் என்பதன் ஈற்றுப்போலி. நல்கூர்ந்தான் என்புழி, நல்கு ஊர் என்னும் இரண்டு வினைப்பகுதிகள் தொடர்ந்து நின்று நல்கூர் என ஒரு சொல் தன்மைப்பட்டு '(பிறர்) நல்குதலால் உயிர் வாழ்தல்' எனப் பொருள் தருதலறிக. 'மாறர்' என்னுஞ் சொற்குக் '(காமாதிகளுக்குப்) பகைவர்' எனப் பொருள் விரிப்ப.

கதை :—இளையான்குடி என்னும் ஊரில் வேளாள மரபிற்

பிறந்த மாற நாயனார் அடியார்களுக்கு அமுது செய்வித்து வரு நாளில், சிவபெருமான் அவருக்கு வறுமை தர, உள்ளன விற்றும் கடன் கொண்டுந் தமது திருப்பணியை விடாது செய்து வந்தார். ஒருநாள் ஒன்றும் பெறக்கூடாமையால் நாயனாரும் அவர் மனைவி யாரும் பகல் முழுதும் போசன மின்றிப் பசித்துப் பட்டினி விட்டு வருந்துகையில், சிவபெருமான் ஓ ரடியார்போல இர வில் எழுந்தருள, நாயனார் அவரை அன்போடு வரவேற்று ஆசனத் திருத்தித் தமது மனைவியாரொடு யாது செய்வதென யோசிக்க, அவர் உரைத்தபடியே அவ் விரவில் மழையில் நனைந்து இருளின் வழிநடந்து அன்று வயலில் விதைத்த முளைகளை வாரிவந்து விற கிற்குக் கூரையிலுள்ள வரிச்சல்களை அறுத்து வீழ்த்திக் கறிக் குப் புறக்கடையிலுள்ள குழி நிரம்பாத புன்செய்ப் பயிர்களைக் கொணர, அவற்றைக்கொண்டு அம்மையார் தம் கை வன்மையால்

கறிவகைகளோடு அமுது அமைக்க, உறங்கினாற்போல நடித்த பெருமான் அருகிற்சென்று நாயனார் அமுது செய்தற்கு அழைக்க மறைந்து சோதி வடிவாய்த் தோன்றிப் பார்வதி சமேதராய் இட பாரூடராய்க் காட்சிதந்து இருவருக்குஞ் சிவபதம் அருளினர்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது.]

23–ஆம் அதிகாரம் : ஈகை.

மீளென் றுரைப்பளவு மிக்குவகை பெற்றிலர்வண்
மேளை நியற்பகையார் சோமேசர் --நீளுலகில்

இன்னு திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. (உங்)

அஃதாவது வறியாய் எற்றூர்க்கு மாறுக ஒன்றும் பெறுது கொடுத்தல்.

23. (இ-ள்) சோமேசா-! நீள் உலகில்-இவ் வகன்ற உலகின்கண், இரக்கப்படுதல் இன்னுது—(இரத்தலே யன்றி) இரக்கப்படுதலும் இனிதன்று, இரந்தவர் இன் முகம்—(ஒரு பொருளை) இரந்தவர் (அதனைப் பெற்றத னால்) இனிதாகிய அவர் முகத்தை, காணும் அளவு—காணும் அளவும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)-வன்தோள் இயற்பகையார்—வலிய தோள்களையுடைய இயற்பகை நாயனார், மிக்கு உவகைபெற்றிலர்—மிக்க மகிழ்ச்சியைப் பெற்றாரில்லை, நீள் என்று உரைப்பளவும்—(தமது மனைவி யைக்கொண்ட அடியார்) "நீள்க" என்று சொல்லு மளவும் (எ-று).

எச்சவுமையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக் கப்படுதலாவது இரப்பார்க்குக் கொடுப்பனென்றிருத்தல். அதனை 'இன்னுது' என்றது "எல்லா மிரப்பார்க் கொன்றீயாமை"

கூடுமோ என்னும் அச்சம் நீக்கி. மிக்குவகை என்புழி அகரம் தொக்கதென்க. இயற்பகையார்—(அடியார்க்குத் தமது மனைவி யைத் தந்து) உலகியலைப் பகைத்தார்.

கதை:—சோழநாட்டில், காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் அவதரித்த இயற்பகை நாயனார் சிவனடியார் திறத்து அன்பு பூண்டு அவர் வேண்டின யாவும் பரிந்தளித்து வந்தார். பெருமான் அவர் திருத்தொண்டின் பெருமையை உலகர்க்கு உணர்த்த வேண்டி ஒரு தூர்த்த வேதியராய்த் திருவுருக்கொண்டு வந்து உபசரிக்கப்பெற்று, 'அன்ப! கேட்பது தருவாயோ?' என்றார். அதற்கு நாயனார், 'என்னிடத்துளதாயின் அஃது உமதே' என, 'உன் மனைவியை விரும்பி வந்தேன்' என்றார். அதுகேட்டு மகிழ்ந்து மனைவியாரை அவருக்குத் தர, மனைவியாரும் அவருடன் செல்ல இசைந்தார். அதன்பின், நாயனார் 'இனி யான் செய்யுங் குற்றேவல் எதேனும் உளதோ?' என்ன, அதற்குப் பெருமான் 'நீ எனக்கு வழித்துணையாக வரவேண்டும்' என்றார். அது யான் எவாமலே செய்யக் கடவது அன்றே! என்று கூறி அவர்களுடன் சென்றார். உறவினர்கள் இதனை யறிந்து வழிமறித்தார்கள். அவர்களை எதிர்த்து வாளால் வீசிக் கொன்று திருச்சாய்க்காடு என்னும் திருப்பதியை அணையுங்காற் பெருமான் "வீட்டிற்கு மீள்க" என, நாயனார் பணிந்து மனைவியாரிடம் பற்றொன்றுமின்றித் திரும்பியும் பாராது செல்வதறிந்து "இயற்பகை முனிவா! ஓலம்" என்று உரத்துக் கூற, யாவர் எதிர்த்தார்களோ வென்று விரைந்தோடி வந்தார். பெருமானைக் கண்டிலர், மனைவியாரையே கண்டனர். பெருமான் அவ் விருவருக்குங் காட்சி கொடுத்துக் கதி அருளினார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

24-ஆம் அதிகாரம் : புகழ்.

போசன் கவிஞருக்கே போதப் பரிந்தளித்துத்
தூசிலாக் கீர்த்திகொண்டான் சோமேசா—வாசையுடன்
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. (உசா)

அஃதாவது இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனுமி இவ் வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி.

24. (இ-ள்) சோமேசா—! ஆசையுடன்—ஆதரத்துடன், ஈதல்—(வறியார்க்கு) ஈக, இசைபட வாழ்தல்—(அதனாற்) புகழுண்டாக வாழ்க, அது அல்லது—அப் புகழல்லது, உயிர்க்கு ஊதியம் இல்லை—மக்களுயிர்க்குப் பயன் வேறொன்றில்லை யாகலான்,—(அதற்கு எடுத்துக்காட்டு) —போசன்—போசராசன், கவிஞருக்கே பரிந்து போதமளித்து—பாவலர்க்கே ஆசைகொண்டு மிகக் கொடுத்து, தூசுஇலா கீர்த்திகொண்டான்—குற்ற மற்ற புகழைப் பெற்றான் (எ-று).

இசைபட வாழ்தற்குக் கல்வி, ஆண்மை முதலிய வேறு காரணங்களும் உண்டெனினும் "உணவின் பிண்ட முண்டி முதற்று" ஆதலின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக 'ஈதல்'

என்றார்.

'உயிர்க்கு' என்பது ஈதலும் இசைபட வாழ்தலும் வில்லாக் குயிர்கட்கு எலாமையின், மக்களுயிர்மேனின்றது. ஏகாரம் பிரிநிலை. 'போத அளித்து' எனக்கூட்டுக.

கதை:—மாளவதேயத்து இராசதானியாகிய தாரா நகரத்திலிருந்து கொண்டு கௌடதேயத்தொடு கூடிய தென்தேசங்களையும் ஆண்ட போஜன் என்னும் அரசன் தன்னை அடுத்த கவிரவரத்நமெனப்பெறுங் காளிதாசன் முதலிய ஒன்பதின்மருக்குங் பிற வடமொழிப் புலவர்களுக்கும் மிக்க பொருள் வழங்கி அவர்

களாற் புகழப்பெற்று வாழ்ந்தான். சிலர் கூறிய அரிய கவிகளைக் கேட்டு வியந்து அகூரத்திற்கு ஒரும்பொன் வீதம் பரிசளித்தானென்றால் இவன் கொடையையும் அதனால் இவன்பெற்ற புகழையும் பற்றிக் கூறவும் வேண்டுமோ!

25-ஆம் அதிகாரம்: அருளுடைமை.

மூர்த்திபால் வண்கண்மை மூண்ட வடுகரசன்
சூர்த்திறத்தா னுய்ந்தானே சோமேசா—கூர்த்த
பொருளற்றூர் பூப்ப வொருகா லருளற்று
ரற்றூர்மற் றூத லரிது. (உரு)

அஃதாவது ஓரியைபுமின்றி இயல்பாகவே எல்லா வுயிர்கண் மேலுஞ் செல்வதாகிய கருணை.

25. (இ-ள்) சோமேசா—! கூர்த்தபொருள் அற்றூர் ஒருகால் பூப்பர் – (ஊழான்) மிக்க பொருளை இழந்து வறியராயினர் (அவ்வறுமை நீங்கிப் பின்) ஒரு காலத்திற் செல்வத்தாற் பொலிவர், அருள் அற்றூர் அற்றூர்—(அவ்வாறன்றி) அருளிலாதார் (பாவம் அறுமையின்) அழிந்தாரே, மற்று ஆதல் அரிது—பின்னொரு காலத்தும் (அருளுடையர்) ஆதலில்லை,—(அதற்கு எடுத்துக்காட்டு) — மூர்த்தி பால்—மூர்த்தி நாயனரிடத்தே, வன்கண்மை மூண்ட வடுகு அரசன்—பகைமை மிக்க வடுக மன்னன், சூர் திறத்தான்—(தன்) வீரத்தன்மையால், உய்ந்தானே—பிழைத்தானே, இல்லை (எ-று).

மற்று—வினைமாற்றின்கண் வந்தது. அருமை—ஈண்டு இன்மை குறித்து நின்றது. ஓகாரம்—எதிர்மறை.

கதை:—பாண்டிநாட்டில் மதுரைமாநகரில் வணிகர்குலத்தில் அவதரித்த மூர்த்தி நாயனர் மிக்க அன்போடு சுந்தரேசப் பெருமா

னுக்குச் சந்தனக்காப்பணியும் திருத்தொண்டு வழாது புரிந்து வருநாளில், வடுக மன்னனொருவன் பாண்டியனை எதிர்த்துப்

போர்செய்து வெற்றிபெற்று அந் நாட்டிற்கு அரசனுயினன். அவன் சமணமதத்தைச் சார்ந்தவனுகலின் நாயனூர் திருப்பணி ஒன்றும் முட்டுப்படாது நடத்தலேக்கண்டு பொறுமை கொண்டு சந்தனக் கட்டை எங்கும் அவர்க்கு அகப்படாவாறு செய்தான். அன்று நாயனூர் கோயில் புக்குச் 'சந்தனக்கட்டைக்கு முட்டுவந்ததேனும், என் கைக்கு முட்டுவந்த தில்லையே' என்று தமது முழங்கையைச் சந்தனக்கல்லின்மேல் தேய்க்கப் பெருமான் பொறுத்து "அன்ப! நிற்க. நாளை நீ இந்நாட்டரசைப் பெறுவாய்" என்ற அசரீரியாய்த் தெரிவிக்க நின்றூர். அன்றிரவே அக்கொடிய மன்னன் இறந்து பட்டனன். அவனுக்கு மகப்பேறின்மையால் பட்டயாளனையை அலங்கரித்து விட அது திருக்கோயிலில் ஒருபுற மிருந்த நாயனூரை எடுத்துத் தன் முதுகின்மேல் வைத்துக்கொள்ள மந்திரி முதலியோர் அவரைப் பணிந்து அழைத்துச்சென்று முடிசூட்டினர்கள்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

---

23 – ஆம் அதிகாரம் : புலான் மறுத்தல்.

மச்சஞ் சுமந்துய்ப்ப வாளோர்ப் பணிகொண்டான்
றுச்சனஞ் சூரபன்மன் சோமேசா—நிச்சயமே
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள். (உசு)

அஃதாவது ஊன் உண்ணுதலே ஒழிதல்.

26. (இ--ள்) சோமேசா—! தன் ஊன் பெருக்கற்கு—தன் உடம்பினை வீக்குதற்கு, தான் பிறிது ஊன் உண்பான்—தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பவன், நிச்சயமே—உண்மையாகவே, எங்ஙனம் ஆளும் அருள்—எப்படி நன்றாக நடத்தும் அருளினை,—(அதற்கு எடுத்துக்

காட்டு)—துச்சன் ஆம் சூரபன்மன் — இழிந்தோனாகிய சூரபத்மா என்னும் அசுரன், மச்சம் சுமந்து உய்ப்ப—மீன்களைச் சுமந்துகொண்டு வந்து தரவும், வானோர் பணி கொண்டான் — (சுத்தர்களாகிய) தேவர்களை ஏவினான் (எ—று).

பயனில்லாத ஊன் பெருக்கலைப் பயனெனக் கருதி இக் கொடுமை செய்வானே அறிவிலாத கொடியோன் என்றவா றுரைத்தது. 'எங்ஙனம் ஆளும் அருள்' என்பது "ஆளான்" என்னும் பொருள்பட நின்ற இகழ்ச்சிக்குறிப்பு. உய்ப்ப—ஈண்டு இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

கதை:—அசுரேசனுடைய மகளாகிய மாயை என்பாளிடங் காசிப முனிவ ராருளாற் பிறந்த சூரபத்மன் தனது தாய்மொழி கொண்டு சிங்கமுகன், தாரகன் என்னுந் தன் தம்பியருடன் வட திசையிற் புக்குச் சிவபெருமானைக் குறித்து அரிய தொரு வேள்வியை நெடுங்காலஞ் செய்தும் அவ் வேள்வித் தீயில் தன் உடற் றசைகளையெல்லாம் அரிந்தரிந்து சொரிந்தும் அப் பெருமான்

தோன்றுமையால் ஓம குண்டத்தில் வீழ்ந்து இறப்பப் பெருமான் பார்வதி சமேதராய்த் தோன்றி அவன் உயிர்பெற் றெழும்படி அனுக்கிரகஞ்செய்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகமளவும் ஆள வரமளித்துப் பாசுபதாஸ்திர முதலியனவு முதவிச் சென்றார். சூரபத்மன் வரபல முதலியவற்றான் மயங்கித் தேவர் கள் மீன் சுமத்தன் முதலிய வலாத குற்றேவல்களுஞ் செய்ய ஏவி அவர்களை மிக வருத்த, வருத்தம் பொறாத அத் தேவர்கள் வேண்டு கோளுக்கிணங்கிச் சிவ குமாரனுய்த் தோன்றிய ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைப் பாலனென எள்ளிப் போரில் எதிர்த்துப் பலவற்றையும் இழந்து முடிவில் தானு மழிந்தான். 'நீள்வா ரிதியி னெடுமீன் பல சுமந்து, தாழ்வாம் பணிபலவுஞ் செய்துந் தளர்ந்துலகில், வாழ்வா மெனவே மதித்திருந்தோ மற்றதன்றிச், சூழ்வா லொருதீமை சூர பன்ம னுன்னினனே' 'மீனும் வடியும் வியன்றசையுந் தான் சுமந்த, வீனமது வன்றி யீதோர் பழிசுமக்கின், மான மழிய

வருமே யதுவன்றித், தின முறுசிறையுந் தீராது வந்திடுமே' என் னுங் கந்தபுராணப் பாக்கள் காண்க.

[இது கந்தபுராணத் துளது].

---

27 – ஆம் அதிகாரம் : தவம்.

ஏர்மணங்கொள் ளூர்ச்சுடருள் யாருமனு கச்சிலர்தாந்

தூரகெறி கின்றயர்க்தார் சோமேசா—வோரில்
தவமுஞ் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. (உள)

அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும் கோடைக்கண் வெயில் நிலை நிற்றலும் மாரியிலும் பனியிலும் நீர் நிலை நிற்றலும் முதலிய செய்கைகளை மேற்கொண்டு அவற்றூற் றம் உயிர்க்கு வருந் துன் பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களை ஒம்புதல்.

27. (இ-ள்) சோமேசா---! ஓரில்-ஆராயின், தவமும்-(பயனெயன்றி) தவந்தானும் (உண்டாவது), தவம் உடை யார்க்கு ஆகும்-முற்றவமுடையார்க்கே(ஆகலான்), அதனை-அத் தவத்தை, அஃது இலார் மேற் கொள்வது அவம்-அம் முற்றவமில்லாதவர் முயல்வது பயனில் முயற்சியாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—மண நல்லூர் ஏர் சுடருள்—ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையார் திருமணம் நடந்த திரு நல்லூரில் தோன்றிய அழகிய சோதியுள், யாரும் அணுக-(அங்கிருந்த) யாவருஞ் சேர, சிலர் தூரகெறி நின்று அயர்ந்தார்—சிலர் தூரவழியில் நின்று (அப்போது சேரப் பெறுது) மனஞ் சோர்ந்தார்கள் (எ-று).

முற்றவமுடையார் பழக்கத்தால் அறிவும் ஆற்றலுமுடை ராய் மேற்கொள்ளுந் தவத்தை இனிது முடித்தலின் 'தவமுடை யார்க்கு ஆகும்' என்றும், முற்றவமிலாதார் பழக்க மின்மையால்

அறிவும் ஆற்றலுமில்லாய் அதனை மூடிக்கமாட்டாமையின் 'அவம்' என்றுங் கூறினர். உம்மை எச்சவும்மை என்க.

கதை:—முதியோர்கள் ஸ்ரீ ஞான சம்பந்தப் பிள்ளையாருக்குத் திருநல்லூரிலுள்ள நம்பாண்டார் நம்பிகளுடைய மகளை மணம் பேசிமுடிக்க முகூர்த்த நாளன்று பிள்ளையாரும் பந்துமித்திராதிகளுடன் திருநல்லூருக்கு எழுந்தருளி மணவினை தொடங்கி ஏனைச் சடங்குகள் முற்றித் தீவலம் வருங்கால் அங்கிருந்த எல்லோருடனுஞ் சிவசாயுச்சியம் பெறத் திருவுளங்கொண்டு திருப்பதிகமோதிய வளவில் ஒரு சோதி தோன்ற அதனுட் பிள்ளையாரும் அவர் மனைவியாரும் ஐக்கியமாகப் பின் யாவரும் அதனுட் கலந்தார்கள். தூரத்தே நின்ற சிலர்க்கு அப்போது வாய்க்கவில்லை; அதனை இழந்து வருந்தினர்கள்.

'கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளுந் திருஞான சம்பந்தா' என்றும்,

'கட்டைமுட் டழுவுதா ணெட்டிதழு டுத்தசெங் கமலநான் முகவெகினமுங், கவுத்துவ மணிப்பணியொ டம்போரு காடவி கலித்தபச் சைப்பன்றியு, மட்டுலவு சீர்பாத மின்றளவு கண்டிலா வானவனு மோரொருவனை, வழிவருஞ் சரிதாதி வருவித்து வீடு தரும் வனைதமிழ்க் காழிமேவி, யெட்டுணைபு மறிவரு மனந்தசீ வரைவதுவை யென்றுபெய ரிட்டழைத்தங், கிரும்புண்ட நீரிற்றி ரும்பாத வீடுதிரு மினியகவு ணியர்விளக்கே, திட்டமொடு வர

முதவு சமரபுரி முருகவேள் சிறுபறை முழக்கியருளே, செறிகலப மயின்முதுகி னுதயசின் மயதூய சிறுபறை முழக்கியருளே' என் றுங் கூறினர் பிறரும்.

28-ஆம் அதிகாரம்: கூடாவொழுக்கம்.

மாயனவ்வே டங்கொண்டே வன்சலந்த ரன்கிழத்தி
தூய கலங்கவர்ந்தான் சோமேசா—வாயின்
வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. (உஅ)

அஃதாவது தாம்விட்ட காமவின்பத்தை வலிமையின்மையின் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தலத்தோடு பொருந்தாததாகிய தியவொழுக்கம்.

28. (இ-ள்) சோமேசா—! ஆயின்—ஆராயின், வலி இல் நிலைமையான் வல் உருவம்—(மனத்தைத் தன் வழிப் படுத்தும்) வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடை யோர் வேடத்தைக் கொண்டு தான் அம் மனத்தின் வழிப் படுதல், பெற்றம் — பசு, புலியின் தோல் போர்த்து— (காவலர் கடியாமற்) புலியின் ரோலப் போர்த்து, மேய்ந் தற்று—(பைங்கூழை) மேய்ந்தாற் போலும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)-வன் சலந்தான் கிழத்தி-வலிய சலந்தரா சுரன் மனைவியாகிய பிருந்தையினுடைய, தாயநலம்—குற் றத்தினீங்கிய இன்பத்தை, மாயன் — திருமால், அவ் வேடம் கொண்டே—அச் சலந்தரன் உருவத்தைத் தாங் கியே, கவர்ந்தான்—கைக்கொண்டான் (எ-று):

'பெற்றம் புலியின் ரோல் போர்த்து மேய்ந்தற்று' என்பது இல்பொருளுவமை. இதனை 'அபூத வுவமை' என்ப வடமொழி யாளர். 'அவனி யில்லா வண்ணதோர் பொருளை, யுவமைசெய் தலைக்கு மபூத வுவமையும்' என்றார் இலக்கண விளக்க முடை யார். வலியினிலைமையா னென்னும் அடையானும். மேய்ந்தற் றென்னுந் தொழிலுவமையானும் வல்லுருவத்தோடு மனவழிப்படு தல் என்பது பெற்றும். காவலர் கடியாமை—புலி புல் தின்னுதென் பதனாலும் அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கொள்ளுதற்குப்

பயன் தவத்தினர் சிற்றின்ப நுகரா ரென்பதனானும் அருகணைந்தாற் சாப நேருமென்னும் அச்சத்தானும் உலகத்தார் ஐயப்படாமை யாயிற்று. இவ்வாறு தனக்குரிய மனைவியையும் துறந்து வலியுமின்றிப் பிறர் ஐயப்படாத வல்லுருவமுங்கொண்டு நின்றவன் மனவழிப் படுதலாவது தன் மனம் ஒடியவழியே ஒடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல் பெற்றம் தனக்குரிய புல்லை விட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற் போலு மென்ற உவமையானறிக. 'மேய்ந்தற்று' என்புழி, 'ஆல்' என்னும் வினையெச்ச விகுதி புணர்ந்து கெட்டதென்க. கொண்டே—ஏகாரம் தேற்றம். ஐலந்தான்—ஐலம் தரித்தவன் அஃதாவது கடல் தரித்தவன் என்பது சொல்லின்படி பொருள்.

கதை:—சலந்தராசுரன் தன் மனைவியாகிய பிருந்தை தடுத்தும் கேளாது சிவபெருமானோடு போர்புரியவேண்டிக் கைலை நோக்கிவரும் வழியில் அப்பெருமான் ஓர் அந்தண வடிவங்கொண்டு நின்று 'எங்குச் செல்கின்றனை' என்று வினவ, அவன் 'சிவனோடு போர்புரிந்து வெல்லச் செல்கின்றேன்' என்ன, பெருமான் 'அஃது எனக்குக் கூடுமோ? கூடுமாயின், தரையின் யான் கீறுஞ் சக்கரத்தை எடுப்பாய்' என்று ஒரு சக்கரங் கீற, அதை அவன் தோளின்மீது எடுக்க, அப்போது அஃது அவன் உடம்பைப் பிளக்கவே அவன் இறந்தொழிந்தான். அஃதறிந்த திருமால் தாம் அவன் மனைவியாகிய பிருந்தையினிடத்து மோகத்தைத் தணித்துக்கொள்ளுதற்குத் தக்க தருணம் அதுவேயென நினைத்து அச் சலந்தரன் வடிவந் தாங்கிச் சென்று எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கை

யில் வஞ்சனையறிந்த பிருந்தை உடனே நீப்புக்காள். திருமால் பிரிவாற்றாது அவள் சாம்பரிற் புரண்டார். 'இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால், சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—னெடுகாட் டுஞ், சம்பந்தா வென்புநின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென், கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு' என்னுஞ் செய்யுளை நோக்குக.

[இஃது இலிங்கபுராணத் தினது]

---

54 சோமேசர் முதுமொழி வெண்பா

29-ஆம் அதிகாரம் : கள்ளாமை.

காய்வாற் களவினுன் ஞாலமிக ழப்பட்டான்
றூயனுங் காதிமகன் சோமேசா—வாயதனுல்
எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. (உகூ)

அஃதாவது பிறருடைமையா யிருப்பது யாதொரு பொருளை யும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதலும் செய் தலோ டொத்தலின் 'கள்ளாமை' என்றார்.

29. (இ-ள்) சோமேசா—! தூயன் ஆம் காதி மகன் —பரிசுத்தனுகிய விசுவாமித்திரன், காய் வால் களவி னுல்—காயினது (நீரில் ஊறிய) வாலைக் களவு செய்த

மையால், ஞாலம் இகழப் பட்டான்—உலகத்தாரான் இழித்துரைக்கப்பட்டான், ஆயதனால் — ஆனதுபற்றி, எள்ளாமை வேண்டுவான் என்பான்—(முத்தியை) இகழாது விரும்புவான் இவனென்று (தவத்தோரான்) நன்கு மதிக்கப்படுவான், எனைத்து ஒன்றும்—யாதொரு பொருளையும், கள்ளாமை—பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை, தன் நெஞ்சு காக்க—தன் நெஞ்சினைக் காக்க (எ-று).

'எள்ளாது' என்னும் எதிர்மறை வினையெச்சம் 'எள்ளாமை' எனத் திரிந்து நின்றது. முத்தியை இகழ்தலாவது உலகாயத முதலிய மயக்கநூல்களைத் தெளிந்து அவற்றிற்கு எற்ப ஒழுகுதல். ஞானத்திற்கு எதுவான மெய்ந்நூற் பொருளையாயினும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக்கொள்ளின் அதுவுங் களவாமாகலின் 'எனைத் தொன்றும்' என்றார். 'நெஞ்சு கள்ளாமற் காக்க' எனவே நண்டுக் கள்ளுதல் கள்ளக் கருதுதலென்பது பெற்றும். காதி—ஒரு முனிவன். களவு சிறிதாயினும் பழி பெரிதென்பார் 'நாய் வாற் களவினன் ஞாலம் இகழப் பட்டான்' என்றார்.

கதை:—விசுவாமித்திர முனிவர் நீண்டகாலம் நிஷ்டை கூடி இருந்து கண் விழித்தபோது எங்கும் வற்கடஞ் சென்றமையால் தமது பசித்தீயைத் தணித்தற் கொன்றும் பெறாது ஒரு வேடன் மனையில் நாய் இறைச்சி இருக்கக்கண்டு களவாடி வாலை யுண்ணப்

புகுமளவில் வேடன் வர நடந்தது கூறிப் பொறுத்துக்கொள்ள வேண்டிப் பின் மனை பெய்வித்தார்.

30-ஆம் அதிகாரம் : வாய்மை.

பிள்ளையுட னுண்ணப் பேசியழைத் தாரன்பு
துள்ளு சிறுத்தொண்டர் சோமேசா—வுள்ளுங்காற்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். (கூ0)

அஃதாவது மெய்யினது தன்மை.

30. (இ-ள்) சோமேசா—! உள்ளுங்கால்—நினைக்கு மிடத்து, புரை தீர்ந்த நன்மை—(பிறர்க்குக்) குற்றந் தீர்ந்த நன்மையை, பயக்கும் எனின்—தருமாயின், பொய்ம்மையும்—பொய்ம்மைச் சொற்களும், வாய்மை யிடத்த—மெய்ம்மைச் சொற்களின் இடத்தனவாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—அன்பு துள்ளு சிறுத்தொண்டர்-அன்பு மிக்க சிறுத்தொண்ட நாயனார், பிள்ளை—தன் மகனாகிய சீராளன், உடன் உண்ண—வைரவருடன் உண்ணும்படி, பேசி அழைத்தார்—(அவன் உயிரோடிருப்பது போலச்) சில சொல்லி அழைத்தார் (எ-று).

குற்றந் தீர்ந்த நன்மையாவது அறம்; அதனைப் பயத்தலாவது கேடேனும் சாக்காடேனும் எய்த நின்றதோ ருயிர் அச் சொற்களின் பொய்ம்மை யானே அதினீங்கி இன்புறுதல். நடவாத

தைச் சொல்லுதலும் நன்மை தாராதாயின் பொய்ம்மையாம், தருமாயின் மெய்ம்மையா மென்பது கருத்து. சிறுத்தொண்டர்— அடியார்களுக்கு எதிரில் மிகச் சிறியராய் இருந்து நடந்துகொண்ட மையின் இப் பெயர் பெற்றாரென்க. வைரவர் பிள்ளையை அழையு மென்றபோது தாம் பிள்ளையைக் கறி சமைத்தமை ஆகிய நடந்த செய்தியைக் கூறாது 'இப்போ துதவா னவன்' எனக் கூறியது மன்றிப் பின்னும் பிள்ளை உயிருடன் இருப்பதுபோலச் "செய்ய மணியே சீராளா வாராய் சிவனு ரடியார்யாம், உய்யும் வகையா லுடனுண்ண வழைக்கின்றார்' எனப் பேசி அழைத்தமையின் நாயனார் பொய்ம்மை கூறினாராதல் அறிக.

கதை :—சோழநாட்டில் திருச்செங்காட்டங்குடியில் அமாத் தியர் குலத்தில் அவதரித்த பரஞ்சோதியார் சிவனடியார் திறத்து அன்பு மேலிட்டாராய் அரசன் வேண்டுகோளின்படி அடியார் பணிசெய்து அமுது அருத்திச் சிறுத்தொண்ட நாயனரென எங்கும் புகழ்பெற்று வாழுநாளிற் சிவபெருமான் வைரவராக வேடங்கொண்டு வந்து நாயனார் உபசரித்தழைக்க, "அன்பனே! வட்டேயத்திலிருந்து உன்னைப்பற்றிக் கேள்விப்பட்டு வந்தோம். யாம் ஆறுமாதத்திற்கு ஒருநாள் உண்போம். அந்நாள் இந்நாளே. ஆயினும், அமுதுபடைக்க உன்னால் முடியாது. நரமாமிசமின்றி உண்ணேம். ஐந்து பிராயமும், பழுதில்லாத உறுப்பும் உடைய னாய் ஒரு குடிக்கு ஒரு பிள்ளையாய் இருக்கவேண்டும். தாய் பிடிக்கத் தந்தை அரியவேண்டும்' என்றார். வைரவர் கூறிய இலக்கணங்களெல்லாம் தன் மகன் சீராளனுக்கு இருத்தலின்

மகிழ்வுற்ற நாயனார் அவரைத் திருவமுது செய்விக்க ஒருப்பட்டு "ஐயரே! உமக்கு வேண்டியபடி அமுது படைப்பேன்' என்ன, வைரவரும் அவர் மனைக்கு எழுந்தருளினர். பள்ளிக்குச் சென்றிருந்த பாலனை அழைத்து வந்து வைரவர் கூறியபடி கறி சமைத்து நிற்க, வைரவர் "ஓ ரடியா ருடனன்றி உண்ணேம்" என்றார். நாயனார் எங்கெங்கும் ஓடித் தேடியும் ஒரு சிவனடியாரகப் படாது திரும்பி வந்து கூற, வைரவர், 'நீ என்னுடன் உண்க' என்

றார். அதற்கும் இசைந்தபின், வைரவர் 'உன் பிள்ளையை அழைப்பாய்' என்றார். நாயனார் 'அவன் இப்போது உதவான்' என்று சொல்லியுங் கூளாமையால் தம் வீட்டு வாயிலில் நின்று, 'சோளா! வாராய்!' என் றழைத்தார். சோளன் வரும் வழக்கப்படியே பள்ளியினின்றும் வந்ததும், வைரவர் மறைந்தார். சிவபெருமான் காட்சி தந்து கதியளித்தார்.

'தான்பெறு மழலை மொழிமகன் றன்னைத் தன்கையா லுளங்களித் தரிந்து, சமைத்துல கறிய விடுபெருந் தொண்டன் றனைச் சிறுத் தொண்டனென் றவன்சே, யுன்பெறு நீயே யுரைத்தனை யென்ற லுரிமையோர் சற்றுமி லாதே, னுன்றிருத் தொண்ட னென்றிருப் பதனுக் குன்னுதல் பெரும்பிழை யன்றே' என்னும் நெடுங்கழிநெடிற் பாட்டு மண்டு அறியத்தக்கது.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

31-ஆம் அதிகாரம் : வெகுளாமை.

பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணரெரி தோய்வன்ன வின்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (ஈக)

அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவனிடத்தேயுள்ளதாயினும் அதனைச் செய்யாமை.

31. (இ-ள்) சோமேசா—! கொல்ல—கொல்லக் கருதி, இணர் எரி தோய்வு அன்ன—பல சுடரை உடைத்தான பேரெரிவந்து தோய்ந்தாற் போன்ற, இன்னு செயினும்—தன்பங்களை ஒருவன் செய்தானாயினும், வெகுளாமை—(அவனை) வெகுளாமை, புணரில்—(ஒருவனுக்குக்) கூடுமாயின், நன்று—(அது) நன்று,—(அதற்குத் எடுத்துக்காட்டு)—தொல்லை நெறி வாகீசர்—பழமை

யான வழியில் சென்ற திருநாவுக்கரசு நாயனார், பல்லவர் கோன் வந்து பணிய—பல்லவராசன் வந்து வணங்க, கருணை செய்தார்—திருவருள் பாலித்தார் (எ-று).

இன்னுமையின் மிகுதி தோன்ற 'இணரெரிதோய்வன்ன'

என் றுவமை கூறினுரெனவும் அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்ன' என்னும் பன்மைப்பாலாற் கூறினுரெனவுங் கொள்க. முனிவரையும் வெகுள்விக்கு மென்பது தோன்றப் 'புணரின்' என்றார். தொல்லோநெறியாவது பண்டைப் பெரியோர் சென்ற நெறி.

கதை:—திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில் வேளாள மரபில், குறுக்கையர் குடியிற் புகழனுர்க்கும் மாதினியார்க்கும் புத்திரரா யவதரித்த திருநாவுக்கரசு நாயனுர் சகல கலைகளினும் வல்ல ராய்ப் பாடலிபுத்திரம் என்னும் பதி புகுந்து சமணரோடு கூடி தருமசேனனென்னும் பெயரோடு சமணகுருவாய் விளங்குவதைக் கேட்ட திலகவதியா ரென்னும் அவர் தமக்கையார் தம் தம்பியைச் சமணப் படுகுழியினின்றும் எடுத்தருளல் வேண்டுமென்று சிவபெருமானை நாடோறும் பிரார்த்தித்தார். அவ்வாறிருக்கையில் தருமசேனருக்குச் சூலை நோய் கண்டு சமணர் செய்த முயற்சி ஒன்றினும் நீங்காதாக, தமது தமக்கையார் தொண்டு செய்திருந்த திருவதிகை வீரட்டானம் அடைந்து அவரைக் கண்டு விபூதிபெற்று வீரட்டேசுவரர் சந்நிதியடைந்து 'கூற்றுயினவாறு விலக்ககிலீர் கொடுமை பலசெய்தன ஞனறியே; னேற்றுயடிக்கே யிரவும் பகலும் பிரியாது வணங்குவ னெப்பொழுதுந், தோற்று தென்வயிற்றி னகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட, வாற்றே னடியே னதிகைக் கெடில வீரட்டானத்துறை யம்மானே' என்னுந் திருப்பதிக மோத அப்போதே சூலைநோய் விட்டொழிந்தது. அஃதறிந்த சமணர்கள் தமது அரசனுகிய பல்ல

வனுக்கு இல்லாததும் பொல்லாததுஞ் சொல்லி நாயனாரை வருவித்து நீற்றறை வைத்தல், கஞ்சூட்டல், கல்லோடு கடலிடுதல், முதலிய பலகொடுமைகள் செய்தும் நாயனார் திருப்பதிகங்கள்

ளோதிச் சிவாநுக்கிரகத்தால் ஒரு நீங்குமின்றி இருந்தார். இதைக் கண்ட பல்லவன் நாயனாரை வணங்கிச் சைவனாகிப் பாடலிபுத்திரத்திலிருந்த சமண் பள்ளிகளையும் பாழிகளையும் அழித்து அங்குக் குணதரவீச்சுரம் என்னுந் திருக்கோயிலைக் கட்டினான்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

32-ஆம் அதிகாரம் : இன்னாசெய்யாமை.

பிள்ளையார் வைப்பினிற்றீப் பெய்வித்த மீனவன்றீத்
துள்ளுவெப்பு கோயுழந்தான் சோமேசா—வெள்ளிப்
பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். (கூஉ).

அஃதாவது தனக்கு ஒரு பயன் நோக்கி யேனும் பகைபற்றி யேனும், சோர்வானேனும் ஓ ருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை.

32. (இ-ள்) சோமேசா—! எள்ளி—இகழ்ந்து, பிறர்க்கு இன்னா—பிறர்க்குத் தன்பங்களை, முற்பகல் செய்யின்—ஒரு பகலினது முற்பகுதியின்கண் செய்வராயின், தமக்கு இன்னா—தமக்குத் தன்பங்கள், பிற்பகல்—அதன் பிற்பகுதியின்கண், தாமே வரும்—அவர் செய்யாமற் றாமே வரும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—பிள்ளையார்—ஸ்ரீஞானசம்பந்தப் பிள்ளையார், வைப்பினில்—(எழுந்தருளியிருந்த) திருமடத்தின்கண், தீ பெய்வித்த மீனவன்—தீ இடுவித்த பாண்டியன், தீ துள்ளு வெப்பு நோய் உழந்தான்—தீக் கொதிப்பு மிக்க சுரநோயான் வருந்தினன் (எ-று).

முற்பகல், பிற்பகல் என்பன முன்பின் ஞகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை; இஃது இலக்கணப் போலி என்க. தவம்

அழிதலின் தன்பங்கள் அவ்வாறு விரைவினும் எளிதினும் வரும்; அதனால் அவை செய்யற்க என்பதாம். மீனவன்—கூன் பாண்டியன்.

கதை:—மேல் உரைத்தாம் [17-வது பாட்டுரை காண்க.]

33-ஆம் அதிகாரம்: கொல்லாமை.

வேந்துமகற் றேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா—வாய்ந்

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (௩௩)

அஃதாவது ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறான உயிர்களைச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை.

33. (இ-ள்) சோமேசா—! தன் உயிர் நீப்பினும்—(அது செய்யாக்கால்) தன் உயிர் உடம்பினின்றும் நீங்கிப் போமாயினும், பிறிது இன் உயிர் நீக்கும் வினை—தான் பிறிதோரினிய உயிரை அதன் உடம்பினீக்கும் தொழிலை, ஆய்ந்துணர்ந்தோர் செய்யற்க—(பொருள்களின் இயலை) ஆராய்ந்து உள்ளவாறு உணர்ந்தோர் செய்யற்க,—மந்திரி—(மனுச் சோழனது) மந்திரி, வேந்து மகன்—அம் மனுச்சோழன் மகனாகிய வீதிவிடங்கனை, தேர்க்கால் விடல் அஞ்சி—தேர்க்காலில் விட்டு ஊர்தற்கு அஞ்சி, சோர்ந்து தனது ஆவி விட்டான்—மனஞ் சோர்ந்து தன்னுடைய உயிரை விட்டான் (எ-று).

தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க என்றது, பாவம் கொலையுண்ட வழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. 'உணர்ந்தோர் தன்னுயிர் நீப்பினும்' என்புழி ஒருமைப் பன்மை மயக்கங் காண்க.

கதை:—மனுச்சோழனுடைய மகனாகிய வீதிவிடங்கன் ஒரு நாள் தேரேறி அரசவீதியிற் ரூனை சூழச் செல்லுங்கால் ஓ ரான் கன்று துள்ளிவந்து தேர்க்காலினிடைப் புகுந்து இறந்ததாக, அவ் வான் அரண்மனை வாயிலிற் கட்டிய ஆராய்ச்சிமணியைக் கொம்பினால் அடிக்க, அம் மணியொலி கேட்ட சோழன் காரணம் வினவி அறிந்து அளவிலாத் துயரமடைந்து, தன் குலத்திற் கொரு மகனென்பது மறந்து, 'திருவாரூரிற் பிறந்த ஓ ருயிரைக் கொன்ற தனு லதற்குப் பிராயச்சித்தமில்லை. அவ் வான் அடைந்த துன்பத் தை யானும் அடைதல் முறை' என்று கூறி, ஒரு மந்திரியை நோக்கி 'முன்னிவனை யவ்வீதி முரண்டோர்க்கா லூர்க' என்று ஏவினன். அவன் அது செய்தற்கு அஞ்சித் தன் உயிர் துறப்பத் தன் மக னைத் தானே தேர்க்கால் அவன் மார்பின்மீது செல்லும்படி ஊர்ந்த வளவில் வீதிவிடங்கப் பெருமான் காட்சி தந்து ஆன் கன்றும் சோழன் மகனும் மந்திரியும் உயிர் பெற்றெழச் சோழனுக்குத் திரு வருள் பாலித்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது]

34-ஆம் அதிகாரம்: நிலையாமை.

ஆக்கையு மாயிரத்தெட் டண்டங் களுநிலையாத்
தாக்கியழிக் தான்சூரன் சோமேசா—நோக்கியிடில்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (கூசு)

அஃதாவது தோற்ற முடையன யாவும் நிலையுத லிலவாந்

தன்மை. மயங்கியபோது பேய்த்தேரிற் புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்தபோது கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் பொய் யென்பாரும், நிலவேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந் திறக்குமென்பாரும், காரியத்தின் வேறுபடுதலும் காரணத்தின் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே யுடைய வென்பாரு மெனப் பொருட் பெற்றி கூறுவார்

62. சோமேசர் முதுமொழி வெண்பா

பல திறத்த ராவர். "இவரை முறையே மாயாவாதிகள் (கேவலாத் துவிதிகள்), கூணிக விஞ்ஞான வாதிகள் (பௌத்தர்கள்), சற் காரிய வாதிகள் (விசிட்டாத்துவிதிகள், சுத்தாத்துவிதிகளுள் ளிட்டோர்) எனக் கொள்க. அவ ரெல்லார்க்கும் அவற்றது நிலை யாமை உடன்பா டாகலின், எண்டு அதனையே கூறுகின்றார்.

35. (இ-ள்)சோமேசா—! நோக்கி யிடில்—ஆரா ஈன், நில்லாதவற்றை—நிலையுதல் இலவாகிய பொருள் களே, நிலையின என்று—நிலையுதலை யுடைய வென்று, உணரும்—கருதுகின்ற, புல் அறிவு ஆண்மை—புல்லிய அறி வினை யுடையாதல், கடை—இழிவு, —(அதற்கு எடுத் துக்காட்டு) — சூரன்—சூரபன்மன், ஆக்கையும் — (தன்) உடம்பும், ஆயிரத்தெட்டு அண்டங்களும்—(தான் அரசு செலுத்திய) ஆயிரத்தெட்டு அண்டங்களும், நிலையா தாக்கி — நிலையுவனவாகக் கருதி, அழிந்தான் — அழி

வடைந்தான் (எ-று).

புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச் செய்வது சிற்றின் பத்திற்கு ஏதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனை அனுபவிக் கும் யாக்கையின்கண்ணுமாகலின், "ஆக்கைய மாயிரத்தெட் டண் டமும்" என்றார்

ஆக்கை—யாக்கை என்பதன் மரூஉ. 'யா' வென்னும் பகுதிக் குக் 'கட்டு' என்பது பொருள். நரம்பு முதலியவற்றான் யாக்கப் படுதலின் உடம்பு யாக்கை யாயிற்றென்க.

கதை.—மேல் உரைத்தாம் (26-வது பாட்டுரை காண்க).

35—ஆம் அதிகாரம் : துறவு.

கோவணமொன் றிச்சிப்பக் கூடினவே பக்தமெல்லாந்
தாவணஞ்சேர் மேனியாய் சோமேசா—மேவில்
இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. (கூடு)

சோமேசர் முதுமொழி வெண்பா 63

அஃதாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாய பற்றினை அவற்றின் நிலையாமை நோக்கி விடுதல்.

35. (இ-ள்) தூவணம் சேர் மேனியாய்—பரிசுத்த மான நிறம் பொருந்திய திருமேனியை யுடையாய்! சோமேசா—! மேவில்—கூடுமாயின், ஒன்று இன்மை—பற்றப்படுவது ஒரு பொருளும் இல்லாமை, நோன்பிற்கு—தவஞ் செய்வார்க்கு, இயல்பு ஆகும்—இயல்பாம், உடைமை—(அவ்வாறன்றிப் பற்றப்படுவது ஒன்றுயினும்) உடைமை, பெயர்த்து—(அத்தவத்தைப்) போக்குதலின், மற்றும் மயல் ஆகும்—மீண்டும் மயங்குதற் கேதுவாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு),—கோவணம் ஒன்று இச்சிப்ப—கௌபீனம் ஒன்றையே விரும்ப, பந்தம் எல்லாம் கூடின—பற்றுக்கள் யாவும் (வந்து) சேர்ந்தன (எ-று).

ஒன்று என்புழி இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது நோன்பென்பதூஉம் மயலென்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலான் என்பது பெயர்த்து எனத் திரிந்தது. நோன்பைப் பெயர்த்தலான் என வேற்றுமைப் படுத்துக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒரு பொருளை விடாத வழியும், அது சார்பாக விட்டன வெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கு இடையீடாய் மனக்கலக்கஞ் செய்யுமென்பது கருத்து. கோவணமொன்று என்புழிப் பிரிநிலை எகாரம் தொக்க தென்க.

கதை:—ஒரு துறவி தன் கோவணத்தை எலி கறித்தல் கண்டு எலி பிடித்தற்கு ஒரு பூனை வளர்க்க, பின் அதற்குப் பால்

தா ஒரு பசுக் கொள்ள, அப் பசுவை ஓம்புதற்கும் தொழுவத்தைச் சுத்தி செய்தற்கும் ஒரு பணிப்பெண்ணை அமைக்க, முடிவில் அப் பணிப்பெண்ணை ஏவல் கொள்வதற்கு ஒருத்தியை மணந்து

குடும்பியானர். வடமொழியில் 'கௌபீன சம்ராக்ஷணார்த்தம் அயம் படாடோப :' என்னும் வழக்குண்மை காண்க.

36–ஆம் அதிகாரம் : மெய்யுணர்தல்.

காரிகையா ரைப்பொன்னைக் காட்டவுங்கா மாதிமும்
[மைச்
சோர்விழுத்துய்ந் தாரரசர் சோமேசா—வோருங்காற்
காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னுமங் கெடக்கெடு நோய். (நரு)

அஃதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபுகளான் அன்றி உண்மையாலுணர்தல். இதனை வட நூலார் தத்துவஞான மென்ப.

36. (இ-ள்) சோமேசா—! ஒருங்கால்—நினைப்பின், காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட—ஞானயோகங்களின் முதிர்ச்சி யுடையார்க்கு விருப்பு, வெறுப்பு, அவிச்சை யென்னும் இக் குற்றங்கள் மூன்ற

னுடைய பெயருங் கெடுதலான், நோய் கெடும்—(அவற் றின் காரியமாகிய) வினைப்பயன்கள் உண்டாகா,—(அதற்கு எடுத்துக்காட்டு) — அரசர் — திருநாவுக்கரசு நாயனார், காரிகையாரை—அரம்பை மாதரையும், பொன்னை—பொன்னையும், காட்டவும்—காட்டுதலும், காமாதி மும் மைச் சோர்வு—காமமுதலிய மூக் குற்றங்களின், இழந்து-நீங்குதலான், உய்ந்தார்—பிழைத்தார் (எ-று).

அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் எனக் குற்றம் ஐந்தென்ப வடநூலார். அவற்றுள், அகங்காரம் அவிச்சைக்கண் ணும், அவா ஆசைக்கண்ணும் அடங்குதலான் இவர் மூன்றென்றார். நாமம் என்புழிச் சிறப்பும்மை தொக்கது. 'கெட' என்பது

எச்சத் திரிபு. நோய் என்பது சாதி யொருமைப் பெயர். காரண மான அக் குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின் அவர்க்கு வரக்கடவ துன்பங்களுமில்லை என் பது இதனாற் கூறப்பட்டது. காட்டவும் என்பதில் உம்மை உயர்வு சிறப்பும்மை. "தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப் பன்" என்புழிப்போல மும்மை யென்ப தீண்டெண்ணின் கணின்றது. இழத்தலான் என்பது இழந்து எனத் திரிந்ததென்க.

கதை:—திருநாவுக்கரசு நாயனார் பூம்புகலூர்ப் பெருமானை நாடோறும் தொழுது உழவாரத் திருப்பணி செய்து வருநாளில் பெருமான் நாயனருடைய நன்னிலைமையை உலகத்தார்க்குக் காட்ட வேண்டி உழவாரப்படை நுழைந்த வீடமெல்லாம் பொன்

னும் நவமணியும் பிரகாசிக்கும்படி செய்தருளினார். நாயனார் அவற் றைப் பருக்கை யெனவே மதித்து உழவாரப்படையி னேந்தித் திருக்குளத்தில் எறிந்தார். அதன்பின் அம்பையர்கள் வந்து ஆடல் பாடல்களாலும் பிறசெய்கைகளாலும் மயக்கியும் நாய னார் மயங்காமை கண்டு அவரை வணங்கிச் சென்றார்கள்.

[இது திருத்தொண்டர்புராணத் துள்ளது.]

37-ஆம் அதிகாரம் : அவாவறுத்தல்.

தாய்கருவில் வாழ்குழவி தாமெல்லாம் வேண்டுவது
தாயபிற வாமையொன்றே சோமேசா—வாயதனால்
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (கஎ)

அஃதாவது சஞ்சித, ஆகாமியங்களின் தொடர்பறுத்தார்க்கு நடுவுநின்ற உடம்பும் அது முகந்துநின்ற பிராரத்தமும் நின்றமை யின், வேதனைகண்டு ஒருகால் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சைபோலப் பிறவிக்கு வித்தாகலின், அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வான் அறுத்தல்.

37. (இ-ள்) சோமேசா—! தாய் கருவில் வாழ்-தாயி னது கருப்பையில் வாழ்கின்ற, குழவி எல்லாம்—குழந்தை

களெல்லாம், வேண்டுவது—விரும்புவது, தூய பிறவாமை ஒன்றே—குற்றமற்ற பிறவாமை ஒன்றையே, ஆயதனால்—ஆனதுபற்றி, வேண்டுங்கால்—(பிறப்புத் துன்பமாதல் அறிந்தவன் ஒன்றை) வேண்டின், பிறவாமை வேண்டும்—பிறவாமையை வேண்டும், அது—அப்பிறவாமை, வேண்டாமை வேண்ட—(தான் ஒரு பொருளையும்) அவாவாமையை வேண்ட, வரும்—தானே யுண்டாம் (எ-று).

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களாற் றுன்பமுற்று வருகின்றமை யுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின் கண்ணேயாகலின் 'பிறவாமை வேண்டும்' என்றும், ஈண்டைச் சிற்றின்பங் கருதி ஒரு பொருளை அவாவின் அது பிறப்பீனும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின், 'அது வேண்டாமை வேண்ட வரும்' என்றுங் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும் வழிகூறத் தொடங்குகின்றமையின் மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஒன்றே—ஏகாரம் பிரிநிலை. குழவி தாயின் கருப்பையில் வாழ்கையில் அதற்குத் தான் முன் எடுத்த பிறப்புக்களின் நினைவும் அவ்வப் பிறப்புக்களின் அடைந்த துன்பங்களின் அறிவும் உளவாகலிற் பிறவாமை வேண்டுமென்பதனை, 'எட்டா மதியி லங்கங்க ளெல்லா நிரம்பி யுந்திவழி, மட்டார் குழற்று யுணவிரத மருவ நுகர்ந்து வளர்போது, முட்டா முன்னைப் பவநிகழ்ச்சி முளைப்பக் கொடிய நிரயத்துப், பட்டாழ் பவரி னனி

வருந்திப் பாங்கு பெறவின் னனநினையும்,' 'அளவில் யோனி களிற் பிறந்தா மளவில் கரும பலநுகர்ந்தா, மளவில் பேரு ருற்றிருந்தா மளவி றுன்ப மனுபவித்தா, மளவில் பவநீங் குறுமுயற்சி யாதும் புரிந்த மலம்பிறந்த, வளவி லளவின் மறைமுடிக்கு மப்பா லானே யளவிலியை,' 'தாய்தந் தையுமில் லாதானைத் தாய்தந் தையு மா கியபானை, நோய்தந் தடுவெங் கூற்றயிரை கொடியிற் குடித்த

கழலானைச், சேய்தந் தவனை மும்மதிலுஞ் செற்ற மூரற் பெரு மானை, யாய்தந் திடுமன் பாலுரு மலர்தூ வடித்தொண் டினி தியற்றி,' 'குரவ னருளின் மறையுண்மை கொளுத்தக் கொண்டு நித் தியமும், பரவு நைமித் தியமும்விதிப் படியே புரிந்து மோகாதி, யுரவு கெடநல் வைராக முற்று நிட்கா மியம்புரிந்து, விரவு முண்மை ஞானத்தின் மேலா முத்தி யடைந்திடுவாம்' என்னுஞ் சூத சங்கி தைச் செய்யுட்களால் அறிக.

38–ஆம் அதிகாரம் : உளுப்.

முன்ன ரமண்மதத்து மூண்டரசர் பின்சைவந்
துன்னியது மென்வியப்போ சோமேசா—வுன்னுங்காற்
பேதைப் படுக்கு மிழவு ழழிவகற்று
மாகலூ முற்றக் கடை. (கூஅ)

அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்

கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி யென்பன ஒரு பொருட் சொல்.

38 (இ-ள்) சோமேசா—! உன்னுங் கால்—நீணப் பின், இழவு ஊழ் உற்றக்கடை—(ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவேனும்) பொருளிழத்தற் கேதுவாகிய ஊழ் வந்து உற்ற விடத்து, பேதைப்படுக்கும்—(அஃது அவ் வறிவைப்) பேதையாக்கும். ஆகல் ஊழ் உற்றக் கடை—(இனி அவன் அறிவு சுருங்கி இருப்பினும்) பொருளாதற் கேதுவாகிய ஊழ் வந்து உற்றவிடத்து, அறிவு அகற்றும்—(அஃது அவ்வறிவை) விரிக்கும்,—(அதற்கு எடுத்துக்காட்டு) —அரசர்—திருநாவுக்கரசு நாயனார், முன்னர் அமண் மதத்து மூண்டு—முன்பு சமணசமயத்தின் மிக்க பற்றொடு நின்று, பின் சைவம் தன்னியதும்—பின்பு சைவ சமயத்

தை அடைந்ததும், வியப்போ—அதிசயமோ? என்—என்ன? அதிசயமாகாது (எ-று).

பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ், ஆகலூழ் என்பன நான்காம் வேற்றுமை யுருபும் பயனு முடன் றொக்க தொகை. உற்றக்கடை என்பது முன்னுங் கூட்டப்பட்டது. ஊழ் இயற்கையாலுய அறிவையும் வேறுபடுக்கும் என்பதாம். தன்னிய தும் என்புழி உம்மை இழிவு சிறப்புமை. ஓகாரம் வினு. 'என்' என்பது எதிர்மறைப்பொருளை வலியுறுத்து நின்றதென்க.

39–ஆம் அதிகாரம்: இறைமாட்சி.

பார்சிதை சீலம் பழித்துரைத்துங் காகுத்தன்
சோர்வுறமுன் சிறிலனே சோமேசா—தேறிற்
செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு. (கக)

அஃதாவது அரசனது நற்குண நற்செய்கைகள். திருமாலின் அம்ஸமாய் நின்று உலகங்காத்தலின் 'இறை' என்றார். 'நாவிஷ்ணுர் பிருதிவீபதி' 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டனே யென்னும்' என்றிருத்த லறிக.

39. (இ-ள்) சோமேசா —! தேறின்—ஆராயின், சொல் செவி கைப்ப—(கோவ உரைக்குஞ்) சொற்களைத் (தன்) செவி பொறுதாகவும், பொறுக்கும் — (வினவு நோக்கிப்) பொறுக்கும், பண்புடை வேந்தன்-பண்புடைய அரசனது, கவிகை கீழ் தங்கும் உலகு—குடை நிழற் கண்ணே தங்கும் உலகம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—பார் — உலகத்தார், சீதை சீலம் — சீதையினது ஒழுக் கத்தை, பழித்துரைத்தும்—இகழ்ந்து பேசியும், காகுத் தன்—இராமன், சோர்வு உற—தளர்ச்சி அடையும்படி,

முன்---(அவள்) எதிரில், சிறிலன்---வெகுண்டானில்லை (எ-று).

நாவிற்கு விஷயமாஞ் சுவையைச் செவிமே லேற்றிக் 'கைப்ப' என்றார்.

பண்புடைமை—விசேட வுணர்வினனுதல். அற நீதிகளிற் றவறுமையின், மண் முழுதுந் தானே யாளுமென்பதாம். பார்—ஆகுபெயர். உம்மை -- இழிவு சிறப்பும்மை. காகுத்தன்—இது வடமொழித் தத்திதம். சோர்வு உற—என்பதற்குத் 'தான் குற்ற மடைய' எனினுமாம்.

கதை:—இராமன் சீதையை அசோகவனத்திற் சிறைவைத்த இராவணனைக் கொன்று அவளை மீட்டு அயோத்தி வந்து பட்டாபி ஷேகஞ் செய்துகொண்டு வாழ்கையில் 'இராமன் பிறன்பாற் பத்து மாத மிருந்த ஒருத்தியை மீட்டுவந்து பட்டமங்கை யாக்கிக்கொண் டான்' என்று யாவருங் கூறியும் இராமன் அவள் எதிரில் கடுஞ் சொல் ஒன்றுங் கூறாது அவளை வனத்தில் விடும்படி செய்தார்.

[இஃது இராமாயணத் துளது]

40-ஆம் அதிகாரம் : கல்வி.

சம்பத்தர் காவாசர் பாற்கண்டோஞ் சார்ந்துவப்ப
தும்பிரிவி னுள்ளுவதுஞ் சோமேசா—கம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில். (சு0)

அஃதாவது ஒருவன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல்.

அவையாவன அறநூல நீதிநூல் முதலாயின.

40. (இ-ள்) சோமேசா—! நம்பி உவப்ப தலைக்கூடி—யாவரையும் அவர் விரும்பி உவக்குமாறு கூடி, உள்ள பிரிதல்—இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதுமென நினையுமாறு நீங்குதலாகிய, அனைத்து—அத்தன்மைத்து, புலவர்

தொழில்—கற்றறிந்தாரது தொழில்,—சம்பந்தர் நாவரசர்பால்—திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இவர்களிடத்தில், சார்ந்து உவப்பதும்—கூடிமகிழ்தலையும், பிரிவின் உள்ளுவதும்—நீங்குங்கால் இனி எங்ஙனங் கூடுதுமென நினைவதும், கண்டோம்—கண்டறிந்தோம் (எ-று).

தாம் நல்வழி யொழுகல் பிறர்க் குறுதி கூறல் என்பன இரண்டுந் தொழிலென ஒன்றாய் அடங்குதலின் 'அனைத்து' என்றார். அத்தன்மை அப்பயனைத்தருந் தன்மை. நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு இனிமையும் உறுதியுமான சொற்கள் நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் இன்பம் பயத்தலானுங் கற்றாரிடத்தே எல்லாரும் அன்புடையராவரென்பதாம். தலைக்கூடல் என்பது ஒரு சொல். தலை என்பது தமிழ் உபசர்க்கம் என்பாரு முளர். நம்புதல்—விரும்புதல், 'நம்பு மேவு நசையாகும் மே' என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

கதை :—திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்தில் திருப்பணி

செய்து அமருநாளில், அம்மையார் ஞானப்பாலூட்ட உண்ட காழிப்பிள்ளையாரைக் காண விருப்பங்கொண்டு காழிக்குச் செல்ல, அவர் வருகை அறிந்த பிள்ளையார் திருக்கூட்டத்தோடு எதிர் கொள்ள, நாயனார் கண்டவுடன் அடியில் வீழ்ந்து பணிய, பிள்ளையார் எடுத்து இறைஞ்சி 'அப்பரே!' என, நாயனரும் 'அடியேன்' என, இருவரும் உவகைக் கடலின் மூழ்கினர்கள். 'பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேனென் றரசுவப்பப் பெருகு ஞான, வள்ளலார் வாகீசர் தமைக்காணப் பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க, உள்ளநிறை காதலினு லொருவரொரு வரைக்கலந்த வுண்மை யோடும், வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார் கழல்வணங்கும் விருப்பின் மிக்கார்' என்னும் பாட்டு நோக்குக.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

41-ஆம் அதிகாரம்: கல்லாமை.

மெய்த்தகிரு வல்லுவனுர் வென்றுயர்ந்தார் கல்விகலக்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—வுய்த்
[தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ருரனைத்திலர் பாடு. (சக)

அஃதாவது கற்றலைச் செய்யாமை; என்றது அதனால் ஆகிய இழிவினை. மேல் விதிமுகத்தாற் கூறின வளவில் முற்றப்

பெருமை நோக்கி எதிர்மறைமுகத்தானுங் கூறுகின்றார்.

41. (இ-ள்) சோமேசா—! உய்த்து அறியின்—ஆராய்ந்தறிவோமாயின், கல்லாதார்—(மெய்ப்பொருளைக்) கற்றறியாதார், மேல் பிறந்தார் ஆயினும்—உயர்ந்த சாதிக்கட் பிறந்துவைத்தும், கற்றார் பாடு அனைத்து இலர்—(அதனைக்) கற்றறிந்தாரது பெருமை யளவிற்றாய பெருமையிலர்,—(அதற்கு எடுத்துக்காட்டு)— மெய்த்த திருவள்ளுவனார்— மெய்ம்மையைக் கொண்ட திருவள்ளுவநாயனார், வென்று உயர்ந்தார்—வெற்றி பெற்று மேம்பட்டார், கல்வி நலம் துய்த்த—(மெய்ம்மை நாடாது) கல்வியின்பத்தையே நுகர்ந்த, சங்கத்தார்—கடைச்சங்கப் புலவர்கள், தாழ்ந்தார்—தாழ்வடைந்தார் (எ-று).

உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும் மெய்ப்பொருட் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம். அனைத்து—அத்தனைத்து என்பதன் மரூஉ. 'ஆர்'—உயர்வு பற்றி வந்தது. நலம் என்புழிப் பிரிநிலை யெகாரம் செய்யுள் விகாரத்தாற் றொக்கது. சங்கத்தார்—நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பதின்மர். மெய்த்தல்—மெய்ப்பொருளை உணர்ந்து அதன்வழி நிற்றல். சாதியி னிழிவுதோன்ற 'வள்ளுவனார்' எனச் சாதியா னவர் பெயர் கூறினமையின், சங்கத்தார் சாதியினுயர்ந்தாரென்பது அருத்தா

பத்தியாற் பெறப்படு மென்க. கல்விநலந் துய்த்தல்—சொற்சுவை பொருட்சுவைகளைக் கண்டு மகிழ்தல். துய்த்தல்—நுகர்தல்.

இனிச் சிறகல் எனவும் திரிதல் எனவும் பொருள் கொண்டு 'துய்' என்னும் பெயரடியாகப் பிறந்த எச்சமென்பாரு முளர். அவர் 'துய்' என்பதற்குப் பஞ்சின் நூனி யென்றுதல் அறிவின் றிரி பென்றுதல் பொருள் கூறுப. சங்கப்புலவர்கள் கலைமகள் கூறு எனப் புராணங்கள் கூறுவது நோக்கிலர் போலும்.

கதை :—திருவள்ளுவநாயனார் தாம் அருளிச்செய்த திருக்குறளை அரங்கேற்றுதற்குச் சங்கத்திற்கு வந்தபோது, சங்கத்தார் 'நாங்களிருக்கும் இந்தச் சங்கப் பலகை உமது நூலுக்கு இடந்தருமாயின் அதைக் கொள்வோம்' என்றார்கள். அவ்வாறே நாயனார் தமது நூல் எழுதிய ஏட்டினை அப் பலகையின்மீது வைத்த வளவில் அப் பலகை அவ் வேட்டினளவு சுருங்கவே, அதன்மீதிருந்த புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் பொற்றாமரையில் வீழ்ந்தார்கள். வீழ்ந்து தள்ளாடிய அப் புலவர்கள் கரையேறி நாயனாரையும் அவர் நூலையும் பலபடியாகப் புகழ்ந்தார்கள். 'அறம்பொருளின்பம்வீ டென்னுமிந் நான்கின், நிறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்,—வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொல், கொள்ளா ரறிவுடை யார்' என்னுஞ் செய்யுளீண்டறியற் பாலதென்க.

42 – ஆம் அதிகாரம் : கேள்வி.

ஐயுக்கூ னென்னு முரைகண் டுவந்தனரே
துகற்சீர்க் கண்ணப்பர் சோமேசர்—வானதனுற்
கற்றில னயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுங் துணை. (சுஉ)

அஃதாவது கேட்கப்படும் பொருளை அறிந்தார் கூறக் கேட்டல். கற்றவழி அதனின் ஆகிய அறிவை வலியுறுத்துவதும், கல்லாதவழி அறிவை யுண்டாக்குவதும் இது.

42. (இ-ள்) சோமேசா—! தூ நல் சீர் கண்ணப்பர்—குற்றமற்ற நல்ல சிறப்பு வாய்ந்த கண்ணப்ப நாயனார், ஊனுக்கு ஊன் என்னும் உரை-'ஊனுக்கு ஊன்' என்று வேடர்கள் கூறக்கேட்ட மொழியை, கண்டு—(தம் எதிரிற்) கண்டு, உவந்தனர்-களித்தார், ஆனதனுல்—ஆனதுபற்றி, கற்றிலனுயினும்-(ஒருவன் உறுதி நூல்களைத்தான்) கற்றிலனுயினும், கேட்க-(அவற்றின் பொருளைக் கற்றறிந்தார் சொல்லக்) கேட்க, அஃது-அக் கேள்வி, ஒருவற்கு-ஒருவனுக்கு, ஒற்கத்தின் ஊற்றும் துணை-தளர்ச்சி வந்துழிப் பற்றுக்கோடாந் துணையாகலின் (எ-று).

'உம்மை' கற்கவேண்டு மென்னும் பொருள் தோன்ற நின்றது. தளர்ச்சி வறுமையானுவது அறிவின்மையானுவது துன்பம் அடைந்தக்கால் மனந் தளர்தல். அதனைக் கேள்வியின் ஆய அறிவு நீக்குமாகலின், 'ஊற்றுத்துணை' என்றார். ஊன்று என்பதன் னகரம் றகரமாகத் திரிந்து நின்றது. ஊன்று என்பது இங்கு ஊன்று கோலுக்கு ஆகி வருதலின் தொழிலாகுபெயரென்க. ஊன்—இறைச்சி. நூறற்சீர் என்றது அன்பின் சிறப்பினை. 'கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை கண்டபின், என்னப்ப னென்றெப்பி லென்னையுமாட் கொண்டருளி, வண்ணப் பணித்தென்னை வா

வென்ற வான்கருணைச், சுண்ணப்பொ னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி' என்றார் மாணிக்கவாசகப் பெருமானும்.

கதை:—கண்ணப்ப நாயனார் பொத்தப்பி நாட்டில் உடுப்பூரில் வேடர் தலைவனான நாகன் என்பானுக்கும் தத்தை என்பாளுக்கும் புத்திரராய் அவதரித்துத் திண்ணனார் என நாமகரணஞ் செய்யப்பெற்று வளர்ந்து காளைப்பருவமடைந்தார் அப்போது நாகனுக்குக் கிழப்பருவமானதால் வேட்டைக்கு நெடுங்காலஞ் செல்லவில்லை. மிருகங்கள் எங்கும் மிகுந்து பயிர்களையும் உயிர்களையும் அழிவு செய்தன. அதனால் வேடர்கள் யாவரும் நாகனிடஞ் சென்று அந் நிலைகூற, அவன் தனக்கு வேட்டையாட வலியின்

மையின், தன் மகற்குத் தலைமை நல்கி அவனை நன்னாளில் வேட்டைக்கு விடுத்தான். வேட்டைமேற் சென்ற திண்ணனார் ஒரு பன்றியைப் பின் தொடர்ந்தார். நாணன், காடன் என்னும் இரண்டு வேடர்களே அவருடன் ஓடினர்கள். அப்பன்றி சிகாளத்தி மலைவரையுந் தப்பி ஓடிற்று. முடிவில் திண்ணனார் அதைக் குத்திக் கொன்றார். அப் பன்றி இறைச்சியுண்டு பசி தீர வெண்ணீர்த் தீக்கடையக் கட்டளையிட்டு நாணனை யழைத்துக்கொண்டு குடுமித் தேவரைக் கும்பிடுதற்குத் திண்ணனார் பொன்முகரி யாற்றைக் கடந்து மலை ஏறினார். அவருக்கு மலையேறவேறப் பாரம் ஒன்று குறைவது போலத் தோன்றிற்று. குடுமித் தேவரைத் தரிசித்த வளவில் அன்புருவாயினர். சிவலிங்கப் பெருமானைக் கட்டியணைத்

தார்; உச்சி மோந்தார்; நெடுநேரம் நெட்டுயிர்த்தார்; ஆனந்த பரவசராயினர் திண்ணனார். பெருமான் திருமுடியிற் பூக்களிருக் கக் கண்டு, இஃதென்ன வென்று நாணனைக் கேட்டார். நாணன் முன்னொருகால் நான் இங்கு வந்தேன். அப்போது ஒரு பார்ப் பான் தேவர் தலைமேல் நீரை வார்த்துப் பச்சிலைகளையும் மலர் களையும் இட்டு, ஊன் உதவி, எதோ சில பேச்சுக்கள் எதிரில் நின்று பேசினான்' என்றான். அது கேட்ட திண்ணனார் யானு மதுசெய்வனென்று துணிந்தார். பெருமானைத் தனியே விட் டுப் போகவே மனமில்லை. ஆயினும் நீர், பூ, ஊன் முதலிய கொண்டுவர வேண்டுமென்று பரிந்தார். ஒருவாறு துணிந்து சென்று பொன்முகரி கடந்து தாம் கொன்ற பன்றி இறைச்சி யைத் தமது வாயினிட்டு அதுக்கிப் பார்த்துச் சுவைகண்டு சுவை மிக்க இறைச்சிகளை யெல்லாம் ஒரு கல்லையில் வைத்துக் கொண்டு தமது வாய் நிறைய நீர் முகந்து பூக்கொய்து குடுமியிற் செருகிப் பெருமான் பசித்திருப்பாரே யென்று விரைந் தோடிவந்து வாய் நீரைத் திருமுடிமீது உமிழ்ந்து, பூக்களையும் பெய்து, கொணர்ந்த இறைச்சியைப் படைத்து உண்பித்தார். நாணன் முதலியவர்கள் இவரைத் தெய்வம் பிடித்துக்கொண்ட தென்று ஊர்க்குத் திரும்பினர்கள். அன்றிரவெல்லாம் இமை

கொட்டாது பெருமானுக்குக் காவல் இருந்தார். மறுநாள் அதி காலையில் பெருமானுக்கு ஊன் முதலியன கொணரவேண்டிக் காடு புக்கார். அவர் சென்றதும் நாடோறும் பூசை செய்துவருஞ் சிவ கோசரியார் என்னும் அருச்சகர் வந்து இறைச்சி இறைந்திருத்தல் கண்டு உடல் நடுங்கி அவற்றை எல்லாம் சுத்தஞ் செய்து மறுபடி

சோடிப் போந்து வழக்கப்படி பூசித்தார். இவர் பூசை முடித்துச் சென்றதும், திண்ணனார் வந்து தமது பூசையைச் செய்து முடித்துப் பெருமான் எதிரில் நின்ற நிலையில் இமை கொட்டாதிருந்தார்.

ஐந்து நாள் இவ்வாறு நடக்கவும், சிவகோசரியார் மிக்க வருத்தமடைந்தார். ஐந்தாநாளிரவில் பெருமான் அவர் கனவிற் றோன்றி 'அன்ப! நீ வருந்த வேண்டா. அவனை வேடனென்று நினைத்தல் கூடாது. அவனுடைய பெருமையை நாளை யறிவாய். நீ நமக்குப் பின் ஒருபுறம் ஒதுங்கி மறைந்திருப்பாய்' எனப் பணித்தார். மறுநாள் அவ்வாறே சிவகோசரியார் செய்ய, அன்று வழக்கப்படி வேட்டையாடி இறைச்சி கல்லையிற் கொண்டு வாயினீர் முகந்து குடுமியிற் பூத்தாங்கி வந்த திண்ணனார் பெருமானுடைய வலக்கண்ணில் இரத்தம் வடிதலைக் கண்டார், விழுந்தார், எழுந்தார், பதைத்தார், துடித்தார், அருகிற்சென்று இரத்தத்தைத் துடைத்தார். அது நிற்கவில்லை. ஓடிப்போய்ப் பச்சிலைகள் கொணர்ந்து அக் கண்ணிற் பிழிந்தார். இரத்தம் பெருகுதல் பின்னும் அதிகமாயிற்று. மயங்கினர், திகைத்தார் இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அப்போது வேடர்கள் கூறும் 'உளுவுக் கூன்' என்னும் பழமொழி அவர் எதிரில்வந்து நிற்கக் கண்டார். உடனே, தன் வலக்கண்ணைத் தோண்டி அப்பினர். இரத்தம் நின்றது; கண் பழையபடி ஆயிற்று. திண்ணனார் களிப்படைந்தார். பெருமான் தமது இடக்கண்ணில் இரத்தம் காட்ட, ஒரு கண்ணை இழந்த திண்ணனார், 'இன்னும் ஒரு கண் எனக்குண்டு; இதற்கு அஞ்சேன்' என்று இடனறிதற்குச் செருப்புக் காலைப் பெருமான் இடக்கண்ணில் வைத்துத் தமது இடக்கண்ணையும்

கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!! அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!!!' வென்றருளித் தோண்டுங் கையைத் தமது திருக் காத்தாற் பற்றிக்கொண்டு, 'கண்ணப்ப! எமக்கு வலப்பால் நீ என்றும் இருக்க' எனத் திருவருள் புரிந்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது.]

43-ஆம் அதிகாரம்: அறிவுடைமை.

அன்றமணர் தீவைப்ப வஞ்சியதென் னென்னன்மின்
றுன்றியசீர்ச் சம்பந்தர் சோமேசா—கன்றேயாம்
அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். (சாரு)

42. (இ-ள்) சோமேசா—! அஞ்சுவது அஞ்சாமை பேதைமை—அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம், அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்—அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம், (ஆகலின்) சீர் துன்றிய சம்பந்தர்—சிறப்பு மிக்க ஸ்ரீ ஞான சம்பந்தப் பிள்ளையார், அன்று—அந்நாள், சமணர் தீவைப்ப—சமணர்கள் (தாம் தங்கிய மடத்தில்) நெருப்பிட, அஞ்சியது என் என்னன்மின்—அஞ்சியது யாது பற்றி என்று நினையாதீர், நன்றே ஆம்—(அவ்வாறு அஞ்சியது) நன்மையே ஆகும் (எ-று).

பாவமும் பழியுங் கேடு முதலாக அஞ்சப்படுவன பலவாயி னுஞ் சாதிபற்றி 'அஞ்சுவது' என்றார். அஞ்சாமை—எண்ணாது செய்து நிற்றல். அஞ்சுதல்—எண்ணிச் செய்யாது விடுதல். அஞ்சுதல் காரியமன்று என்று இகழப்படாதென்பார் 'அறிவார் தொழில்' என்றார். 'அன்று அமணர்' என்பது வினைத்தொகை நிலைத்தொட ரெனக்கொண்டு 'பகைத்த சமணர்கள்' எனினுமாம். 'தன்றிய சீர்' வடநூன் முடிபு. நன்றே—ஏகாரம் தேற்றம். 'சோமேசா' என்னுங் கடவுண் முன்னிலையோடு 'என்னன்மின்' என்னும்

ஏவற்பன்மை இயையா தென்றுரைத்துத் 'தென்னன்மின்' என்ற பாடத்தை மாற்றி 'மங்கையர்க்கரசியாரும்' என்று உரை கூறு வாரு முளர். இஃ தொருமைப் பன்மை மயக்கமென் றொழிக.

கூறை:—மேல் உரைத்தாம் (17-வது பாட்டுரை காண்க.)

44-ஆம் அதிகாரம்: குற்றங்கடிதல்.

ஈரைந் தலியா னனுகியபின் னேகலுற்றுச்
சூரன் றொலைந்தானே சோமேசா—வோரின்
வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (சுசு)

அஃதாவது காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்கள் ஆறனையுங் கடிதல். இவற்றை வடநூலார் அரிவர்க்க மென்ப (அரி—பகை).

44. (இ-ன்) சோமேசா—! ஓரின்—ஆராயின் வரு முன்னர்—குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே, காவாதான்—(அதனைக்) காவாதானது, வாழ்க்கை—வாழ்வானது, (அது வரின்) எரி முன்னர் வை தூறு போல—நெருப்பின்முகத்து நின்ற வைக்குவைபோல, கெடும்—அழிந்துவிடும், — (அதற்கு எடுத்துக்காட்டு) — ஈர் ஐந்து தலையான்—பத்துத் தலைகளையுடைய இராவணன், அணுகிய பின்—(குற்றம் வந்து தன்னை) அடைந்த பின், ஏகல் உற்று—(போர்க்குச்) சென்று, சூரம் தொலைந்தான் — ஆண்மை அழிந்தான் (எ-று).

குற்றம் என்பது அதிகாரத்தான் வந்தது. முன்னர்—'அர்' பகுதிப்பொருள் விகுதி. 'வரும்' என்னும் பெயரெச்சம் முன்னர் என்னுங் காலப்பெயர் கொண்டது; அதனாற் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றஞ் சிறிதாயினும் அதனாற் பெரிய செல்வம் அழிக்கேவிடு மென்பது உவமையாற் பெற்றும். 'ஈரைந்தலையான்'

என்றது அவனது வலி குறித்தற்கென்க; அவனுக்குத் 'தசமுகன்' என்பது வடமொழிப் பெயராதலு மறிக. 'அணுகிய பின்' என்புழிக் 'குற்றம்' என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. எண்டுக் குற்றமாவது பிறன்மனை வெளவுதலா மென்க.

கதை:—மேல் உரைத்தாம் (15-வது பாட்டுரை காண்க.)

45–ஆம் அதிகாரம் : பெரியாரைத் துணைக்கோடல்

எத்திறமு மேயர்கோ னட்பாமா றெண்ணினரே
சுத்தகெறி யாளூரார் சோமேசா—வைத்த
அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (சரு)

அஃதாவது ஒருவன் தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல்.

45. (இ-ள்) சோமேசா—! பெரியாரைப் பேணி—பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து, தமரா கொளல்—தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல், வைத்த அரியவற்றுள் எல்லாம்—அரியன வென்று வைத்தெண்ணப்பட்ட பேறுகள் எல்லாவற்றினும், அரிது—அரிதாகும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—சுத்த நெறி ஆளூரார்—குற்றமற்ற நல்வழியில் நின்ற சுந்தாமூர்த்தி நாயனார், எ திறமும்—எல்லா வழியானும், ஏயர்கோன்-ஏயர்கோன் கலிக்காம நாயனார், நட்பு ஆம் ஆறு—(தமக்கு) நட்பாகும் படி, எண்ணினர்—நினைத்தார் (எ-று).

இப் பேறு சிறந்ததென்றது அரியன பிறவெல்லாம் உண்டாதலைக்கி. எழனுருபு கூட்டிப் பிரித்தற் பொருட்டு. எத்திறமும்—எகாரவினை எஞ்சாமை குறித்தது; உம்மை முற்றும்மை.

கதை :—சோழநாட்டிலுள்ள திருப்பெருமங்கலத்தில் வேளாண்மாபிற் பாம்பரையாகச் சோழர்களுக்குச் சேனபதித்

தொழில் செய்துவந்த எயர்குடியில் அவதரித்துத் திருப்புன்கூர் என்னும் க்ஷேத்திரத்தில் திருப்பணி புரிந்த கலிக்காம நாயனார் என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருமானைப் பாவையாரிடந் தூதுவிட்ட செய்தி கேள்வியுற்றுப் 'பெருமானையும் இவ்வாறு ஏவல்கொள்வா ருண்டோ?' என்று மனம் வருந்திச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் பகை வைத்திருந்தமை கண்ட பெருமான் இருவர்க்கும் நட்பாகத் திருவுளங்கொண்டு கலிக்காம நாயனார்க்குச் சூலநோய் தந்து அவர் ஆற்றொணாது வருந்தும் நிலையில் அவர் கனவி லெழுந்தருளி, 'இந்நோய் வன்றொண்டனெனிய சுந்தரத்தாற் றீரும்' என்ன, நாயனார் 'யான் இறப்பினும் அங்குச் செல்லேன்' என்றிருந்தார். பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முன் திருவுருக் கொண்டு தோன்றி 'நீ எயர்கோன் சூலநோயைத் தீர்ப்பாய்' என்றருளினார். அவ்வாறே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பெருமங்கலம் புக்குத் தம் வருகையைக் கலிக்காம நாயனாருக்கு அறிவிக்குமாறு ஒற்றரை ஏவ, ஒற்றரால் அவர் வருகை யறிந்த கலிக்காமனார், 'பெருமானைத் தூதுவிட்டவனையோ யான் காண்பது?' என்று தம் உடை வாளான் வயிற்றிடைக் குத்திக்கொண்டிறந்தார். அவர் மனையாரும் உடன் உயிர்துறக்க நின்றார்; அத் தறுவாயில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர் மனைக்கு எழுந்தருள அவர் மனைவியார் 'நாயனாருக்குக் கெடுதி ஒன்றுமில்லை. அவர் அறையில் பள்ளி கொள்கின்றார்' என்ன, சுவாமிகள் 'யாம் அவரைக் காணுதல் செல்லோம்' என்னக் கலிக்காமனாரைக் காட்டி

னர். நாயனார் உடைவாளாற் குத்திக்கொண்டு தம் பொருட்டு இறந்தாரென்பதை அறிந்து தாமும் அதுசெய்ய உடைவாளை எடுத்தார். பெருமான் திருவருளால் அந்நிலையில் எயற்கோன் உயிர் பெற்றெழுந்து சுவாமிகளை வணங்கினர். சுவாமிகளும் அவர் அடிகளில் வீழ்ந்து வணங்கினர். அன்று முதல் அவர்கள் நட்புக் கொண்டிருந்தார்கள்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

---

80 சோமேசர் முதுமொழி வெண்பா

46 - ஆம் அதிகாரம் : நிற்றினஞ்சோராமை.

அறகா வமண்மொழிகேட் டல்லலுற்றான் மாறனில்லாள்
சொற்கேட்டு நோய்தீர்ந்தான் சோமேசா—தற்காக்கு
நல்வினைத்தி னூங்குத் துணையில்லை தீவினைத்தி
னல்லற் படுப்பதூஉ மில். (சசு)

அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் இல்லை என்பொரும், விடரும், தூர்த்தரும், நடரும் உள்ளிட்ட கூட்டத்தார்.

46. (இ—ள்) சோமேசா—! தற்காக்கும்—(ஒருவனுக்குத்) தன்னைக் காக்கும், நல் இனத்தின் ஊங்கு—நல்லினத்தின் மிக்க, துணையும் இல்லை—, தீ இனத்தின் (ஊங்கு)—தீய வினத்தின் மிக்க, அல்லற் படுப்பதூஉம்—இல்—பகையும் இல்லை,—(அதற்கு எடுத்துக்காட்டு)—மாறன்—(கூன்) பாண்டியன், அற்கா—(அறிவொடு) தங்காத), அமண்மொழி கேட்டு—சமணருடைய சொற்களைக் கேட்டு, அல்லல் உற்றான்—துன்பமடைந்தான், இல்லாள் (தனது) மனைவியாது, சொல்கேட்டு—சொல்லைக்கேட்டு, நோய் தீர்ந்தான்—(சுர) நோய் நீங்கினான்) எ—று).

'நல்லினத்தின், தீயினத்தின்' என்புழி ஐந்தனுருபுகள் எல்லைப்பொருளின் வந்தன. ஊங்கு என்பது பின்னுங் கூட்டப்பட்டதென்க. உம்மை மாற்றிப் பொருளுரைத்தாம். நல்வினம் அறியாமையினின்றும் நீக்கித் துன்பமடையாதபடி காத்தலின் அதனைத் 'துணை' யென்றும், தீயினம் அறிவினின்றும் நீங்கித் துன்பமடைவித்தலின் அதனைப் 'பகை' என்றுங் கூறினர். அல்லற்படுப்பது என்பது எதுப்பெயர். அற்கா—'அல்கா' என்பது திரிந்து நின்றது. சொற்கேட்டலாவது அதன்படி நடத்தல். நோயின்

முழுவல அதனை உடையான்மேல் ஏற்றப்பட்டமை காண்க.

கதை :—மேல் உரைத்தாம் (17வது பாட்டுரை காண்க).

47-ஆம் அதிகாரம் : தெரிந்து செயல்வகை.

சானகியை யிச்சித்துத் தன்னுயிரும் போக்கினனே
தானீ நிலங்கையர்கோன் சோமேசா—வானதனுல்
ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். சன

அஃதாவது ஒருவன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந் திறம்.

47. (இ—ள்) சோமேசா—! தூய்மை நீர் இலங்கை யர் கோன்—பரிசுத்தியுடைய கடல்சூழ்ந்த இலங்காதிப னெகிய இராவணன், சானகியை இச்சித்து — சீதையை விரும்பி, தன் உயிரும் போக்கினன்—தனது உயிரையும் போக்கிக்கொண்டான், ஆனதனுல்—ஆனதுபற்றி, ஆக்கம் கருதி—மேல் பெறக்கடவதாகிய இலாபத்தை நோக்கி, முதல் இழக்கும் செய்வினை—முதலையும் இழத்தற்கு ஏது வாகிய செய்வினையை, அறிவுடையார் ஊக்கார்—அறி வுடையார் மேற்கொள்ளார் (எ-று).

கருதி என்னும் வினையெச்சம் இழக்கும் என்னும் பெயரெச்

சத்தோடு முடிந்தது. முதல் என்புழி இறந்தது தழீஇய எச்ச வும்மை விகாரத்தாற் றொக்கது. ஆக்கமேயன்றி முதலும் இழக்கும் செய்வினைகளாவன வலியும், காலமும், இடனும் அறியாது பிறர் பொருள் கொள்ளச் சென்று தம் பொருளையும் இழத்தல்போல் வன. முன் செய்து வந்த வினையாயினும் என்பார் 'செய்வினை' என்றார். ஈண்டு ஆக்கம் இன்பமும் முதல் உயிருமாம். சானகி—சனக புத்திரி. இது வடமொழித் தத்திதம். உயிரும்—உம்மை எச்சவும்மை எனக் கொள்க. இலங்கை—லங்கா என்னும் வட சொற்றிரிபு; லங்கா என்பதற்குத் தீவு என்பது பொருள்.

கதை :—மேல் உரைத்தாம் (15-வது பாட்டுரை காண்க).

6

82 சோமேசர் முதுமொழி வெண்பா

48–ஆம் அதிகாரம் : வலியறிதல்.

சக்கரத்தை யேற்பன் சலந்தரனை னென்றெடுத்துத்
துக்கமுற்று வீடினனே சோமேசா—வொக்கும்
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். (சஅ)

அஃதாவது -வினைவலி, தன்வலி, பகைவலி, துணைவலி ஆகிய நால்வகை வலியையும் அளந்தறிதல்.

48. (இ-ள்) சோமேசா—! உடை தம் வலி அறி

யார்—செய்பவராதலையுடைய தமது வலியின் அளவறியாதே, ஊக்கத்தின் ஊக்கி—மன வெழுச்சியில் (தம்மின் வலியாரோடு) வினை செய்தலைத் தொடங்கி, (அவர் எதிர்த்தலான் அது செய்து முடிக்கப் பெறுது) இடைக்கண் முரிந்தார் பலர்—இடையே கெட்டவர் (உலகத்துப்) பலராவர், ஒக்கும்—(இஃது) ஒக்கும், (ஏனெனின்) நான் சலந்தரன்—(சலந்தராசுரன்) நான் சலந்தராசுரன், (ஆகலின்), சக்கரத்தை ஏற்பன்—(நீர் பூமியிற் கிறிய இச்) சக்கரத்தைத் தாங்குவேன், என்று—என்று (தருக்கிச்) சொல்லி, எடுத்து—(சிவபெருமான் கிறிய சக்கரத்தை) எடுத்து, துக்கம் உற்று விடினன்—துன்பமடைந்து அழிந்தான் (எ-று).

உடைய என்பது அவாய் நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. அறிவுடையார் சில ராதலின், 'முரிந்தார் பலர்' என்றார். அதனால் தம் வலி அறிந்தே வினை தொடங்குக என்பது குறிப்பெச்சம்.

கதை :—மேல் உரைத்தாம் (28-வது பாட்டுரை காண்க).

49-ஆம் அதிகாரம்: காலமறிதல்.

வீமனவை முன்மனையை வேட்டானைக் கண்டுமொரு
தூமொழியே னும்புகலான் சோமேசா—வாமென்றே
ஊக்க முடையா னெடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. (சகூ)

அஃதாவது வினை செய்தற்கு ஏற்ற காலத்தை அறிதல்.

• 49. (இ-ள்) சோமேசா—! ஊக்கம் உடையான் ஓடுக்கம்—வலி மிகுதி யுடையான் (வினைசெயற் கேற்ற) காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர் தாக்கற்கு பேருஞ் தகைத்து—போர் செய்கின்ற ஆட்டுக் கிடாய் (தன் பகை கெடப்) பாய்தற் பொருட்டுப் பின்னே கால் வாங்குந் தன்மைத்து,-(அதற்கு எடுத்துக்காட்டு)-வீமன் — வீமன், அவைமுன் — அரசவைக் கெதிரில், மனையை வேட்டானை கண்டும்—தமது மனைவியாகிய திரௌபதியை விரும்பினவனுன சீசகனை (கேசே) கண்டும், ஆம் என்று—(அவனைக் கொல்லுதற்கு ஏற்றகாலம்) வாய்க்குமென்று, ஒரு தூ மொழி யேனும் புகலான்—வன்சொல் ஒன்றை யேனும் உரைத்தானில்லை (எ-று).

உவமைக்கண் தாக்கற்கு என்றதனால் பொருளினும் வெற்றி எய்தற் பொருட் டென்பது கொள்க. பேரும்—பெயரும் என்ப தன் மரூஉ. வீமன்—(பகைவர்க்குப்) பயங்கரன் என்பது தாதுப் பொருள். உம்மைகள் இழிவு சிறப்பு. தூ—வலிமை ; ‘தூவறத் துறந்தாரை’ ‘தூத்தகை வயிரம்’ என்னுஞ் சங்கதநூற் பிரயோகங் காண்க. இனி, ‘தூய நூற்றம் பகை தசையுந் தூவே’ எனப்

பிங்கலந்தை கூறுதலின் " தூ மொழி ' என்பதற்குப் ' பகைச் சொல் ' எனப் பொருள் கோடலுமாம். எனும்—எனினும் என் பூதன் மருஉ.

கதை:—பாண்டவர்கள் சூதாடி நாடிழந்து காடுறைந்து கரந்

துறைதல்வேண்டி மாறுவேடமும் வேறு பெயருங்கொண்டு விராட ராசனைச் சார்ந்து ஒவ்வொரு தொழிலில் அமர்ந்து வாழ்கையில் திரௌபதி விராடராசனுடைய மனைவியாகிய சுதேஷ்ணைக்குப் பணிப்பெண் ஆனாள். ஒருநாள் அச் சுதேஷ்ணையின் உடன் பிறந்தோனாகிய கீசகன் அவளிடம் வந்தபோது திரௌபதியைக் கண்டு மோகங்கொண்டு சுதேஷ்ணை என்ன சொல்லியுங் கேளாது அவளை அணுகினான். அவள் ஓடிப்போய் விராடராசனது சபை யின் முன் விழுந்தாள். அங்கும் அவளைவிடாது தொடர்ந்துவந்த கீசகன் கைப்பற்ற முன் சூரியனால் ஏவப்பட்ட ஓர் ஏவலாளன் அவனை எடுத்து அப்பால் எறிந்தான். அது கண்டு பலாயன னென்னும் பெயரோடு மடைத்தொழிற் றலைவனாய் இருந்த வீமன் அவனைக் கொல்லுதற்கு ஒரு மரத்தைப் பெயர்த்தெடுக்கச் சென்ற போது, கங்கபட்டனென்னும் பெயரோடு சந்நியாசியாய்ச் சபை யில் விராடனருகிலிருந்த தருமபுத்திரர் ' இம் மரம் எரியாது ' என்ற குறிப்புணர்ந்து அப்போது ஒன்றுஞ் சொல்லாது வாளா விருந்தான். மறுநாள் நள்ளிரவில் திரௌபதியைக் கொண்டு ஆசைகாட்டிக் கீசகனை ஒரு சோலைக்கு வருவித்துக் கொன்றான்.

[இது பாரதத் துளது].

50-ஆம் அதிகாரம் : இடனறிதல்.

காட்டு முயலுங் கதக்கரியைக் கொல்லுமாற்
றோட்டலர்நீர்க் கச்சியினுட் சோமேசா—நாட்டியிடின்
ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். (௫௦)

அஃதாவது வலியும் காலமும் அறிந்து வினை செய்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல்.

50. (இ-ள்) சோமேசா—! நாட்டியிடின்—துணிந்து சொல்லின், ஆற்றாரும்—வலியர் அல்லாதாரும், ஆற்றி
சோமேசர் முதுமொழி வெண்பா 85

அடுப—வலியராய் வெல்லுவர், இடன் அறிந்து—அதற்கேற்ற இடத்தினை யறிந்து, போற்றி—(தம்மைக்) காத்து, போற்றார்கண் செயின் — பகைவரிடத்து வினை செய்வராயின்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—தோடு அலர் நீர் கச்சியினுள் — இதழ்களையுடைய மலர்கள் பொருந்திய நீர்வளம் மிக்க காஞ்சிமா நகரில், காட்டு முயலும் — காட்டின்கண் வாழ்கின்ற முயலும், கதம் கரியை கொல்லும்-சினத்தையுடைய யானையை வருத்திற்று (எ-று).

தம்மை என்பதூஉம் வினை என்பதூஉம் அவாய் நிலையின் வந்தன. காத்தல்-பகைவரான் நலிவு வாராமல் அரணானும் படை

யானுங் காத்தல். இவ்வாறு வினை செய்வராயின், மேற் சொல்லிய வலியின்றியும் வெல்வர் என்பதாம். தோடு - தொகுதியுமாம். கொல்லும்-இது காரணமின்றி இயல்பிலுல் வந்த கால வழுவமைதி யென்க. கொல்லுதல் - வருத்தல் ; அஃ தப்பொருட்டாதலை, 'கொல்லச் சுரப்பதாங் கீழ்' என்னும் நாலடியார் பிரயோகத்தானு மறிக.

கதை :—காஞ்சியின்கணுள்ள ஒரு சிறிய முயல் அத் தல வாசஞ் செய்யும் வலிமையின் ஒரு யானையை வருத்தி ஓட்டிற்று. 'மன்னு கின்றவதீ திருநகர் வரைப்பின் மண்ணின் மிக்கதோர் நன்மையி னலே, துன்னும் யானையைத் தூற்றில்வாழ் முயன்முன் றூக்க வெய்திய தொலைவிலூக் கத்தாற், றன்னி லத்துநின் றகற் றுதல் செய்யுந் தான மன்றியுந் தனுவெழுந் தாணி, யெந்நி லத்தி னுங் காண்பரு மிறவாத் தான மென்றிவை யியல்பினி லுடைத் தால்' என்னும் பெரிய புராணச் செய்யுளையும், 'வென்றியிப, மொன்று குறுமுயலுக் கோடு மிடம்பார்த்து' என்னும் ஏகாம்பர நாதருலா வடிகளையுங் காண்க.

[இது காஞ்சிப்புராணத் துளது].

---

51 – ஆம் அதிகாரம் : தெரிந்து தெளிதல்.

தேரரு மானத்தினமுன் றேறிப் பழிபூண்டான்
சூரியசன் மாவென்பான் சோமேசா—தாரணிமேல்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும். (நக)

அஃதாவது ஒருவன் தன்னெடு இயைபுடையார் அல்லாதாரைப் பிறப்புக் குணம் அறிவென்பனவற்றையும் செயலையும் காட்சி, கருத்து, ஆகமம் என்னும் அளவையான் ஆராய்ந்து தெளிதல். காட்சி - பிரதியக்ஷம், கருத்து-அனுமானம், ஆகமம்-சப்தம், அளவை-பிரமாணம்.

51. (இ-ள்) சோமேசா—! பிறனை-தன்னெடு இயைபுடையான் அல்லாதானை, தேரான்-(பிறப்பு முதலியவற்றானும் செயலானும்) ஆராயாது, தெளிந்தான்—தெளிந்த ஒருவனுக்கு, (அத்தெளிவு) வழிமுறை தீரா-தன் வழிமுறையினும் நீங்காத, இடும்பை தரும்-துன்பத்தைக் கொடுக்கும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—தாரணிமேல்—இப்பூமியின்கண், தேரரும் ஆனந்தினை—(பிறப்பு முதலியவற்றானும் செயலானும்) ஆராய்தற்கு அரிய ஆனந்தனென்பானை, சூரிய சன்மா—சூரியசன்மா வென்பான், தேறி—தெளிந்து, பழி பூண்டான்—பழியை அடைந்தான் (எ-று).

இயைபு—தன் குடியொடு மாறுபடாத வழக்கு. இதனுள்,

தன் குடி வழக்கொடொத்த வழக்கும் வேண்டுமென்பது பெற்றும். தெளித்தல்—அவன் கண்ணே தொழிலே வைத்தல்; அஃதாவது அவனைத் தன் காரியம் பார்க்க நியமித்தல். அத் தொழில் கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர் கைப்பட்டுக் கீழாய் விடுவரென்பதாம். 'தெளிந்தான்' என்புழி நான்காவது விகாரத்தாற் றொக்கது. என்பான்—எனப்படுவான்; சன்

டுப் 'படு' விகுதி தொக்கது. சன்மா—சர்மா என்னும் வடசொற்றிரிபு; இஃது அந்தணர்க்குரிய பட்டப்பெயரென்க.

கதை :—கௌசிக நாட்டில் விக்கிரமநகரத்தில் ஆனந்தன், சூரியசன்மா என்று இரண்டு அந்தணர்கள் இருந்தார்கள். வஞ்சகனாகிய ஆனந்தன் சூரியசன்மாவை எதிர்த்து வெல்லுதல் கூடாதென்றறிந்து வஞ்சனையால் வெல்லக்கருதி ஒருநாள் அவனிடம் வந்து, 'ஐயரே! அறிவின்மையால் இத்தனை நாள் உம்மைப் பகைத்து வந்தேன். பொறுத்தருள்க!' என்று வீழ்ந்து வணங்கினான். சூரியசன்மா அவனிடங் கொண்ட பகைமை முற்றும் அப்பொழுதே மறந்து அவனோடு அளவளாவினான். இருவரும் நெருக்கமாய் சிலநாள் பழகினார்கள். ஒருநாள் ஆனந்தன் தன் எண்ணத்தை முடித்துக் கொள்ள வெண்ணி, ஐயரே! நமது வீதியில் புலி யொன்று இரவில் வருகிறது. நான் அது வருஞ் சமயம் பார்த்திருந்து அழைக்கிறேன். நீர் உடனே வெளிவந்து அதனைக் கொல்லுக' என்று கூறி ஒரு பசுவிற்குப் புலித்தோல் போர்த்து நிறுத்தி நள்ளிரவில் சூரியசன்மாவை அழைத்தான். சூரியசன்மா ஓடிவந்து அம்பெய்து அப் பசுவைக் கொன்றான். அவனைக் கோஹத்தி பற்றியது. அதனோடு அமை

யாது ஆனந்தன், 'ஐயரே! நீர் இங்கேயே இருக்க. நான் நமது மனைக்கணுள்ள கள்வர்க்கு அஞ்சாது அங்குச்சென்று வருவேன்' என்று கூறிப் போய்ச் சூரியசன்மாவின் மனையாட்டியிடஞ் சென்று, 'அம்மையாரே! கள்வர் வருவர். நீர் இங்கிராதீர். உமது மகன் விடுதியிற் சென்றிருக்க' என்று அவளை அவள் மகனிருக் கையின் விட்டு, அவள் மகனையும் மருகியையும் அவள் விடுதியிற் கொணர்ந்து விட்டுத் திரும்பிச்சென்று 'ஐயரே! ஓர் அடாத செய்கை கடைபெறுகின்றது. நமது மனைவியான் வேற்றுமக னொருவனுடன் ஒரு பாயலிற் கிடக்கக் கண்டேன், காண்க' என

வே அவன் விரைந்து சென்று வாயில்கள் அடைத்திருந்தனற் புறக்கடைவழியாக வந்து மதிற் சுவர் ஏறிக் குதித்து உட்புகுந்து தன் விடுதியில் ஒருவனும் ஒருத்தியும் ஒரு பாயலில் இருக்கக்கண்டு

அவர்கள் மகனும் மருகியும் என்றறியாது கொன்றான். மறுநாட் காலையிற் சூரியசன்மாவின் மனைவி தன்னகம் புக்கபோது மக னும் மருகியுங் கொலையுண்டு கிடப்பது கண்டு வாயிலும் வயிற்றி னும் அடித்துக்கொண்டு கதறினாள். அவள் அழுகையொலி கேட்ட சூரியசன்மா ஓடிவந்து பார்த்து நடந்த வஞ்சனை யறிந்து தானும் புலம்பினான். அதற்குள் ஆனந்தன் அந்தணர் அவைக்குச்சென்று 'சூரியசன்மா பசுக்கொலை செய்ததுமன்றித் தன் மகனையும் மருகி யையுங் கொன்றிட்டான்' என்று அறிவித்தான். அவையத்தார் சூரியசன்மாவை வருவித்து விசாரித்தனர். சூரியசன்மா மனமிக வருந்தி 'ஐயன்மீர்!' சூதால் விளைந்த கெடுதி இவை. ஆனந்தனை இவற்றிற் கெல்லாம் காரணம்' என்றான். அவையத்தார் 'அங்ஙன

மாயின் நீ கேதாரநாதன் சந்நிதியிலுள்ள இடபத்திற்குப் புல் அருத்துவாய்' என்றனர். அதற்கு அவன், 'அந்த ஓர் இடபத் திற்கே யன்று; திருமதில் இடபத்திற்கும், கோபுரத்திடபத்திற் கும் உடன் அருத்துவன், வருக' என்றான். நான்கு அந்தணர்கள் அவனுடன் சென்றார்கள். 'கேதார நாதன் திருநாமமாகிய பஞ்சா க்ஷரத்திற்குத் திருவருளுண்டெனில், இடபங்களே வருக!' என் றான் சூரியசன்மா. உடனே அவ் விடபங்கள் வந்து அவன் தந்த புல்லை அருந்தின. அவ் வருஞ் செயலை வியந்து சூரியசன்மாவை யாவரும் வணங்கினர்கள். அப்போது அவன் மனையாள் அவனை நோக்கி 'இறந்துபட்ட பசுவும், மகனும், மருகியும் உயிர் பெற் றெழும்படி செய்க' என்று வேண்டினாள். அவன் பஞ்சாக்ஷரத்தை ஓதிய வளவில் பசுவும், மகனும், மருகியும் துயிலெழுந்தவர்கள்போல எழுந்திருக்கவே, யாவரும் மனமகிழ்ந்தார்கள். ஆனந்தன் ஓடிக் காட்டில் ஒளித்துக் கடும்பிணி கொண்டு மாய்ந்து நரகமடைந் தான்.

[இஃது உபதேசகாண்டத் துளது.]

---

54 - ஆம் அதிகாரம்: தெரிந்து வினையாடல்.

தேசிகனுக் கொண்ட சுரரிறைக்குத் தீங்கிழைத்தான்
றாசார் துவட்டாச்சேய் சோமேசா—பேசில்

எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகு மாந்தர் பலர். (நூஉ)

அஃதாவது அத் தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின் கண்ணே ஆளுந் திறம்.

52. (இ-ள்) சோமேசா —! பேசில்-சொல்லுமிடத்து, எனை வகையால் தேறியக்கண்ணும்-எல்லா வகையாலும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்த பின்னும், வினை வகையான்-அவ் வினையின் இயல்பானே, வேறுகும் மாந்தர் பலர்-வேறுபடும் மாந்தர் (உலகத்துப்) பலர்-(அதற்கு எடுத்துக் காட்டு)—தூசு ஆர் துவட்டா சேய்—குற்றம் நிறைந்த துவட்டா என்னும் அசுரன் மகனாகிய விச்சுவவுருவ னென்பான், தேசிகனை கொண்ட—(தன்னைக்) குருவாகக் கொண்ட, சுரர் இறைக்கு—இந்திரனுக்கு, தீங்கு இழைத் தான்—கெடுதி செய்தான் (எ-று).

தன் அரசனாகிய சச்சந்தன் அவன் மனைவியாகிய விசயை பால் மிக்க மோகங்கொண்டு அரசாட்சியை அமைச்சனாகிய தன் பால் விட்டு அந்தப்புரத்திலேயே இராப்பகல் கழிக்க, அவனைக் கொன்ற கட்டியக்காரன் போல அரச இன்பத்தினை வெஃகி விகாரப்படுவதன்றி அதனைக் குற்றமென்றொழிந்து தம் இயல்பில் நிற்பார் அரியாகலின் "வேறுகு மாந்தர் பலர்' என்றார் [சச்சந் தன்-சிவகன் தந்தை]. வினை வைப்பதற்கு முன் எல்லாக் குணங் களும் உடையராய், வைத்தபின் விகாரப்படுவாரை இடையாய தொரு வினையை வைத்தறிந்து ஒழிக்க என்பதாம். அவ் வினையின்

இயல்பாவது நற்குணமுடையாரையும் மனவுறுதியின்றெனின் தீச்செயல் பரிய வெவும் அத் தொழிலது தன்மை. இதனுன் ஒரு

வகையான் ஒழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது. ஆ-'ஆக' என்பதன் விகாரம்.

கதை:—கிரேதயுக மொன்றில் இந்திரன் அரியணை மேவி வீற்றிருந்து அரம்பையர் ஆடலினும் பாடலினும் மனத்தைச் செலுத்திக் களித்திருக்கும்போது தன் குருவாகிய பிரகஸ்பதி அங்கு வரக் கண்டிலனுல் அவரை வழிபடா திருந்தான். அது கண்டு பிரகஸ்பதி அங்கு நில்லாது விரைவின் எகினர். இந்திரனுடைய செல்வங் குன்ற, இது குருவை வழிபடாமையின் வந்த கேடென்றறிந்து அவன் அவரை எங்கெங்குந் தேடினுன்; ஓரிடத்துங் கண்டானில்லை. அதனுற் சத்தியலோகஞ் சென்று நான்முகனுக்கு நிகழ்ந்த செய்தியைக் கூற அவன் வஞ்சனையாக 'உனது குருவை நீ காணுமட்டுந் துவட்டா என்னும் அசுரனது மகனுகிய விச்சுவவுருவனைக் குருவாகக் கொள்க' என்றான். அவ்வாறே அவ் விச்சுவவுருவனைக் குருவாகக் கொண்டு ஒரு வேள்வி இயற்றிய வளவில், அவன் அசுரர்க்கு நன்மையுஞ் சுரர்க்குத் தீமையும் உண்டாக நினைந்து அதனைச் செய்ய அஃதறிந்த இந்திரன் அவனை வச்சிராயுதத்தால் தாக்கினுன். அப்போது விச்சுவவுருவனுடைய மூன்று தலைகளும் மூன்று பறவைகளாய்ப் பறந்து சென்றன. அப்பொழுதே பிரமபாவம் இந்திரனைப் பற்றியது. தேவர்கள் அதனைப்பகுந்து மண், மகளிர், நீர் இவற்றிற்குக் கொடுத்தனர்.

அது மண்ணினிடம் உவராகியும், மகளிரிடம் பூப்பாகியும், நீரினிடம் நுரையாகியுந் திரிய, அத்தேவர்கள் அதற்கு மாறுக மண் அகழினும் தூர்ந்து வடு நீங்கவும், மகளிர் மகப்பெறு மளவும் நாயகனெடு இன்பநுகரவும், நீர் இறைக்குந்தொறும் ஊறி நிறையவும் நலமுதவினர்கள்.

[இது திருவிளையாடற்புராணத் தினது].

53-ஆம் அதிகாரம் : சுற்றந்தழால்.

ஆர்வீ டணைஞெ டளவளா வாதரக்கன்
சோர்விலா வாழ்வினுந் தான் சோமேசா—நேரே
அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (நஉ)

அஃதாவது ஒருவன் தன் கிளைஞரைத் தன்னைவிட்டு நீங்காமல் அவரோடத்தல். 'சுற்றம்' என்பதில் 'சுற்று' பகுதி, 'அம்' வினைமுதற்பொருள் விகுதி எனவும், தழால் என்பதில், 'தழுவு' பகுதி, 'ஆல்' தொழிற் பெயர் விகுதி எனவுங் கொள்க.

53. (இ-ள்) சோமேசா—! நேரே—தகுதியாகவே, அளவாளா இல்லாதான் வாழ்க்கை—(தன்) சுற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதானுடைய வாழ்க்கையானது, குளவளா—குளத்தினுடைய பாப்பு, கோடு இன்றி—கரையின்றி, நீர் நிறைந்தற்று-நீர் நிறைந்தாற்போலும்-(அதற்கு எடுத்துக்காட்டு)—அரக்கன்—இராவணன், ஆர் வீடணனோடு—(அன்போடு) பொருந்திய (தம்பியாகிய) விபீஷணனுடனே, அளவளாவாது—மனங் கலத்தலின்றி, சோர்வு இலா வாழ்வு இழந்தான்—குறைவற்ற செல்வத்தோடு உயிர்வாழ்தலை இழந்துவிட்டான் (எ-று).

சுற்றத்தோடு என்பது அதிகாரத்தான் வந்தது. அளவளா—முதனிலைத் தொழிற்பெயர்; அதன் பொருள் தன் அளவும் சுற்றத்தின் அளவும் விசாரித்தறிதல் என்பது. அஃதீண்டு ஆகுபெயராய் 'நெஞ்சு கலத்தல்' என்னும் பொருளதாயிற் றென்க. வாழ்க்கை ஆகுபெயராய் அதற் கேதுவாகிய செல்வங்களை உணர்த்தி நின்றது. நிறைதல் என்னுங் குளமாகிய இடத்தின் கண் நிகழ் நீராகிய பொருளின் தொழில், குளமாகிய இடத்தின் மேனின்றது; இஃது உபசாரவழக்கு. நிறைந்தற்று என்புழி 'ஆல்' என்னும் விளையெச்ச விகுதியேனும், 'து' என்னும்

தொழிற்பெயர் விகுதியேனும் புணர்ந்து கெட்ட தென்க. 'ஆர் வீடணன்' என்பதற்கு (நற்குணங்கள்) நிறைந்த விபீஷணன்

எனினும் இழுக்காது. வீடணன்—விபீஷணன் என்னும் வட சொல்லின் விகாரம்; அது (பகைவர்க்கு) மிக்க பயங்காரணனவ னெனப் பொருள்படுமென்க.

கதை:—இராம பத்தினியாகிய சீதையை இராவணன் அசோக வனத்திற் சிறை வைத்தமை யறிந்த அவன் தம்பியாகிய விபீஷ ணன் 'இஃது அடாதகாரியம்; சீதையை இராமன் பால்விட்டுச் சரண் புகுவாய்' எனப் பலமுறை கூறியுங் கேளாஞப் அவனைச் சினந்து பேச, நன்மொழி கொள்ளாத தமையனை விட்டு நீங்கி இராமனைச் சரணடைந்தான்.

[இஃது இராமாயணத் துளது].

54-ஆம் அதிகாரம்: பொச்சாவாமை.

மூப்புரத்தோர் வேவ வுடனிருந்த மூவரே
துப்பினுற் கண்டறிந்தார் சோமேசா—வெப்பால்
இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (நுசு)

அஃதாவது உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தன்னைக் காத்தவினும் பகையை அழித்தல் முதலிய காரியங்களினுஞ் சோர்தலைச் செய்யாமை.

54. (இ-ள்) சோமேசா—! தம் மகிழ்ச்சியின் தாம் மைந்துறும் போழ்து—(யாவரும்) தமது மகிழ்ச்சியின் கண் தாம் வலியுறும்பொழுது, இகழ்ச்சியின்-முற்காலத்து

அதனால் ஆகிய சோர்வினால், எப்பால் கெட்டாரை உள்ளுக-எவ்வகையானும் கெட்டவர்களை நினைக்க,—(அதற்கு எடுத்துக்காட்டு) — முப்புரத்தோர் வேவ — திரிபுரத்தார் (தீயின்) வேவ, உடன் இருந்த மூவரே—அவர்

களுடன் இருந்த (சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்னும்) மூவரே, துப்பினால் கண்டறிந்தார்—அனுபவத்திற் கண்டறிந்தனர் (எ-று).

உரு, திரு, ஆற்றல் முதலிய காரணங்களோடு அவர்க்குள்ளதாகிய உரிமையை மகிழ்ச்சியே லேற்றித் 'தம் மகிழ்ச்சியின்' என்றும், இகழ்ச்சியுங் கேடும் உடன் தோன்றுமாகலின், 'மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து' என்றுங் கூறினர். கெட்டவர்களை நினைக்கவே, நாமும் அவ்வாறே கெடுவோமென்று அதன்கண் மைந்துறுரென்பது கருத்து. 'எண்ணுக' வென்று பாடமோதுவாருமுளர். மூவரே—ஏகாரம் பிரிநிலை. எப்பால்—ஆனுருபும் முற்றும்மையும் விகாரத்தாற் றொக்கன.

கதை:—தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் அசுரர் மூவர் மிக்க சிவபத்தியுடையார் தேவர்களைத் துன்புறுத்தியதுடன் பொன், வெள்ளி, இரும்பு ஆகிய இவற்றாலாகிய மூன்று அரண்களில் இருந்து எங்கெங்கும் பறந்து சென்று கீழிறங்கி உயிர்களுக்குக் கேடு செய்தனர். திருமால் புத்தனுருவத்தோன்றி அவர்கள் சிவபத்தி கெடப் போதித்தார், அதனால் அவர்களும் மயங்கினர்கள். அதன் பின் திருமாலாதி தேவர்கள் கைலை சென்று பெருமானை

யடைந்து, அவர்கள் செய்யுந் துன்பத்தை விண்ணப்பித்து அவர் களை அழிக்கவேண்டினர்கள். பெருமான் அதற்கு இன்றியமையாத கருவிகள் அமைக்கவென எவத் தேவர்கள் பூமியைத் தேராகவுஞ் சந்திர சூரியர்களை உருளைகளாகவும் மேருவை வில்லாகவும் வாசு கியை நாணுகவும் விஷ்ணுவை அம்பாகவும் அக்கினியை அம்பி னியாகவுஞ் செய்து கருவிக ளமைத்தார்கள். பெருமான் அவை கொண்டு பூதமீதேறிச் சென்று திரிபுரத்தை யடைந்து நகைத்த வளவில் அப்புர மூன்றும் வெந்து வீழ்ந்தன. அவ்வாறாக; அப்புரத் தாருள் மற்றையோரெல்லாம் வெந்து அழியவும், புத்தன் போதனை யால் மயங்கிச் சிவபூசையைக் கைவிடாத சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்னும் மூவரே பிழைத்துப் பெருமான் பணித்தவாறே காஞ்சியில் இலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்தபின் கைலையில்

இருவர் துவாரபாலகர்களாகவும் மற்றொருவர் முழாமுழக்குபராக வும் நியமிக்கப் பெற்றனர்.

'மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள்செய்த' வென ஆருடைய பிள்ளையாரும் ' மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல், காவ லாளரென் றேவிய பின்னை யொருவ நீகரி காடரங் காக, மானை நோக்கியோர் மாட மகிழ மணி முழாமுழக் கவருள் செய்த, தேவ தேவனின் றிருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே' வென ஆருடைய நம்பிகளும் பணித்தமை காண்க.

[இது காஞ்சிப்புராணத் துளது]

மைந்தனை முமலச மஞ்சன் றனைவெறுத்தான்
சுந்தரச்செங் கோற்சகரன் சோமேசா—முந்துங்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். (நடு)

அஃதாவது அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை. அம் முறை ஒருபாற் கோடாது செவ்விய கோல்போலுதலின் செங்கோல் எனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்பர்.

55. (இ-ள்) சோமேசா—! முந்தும் குடி—முன்னேறுதற்குரிய குடிகளை, புறங்காத்து—பிறர் வருத்தாமற் காத்து, ஓம்பி—தானும் (வருத்தாது) பேணி, குற்றம் கடிதல்—(அவரிடத்துக்) குற்ற நிகழின் (அதனை ஒழிக்க வேண்டித்) தண்டித்தல்—வேந்தன் வடு அன்று—அரசனுக்குப் பழியன்று, தொழில்—தொழில் ஆகலான்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—சுந்தரம் செங்கோல் சகரன்—அழகு பொருந்திய நீதியையுடைய சகரனென்னும் அரசன், அசமஞ்சன்தனை—அசமஞ்சனை, மைந்தன் எனுமல்—

(தன்) மகனென்று கருதாமல், வெறுத்தான்—வெறுத்துத் தள்ளினான் (எ-று).

தண்டஞ் செய்தல், பொருளைக்கொள்ளுதல், கொல்லுதல் எனத் தண்டம் மூன்றுகலின் அவற்றுட் குடிகளிடத்திற் செய்தற்

கேற்பன முன்னைய இரண்டுமே என்பது 'குற்றங்.கடிதல்' என்பதனாற் பெற்றும். தன்கீழ் வாழ்வாரைத் தண்டித்தல் அறம் அன்று; கலின் வடுவாமென்பதனைத் தடையாக்கி, வடுவாகாது, அரசனுக்கு அவரை அக் குற்றத்தினீக்கித் தூயராக்குதலுஞ் சாதிதரும மென விடைகூறினனென்க. எனுமல்—என்னுமல் என்பதன்கண் னகர மெய் தொக்கது.

கதை:—சூரிய வமிசத்திற் றோன்றிய சகரன் என்னும் சக்கரவர்த்தி தன் மகன் அசமஞ்சன் என்பான் தீவழி யொழுகிப் பற்பல சிறுவர்களைச் சரயுநதியி லெறிந்து கொன்றமை கண்டு தன் நாட்டை விட்டுத் துரத்தினனென்.

[இஃது இராமாயணத் துளது].

---

56 – ஆம் அதிகாரம்: கொடுங்கோன்மை.

ஆவரில் லாளுமுத வன்றேகண் டேக்குற்றூர்
தூய்யகங்கை சேய்முதலோர் சோமேசா—மெய்யேயாம்
அல்லற்பட் டாற்றூ தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. (நசு)

அஃதாவது அம் முறையினது கோடுதற்றன்மை. இங்கும், கொடுங்கோல் ஆகிய உவமையின் பெயர் அநீதியாகிய பொருட் காயிற்று.

56. (இ-ள்) சோமேசா—! அல்லல்பட்டு—(அரசன் முறை செய்யாமையாற் குடிகள்) துன்பமுற்று, ஆற்றாது—(அதனைப்) பொறுக்கமாட்டாது, அழுத கண்ணீர் அன்றே-

அழுத கண்ணீர் அன்று, செல்வத்தை தேய்க்கும் படை—(அவன்) செல்வத்தைக் குறைக்குங் கருவி, மெய்யே ஆம்—உண்மையாகவே (அக் கண்ணீர் கருவி) யாகும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—ஐவர் இல்லாள் அழுத அன்றே-பஞ்ச பாண்டவரது மனைவியாகிய திரௌபதி (அரசவையில் துரியோதனன் தன்னை மானபங்கஞ்செய்ய) அழுத அப் பொழுதே, கண்டு—(அதனைக்) கண்டு, தூய்ய கங்கை சேய் முதலோர்—பரிசுத்தியுடைய கங்காதேவியின் புத்திரரான பீஷ்மர் முதலிய பெரியோர்கள், எக்குற்றார்—(துரியோதனாதியர்க்கு வரநின்ற அழிவை அறிந்து) எக்கமடைந்தார்கள் (எ-று).

அழுத கண்ணீர்—அழுதலான் வந்த கண்ணீர்; அழுத என்பது காரணப்பொருட்டில் வந்த பெயரெச்சமென்க. செல்வத்தை மரமென்றது கண்ணீரைப் படையென்றது ஏகதேசவுருவகவணியென்க. அல்லற் படுத்திய பாவத்தினது தொழிலாகிய செல்வத்தைத் தேய்த்தல் அப் பாவத்திற்கு எதுவாகிய கண்ணீர்மேனின்றது; இஃது உபசார வழக்கு. அக் கண்ணீரிற் கொடிது வேறின்மையின், செல்வம் விரைவிற் றேயுமென்பது கருத்து.

ஐவர்—தொகைக் குறிப்பு. எக்குற்றூர்—எக்கமுறு என்பதன் விகாரமாகிய 'எக்குறு' பகுதி. 'நாய்மை' படிந்தோர் பாவத்தைப் போக்குங் கங்கைக்கேனும் மூவாசை முதலற நீத்த கங்கை செய்க்கேனும் அடையாமென்க. கண்ணீர் பட்ட ஒக்கு மென்னுது, கண்ணீரையே படையென்றதனால் பொருளுக்கும் உவமைக்கும் ஐக்கியங் கூறுங் காட்சியணி இருத்தல் காண்க. இதனை வடநூலார் 'நிதர்சனாலங்காரம்' என்ப. 'ஐவரில்லா ளாண்ணந்த' என்பது பாடாந்தரம்.

கதை:—தருமபுத்திரன் சகுனியுடன் சூதாடி அரசுமுதலிய செல்வம் யாவுந் தோற்றபின் துரியோதனன் ஏவலால் துச்சாசனன் திரௌபதியைத் தலைமயிர் பற்றி இழுத்துவந்து சபையில் நிறுத்

தித் துகிலுரிந்து மானபங்கஞ்செய்ய முயன்றபோது அவள் கண்ணீர் ஆறுபோற்பெருக அழுதமை கண்டு பீஷ்மர், துரோணர் முதலிய பெரியோர்கள் துரியோதனனுக்கு அஞ்சிச் செயலற்றிருந்தாரேனும் இக் கண்ணீர் அத் துரியோதனன் குலம் அழிதற்கேதுவாம் என்று எங்கினர்கள். 'ஆறுகி யிருதடங்க ணஞ்சனவெம் புனல்சோர வளகஞ் சோர, வேறுன துகிறலொந்த கைசோர மெய்சோர வேறூர் சொல்லுங், கூறுது கோவிந்தா கோவிந்தா வென்றாற்றிக் குளிர்ந்து நாவி, னூறுத வழுதூற வுடல்புளகித் துள்ளமெலா முருகி னளே' என்னும் பாரத கவியை நோக்குக.

[இது பாரதத் துளது]

வெய்துரையா லக்கணமே வீந்தான் சிசுபாலன்
றெய்யின் முலையுமைபாற் சோமேசா—வய்யாக்
கடுஞ்சொல்லன் கண்ணிலனு மெனுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும். (நி-ள)

அஃதாவது பிறர் அஞ்சுவதும் தானஞ்சுவதுமாகிய தொழில் களைச் செய்யாமை.

57. (இ-ள்) தொய்யில் முலை உமைபால்—தொய்யிலெழுதிய தனத்தையுடைய உமாதேவியின் பாகம் அமைந்த, சோமேசா—! கடுஞ் சொல்லன்—(ஒருவன்) கடிய சொல்லையும் உடையனாய்—கண் இலன் ஆயின்—கண்ணோட்டமும் இலனுமாயின், நெடுஞ் செல்வம்—(அவனது) பெரிய செல்வம், நீடு இன்றி—நீடுதலின்றி, ஆங்கே கெடும் — அப்பொழுதே கெடும், — (அதற்கு எடுத்துக் காட்டு) — சிசுபாலன்—சிசுபாலன் என்பான், வெய்ய உரையால்—கடிய சொல்லால், உய்யா—(சிறிது காலமும்)

பிழைத்திராமல், அக்கணமே—அந்தக் கணத்திலேயே,

வீந்தான்—இறந்தான் (எ-று).

'வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு, ளீட்டங் கட் காமமோ டேழு' எனப்பட்ட வீதனங்க (வீசனங்க) ளுட் கடுஞ் சொல்லேயும் மிகு தண்டத்தையும் நாயனர் இவ் வெருவந்த செய்தலுள் அடக்கினர். கண்—தாக்ஷிண்யம்; ஆகுபெயர். நீடு தல்—நீட்டித்தல். உய்யா—உய்யாமல்; வினை யெச்ச வீறு தொக்கது.

கதை:—மேல் உரைத்தாம் [14-வது பாட்டுரை காண்க].

58-ஆம் அதிகாரம்: கண்ணோட்டம்.

மாலான் முதலீகழ்ந்த வானவர்நீங் கும்பொறுத்துத்
தோலா விடமுண்டாய் சோமேசா—சால
ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (நுஅ)

அஃதாவது தன்னோடு பழகினரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண் சென்ற போது நிகழ்வதாகலின், அப் பெயருடைய தாயிற்று.

58. (இ-ள்) சோமேசா—! சால ஒறுத்தாற்றும் பண் பினர் கண்ணும்—தம்மை மிக வருத்தும் இயல்புடையாரி

டத்தும், கண் ஓடி—கண்ணோட்டம் உடையராய், பொறுத்தாற்றும் பண்பே—(குற்றத்தைப்) பொறுக்கு மியல்பே, தலை—தலையாய இயல்பாவது,—(அதற்கு எடுத்துக்காட்டு) —மாலான் முதல்—திருமால் முதலிய, இகழ்ந்த வானவர் தீங்கு-(நின்னை இறையென நினையாது மயங்கி) அவமதித்த தேவர்களுடைய குற்றத்தை, பொறுத்தும்—பொறுத்தும், தோலா—(ஒன்றற்கும்) பின்னிடாது (யாவரையும்)

அழிக்க வெழுந்த, விடம் உண்டாய்—விடத்தைப் புசித்தாய் (எ-று).

'பண்பினர்' என்றதனால் அவரொடு பழகுதல் பெற்றாம். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும் என்பன ஒரு சொன்னீர. 'மால்' என்னாது 'மாலான்' என்றது மயக்கமுடைமை தோன்ற நின்றது (மால்—மயக்கம்). தீங்கு பொறுத்தும் என உம்மை பிரித்துக் கூட்டுக; இஃது எதிர்மறை யும்மை, பொறுக்கலாகாதது என்னும் பொருளைத் தருதலின். தோலா — தோலாத; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'செற்றால முயிரனைத்து முண்டிடவே நிமிர்ந்தெழலும்' (கந்தபுராணம்), 'வருகனல்வல் விடந்தாக்கி மாயவன்வெண் ணிறமேனி, கருகினனா லன்றுதொட்டுக், கரியனெனப் பெயர்பெற்றான்', 'திருமலரோ னுடற்பொன்மை தீர்ந்துபுகை நிறமுற்றான்' (காஞ்சிப் புராணம்), 'வானவரு மிந்திரனு மாலயனு மேசெத்துப், டோனவிடம் புன்முளைத்துப் போகாதோ—ஞானபிரா, னத்த னருணேச னன்றெழுஉ நஞ்சுத

னைப், புத்தியுடன் கொள்ளாத போது' (திருவருணைத் தனி வெண்பா). இன்னோரன்ன பாட்டுக்களான் அவ் விடம் தோலா விடமாத லறிக.

கதை:—சுராசுரர்கள் அமுதம் வேண்டித் திருப்பாற் கடலில் மந்தரகிரியை மத்தாக நாட்டி வாசுகியைக் கயிறாகப் பூட்டிக் கடைந்திளைத்தார்கள்; மந்தரகிரியும் நிலைபெறாது தாழ்ந்தது. அப்போது அங்கு வந்த வாலி உதவியாய் நின்று மேலுங் கடையத் திருமால் கூர்மவடிவங்கொண்டு மந்தரகிரியைத் தாங்கினார். மிக்க கடுமையாகக் கடையும்போது வாசுகி வருத்தம் பொறாது விஷத்தைக் கக்கிப் பெருமூச்செறியக் காளகூட மென்னும் விஷம் கடலினின்றும் எழுந்து கடனீரைச் சுவற்றி அண்ட கடாகத்தையும் எரித்து உயிர்த்தொகைகளை எல்லாஞ் சுட்டு வருத்த, வாலி அஞ்சி ஓடினான்; பிரம விஷ்ணுக்கள் உருக்குலைந்தார்கள். இறைவனை மறந்தமையால் எடுத்த காரியம் இடையூறுற்றதன்றித் தமக்கெல்லாம் இறுதியும் வரநின்றதென அஞ்சிக் கைலை புகுந்து நிகழ்ந்தவற்றை

விண்ணப்பித்து, 'இது பொழுது காத்திலையே லெமக்கிறுதியின்றேயாம், விதுமுடித்த பெருங்கருணை வெள்ளமே' என்றிரக்கப் பெருமான் இருந்த நிலையில் திருக்கரத்தை நீட்ட, அவ் விடந்திரண்டு அதனுள் அடங்க, அக்கணமே அதனை உண்டு கண்டத்தின் வைத்தார்.

[இது காஞ்சிப்புராணத் துளது].

59–ஆம் அதிகாரம்: ஒற்றாடல்.

வேதனில்லாள் வீந்ததிற மீனவற்கு நீதெரித்தாய்
சோதி பழியஞ்சுஞ் சோமேசா—பூதலத்தின்
எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். (நகூ)

அஃதாவது பகை நோதுமல் நட்பு என்னும் முத்திறத்தாரிடத்தும் நிகழ்ந்தன அறிதற்கு ஒற்றரை ஆளுதல்.

59. (இ-ள்) சோதி—சோமசூரியாக்கினிகளுடைய சோதிக்கெல்லாம் மூலமாகிய பரஞ்சோதியே, பழியஞ்சும—(பாண்டியற்கு வாநின்ற) பழிக்கு அஞ்சின, சோமேசா—! பூதலத்தின்—பூவுலகின்கண், எல்லார்க்கும்—எல்லார்சண்ணும், நிகழ்பவை எல்லாம்—நிகழ்வன எல்லாவற்றையும், எஞ்ஞான்றும்—நாடோறும், வல் அறிதல்—(ஒற்றரால்) விரைந்தறிதல், வேந்தன் தொழில்—அரசனுக்குரிய தொழில்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—வேதன்—ஓர் அந்தணனுடைய, இல்லாள் வீந்த திறம்—மனைவி இறந்த விதத்தை, மீனவற்கு—பாண்டியனுக்கு, நீ தெரித்தாய்—நீயே தெரிவித்தாய் (எ-று).

எல்லார்க்கும் என்றது முத்திறத்தாரையும்; எல்லார்கண்ணும் எனப் பொருள் படுதலின், இது வேற்றுமை மயக்கம். நிகழ்வனவெல்லாம் என்றது நல்லனவுந் தீயனவும் ஆகிய சொற்களை

புஞ் செயல்களையும், அவை நிகழ்ந்த பொழுதே அவற்றிற்குத் தக்கபடியாவது தெளிதலாவது செய்யவேண்டுதலின், 'வல்லறிதல்' என்றும், அவ்விரண்டு தொழிற்கும் அறிதல் காரணமாகலின் அதனையே உபசார வழக்கால் 'தொழில்' என்றுங் கூறினர். ஒற்றளபெடை என்பது அதிகாரத்தான் வந்தது. நீ என்புழிப் பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் றொக்கது.

கதை :—குலோத்துங்க பாண்டிய னென்பான் செங்கோல் செலுத்துநாள், ஓர் அந்தணன் தன் மனைவியோடும் கைக்குழந்தையோடுந் திருப்புத்தூரினின்றும் புறப்பட்டு மாமனூர் வீடுசெல்ல மதுரைக்கு வருகிற வழியில் தாகவிடாய்கொண்ட மனைவியைக் குழந்தையுடன் ஒரு பெரிய ஆலமரத்தினடியில் விட்டு நீர் கொணரச் சென்றான். அவ் வாலமரத்தில் நெடுங்காலமாய்ச் சிக்குண்டிருந்த ஓர் அம்பு காற்றாலலைப்புண்டு வீழ்ந்து அப் பார்ப்பனி வயிற்றின் வழியுருவிற்று; அவளும் உயிர் நீழந்தாள். அத் தருணத்தில் அம்பேறிட்ட வில் லேந்தியவனை வேட்டன் ஒருவன் வெயிற்கு ஒதுங்கி அவ் வாலடியில் நின்றான். நீர் கொணரச் சென்ற அந்தணன் நீரொடு திரும்பிவந்து, தன் மனைவி இறந்து கிடப்பதைக் கண்டான். இஃ தியாவர் செய்தாரென்று சுற்றிப் பார்த்தான்; வேடன் ஒருபுறம் நிற்கின்றான். அவனே செய்தானென்று துணிந்து அரசனையெதிர்கொண்டு அவன் தன்னுடன் வரும்படிசெய்து இறந்த மனைவியைத் தன் முதுகிலிட்டுக் குழந்தையை இடுக்கி மதுரை நோக்கி வழிநடந்து வந்து பாண்டியன் அரண்மனை வாயிலில் வேடனைவிட்டு மனைவியின் சவத்தை இட்டு, 'நீதி தவறுத மன்னவ! இது முறையோ!' என்று கதறினான். வாயில் காப்போர்

நிகழ்ந்தன யாவும் பாண்டியற்குத் தெரிவித்தார்கள். பாண்டியன் உடனே தன் அரியணையினின்றும் போந்து அந்தணன் நிலைகண்டு வருந்தி விசாரித்தான். அந்தணன் நிகழ்ந்தன கூறி அவ் வேடனே கொன்று னென்றான். அதன்பின் அரசன் வேடனது வாய்ப் பிறப்பைக் கேட்டான். அவன் தான் கொன்றதுமில்லை, கொன் றதைக் கண்டதுமில்லை என்றான். மேல் தான் இட்ட கட்டளைப்

படி அவ் வேடனைச் சிறையி லிட்டுத் தண்டலாளர்கள் பலவாறு கடுந்தண்டனை செய்தும் அவன் ஒரு சொல்லாகச் சொன்னமை யானும் கொன்ற குறிப்பு முகத்திற் றோன்றுமையானும் ஒன்றுங் தோன்றாது பாண்டியன் சுந்தரேசப்பெருமான் திருமுன் புகுந்து, 'மன்றாடு மணியே! ஒன்றாலும் என் ஐயம் தீர்தற் கிடனில்லை. நீரே என் தாழ்வு கெட நிகழ்ந்தவற்றைத் தெரிவிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தான். உடனே 'வணிகவீதியின்கண் ஒரு வீட் டில் மணம் நடக்கிறது. அந்தணனோடு நீ அங்கு வருவாய். உனது ஐயந் தெளியும்' என்று ஆகாயவாணி கூறக்கேட்டு அவ்வாறே அன்று இரவு அந்தணனோடு அவ் வீட்டில் ஒரு பக்கம் மறைந்திருந் தான். அன்று அம் மணமகன் ஆயுள் முடிய யமதூதர்கள் அவ னுடைய உயிரைக் கவர வந்தார்கள். பாண்டியனும் அந்தணனும் கேட்கும்படி வந்த தூதர்களி லொருவன் 'யாம் எவ்வாறு இம் மண மகன் உயிரைக் கொள்வது? அவன் உடம்பிற் பிணி யொன்று மில்லையே! காரணமின்றி உயிர் கொள்ளப்படாதே!' என்றான். அதற்கு மற்றவன், 'அன்று ஆலமரத்திற் சிக்குண்டிருந்த அம்பைக்

காற்றால் விழும்படிசெய்து எவ்வாறு பார்ப்பனியின் உயிரைக் கவர்ந்தோமோ அவ்வாறு ஒ ருபாயத்தால் இவன் உயிரையும் கவர வேண்டும். ஒன்று செய்க. வாத்திய முழக்கொலியால் இவ் வீன் றணிமையுடைய பசுவை வெருட்டித் தாம்பறுத்துவிட்டு இவனுயி ரைக் கவர்க' என்றான். பாண்டியன் அந்தணனை நோக்கி, 'கேட் டீரோ? மனந்தெளிந்ததோ?' என்றான். அதற்கு அந்தணன், 'நிற்க. இம் மணமகன் இவ்வாறு இறப்பனேல், என் மனைவி இறந் தது அவ்வாறெனக் கொள்வன்' என்றான். மணவினை தொடங்கி னர்கள்; பல வாத்தியங்களும் முழங்கின. அம் முழக்கொலியான் வெருண்டு கட்டிய தாம்பு அறுந்துபோக அப் பசுவானது ஓடிப் போய் மணமகனை முட்டியது; அவன் அக்கணமே உயிர் துறந் தான். ஐயம் நீங்கி யாவர்க்கும் இது கூறி மகிழ்ந்து அந்தணனுக்கு மறுமண முடிக்கப் பொருளுதவி விடைதந்து சிறையிலிருந்த வேடனுக்கு இடப்பட்ட விலங்கைக் கழற்றுவித்துத் 'தெளியாது

யாங் கடுந்தண்டஞ் செய்தோம். பொறுத்துக் கொள்க' என்று இரந்துவேண்டி அவனுக்கு வேண்டியன கொடுத்துவிட்டான் பாண்டியன். [இது திருவிளையாடற்புராணத் துளது].

60-ஆம் அதிகாரம்: ஊக்கமுடைமை.

வெங்கரியைப் பாகனைமுன் வீட்டினு ரேகாய்த்

துங்க வெறிபத்தர் சோமேசா—வங்கம்
பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (கூ0)

அஃதாவது. மனம் மெலிதலின்றித் தொழில் செய்தலிற் கிளர்ச்சி யுடைத்தாதல்.

60. (இ-ள்) சோமேசா—! அங்கம் பரியது—எல்லாவிலங்கினும் தான் பேருடம்பினது, கூர்மை கோட்டது—(அதுவேயுமன்றிக்) கூரிய கொம்பையும் உடையது, ஆயினும்—ஆனாலும், யானை புலி தாக்குறின் வெரூஉம்—யானையானது (தன்னைப்) புலி எதிர்ப்படின் (அதற்கு) அஞ்சும்,—(அதற்கொப்ப,)— துங்கம் எறிபத்தர் — உயர்ச்சியுடைய எறிபத்த நாயனார், ஏகாய்—தமியராய் இருந்துவைத்தும், வெம் கரியை (உம்)—கொடிய யானையையும், பாகரையும், —யானைப் பாகரையும், வீட்டினர்—கொன்றார் (எ-று).

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்பும் உடைத்தாயினும், யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கு அஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்பும் உடையராயினும் ஊக்கமிலராயின் அஃதுடையார்க்கு அஞ்சுவரென்பது தோன்ற நின்றமையின் பிறிதுமொழிதலணி. ஒட்டணி, நுவலாநுவற்சியணி என்பதும் அது. கரியை என்பதனோடும் உம்மையைக் கூட்டுக. ஏகாய் என்புழி இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

கதை :—எறிபத்த நாயனார் என்பார் கருவூரில் திருவானிலை என்னும் திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் பசுபதீச்சுரன் பாத தாமரைகளையே பற்றுகக்கொண்டு அவனடியார்க்குத் தீங்கு செய்பவுங் கொடியரைக் கொன்றொழிக்க மழுப்படை ஏந்தி வாழ்கையில் ஒருநாள் சிவகாமியாண்டார் என்னும் அந்தணர் ஆனிலையடிகட்குத் திருப்பள்ளித்தாமங் கட்டிச் சாத்தத் திருப்பூக்கூடை நிறையக் கொண்டு வந்த பூக்களைப் புகழ்ச்சோழனது பட்டவர்த்தனயானை சிந்த அதனால் அவர் மிக வருந்துவது கண்டு யானை சென்ற வழி கேட்டறிந்து ஓடிப்போய்த் தமது மழுப்படையால் யானையின் நுதிக்கையை வெட்டி வீழ்த்திப் பாய்ந்துவந்து எதிர்த்த பாகரையுங் கொன்று நின்றார். இச் செய்தி அறிந்த சோழன் அங்கு வந்து தன் யானையையும் பாகரையுங் கொன்றார் ஒரு சிவனடியா ரென்ப துணர்ந்து தானொருவனே அருகின் வந்து 'யானை செய்த கொடுமை யாதோ?' என வினவ, நாயனார் நிகழ்ந்தபடி கூறக் கேட்டு மனம் புழுங்கி 'எனது யானை செய்த கொடுமைக்கு அதையும் பாகரையும் கொன்றமை போதாது; என்னையுங் கொல்லுக' என்று தன் வாளை நீட்டினன். 'இவன் அன்பிருந்தவா றென்னே! இவனையோ யான் கொல்வது!' என்று நினைந்து அவ் வாளை வாங்கி நாயனார் தமது கழுத்திற் பூட்ட அரசன் அவர் காத்தையும் வாளையும் பிடித்துக்கொண்டு தடுத்தான். அப்போது, 'அன்பர்களே! உங்கள் பெருமையை உலகிற்கு அறிவிக்கவேண்டிச் சிவபெருமான் அப் பூக்களை யானை சிதறும்படி திருவுளம் பற்றினர்' என்றோர் அசரீரி எழுந்தது; உடனே யானையும் பாகரும் உயிர்பெற்றெழுந்தார்கள்; திருப்பூக்கூடையிற் பூக்கள் நிரம்பின. சிவகாமியாண்டார் மகிழ்ந்து தமது திருப்பணிமேற்

சென்றார். சோழன் நாயனாரை அப் பட்டவர்த்தன யானைமீதேற்றி அரண்மனை கொண்டு சென்று உபசரித்தான். மேலும் நாயனார் தமது திருத்தொண்டு வழாது நடத்திக் கைலையிற் சிவகணங்களுக்குத் தலைவராயினார். [இது திருத்தொண்டர்புராணத் துளது].

61-ஆம் அதிகாரம்: மடியின்மை.

பொன்மலையின் வேங்கை பொறித்துமீண் டான்சென்னி
தொன்மைவலி யாண்மையினாற் சோமேசா—பன்னின்
மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு (௬௧)

அஃதாவது கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை.

61. (இ-ள்) சோமேசா—! பன்னின்—ஆராயின், அடி அளந்தான் தாஅயது எல்லாம்—தன் அடியளவானே எல்லாவுலகையும் அளந்த திருமால் தாவிய பரப்பு முழுவதையும், மடியிலா மன்னவன் ஒருங்கு எய்தும்—சோம்புதலில்லாத அரசன் (முறையானன்றி) ஒருங்கே எய்தும், (அதற்கு எடுத்துக்காட்டு) - சென்னி—(கரிகாற்) சோழன், தொன்மைவலி ஆண்மையினால்—பழைமையான வலியையாளுந் தன்மையான், பொன் மலையின்—இமயமலையினிடத்தே, வேங்கை—(தன் கொடியின்கணுள்ள) புலியை, பொறித்து—எழுதி, மீண்டான்—திரும்பினான் (எ-று).

அடியளந்தான் என்பது சொல்லாற்றலாற் பொருளுணர்த்தாது வாளா திருமாலின் பெயராய் நின்றது. எப்பொழுதுந் தொழிலின்கண்ணே முயற்சி செய்தலின் ஒருசேர எய்தும் என்பதாம். பொன்மலை என்றது வண்டு இமயத்தை. இமயம் பொன்மலை யாதலை, 'புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான், வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள், உள்ளி யுள்ளவெ லாமுவந் தீயுமவ், வள்ளி யோரின் வழங்கின வானமே' என்னுங் கம்பராமாயணச் செய்யுளானும், 'பொன்னின் வெண்டிரு நீறு பூணந்தெனப், பன்னு நீள்பனி மால்வரைப் பாலது, தன்னை யார்க்கு மறிவரியா னென்று, மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை' என்னுந் திருத்தொண்டர் புராணச் செய்யுளானு மறிக. புள்ளி மால்வரை— இமயமலை, ['மற்றும் இமயமலையின்பெயர்—மேருவும் புள்ளியும் விளம்புவ ரதற்கே' பிங்கல நிகண்டு].

106 சோமேசர் முதுமொழி வெண்பா

கதை:—காவிரிப்பூம்பட்டினத்தை யாண்ட கரிகாற் பெருவளத்தான் என்னுஞ் சோழன் தென்றேசத்திலுள்ள நாடுகளை வென்று வடதேசம் புக்கு அங்குள்ள அரசர்களையும் புறங்கண்டு இமயமலை வரையுந் தன் ஆணை செல்வதற்கு அறிகுறியாகத் தனது அடையாளமாகிய புலியை அம்மலைக்கண் எழுதித் திரும்பினன்.

62–ஆம் அதிகாரம் : ஆள்வினையுடைமை.

கூற்றுவர்மூ வேந்தர் நிலமுங்கைக் கொண்டாரே
தோற்றுந்தா ளாண்மையினுற் சோமேசா—சாற்று
முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். (சுஉ)

அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சியுடையனுதல். அம் மெய்ம்முயற்சியாகிய காரணம் ஆளும் வினையென அதன் காரியத்தாற் கூறப்பட்டது.

62. (இ-ள்) சோமேசா—! சாற்றும் முயற்சி—(வினையை ஆளுதற்கு இன்றியமையாததென்று அறிந்தோர்) சொல்லும் முயற்சி, திருவினை ஆக்கும்—செல்வத்தினை வளர்க்கும், முயற்று இன்மை—அம்முயற்சி இல்லாமை, இன்மை புகுத்திவிடும்—வறுமையை அடைவித்து விடும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—கூற்றுவர்—கூற்றுவ நாயனுரென்பார், தோற்றும்தாள் ஆண்மையினுல்—(வினை செய்தலிற்) பிறந்த ஆண்மையினுல், மூவேந்தர் நிலமும்—சேரசோழபாண்டியராகிய மூவாசாது நாட்டையும், கைக் கொண்டார்—கைப்பற்றினர் (எ-று).

செல்வம் அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் அறுவகை அங்கங்கள். வறுமை அவ்வங்கங்களின் வறியாதல். அவ் வறுமையை அடைவிக்கவே பகைவரான் அழிவென்பது கருத்து. நிலமும் என்புழி உம்மை முற்றும்மை.

கதை:—திருக்களந்தை என்னும் பதியில் இடைவிடாத பஞ் சாக்ஷர செபம், சிவபத்தி, சிவனடியார் பத்திகளும் உடையராய்ச் சிவபெருமான் பெருங்கருணையால் சேனபலம் மிகுந்து சேர சோழ பாண்டியர்களை வென்று அவர்கள் நாடுகளைக் கைக்கொண்டு திரு முடியொன்றொழிய மற்றைய மன்னர் திருவெல்லாம் பெற்றார். அவர் தமக்குத் திருமுடி சூட்டும்படி தில்லைவாழந்தணர்களை வேண்ட, அவர்கள் சோழர்கட் கன்றிப் பிறர்க்கு நாங்கள் முடிசூட் டோமென்ன, அதனால் வருத்தமடைந்து சிவபெருமானை வேண்டி அவர் திருவடிகளை முடியிற் சூட்டப்பெற்று அவற்றையே திருமுடி யாகத் தாங்கி உலகம் புரந்து சிவனடி நீழலடைந்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

63-ஆம் அதிகாரம் : இடுக்கணழியாமை.

என்றுமொரு மீனேவந் தின்மைமிக வுந்தளரார்
துன்றே ரதிபத்தர் சோமேசா—மன்று
அடுக்கி வரினு மழிவிலா வுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். (சுரு).

அஃதாவது தொழிலின்கண் முயல்வான் தெய்வத்தாலுவது, பொருளின்மையாலுவது மெய்வருத்தத்தாலுவது தனக்குத் துன் பம் வந்தழி, அதற்கு மனங் கலங்காமை.

63. (இ-ள்) சோமேசா—! மன்ற அடுக்கிவரினும்—மேன்மேல் மிகவந்தனவாயினும்—அழிவிலான் உற்ற இடுக்கண்—தன் உள்ளக்கோட்பாடு விடாதான் அடைந்த துன்பங்கள், இடுக்கண்படும்—துன்பத்திற் பட்டுப்போம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—எர் துன்று அதிபத்தர்—அழகு மிக்க அதிபத்தநாயனார் என்பார், என்றும் ஒரு மீனே வந்து-எந் நாளினும் ஒரு மீனே வலையினகப்பட்டு, (அதனால்) இன்மை மிகவும்—வறுமை வளர்ந்தும், தளாார்

—(தமது உள்ளக்கோட்பாடு விட்டுச்) சோராதா ராயினர் (எ-று).

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன கலந்து வருதலும் அடங்க 'அடுக்கிவரினும்' என்றார். அழிவென்னுங் காரணப்பெயர் அதன் காரியமாகிய உள்ளக் கோட்பாடு விடுதற்கு ஆயிற்று. என்றும்—உம்மை முற்றும்மை. ஒரு மீனே—ஏகாரம் பிரிநிலை. மிகவும்—இது சிறப்பும்மை. 'துன்று எர்' என்பது வடநூன் முடிபு. எர்' என்றது அன்பின் அழகினை.

கதை:—சோழநாட்டில் காவிரிப்பட்டினத்தில் நுளைப் பாடியில் பரதவர் குலத்துதித்த அதிபத்த நாயனார் நாடோறும் முதன் முதல் வலையிலகப்படு மீனை அரனுக்கென விடுவதே கோட்பாடாகக் கொண்டொழுகு நாள், நாடோறும் ஒரு மீனே அகப்பட அதனை

வழக்கப்படி விட்டுவந்தமையால் நாளடைவில் வறுமையடைந்து பசியான் மெலிந்தார். ஒருநாள் முதல் மீனை வழக்கப்படி விட்டு இரண்டாமுறை வலை வீச ஈவரத்நங்க ளிழைக்கப்பெற்றதொரு பொன்மீன் அதிற்பட, அதன் அழகைக் கண்டு அதையும் பெருமானுக்கே யெனக் கடலில் விட்டார். அப்போதே பெருமான் பார்வதி சமேதராய்க் காட்சிதந்து சாலோக பதவி அருளினார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

64-ஆம் அதிகாரம் : அமைச்சு.

கால்சேய் கதிர்சேயைக் காத்தரச னட்புதவித்
தூலமுடி சூட்டுவித்தான் சோமேசா—சாலப்
பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. (சூசு)

அஃதாவது அமைச்சனது குணங்களும் செயல்களும்.

64. (இ-ள்) சோமேசா—! சால பிரித்தலும் – (பகை வர்க்குத் துணையாயினாரை அவரை விட்டுப் பிரிக்க வேண்டி

னால்) மிகப் பிரித்தலும், பேணிக் கொளலும்—(தம் பக்கத்தாரை அவர் பிரியாமற் கொடையினாலும் இன் சொல்லினாலும்) காத்துக்கொள்ளுதலும், பிரிந்தார் பொருத்தலும்—(முன்னே தம்மையேனும் தம் பக்கத்தாரையேனும் விட்டுப்) பிரிந்தாரை (மறுபடி பொருத்த வேண்டினால்)

பொருத்தலும், வல்லது அமைச்சு—வல்லவனே அமைச்சனுவான்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—கால்சேய்—வாயுபுத்திரனனை ஆஞ்சநேயன், கதிர் சேயை—சூரிய குமாரனை சுக்கிரீவனை, காத்து—பாதுகாத்து, அரசன் நட்பு உதவி—இராமபிரானது நேசத்தைச் செய்வித்து, தூல முடி சூட்டுவித்தான் —பெரிய கிரீடத்தைத் தரிப்பித்தான் (எ-று).

பிரித்தல், பேணிக்கொளல், பொருத்தல் ஆகிய மூன்றனுள் அப்பொழுதை நிலைக்கேற்ற செயல் அறிதலும் அதனை அவர் அறியாமல் ஏற்ற உபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாதல் நோக்கி 'வல்லது' என்றார். வடநூலார் பொருத்தலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகமென்றுங் கூறுப. சேய்—செம்மை என்னும் பண்படியாகப் பிறந்த பெயர். கதிர்—ஆகு பெயர். தூலம்—ஸ்தூலம்.

கதை:—வாலி என்னும் வானரத்தலைவன் மாயாவி என்பானெடு நெடுங்காலம் போர்புரிந்து, போர்க்காற்றது மாயாவி ஒரு பிலம் புக்கது கண்டு அவனைத் தொடர்ந்து செல்லவேண்டித் தன் தம்பியாகிய சுக்கிரீவனை அப் பிலவாயிலிற் காவலாக நிறுத்திச் தானும் உட்புகுந்து ஓராண்டிற்கு மேல் ஆகியும் திரும்பி வாராமையால் சுக்ரீவன் அவன் மாண்டா னென்று புலம்பி அப் பிலத்துவாரத்தை ஒரு பெரிய கல்லான் மூடிவிட்டுக் கிஷ்கிந்தை புகுந்தான். வானரப் பெரியோர் யாவரும் கூடி அவனைப் பலவாறு தேற்றி அவன் மறுத்தும் அவனுக்கு முடி சூட்டினர். சிறிதுகாலங் கழித்து மாயாவியைக் கொன்று திரும்பின வாலி பிலவாயில் மூடுண்டிருந்

தல் கண்டு வெகுண்டு மூடிய கல்லைக் காலால் உதைத்துத் தள்ளிக் கிஷ்கிந்தைசென்று தன் தம்பி அரசாளுதலைக் கண்டு அடங்காச் சினத்தனாய் அவனைக்கொல்ல ஓடினான். அது கண்டு சுக்கிரீவன் எங்கெங்கும் ஓடியும் வாலி விடாது பின்தொடர உய்யும் வகை காணாது மயங்கிப் பின் மதங்கமுனிவர் சாபத்தால் வாலி வரலாகாத ரிசியமூக பருவதத்தில் தங்கினான். ஆஞ்சநேயரும் அவனுடன் இருந்து அவனைப் பாதுகாத்து அங்கு வைகினார். அங்ஙனம் வைகுழி, இராம லக்ஷ்மணர் ஆங்கு வாக்கண்ட வானரங்கள் அஞ்சி ஓடத் தாம் நிதானித்து நின்று அவர்கள் மன நிலையை யூகித்து உணர்ந்து அவர்களைக் கிட்டி அவர்களொடு சொல்லாடிப் பின் சுக்கிரீவனுக்கும் இராமனுக்கும் நட்புச் செய்வித்தார். இவ்விருவரும் நட்புக்கொண்டபின் இராமன் வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்கு முடி சூட்டினான். 'உயிரொடுயிர் சேர வுடம்படுமெய் தோன்று, மியலி னதுமானள் ளிருந்தே—செயிர்தீர், நரபதியோ டவ்வா னர பதியை யேழ்நா, வரனறிய நட்பித்தான் வாய்ந்து' என விருத்தல் காண்க.

[இஃது இராமாயணத் துளது].

65-ஆம் அதிகாரம்: சொல்வன்மை.

நித்தியத்து வங்கேட்பா னித்திரையென் றேமயக்கத்
துய்த்தனனுங் கும்பகன்னன் சோயேசா—எந்நிறத்தும்
ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. (சுரு)

அஃதாவது தான் கருதிய வினை முடியும் வகையால் அமைச்சி பல் நடத்தற் கேதுவாகிய சொற்களைச் சொல்ல வல்லனுதல்.

65. (இ-ள்) சோமேசா—! ஆக்கமும் கேடும்—ஆதலும் அழிதலும், அதனுல் எந்நிறத்தும் வருதலான்—தஞ் சொல்லான் எவ்வழியானும் வருமாகலான், சொல்லின் கண் சோர்வு (அத்தன்மைத்தான) சொல்லின்கட்

சோர்தலே, காத்து ஓம்பல்—(அமைச்சர் தங்கண் நிகழா மற்) போற்றிக் காக்க,—(அதற்கு எடுத்துக்காட்டு)—கும்பகன்னன்—கும்பகன்னன் என்னும் அரக்கன், நித்தியத்துவம் கேட்பான்—நித்தியத்துவம் கேட்க (வந்து), (சொற் சோர்வான்) நித்திரை என்று—நித்திரைத்துவம் என்று கேட்டு, மயக்கம் துய்த்தனன்—(நித்திரை) மயக்கத்தை அனுபவித்தான் (என்று).

ஆக்கத்திற் கேதுவாகிய ஈற் சொல்லையும் அழிவினுக் கேதுவாகிய நீச் சொல்லையும் சொல் ஆகின்ற ஒப்புமைபற்றி 'அதனுல்' என்றார். செய்யுளாகலின் கூட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வுபோலன்றி உயிர்கட்கெல்லாம் ஒருங்கு வருதலால் 'காத்

தோம்பல்' என்றார். நித்தியத்துவம் — அழியாமை.

கதை:—கும்பகர்ணன் நித்தியத்துவத்தை விரும்பிப் பிரமனை நோக்கித் தவம்புரிய அது கண்ட தேவர்கள் அஞ்சிப் பிரமனை யடைந்து முறையிட அவற்கு நித்தியத்துவம் அருளிற் கெடுதி யுண்டாமென்று கலைமகளை நோக்கி அவன் நாவினின்று 'நித்தி ரத்துவம்' கேட்கும்படி செய்ய எவிக் காட்சி தந்து அவன் முன் நிற்ப, கலைமகள் விரகினை 'நித்தியத்துவம்' என்பதொழிந்து 'நித்திரத்துவம் வேண்டும்' என்று வாய் கேட்க, 'அஃதாகுக' என்று பிரமன் மறைந்தனன். அன்று தொட்டு அவன் நித்திரை மயங்கிக் கொண்டான்.

'இந்தப் படிக்கு நாமகளை யுன்னைவித் தடவி யிருந்தவுஞ்செய்
அந்தக் கும்ப கன்னனிடை யமரர் சூழ வயன்வந்து

சிந்தைக் கினிய வரந்தருவென் செப்பென் றுரைப்ப நாமகளு
'வந்தத் துயில்வேண் டுவனென்ன வற்று வென்றுங்
கயலுரைத்தான்.'

[இஃது இராமாயணத் திரிசிரகாண்டத் துளது].

---

112. சோமேசர் முதுமொழி வெண்பா

66-ஆம் அதிகாரம்: வினைத்தூய்மை.

தக்கனுனை யெள்ளிமகஞ் சாடும்போ தெண்ணி
[யெண்ணித்
துக்கமுற்று னுவதென்னே சோமேசா—எக்காலும்
எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. (சுசு)

அஃதாவது செய்யப்படும் வினைகள் பொருளே யன்றித் அறமும் புகழுந் தந்து நல்ன ஆதல்.

66. (இ-ள்) சோமேசா—! எற்று என்று இரங்குவ-யான் செய்தது எத்தன்மைத்து என்று (பின்தானே) இரங்கும் வினைகளை, எக்காலும்—ஒருகாலும், செய்யற்க—செய்யா தொழிக, செய்வானேல்—ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யுந் தன்மையனுயின், மற்று அன்ன—பின் இருந்து அவ் விரங்கல்களை, செய்யாமை நன்று—செய்யா தொழிதல் நன்று,—(அதற்கு எடுத்துக்காட்டு) —தக்கன்—தசனுன், உனை எள்ளி—உன்னை இகழ்ந்து, மகம் சாடும்போது-(அவன்) யாகத்தை அழிக்கும்போது, எண்ணி எண்ணி-நினைத்து நினைத்து, துக்கமுற்றன்-துன்பமடைந்தான், ஆவது என்-(அவ்வாறு துன்பமடைந்ததனுல்) வரக்கடவதாகிய பயன் என்ன, ஒன்றுமில்லை (எ-று).

'இரங்குவ' என முன் வந்தமையாற் பின் 'அன்ன' எனச் சுட்டி யொழிந்தார். அவ் வினைகளது பன்மையான் இரக்கமும் பல வாயின. அச் செயற்குப் பின்னிருந்து இரங்குவனுயின்; அது திரும் வழி அறிந்திலன் எனவும், உறுதி இலன் எனவும், பயனில்லாதன செய்கின்றன் எனவும், தன் பழியைத் தானே தூற்றுகின்றன்

எனவும் எல்லாரும் இகழ்தலிற் பின்னிரங்காமை நன்று என்றார். 'எண்ணி எண்ணி' என்ற அடுக்கு இடை விடாமை மேலது. எ—இரக்கக் குறிப்பு.

கதை:—மே லுரைத்தாம் (4-வது பாட்டுரை காண்க).

சோமேசர் முதுமொழி வெண்பா 113

67—ஆம் அதிகாரம்: வினைத்திட்பம்.

செவ்வேலைப் பாலனென வெள்ளித் திறலழித்தான்
றுவ்வாத வெஞ்சூரன் சோமேசா—வ்வா
றுருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து. (கூ எ)

அஃதாவது அத் நாயவினை முடிப்பானுக்கு வேண்டுவதாகிய மனவலிமை.

67. (இ—ள்) சோமேசா—! துவ்வாத வெம் சூரன்—தாய்மை யுறுத கொடிய சூரபன்மன், செவ்வேலை—கந்த வேளை, பாலன் என எள்ளி—பிள்ளையென இகழ்ந்து, திறல் அழிந்தான்—வலியழிந்தான், உருள் பெருந்தேர்க்கு—உருளாநின்ற பெரிய தேர்க்கு, அச்சாணி அன்னர்—அச்சின்கண் ஆணிபோல வினையில் வலியாரை, உடைத்து—உடைத்து (உலகம்), (அதனால்) அவ்வாறு—அவன் செய்த படி, உருவு கண்டு எள்ளாமை வேண்டும்—அவரை வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலை ஒழிக (எ—று).

செவ்வேள்—முருகவேள், கண்டுச் செம்மை என்னும் அடை மொழி மதவேளாகிய மன்மதன் இயைபு நீக்குதலின், பிறிதினியையபு நீக்கிய அடைமொழி என்க. இதனை வடநூலார் அந்நிய யோகவியவச்சேதம் என்ப. 'என்னானை வேண்டும்' என்பதனாலும் உவமையானும் உருவின் சிறுமை பெற்றும். அச்சு—உருள் கோத்த மரம். ஆணி-உருள் கழலாது அதன் கடையிற் செருகுவது. அது வடிவாற் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைத்தாங்கொண்டு செலுத்தும் வலிமையுடைத்து. அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரிய வினைகளைக் கொண்டு செலுத்தும் வலிமையுடைய அமைச்சரு முண்டு; அவரை அவ் வலிமை நோக்கி அறிந்து கொள்க என்பதாம்.

அறுமுகப் பெருமானை முன்னர்ப் பாலனென இகழ்ந்த

மையும் அப் பெருமான் தனது பழைய பேருருக் காட்டக் கண்டபின்னர் அவனைப் புகழ்ந்தமையுங் கீழ்வரும் பாட்டுக்களாற் சாண்க :—

'கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமான் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றே'

'சேர்க்கும சேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னி
லேர்க்குற மொளியுஞ் சீரு மிளமையு மெழிலு மெல்லா
மார்க்குள வுலகி லம்மா வற்புதத் தோடும் பால்காற்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை யின்னுமென் பார்வை தானும்

'ஆயிர கோடி காம ரழகெலாந் திரண்டொன் றுகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னிற்
றூயநல் லெழிலுக் காற்று தென்றிடி னினைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார்.'

கதை :—[மேல் உரைத்தாம்] 26-வது பாட்டுரை காண்க.

69-ஆம் அதிகாரம் : வினைசெயல் வகை.

வெள்ளிவெற்பை யெண்ணு தெடுப்பனென வீறெய்தித்
துள்ளியழிந் தானரக்கன் சோமேசா—மெள்ள
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (சுஅ)

அஃதாவது அவ் வலிமையுடைய அமைச்சன் ஏவ் வினையைச் செய்யுந் திறம்.

68. (இ-ள்) சோமேசா—! அரக்கன்—இராவணன், எண்ணுது—ஆராயாது, வெள்ளி வெற்பை—வெள்ளி மலையாகிய கைலையை, எடுப்பன் என வீறு எய்தி—எடுப்பனென்ற இறுமாப்படைந்து, துள்ளி அழிந்தான்—கூத்தாடி மாண்டான்,—(அதனால்)—முடிவும்—(வினை செய்யுங்கால்) அது முடிதற் குளதா முயற்சியும், இடையூறும்—(அதற்கு வரும்) இடையூறும், முற்றியாங்கு எய்தும் படு

பயனும்—(அது நீங்கி) முடிந்தால் தான் எய்தும் பெரும் பயனும், மெள்ள பார்த்து செயல்—விரையாது சீர்தூக்கிச் செய்க (எ-று).

- முடிவு—ஆகுபெயர். முயற்சி இடையூறுகளின் அளவிற் பயனீது அளவு பெரிதாயிற் செய்க என்பதாம்.

கதை :—ஒருகால் இராவணன் புட்பக விமானம் ஏறி வானுறு செல்லுங்கால், கைலைமலை இடைப்பட அதன்மீது செல்ல முயன்றான். அது கண்டு நந்திதேவர் அவனை நோக்கி, 'அடா! எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் மலைமீது செல்லுதல் அடாது' எனத் தடுக்க அவன் அவரை இகழ்ந்துரையாடி 'யான் ஒருகாலும் இறங்கிச் செல்லேன். இக் கைலைமலையைத் தூக்கி வீசி யான் செல்லாற்றிற் செல்வேன்' என இறுமாந்து கூறி அம் மலையை எடுக்க முயன்று அதனை ஒரு சிறிது அசைத்தான். பெருமான் தனது கால் விரலா லூன்ற அம் மலைக்கீழ் அகப்பட்டு உய்யுமா றின்றி வருந்துகையில், அதனை வலம்வந்த வாகீச முனிவர் அவன் படுந் துயரங் கண்டு பொறாது அவற்கு உய்யுமாறு குறிப்பின் உணர்த்த வேண்டிச் 'சங்கரா! சாமவேதப்ரியா!' என்று சொல்லிக்கொண்டு வலம்வந்தார். அவன் அக் குறிப்புணர்ந்து சாமவேத கானஞ் செய்து பெருமான் திருவருள்பெற் றுய்ந்தான்.

'வந்தோ ராரக்கனோர் வண்கைலை மால்வரையைத்
தந்தோள் வலியினையே தாங்கருதி—யந்தோ
விடந்தா னிடந்திட் டிடாற்கீ ழெலிபோற்
கிடந்தார் வலியெலாங் கெட்டு' என்னும் நக்கீரனார் வாக்கு நோக்குக.

[இது கூர்மபுராணத் துளது].

69-அம் அதிகாரம் : தூது.

தன்றுயர நோக்கான் றனைவிடுத்தோர்க் கேயுறுதி
துன்றமொழிக் தானிடதன் சோமேசா—என்றும்
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. (சுசு)

அஃதாவது பொருத்தல் பிரித்தல்களைச் செய்தற்கு வேற்றாசரிடஞ் செல்வாரது தன்மை. தான் வருத்துக் கூறுவான், கூறியது கூறுவானெனத் தூது இருவகைப்படும். அவருள் முன்னேன் அமைச்சனே டொப்பானுகலானும் பின்னேன் அவனிற் காற்கூறு குணங் குறைந்தோனுகலானும் இஃது அமைச்சிய லாயிற்றென்க.

69. (இ-ள்) சோமேசா—! என்றும்—எக்காலத்தும், இறுதி பயப்பினும்—(அவ்வார்த்தை தன் உயிர்க்கு) முடிவைத் தருமாயினும், எஞ்சாது—(அதற்கு) அஞ்சி ஒழியாது, இறைவற்கு உறுதி—(தன் அரசன் சொல்லிய வாறே) அவனுக்கு மிகுதியை, பயப்பது—(வேற்றாசரிடத்துச்) சொல்லுவானே, தூதாம்—தூதனுவான்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—நிடதன்—நிடததேசாதிபதியாகிய நளன், தன் துயரம் நோக்கான்—தனக்கு உளதா

யிருக்குந் துன்பத்தைக் கருதாது, தனை விடுத்தோர்க்கு—தன்னைத் (தூதாக) விட்டவர்களுக்கு, உறுதி துன்ற ஏ மொழிந்தான்—மிகுதி சேரவே சொல்லினன் (எ-று).

இறுதிபயப்பினும் என்றதனால், ஏனைய பயத்தல் சொல்ல வேண்டா வாயிற்று. நோக்கான்–முற்றெச்சம். எகாரம்—தேற்றம்.

கதை:—நிடத தேசாதிபதியாகிய நளன் விதர்ப்ப தேசத் தாசனாகிய வீமன் தமன முனிவர் அனுக்கிரகத்தாற் பெற்ற தமயந்தியின் அழகு, குணமுதலியன கேட்டு அவள் மாட்டுக் காதல் கொண்டான். அவளும் அவனுடைய அழகு, ஆண்மை, முதலியன பலர் கூறப் பன்முறை கேட்டு அவன் மீது காதல்

வைத்தாள். அங்ஙனமாக, ஒருநாள் தனது உத்தியானவனஞ் சென்றிருக்கையில் ஒரு தடாகத்தில் ஒரு பொன் அன்னத்தைக் கண்டு அதைப் பிடித்தான். அவ் வன்னம் கலங்கி அரசனை நோக்கி "என்னை விடுக. யான் உமக்கு ஒரு நன்மை செய்வன்" என்றது. உடனே நளன் அவ் வன்னத்தைத் தமயந்திபாற் றூது விட்டான். அது விதர்ப்பதேசம் புகுந்து தமயந்தியைச் சோலையிற் கண்டு நளன் வடிவழகு முதலியவற்றைக் கூறிற்று. அவற்றைக் கேட்ட தமயந்தி முகத்தில் வியர்வை அரும்ப அரண்மனை சென்றாள். வீமன் அது கண்டு மணமுடிப்பது தகுதியென் றெண்ணி அரசர் களுக்குச் சுயம்வர வோலை தீட்டி விட்டான். அத் தறுவாயில்

நாரத முனிவர் தேவலோகஞ் சென்று இந்திரனுக்குத் தமயந்தியின் அழகு முதலியவற்றைப் பற்றியும் நடக்க நின்ற அவள் சுயம்வரத் தைப் பற்றியுங் கூறவே, இந்திரன் அவளை மணக்க ஆசைப்பட்டு இயமன், அக்நி, வருணன் இவர்களை உடன் அழைத்துக் கொண்டு விதர்ப்பதேசம் புக்கான். சுயம்வர வோலை பெற்ற நளனும் அங்கு வந்தான். இந்திரன் நளன் அழகைக்கண்டு இவனே அத் தமயந் திக்கு ஏற்ற வரனெகலின் அவள் ஒருபோதும் தனக்கு மாலை சூட்டா ளென்றறிந்து அந் நளனையே தனக்குத் தூதாகச் செல்லுமாறு வேண்டினன். நளனும் அதற்கு இசைந்து அவன் கூறிய மந்திரத் தால் வாயில் காப்போர் முதலியவர்கள் தனது உருவத்தைக் காணுமல் தமயந்தி கன்னிகாமாடத்தினுள் நுழைந்து இந்திரன் மேன்மையையும் அவன் காமபாணத்தால் வருந்துகின்றமையை யுங் கூறி அவனுக்கு வாழ்க்கைப் படுதலே முறையென்றான். அவள் 'அஃது ஒரு காலத்தும் நடவாது. நளனுக்கே மாலை சூட்டுவேன். இன்றெனின், உயிரிழப்பேன்' என்றாள். அது கேட்டுத் திரும்பி வந்து நிகழ்ந்தவற்றைக் கூறினன் நளன். அதன்மேல் இந்திரன் முதலிய நால்வரும் நளன்போல வடிவங்கொண்டு சுயம்வர மண்ட பம் வந்தார்கள்; நளனும் அங்கு வந்தான்; எனை அரசர்களும் வருந்தினர்கள். தமயந்திக்குக் கலைமகள் தோழியாக நின்று ஒவ்வோ ரரசனையுங் காட்டி அவனவன் ஆண்மை முதலியவற்றைக்

கூறி வருமளவில், நளனை வடிவங்கொண்டிருந்த இந்திரன், இய மன், அக்நி, வருணன் இவர்களைக் காட்டுகையில் இந்திரன் முத லியவர்களுக்கும் நளனுக்கும் பொருள்படும்படி சிலேடையாகக் கூறினாள். இவ்வாறு தோழி சிலேடைப் பொருள்படக் கூறிய

தானும், நளன் மாலையில் வண்டு வீழ்ந்து பண் பாடியதானும் உண்மை நளன் இன்னனென் றறிந்து தமயந்தி அவனுக்கே மாலை யிட்டாள்.

'இன்னணந் தேவர் மாழாந் திருநில வரைப்பிற் போந்துன், பொன்னவிர் திதலை யார்ந்த புணர்முலைப் போகம் வேட்ப, முன்ன மெத் தவஞ்செய் தாய்கொ லியைவதே முறைமை யென்றுன், கன்னல்வில் லொளித்து நின்ற காமனே யனைய நீரான்'

என்னும் நைடதப் பாட்டை நோக்குக.

[இது நைடதத் துளது].

70–ம் அதிகாரம் : மன்னரைச் சேர்ந்தொழுகல்.

மாமனு னென்னு மதத்தா னுனையிகழ்ந்து
தோழுற்றூர் தக்கனூர் சோமேசா—வாமே
பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். (எ0)

அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி நடக்குமாறு.

70. (இ–ள்) சோமேசா—! பழையம் என கருதி—அரசனுக்கு யாம் பழையமென நினைத்து, 'பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை—தமக்கு இயல்பல்லாதனவற்றைச் செய்யும் உரிமை, ஆமே—ஆகுமோ—ஆகாது, கேடு

தரும்—(அமைச்சர்க்குக்) கேட்டினைத் தரும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—தக்கனர்—தகவுஞன் என்பான், மாமன் நான் என்னும் மதத்தால்—(அரசனுக்கு) மாமன் நான் என்

கிற செருக்கினால், உனை இகழ்ந்து—உன்னை இழித்துப் பேசி, தோம் உற்றார்-குற்றத்தைப் பொருந்தினான் (எ-று).

அவன் பொறுது வருத்தும்போது அப் பழமை நோக்கித் தாகுதிண்ணயங் காட்டாது உயிரை வெளவுதலான், அவன் வேண்டாதன செய்தற் கேதுவாகிய கெழுதகைமை 'கேடு தரும்' என்றார். ஏ—எகாரம் மறைவினு.

கதை:—(மேலே உரைத்தாம்) 4—வது பாட்டுரை காண்க.

71-ஆம் அதிகாரம் : குறிப்பறிதல்.

அப்பூதி யார்மறைத்தும் வாகீச நக்கரவைத்
துப்பா னறிந்தனரே சோமேசா—இப்புவியில்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். (எக)

அஃதாவது ஒருவர் கருதிய அதனை அவர் கூறாமல் அறிதல்.

71. (இ-ள்) சோமேசா—! அப்பூதியார்—அப்பூதி யடிகள் என்பார், மறைத்தும் — மறைத்துவைத்தும், வாகீசர்—திருநாவுக்கரசு நாயனார், அ காலை-அம் மறைப்பினை, துப்பான் அறிந்தனர்—(திருவருள்) வலியால் அறிந்

தார், ஆகீலின், இப்புவியில்—இந்தப் பூமியில், அகத்தது—(ஒருவன்) மனத்தின்கண் நிகழ்வதனை, ஐயப்படாஅது உணர்வானை—சந்தேகப் படாமல் (துணிவாக) அறிய வல்லானை, தெய்வத்தோடு ஒப்ப கொளல்—(மகனேயாயினும்) தெய்வத்தோடொப்ப நன்கு மதிக்க (எ-று).

ஆர்—சிறப்புப் பற்றிவந்த விகுதி. மறைத்தும்—உம்மை சிறப்பும்மை. உடம்பு முதலியவற்றான் ஒவ்வானாயினும் பிறர் நினைத்ததுணருந் தெய்வத்தன்மையுடைமையின், 'தெய்வத்தோடொப்ப' என்றார். கொளல்—அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள். படாஅது என்புழி அளபெடை அசைநிறை யளபெடையென்க.

120 சோமேசர் முதுமொழி வெண்பா

கதை:—திருநாவுக்கரசு நாயனார் திங்களூர் வழிச் செல்லுங்கால் அவ்வூரின்கண் அப்பூதி யடிகள் என்பார் தமது புதல்வர்களுக்குத் திருநாவுக்கரசு என்னுந் திருப்பெயரை இட்டழைத்து வருதலையும்; அன்னசாலை, கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தர் முதலியன திருநாவுக்கரசு என்னுந் திருப் பெயரால் அமைத்துள்ளதையுங் கேட்டுங் கண்டும் அவரது திருமாளிகைக்கு எழுந்தருள அடிகள் நாயனாரைப் பணிந்து மிக்க ஆர்வத்துடன் திருவமுது செய்யக் குறையிரந்து வேண்ட அவரும் அதற்கு ஒருப்பட அடிகள் தமது மூத்தகுமாரனை வாழைக்குருத்தொன்று கொண்டு வரும்படி ஏவ, அவன் அது செய்யும்போது அவனை நாகப்பாம்பு தீண்ட, அஃதறிந்த அவன் விரைவின் ஓடி வந்து தாயாரிடத்து வாழைக்குருத்தைத் தந்து மரிக்க, அடிகளும் அவர் மனைவியாரும்

எங்கு நாயனூர் திருவமுது செய்தல் தடைப்படுமோ வென்று அஞ்சி மகன் சவத்தை மறைத்து வைத்து அவர்பால் வந்து 'திருவமுது செய்தற்கு எழுந்தருள்க' எனை, நாயனூர் நடந்த செய்தியைத் திருவருளால் உணர்ந்து சவத்தைச் சிவாலயத்தின்முன் கொணர்வித்து 'ஒன்று கொலாமவர்' என்று தொடங்குந் தேவாரப் பதிகத்தை ஓதி அம் மகனை உயிர்ப்பித்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

72-ஆம் அதிகாரம் : அவையறிதல்.

ஓர்சங்கத் தார்கல்வி யூமைச்சேய்க் குக்காட்டிச்
சோர்வுகலந் தேர்ந்தனரே சோமேசா—வோருங்காற்
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. (எஉ)

அஃதாவது அவையினது இயல்பை அறிதல்.

72. (இ-ள்) சோமேசா—! ஒருங்கால்—ஆராயுமிடத்து, கசடு அற சொல் தெரிதல் வல்லார் அகத்து—குற்றம் நோமல் சொற்களை ஆராய்தல் வல்லவர் அவைக்

கட் சொல்லின், கற்று அறிந்தார் கல்வி-(பல நூல்களையுங்) கற்று(அவற்றாலாய பயனை) அறிந்தவரது கல்வி, விளங்கும்-(யாவர்க்கும்) விளங்கித் தோன்றும்,—(அதற்கு எடுத்துக் காட்டு) — ஓர் சங்கத்தார்—ஒப்பற்ற சங்கப் புலவர்,

கல்வி—(தமது) கல்வியாற் செய்த உரைகளை, ஊமைச் செய்க்கு காட்டி—(உருத்திரசன்மனர் என்னும) ஊமைப் பிள்ளைக்குக் காட்டி, சோர்வு நலம் தேர்ந்தனர்—குற்றத்தையுங் குணத்தையுந் தெளிந்தனர் (எ-று).

சொல்வின் என்பது அவாய்நிலையான் வந்தது. அத்தகைய அவையின் கண்ணே சொல்க என்பதாம். சங்கத்தார்—கடைச் சங்கத்தார். மேலது, கல்வி—ஆகுபெயர்.

கதை:—ஒருகாற் பாண்டிநாட்டிற் பன்னிரண்டாண்டு பஞ்சஞ் செல்ல, அரசன் புலவர்களை அயல் நாடு புகுமாறு வேண்டினன். அவரும் அவ்வாறு செய்தனர். நாடு மலிய மழைபெய்து செழித்தபின் அரசன் கிங்கரரை ஏவிப் புலவர்களைக் கொணர்வித்தான். பொருளதிகாரம் வல்லார் அகப்பட்டாரில்லை யாகலின், அரசன் மனம் கவன்றான். அது கண்டு ஆலவாயினழனிறக் கடவுள் அறுபது சூத்திரஞ் செய்து மூன்று செப்பிதழி னெழுதிப் பீடத்தின்கீ ழிட்டான். மறுநாள் அருச்சகன் அவற்றைக் கண்டெடுத்து அரசன்பாற் றர அரசன் மகிழ்ந்து புலவர்களை அந்நூற்குரை காணுமாறு பணித்தனன். புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் வெவ்வேறுரை கண்டனர். அவற்றுள் நேரிதான உரையாதெனத் தேர்தற் கொரு காரணிகனைத் தரல்வேண்டுமென அரசன் வரங்கிடப்ப, 'இவ்வூர் உப்பூரிக்குடிகிழார் மகனுவான் உருத்திரசன்மனென்

பான் பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப்பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளை உளன், அவனை அன்னனென் றிகழாது கொண்டு போந்து ஆசனமே லிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத் தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து ; மெய்யல்லா உரை கேட்ட விடத்து

வாளா இருக்கும்: அவன் குமார தெய்வம்; அங்கொரு சாபத்திலுற் றுரைன்றினன்' என முக்கால் இசைத்த அசரீரி கேட்டு அவ் வுருத் திரசன்மனைக் கொடுபோந்து வெள்ளுடை யுடுத்து வெண் பூச் சூட்டி வெண் சாந் தணிந்து கனமாப் பலகை யேற்றிக் கீழிருந்து சூத்திரத்திற் பொருளுரைப்ப, எல்லாரும் உரைக்கக்கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரா விடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்திப் பின்னர் நக் கீரர் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் சிலிர்ப்ப இருந்தான்.

[இஃது இறையனாரகப்பொருளுரையி னுளது].

73-ஆம் அதிகாரம் : அலைவயஞ்சாமை.

வாழ்வாத வூர் வளவனலை முன்னெதிர்த்துச்
சூழ்தே ரரைவென்றூர் சோமேசா—தாழ்வகல
ஆற்றி னளவறிந்து கற்க வலைவயஞ்சா

மாற்றங் கொடுத்தற் பொருட்டு. (எஅ)

அஃதாவது சொல்லுதற் குரிய அவையினை யறிந்து சொல் லுங்கால் அதற்கு அஞ்சாமை.

73. (இ-ள்) சோமேசா-! அவை அஞ்சா-அவைக்கு அஞ்சாமல், மாற்றம் கொடுத்தற் பொருட்டு—(எதிரிகள் சொல்லிய சொற்கு) உத்தரஞ் சொல்லுதற் பொருட்டு, ஆற்றின்—சொல்லிலக்கண நெறியானே, அளவு—அளவை நூலை, அறிந்து கற்க—உட்பட்டுக் கற்க,—(அதற்கு எடுத் துக்காட்டு)—வாழ்—வாழ்ந்த, வாதவூர்—திருவாதவூ ரடிகள், வளவன் அவை முன் எதிர்த்து—சோழன் அவை யின் முன் எதிர்த்து நின்று, சூழ்—(அவ்வவைக்கட்) சூழ்ந்த, தேரை—(தமது) பகைவர்களாகிய பௌத்தர்களை,

தாழ்வு அகல—(அவர்கள்) கீழ்மை நீங்கும்படி, வென்றார்-வெற்றி கொண்டார் (எ-று).

அளவைநூல் சொல்நூல் கற்றே கற்க வேண்டுதலின், அதற்கு அஃதாறெனப்பட்டது. அளக்குங் கருவியை அளவென்றது ஆகுபெயராம். அளவை நூல்—தருக்க சாஸ்திரம். அவர் சொல்லே வெல்வதொரு சொல் சொல்லலாவது நியாய சாஸ்திரத்து வாத செற்ப விதண்டைகளுஞ் சல சாதிகளும் முதலிய கற்றூர்க்கே யாக லின் அவற்றைப் பிழையாமற் கற்க என்பதாம்.

வாதம் என்பது உண்மைப் பொருளையறியும் வேட்கையுடை

டா ரிருவரில் ஒருவருக் கொருவர் சொல்லுந் தடைவிடையாகிய கதை. செற்ப (ஜெல்ப) மாவது ஒருவரை யொருவர் வெல்லும் வேட்கையுடையாரிருவர் இரண்டு பக்கங்களையும் நிலைநிறுத்தாத கதை. விதண்டையாவது வெல்லும் வேட்கையுடையார் தமது பக்கத்தை நிலைநிறுத்த லில்லாக் கதை. சலமாவது ஒரு பொருள் கருதிச் சொல்லியதற்கு வேறபொருள் கற்பித்துக் கொண்டு பழித்தல். சாதியாவது போலி யுத்தர முதலிய என்றதனால் 'தோல் வித்தானம், எதுப்போலி, ஆத்மாசிரயதோஷம், அந்யோந்யாசிரய தோஷம், சக்ரிரிகை, அநவஸ்தா தோஷம், பிரமாண பாதிதார்த்தப் பிரசங்கம், விநிகமந விரகம் முதலியன கொள்க. 'வாழ் வாதனூர்' என்றார் ஆதிதெய்விகம், அத்யாத்மிகம், ஆதிபௌதிக மென்னும் தாபத்திரயங்களின் நீங்கி உய்ந்தமையின். தாம் ஒருவராக எதிரிகள் பல ரென்பது தோன்றச் 'சூழ் தோரை' என்றார்.

கதை:—சைவப்பெரியா ரொருவர் ஈழநாடு சென்று அங்குத் தம் வழக்கப்படி இருக்கினும் நிற்கினும் நடப்பினும் 'சிதம்பரம்' என்று கூற, அதைக் கேட்ட புத்தர்கள் அரசன்பாற் சென்று அதைத் தெரிவித்தார்கள். அரசன் அவரை வரவழைக்க அவரும் அதற்கு ஒருவாறு ஒருப்பட்டு அரண்மனை புகுந்து அரசவையில் 'சிதம்பரம்' என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தார். அப்போது அரசன் 'அஃதென்?' என்றான். அதற்கவர் "அஃது இருதய புண்டரீகத்தின்கண்ண தாகிய தகராகாச கூத்தம்;

முத்தி கூத்தம்" எனக் கூறி அத் தலத்தின் மகிமையையும்

நன்கு விரித்து அங்கு ஆனந்த தாண்டவம் புரியுஞ் சபா நாயகரது பரத்வத்தையும் பிரசங்கித்தார். அவ் வவையத் திருந்த புத்தகுரு அவ் வார்த்தைகளைக் கேட்டு மனம் புழுங்கி 'அப்படி யானால், யான் அச் சிதம்பரஞ் சென்று புத்தனே தெய்வமென்று மூன்று நாட்களில் நாட்டுவேன்' என்று சூளுரைத்துச் சிதம்பரம் புகுந்தான். புத்தராஜனும் தன் ஊமை மகளையும் அழைத்துக் கொண்டு அங்கு அடைந்தனன். யாவருந் திருக்கோயிலின்கண் ஒன்று கூடினர்கள். தீக்ஷிதர்களும் சிவனடியார்களுங் கண்டு புத்த குருவையும் பிறரையும் திருகோயிலைவிட்டு அகலுமாறு கூற, புத்தகுரு 'யான் சோழராஜன் முன் எனது புத்தனே தெய்வ மென்று நிறுத்தியன்றிப் புறஞ்செல்லேன்' என்றான். அது கேட்டு யாவரும் மனம் வெந்து சோழனுக்கு ஓலை போக்கினர்கள். போது சாய்ந்தது. அன்றிரவு பெருமான் தீக்ஷிதர்கள் கனவில் எழுந்தருளி 'நமது தில்லையில் திருவாதவூரனென்னும் மாணிக்க வாசக னுளன். அவனை அழைத்து வரின் வெல்வான்' எனப் பணிக்க அப் பணி சிரமேற்கொண்டு தில்லை மூவாயிரவர்கள் தில்லை யில் அடிகள் எழுந்தருளியிருந்த பர்ணசாலையை யடைந்து நடந்த செய்தியை அறிவிக்க, பெருமான் பணித்தவாறே அடிகளும் உடன் வந்து பௌத்தர்கள் சூழ்ந்த மண்டபத்திற்குப் போய் அவர் கள் முகத்தைப் பார்க்கலாகாதெனத் திரை விடுவித்து ஓர் ஆசனத் திருந்து வாதஞ் செய்யப்புக்கு அவர் வாக்கிலுங் கலைமகணின்று சொல்லாடுதல் கண்டு சினந்து, 'வாணீ! இது சிவாக்கினை, இவ் வஞ்சகருடைய நாவை விட்டுச் செல்க' என்ற வளவிற் புத்தர்கள் யாவரும் மூங்கைய ராளர்கள். அவர்களை ஊமையர்களாக்கவல்ல

அடிகளுக்குத் தன் ஊமைமகளைப் பேசுவிக்கவும் கூடுமென்றறிந்த ஈழநாட்டாசன் அடிகள் திருவடிகளில் தன் மகளை இட்டுத் தானும் வீழ்ந்து அவளைப் பேசுவிக்கும்படி குறையிரந்து கூறினன். அடிகள் அம் மகளை நோக்கி, 'புத்தர்கள் விளக்களுக்கு விடை பகர்க' என, அவளும் அது செய்யப் புத்தர் விளக்களையும்

அவள் கூறிய விடைகளையும் திருச்சாழல் விளையாட்டிற் கூறியன வாகப் பாடலின் அமைத்தார். ஈழமன்னனும் விபூதிருத்தாகவும் தரித்துச் சைவனானன். பின்னர்த் தில்லை மூவாயிரவர் வேண்டு கோளின்படி அடிகள் ஊமர்களாகிய புத்தர்களையும் பேசுவித்தனர். அவர்களுஞ் சிவதீகை பெற்றார்கள்.

[இது திருவாதவூரர்புராணத்தும் பிரண்டும் உளது].

74-ஆம் அதிகாரம்: நாடு.

மேல்வளமெல் லாமமைந்தும் வீர மகேந்திரன்
றேல்வியுற்று மாய்ந்ததே சோமேசா—ஞாலமிசை
ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயின்றே
வேந்தமை வில்லாத நாடு. (எசு)

அஃதாவது அரசனலும் அமைச்சனலுங் கொண்டுய்க்கப் படுவதாய் ஏனை அரண் முதலிய அங்கவ்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றுய நாட்டின் இயல்.

74. (இ-ள்) சோமேசா—! ஞாலமிசை—பூமியினிடத்தே, வேந்து அமைவு இல்லாத நாடு—வேந்தமைந்து பொருந்துதலில்லாத நாடானது, ஆங்கு அமைவு எய்தியக்கண்ணும் — மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றானும் நிறைந்திருந்ததாயினும், பயம் இன்று—அவற்றாற் பயனுடைத்தன்று, — (அதற்கு எடுத்துக்காட்டு) — வீரமகேந்திரம்—வீரமகேந்திரபுரியானது, மேல் வளம் எல்லாம் அமைந்தும்—மற்றைக் குண நலங்கள் யாவும் அமையப் பெற்றும், தோல்வியுற்று—தோல்வியடைந்து, மாய்ந்தது—அழிந்தது (எ-று).

வேந்தமைவாவது ஏனைக் குணங்களோடு பொருந்தியதற்கேற்ப அரசனும் நற்குண நற்செய்கை யுடையனுதல். மேற்சொல்லிய குணங்களாவன உழவரும் அறவோரும் செல்வரும்

ஒருங்கு வாழ்தல், அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேயத்தானும் விரும்பத் தக்கதாய்க் கேடின்மையோடு கூடி மிகவினிதல், பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண்வரினும் அவற்றைத் தாங்கி அதன்மேற் றன் னரசனுக்கு இறைப் பொருண் முழுவதையும் உடம்பட்டுக் கொடுத்தல், மிக்க பசியும் நீங்காத நோயும் புறத்து நின்றுவந் தழிவு செய்யும் பகையுமின்றி இனிது நடத்தல், மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும் உட்

பகையும் வேந்தனை அலைக்குங் கொல்வினைக் குறும்பரும் இல தாதன் முதலியன. வீரமகேந்திரம் என்பது சூரபத்மன் நகரம். இதனைச் சூரபத்மன் வேண்டியவாறு விசுவகர்மா சுக்கிரன் கூறிய எல்லைக்குட் கடலின் நடுவின் நிருமித்தனன். இதற்கு மற்றை வளங்கள் யாவும் குறைவின்றி அமைந்து கிடந்தமையை 'ஆணமில் சிந்தை வீர னச்சுதன் முதலோர் வைகுஞ், சேணகர் நோக்கிச் சூழுந் திசைநகர் நோக்கிப் பாரின், மாணகர் நோக்கி வீரமகேந்திர நோக்கிச் சூர, னீணக ரிதற்கி யாவு நிகரிலை போலு மென்றான்' என்னுங் கந்தபுராணச் செய்யுளா னறிக.

கதை:—அறுமுகக்கடவுள் சூரபன்மன் நகரமாகிய வீரமகேந்திரத்தை யுண்ணுமாறு கடலை நோக்கிப் பணிப்பக் கடலும் அவ்வாறே உண்டு அதன்கண் வாழ்ந்த அசுரர்களை எல்லாம் அழித்தது. 'வேலவன்முன் விழுங்குகெனப் பணித்திடலும் வீரமகேந்திரத்தை யுண்டு, சாலவத னிடத்தமர்ந்த தகுவர்குல மேயழித்துத் தந்திட் டங்கு, நீலநெடுங் கடறனது நலையுமவ னருட்டிறத்தா னீங்கிப் பண்டு, போலதனைச் சூழ்கிடந்தாற் போன்றதுபொன் மதிலுடுத்த கிடங்கு மாதோ' என்னுந் தணிகைப்புராணச் செய்யுளா னறிக.

[இது கந்தபுராணத் துளது.]

75-ஆம் அதிகாரம்: அரண்.

வல்லதிகன் றன்னரணம் வாள்வளவன் சேணெசலத்
தொல்லைவலி மாண்டதே சோமேசா—நல்ல
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். (எரு)

75. (இ-ள்) சோமேசா—. அரண்—அரணானது, ஏனை நல்ல மாட்சித்து ஆகியக்கண்ணும்—மற்றைய கன் மாட்சியெல்லா முடைத்தாய விடத்தும், வினைமாட்சி இல்லார்கண் — வினை செய்தற்கண் மாட்சி யில்லாதார் மாட்டு, (அம்மாட்சி யெல்லாம்) இல்லது—இலதாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—வல் அதிகன் அரணம் — வலிமையுடைய அதிகனது அரணானது, வாள் வளவன் சேணை செல—வாளையுடைய புகழ்ச்சோழ நாயனாது சேணை சென்றதும், தொல்லை வலி மாண்டது—பழமை யான வலிமை அழிந்தது (எ-று).

வாளா விருத்தலும், அளவறியாது செய்தலும், ஏலாதது செய்தலும் அடங்க 'வினைமாட்சி யில்லார்' என்றும், ஏற்ற வினையை அளவறிந்து செய்து காவாக்கால் அம் மாட்சிகளாற் பய னின்றி அழியுமென்பார் 'இல்லது' என்றுங் கூறினர். அரணம்—அம்முச் சாரியை பெற்ற பெயர்.

கதை:—சோழமண்டலத்தில் உறையூரில் உலகமுழுவதும் ஒரு குடைக்கீழ் ஆண்ட புகழ்ச்சோழ நாயனார் என்பார் கருவூரை

யடைந்து அத்தாணி மண்டபத்திருந்து சிற்றரசர் கொணர்ந்த திறைகளைப் பெற்று அமைச்சர்களை நோக்கி "திறை கொடாத அரசருளரேற் கூறுக' என, அவர்கள் 'அருகுள்ள தொரு மலையரணத்து அதிகனென்பா னுளன். அவனே கீழ்ப்படிந்து திறை கொடாதவன்' என, அவன்மேற் படையெடுத்துச் சொல்லுமாறு அவர்களுக்கு ஆஞ்ஞாபித்தார். அவ் வாஞ்ஞையை மேற்கொண்டு

அமைச்சர்கள் நாற்பெரும் படையுடன் சென்று அம் மலையரணை யடைந்து அதிகனுடைய சேனையை வதைத்தார்கள். அதிகனும் அஞ்சி ஓடி ஓருஞ்சுரம் புக்குய்ந்தான்.

[இது பெரியபுராணத் துளது].

---

76 - ஆம் அதிகாரம் : பொருள்செயல் வகை.

உக்கிரனுர் மேருவைவென் றெண்ணிதியம் பெற்றமை [யாற்

றெக்கருதி காத்தனர்காண் சோமேசா—மிக்குயர்ந்த குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை. (எசு)

அஃதாவது பெரும்பான்மையும் நாட்டானும் அரசனும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளைச் செப்தலின் திறம்.

76. (இ-ள்) சோமேசா—! தன் கைத்து ஒன்று

உண்டாக செய்வான் வினை—தன் கையதாகிய பொருளுண்டாக ஒரு வினையை எடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல், மிக்கு உயர்ந்த குன்று ஏறி—(ஒருவன்) மிக உயர்ந்த மலைமேலேறி நின்று, யானை போர் கண்டற்று—யானைப்போரைக் கண்டாலொக்கும்,—(அதற்கு எடுத்துக் காட்டு)—உக்கிரனூர் — உக்கிரகுமார பாண்டியர், மேருவை வென்று — மேருவைச் (சண்டாலடித்து) வெற்றி கொண்டு, ஒள் நிதியம் பெற்றமையால்—ஒளி பொருந்திய நிதியைப் பெற்றதனால், தொக்க குடி காத்தனர்—திரண்ட குடிகளைப் பாதுகாத்தனர் (எ-று).

பின் 'செய்வான்' என்றதனால் 'ஒன்று' என்பதற்கு 'ஒருவினை' எனப் பொருளுரைத்தாம். குன்றேறிலன் அச்சமும் வருத்தமும் இன்றி நிலத்திடை யானையொடு யானை செய்யும்

போரைத் தான் இனிதிருந்து காணுமாறுபோல, பொருளுண்டாக ஒரு வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமும் இன்றி வல்லாரை ஏவித் தான் இனிதிருந்து முடிக்குமென்பதாம். காண்—அசை.

கதை :—உக்கிரகுமார பாண்டியன் அரசுபுரிகாளில் மழை சுருங்கக் குடிகளுக்குப் பருக நீர் பெறுதலும் அரிதாயிற்று. மன்னவன் சுந்தரேசப்பெருமான் சந்நிதி புகுந்து குறைகூறி இரந்து ஆண்மனை மீண்டு மனம் வருந்தி அன்றிரவு உறங்கும்போது பெருமான் ஒரு சித்தாய்க் கனவிற் றோன்றி 'வடிவேற் குமர!'

மழை இப்போது அரிது. அதை வேண்டி வருந்தல் வேண்டா. மேருமலையின்கண் ஒரு குகையுட் சேமநிதி உளது. ஆங்குச் சென்று அதனைச் செண்டாலடித்துச் செருக்கடக்கி வேண்டிய வளவு நிதிகொண்டு அக் குகையை அடைத்து நின் குறி பொறித்து வருதி' என்றருள, மன்னவனும் அப்படியே செய்து பொன் கொணர்ந்தனன்.

[இது திருவிளையாடற்புராணத் துளது].

77—ஆம் அதிகாரம்: படைமாட்சி.

நாகைப்ப முப்புரமு நீறுகி மாய்ந்தகே
தூகையாள் பாலமருஞ் சோமேச——வானின்
ழலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். (எஎ)

அஃதாவது படையினது தன்மை.

77. (இ-ள்) தூ நகையாள் பால் அமரும்—வெள்ளிய பற்களையுடைய உமையம்மையார் இடப்பக்கத்தில் வீற்றருளும், சோமேசா—! எலி பகை—எலியாகிய பகை (தொண்டு), உவரி ஒலித்தக்கால் என்னும்—கடல்போல ஒலித்தால் (நாகத்திற்கு) என்ன துன்பம் வரும், நாகம்

உயிர்ப்ப கெடும்—அந்த நாகம் உயிர்த்த வளவில் அது தானே கெடும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—நீ நகைப்ப —நீ நகை செய்ய, மூப்புரமும்—திரிபுரங்களும், நீறு ஆகி வானின் மாய்ந்தது—பல்மமாகி ஆகாயத்தின்கண் அழிந்தது (எ-று).

உவரி என்புழிப் 'போல' என்னும் உவமைச் சொல் தொக்கது. இந்தத் தொழிலுவமையாற் றிரட்சி பெற்றும். வீரால்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான், அவன் இளர்ந்த வளவில் அவர்தாங் கெடுவ ரென்பது தோன்ற நின்றமையின் இது பிறிதுமொழிதலென்னும் அணி; இதையே ஒட்டணி யெனவும் நுவலாநுவற்சியணி யெனவுங் கூறுப: 'கருதிய பொருடொகுத் ததுபுலப் படுதற், கொத்ததொன் றுரைப்பினஃ தொட்டென மொழிப' என்பது சூத்திரம்; 'நினைத்த பொருளை மறைத்து அப் பொருள் புலப்படுத்தற்கேற்ற பிறிதொரு பொருளை யுரைத்தல் ஒட்டணி' என்பது அதன் பொரு ளென்க வீரால்லாதார் பலரினும் வீரனொருவனை ஆர்தல் நன்றென்பது கருத்து. மூப்புர மென்பது ஆகாயத்தில் பறக்கும் மூன்று அரண்களாலாயினமையின் 'வானின் மாய்ந்ததே' என்றார்.

கரை:—மேலே உரைத்தாம் [54-வது பாட்டுரை காண்க].

———

78 - ஆம் அதிகாரம் : படைச் செருக்கு.

மன்மதனின் னேடெதிர்த்து வீறழிந்து மாண்டாலுந்
துன்னுபுக ழேபெற்றான் சோமேசா—புன்னெருக்குங்
கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்தலினி தது. (எஅ)

78. (இ-ள்) சோமேசா—! புல் லெருங்கும் கானம் முயல் எய்த அம்பினின்—புல் லடர்ந்த காட்டின் ஓடும் முயலைப் (பிழையாம) லெய்த அம்பை யேந்தலினும், யானை

பிழைத்த வேல் ஏந்தல்—(வெள்ளிடைநின்ற) யானையை யெறிந்து பிழைத்த வேலை ஏந்துதல், இனிது—நன்று,—(அதற்கு எடுத்துக்காட்டு)—மன்மதன்—காமன், நின்னோடு எதிர்த்து வீறு அழிந்து மாண்டாலும்—உன்னோடு எதிர்த்துப் பெருமை கெட்டு இறப்பினும், துன்னு புகழே பெற்றான்—மிக்க புகழையே அடைந்தான் (எ-று).

கானமுயல் என்றதனால் வெள்ளிடை நின்ற என்பதும், பிழைத்த என்றதனால் பிழையாமல் என்பதும், முயற்குத் தக்கவாறு எய்த என்றதனால் யானைக்குத் தக்கவாறு எறிதலும் வருவிக்கப்பட்டன. இது வேற்றரசன் படையோடு போர்செய்து அப்படை முதுகுகாட்டி ஓடினமை கண்டு நாணிப் பின் அவன் மேற் செல்லலுற்ற வீர னொருவனது கூற்றென் றறிக. உம்மை இழிவு

சிறப்பு, ஏகாரம் பிரிநிலையொடு தேற்றம்.

கதை:—இந்திரன் மகன் சயந்தனைச் சூரபத்மன் மகன் பானு கோபன் சிறையிட இந்திரன் சிவபெருமானை நோக்கித் தவங் கிடந்து அவர் பிரதியக்ஷமான போது 'கருணைக் கடலே! சூரபத் மன் முதலியவர்களால் யாங்கள் படுந் துன்பம் பெரிதாகலின் அவர் களை ஒழித்தருளல் வேண்டு' மென, பெருமான் 'எம்மிடம் ஒரு புதல்வன் தோன்றி அவர்களை அழிப்பான்' என்று மறைந்தருளிய பின் ஸனகாதியர்களுக்குத் தத்துவஞானத்தை அறிவுறுத்த வேண்டி ஒரு கணப்போது ஞானமுத்திரை தாங்கி மோன நிலையிலமர்ந்தருளினர். இந்திரன் பிரமனிடஞ் சென்று நிகழ்ந் தன கூறிப் பெருமானது மோன நிலையைப் பிரித்தாலன்றி உய்தி யில்லை என்று கூறப் பிரமன் மன்மதனை அழைத்து அவனுடைய பாணங்களாற் பெருமானது மோன நிலையைக் குலைக்க வேண்டி னன். அவன் அதற்கு அஞ்சி ஒருப்படாதுக அது கண்டு பிரமன் 'சபிப்பேன்' எனக் கடிந்துரைக்க வேறு செய்வதொன் றறியாது மன்மதன் அப் பிரமன் சாபத்தா லிறத்தலிலிடப் பெருமான் கோபத்தா லிறப்பதே தகுதியென் றெண்ணிக் கையில் புகுந்து பிர

மன் எவியவாறே செய்யப் பெருமான் தமது மோனநிலை நீங்கி நெற்றி விழியைச் சிறிது திறப்ப மன்மதன் நீறுகி மாண்டனன்.

[இது கந்தபுராணத் திளது].

79-ஆம் அதிகாரம்: நட்பு.

வாக்கரசர் பிள்ளா யெனவலித்து மாற்றலுற்றூர்
தூக்குபிள்ளை யார்செலவைச் சோமேசா—நோக்கி
நகுதற் பொருட்டன்று கட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (எசு)

அஃதாவது ஒத்த உணர்ச்சியுடையா ரிருவர்மாட் டுளதாம் கட்பினது இயல்.

79. (இ-ள்) சோமேசா—! கட்டல்—நட்புச் செய்தல், நோக்கி,—(ஒருவனை யொருவன்) முகநோக்கி, நகுதற்பொருட்டு அன்று—தம்முள் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று, மிகுதிக்கண்—(அவர்க்கு வேண்டாத செய்கை யுளதாய வழி, மேற் சென்று இடித்தற் பொருட்டு—முற்பட்டுக் கடிந்து சொல்லுதற் பொருட்டு,—(அதற்கு எடுத்துக்காட்டு)—வாக்கரசர்—திருநாவுக்கரசு நாயனார், தூக்கு பிள்ளையார் செலவை- (தமது வலிமையும் மாற்றாராகிய சமணர் வலிமையும்) ஆராய்ந்தறிந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் (நீய நாளிற் சமணர்மேற்) செல்லுதலை, பிள்ளாய் என—பிள்ளாய் என்று விளித்துப் பருவத்திற் கொவ்வாத செய்கையென, வலிந்து—வற்புறுத்துக் கூறி, மாற்றலுற்றூர்—தடுத்தார் (எ-று).

பழியும் பாவமுந் தருஞ் செய்கை தன்மே தருதலான் வேண்டப்படுவ தன்றாகலின் அதனை 'மிகுதி' என்றும், அது செய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்று' என்

றும், இன்சொற்கு மீளாமையின், 'இடித்தற் பொருட்டு' என்றுங் கூறினர்.

பிள்ளாயென விளித்தமை 'அரசருளிச் செய்கின்றார் பிள்ளா யந்த வமண்கையர் வஞ்சனைக்கோ ரவதி யில்லை, யுரைசெய்வ தளதுறுகோ. டானுந் தீய வெழுந்தருள வுடன்படுவ தொண்ணெ தென்னப், பரசுவது நம்பெருமான் கழல்க ளென்றுற் பழுதணையா தெனப்பகர்ந்து பரமர் செய்ய, விரைசெய்மலர்த் தாள்போற்றிப் புகலி வேந்தர் வேயுறுதோ ளியையெடுத்து விளம்பி னாரே' என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்காலு மறிக.

கதை:—திருஞானசம்பந்தப் பிள்ளையாருந் திருநாவுக்கரசு நாயனாருந், திருமறைக் காட்டில் எழுந்தருளியிருந்த தறுவாயில், பாண்டி நாட்டிற் சமணசமய மேலிட்டிருத்தலைப் பிள்ளையார்க் கறிவித்துச் சமணர்களை ஒழிக்க வெண்ணி அங்குப் போந்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் வேண்டியவாறே பிள்ளையாரும் மதுரைக்கு எழுந்தருளுதற்கு ஒருப்பட்டுப் புறப் பட்டார். அப்போது திருநாவுக்கரசு நாயனார் பிள்ளையாரது இளமை யையுஞ் சமணரது வஞ்சனையையும் நாளினது தீமையையும் எடுத்துக் கூறித் தடுத்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது.]

80-ஆம் அதிகாரம்: நட்பாராய்தல்.

போற்றுஞ் சுசீலன் புயபெலனை நீத்தகன்றான்
றோற்றிறைவி தும்மிடவுஞ் சோமேசா—வேற்றதே
ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். (அ0)

அஃதாவது நண்பினரை ஆராயுந் திறம்.

80. (இ-ள்) சோமேசா—! ஒருவற்கு ஏற்றது ஊதியம் என்பது—ஒருவனுக்குப் (பெறத்)தக்க பேறென்று

சொல்லப்படுவது, பேதையார் கேண்மை ஒரீஇ—அறிவிலாரொடு நட்புக்கொண்டானாயின் அதனை யொழிந்து, விடல்-(அவரின்) நீங்குதல்,--(அதற்கு எடுத்துக்காட்டு)-போற்றும் சுசீலன்—(யாவரும்) புகழ்ந்து சொல்லிய சுசீலன் என்னும் அந்தணன், தோற்று இறைவி தும்மிடவும்—(அவனைத் தடுப்பதற்கேற்ற புத்தி) தோற்றிய அரசி தும்மிடவும், புயபெலனை நீத்து அகன்றான்—புயபல னென்னும் அரசனை நீங்கிச் சென்றான் (எ-று).

நட்பொழிந்தாலும் நீங்காக்கால் வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறுபோலத் தீங்கு வருதலின் 'விடல்' என்றும், நீங்கியவழித் தீங்கொழிதலே யன்றி இம்மை மறுமை யின்பத்திற்

குரிமை யெய்தலு முடைமையின் அதனை 'ஔதியம்' என்றுங் கூறினர்.

'வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறபோல' என்றது வேடர் புனத்திற்கு இடுந் தீப்பட்டவழிப் பயனில்லா மரங்களொடு நன்மணங் கமழ்கின்ற சந்தனமாமும் வேங்கைமாமும் ஒக்க வெருதலினென்க. 'மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த, வினத்தா லிகழப் படுவர்-புனத்து, வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே, எறிபுனந் தீப்பட்டக் கால்' என்ற நாலடியார் பாவினைக் காண்க. 'தோற்று இறைவி' என்பதற்கு 'எதிர் தோற்றிய அரசி' எனப் பொருளுரைப்பினு மமையும். உம்மை—எதிர்மறை.

கதை :—வங்கதேயத் தரசனுகிய புயபலன் என்பான் முறை கோடாது அரசு செலுத்துநாளில் ஓராண்டு உத்தராயண புண்ய காலம் வர அற்றை நாள் அந்தணர்க்குத் தானஞ் செய்ய எண்ணி அறிவித்தான். அதனைக் கேள்வியுற்ற சுசீலன் என்னும் பிராமணேத்தமன் விதர்ப்பநாட்டினின்றும் அங்கு வர மற்றைப் பிராமணர்கள் யாவரும் அவனைக் கண்டு போற்றி அழைத்துச் சென்று அரசற்கு அவன் பெருமை கூறி 'முன்னர் அவற்கே தானஞ்செய்க,' வென்றார்கள். அரசன் மகிழ்ந்து தானம் வழங்கும்போது சுசீலன்

அவன் முக நோக்கி விபூதியில்லாமை கண்டு விபூதி யணியாயாயின் தானங்கொள்ளேனென மறுத்தும், 'செய்யதிரு நீறு தொட்டுத் தரியாதார் பெருஞ்செல்வஞ் சிதையு மன்னர், கொய்யுளைய பரித்திரளுங் கரித்திரளு மறமன்னர் கொள்வர் வேட்ட, தையலொழிந் தருமகவு தணந்துபெரும் பிணிபுடனுய்ச் சரிப்ப

ரன்றி, மெய்யினுறப் புக்குறைத்து புலையர்னுங் கடைப்பிறவி மேவு வாரால்' என விஜோவு கூறியும் அரசன் ஒரேபிடியாய் விபூதி தரித்தற் கிசையா ஞயினுன். சுசீலன் உடன் எழ அது கண்ட அரசன் தேவி தனது நாசித் தொளையில் ஒரு தரும்பு நிருகித் தும்மி 'நிது தடை ; நிற்க' என்ருள். மறையவன் அவ்வுரை செவி யேலாது தன் னுடு சென்ருன். பின்னர் அவன் கூறிய வாறே அரசன் செல்வஞ் சிதைந்து நாடிழந்து காடு புகுந்து மனைவி யொழிந்து மகவுதணந்து குட்டநோய் பெற்று உறப்பு அரியுண்டு கிடக்கு நிலையில் அவனைச சந்தித்து வணங்கி விபூதி பெற்றுப் பழைய நிலைமை யடைந்தான்.

[இஃ துபதேசகாண்டத் துளது].

81-ஆம் அதிகாரம் : பழைமை.

இல்லானைப் பற்றிழுத் தென்றிடவு மன்புகுன்ருர்
தொல்லைநெறி நீலகண்டர் சோமேசா—வெல்லா
தழிவந்த் செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். (அக)

அஃதாவது நட்டாரது பழையராந் தனமைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல்.

81. (இ-ள்) சோமேசா—! அன்பின் வழிவந்த கேண்மையவர்—அன்புடனே பழையதாய்வந்த நட்பினை புடையார், அழிவு வந்த செய்யினும்—நட்டார் தமக்கு அழிவுவந்தவற்றைச் செய்தாராயினும், ஒல்லாது—(அன்பு நீங்க) மாட்டாது, அன்பு அறூர்—அவ் வன்பு நீங்காதிருப்

பர்,—(அதற்கு எடுத்துக்காட்டு) — தொல்லை நெறி நீல கண்டர்—பழமையான வழியினின்ற திருநீலகண்ட நாயனார், இல்லாளை பற்றி மூழ்கு என்றிடவும்—மனைவியைக் கைப்பற்றிக் குளத்தின் மூழ்குவாய் என்று சொல்லியும். அன்பு குன்றார்—அன்பு குன்று ராயினர் (எ-று).

'அழி' என்பது முதனிலைத் தொழிற் பெயர். அழிவு—பொருட் கேடுங் காரியக் கேடும். உம்மை—சிறப்பும்மை.

கதை:—தில்லையம்பதியிற் குயவர்குலத் துதித்த திருநீல கண்ட நாயனார் சிவனடியார்க்கு மட்கலம் வனைந்து தருநாட்களிற் சிற்றின்ப நுகர்ச்சி மிக வேண்டி ஒரு பாத்தைமாதை அணைந்து வர அவர் மனைவியார் அதனை அறிந்து அவரொடு ஊடி உடனிருக்க இசையாராயினர். கட்டழகியான தமது மனைவியார் தடுத்தும் நாயனார் அவளைத் தீண்டச் சென்றபோது "தீண்டுவீ ராயி னெம்மைத் திருநீல கண்டம்" என்று ஆணையிடவே, நாயனார் அவ்வாணைக் கஞ்சி 'எம்மை' எனப் பன்மையாற் கூறினமையின் 'மற்றை மாதரார் தமையு மென்றன் மனத்திலுந் தீண்டேன்' எனச் சூளுரைத்து அன்று முதல் ஒரு சேக்கையிற் றுயின்றும் அவளைத் தீண்டாது வாழ்ந்தார். அவ்வாறு வாழ்க்கையிற் சிவபெருமான் சிவனடியார்போலத் திருவுருத்தாங்கி வந்து திருவோடொன்று கொணர்ந்து தந்து அதற் கெப்பொருளும் நிகரில்லை யென்றுரைத்து அதனைச் சேமித்து வைக்குமாறு பணித்தார். அவ்வாறே நாயனார் சேமமிக்க தோரிடத்தி லதனை வைத்தார். பல

ஆண்டுகள் கழிந்தபின் பெருமான் சிவ னடியாராக மறுபடி வந்து அத் திருவோட்டைக் கேட்ப, நாயனார் உட்புகுந்து தேடிக் காணாது மயங்கி நிகழ்ந்தது கூறிப் பிழை பொறுக்குமாறு வேண்ட, அடியார் அதற் கொருப்படாது 'நீர் அதனை இழந்தது உண்மையாயின் உமது மகன் கையைப்பற்றிக் குளத்தின் மூழ்கிச்சத்தியஞ்செய்வீர்' என, அதற்கு நாயனார் 'எனக்கு மகனில்லையே' என, அப்படியா யின், 'உமது மனைவி கையையேனும் பற்றி மூழ்குக' என, அதற் கும் நாயனார் 'அதுவும் ஒரு சபதத்தா லிசையாது' என, 'அடியார்

நாயனாரைத் நில்லைவாழந்தணர் போலைவக்கு அழைத்துச் சென்று நிகழ்ந்தது கூற, அவர்களும் 'மனைவி கைப்பற்றி மூழ்குதல் கடன்' என்று தீர்ப்புச் செய்தார்கள். நாயனார் மனைவியாரைத் தீண்டமாட்டாமை கூற நாவெழாது அதற்கு இசைந்து அடியாரை உடன்கொண்டு திருப்புலீச்சரஞ் சென்று அங்குள்ளதொரு குளத் தின் மூழ்கிட மூங்கிற் றண்டி னொரு கோடியைத் தாமும் மற்றொன் றைத் தமது மனைவியாரும் பற்ற, அடியார் 'அவ்வாறு மூழ்குதல் கூடாது, கையைப்பற்றியே மூழ்குதல் வேண்டும்,' என அப் போது நாயனார் தமக்குந் தமது மனைவியார்க்கும் ஏற்பட்ட சபதத்தை யாவருங் கேட்க வெளியிட்டு மூழ்கினார். அங்ஙனம் மூழ்கின இருவரும் முதுமை நீங்கி இளமை பெற்று எழுந்தார் கள்; தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். சிவபெருமான் பார்வதி சமேதராய் விடைமேற் றோன்றி அவர்களிருவர்களுக்குஞ் சாமீப் பிய பதவியை அருளினார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

82-ஆம் அதிகாரம் : தீ நட்பு.

ஆங்கா ரியக்கடுத்த வங்கணைசாற் கேட்டிறந்தான்
றூங்காத் தசரதன்முன் சோமேசா—ஈங்கிதனுல்
ஒல்லுங் கருமமுடற்றுபவர்கேண்மை
சொல்லாடார் சோரவிடல். (அ2)

அஃதாவது நீக்குணத்தாரொடு உளதாகிய நட்பு. குணத்தின் றீமை ஒற்றுமைபற்றி உடையார் மேலதாய், அது பின் அவரொடு செய்த நட்பின் மேலதாயிற்று.

82. (இ-ள்) சோமேசா—! தூங்கா தசரதன்—(வினை செய்தலிற்) சோர்வில்லாத தசரத சக்கரவர்த்தி, ஆம் காரியம் தடுத்த அங்கணை சொல் கேட்டு—செய்ய வேண்டிய நற்செயலைச் செய்யவொண்ணாதபடி தடை செய்த மாதாகிய கைகேயியின் வார்த்தையைக் கேட்டு, (அதனுல்) இறந்தான்—இறந்து பட்டான், ஈங்கு இதனுல்

அங்ஙனம் தீங்கு நேர்ந்த இவ்வரலாற்றினுல்,—ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை—தம்மான் முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரொடு கொண்ட நட்பினை, சொல் லாடார்—(அது கண்டால்) அவரறியச் சொல்லாதே, சோரவிடல்—சோரவிடுக (எ-று).

முடியா தாக்குதல்—முடியாதாக நடித்தல். சோர விடல்—விடுகின்றவாறு தோன்றுமல் ஒருகாலைக் கொருகால் ஓயவிடுதல். அறியச் சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னும் நட்பாயொழுகக் கருதுவ ராகலின், 'சொல்லாடார்' என்றும், 'சோரவிடல்' என்றுங் கூறினர். 'அங்கநா' என்கிற வடசொற்குச் 'சிறந்த அவயவங்களுடையாள்' என்பது பொருள்; அஃதாவது அழகியவளென்க. தான்—அசை.

கதை:—சீதா விவாகத்தின் பின் தசரதர் இராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய முயன்றார். மந்தரை என்னுங் கூனியின் சூழ்ச்சியால் மனமிலகலங்கிய கைகேயி தனது கணவரான தசரதர் முன்னொருகால் தனக்கு வேண்டியபோது தருவதாகக் கூறின வரம் இரண்டி லொன்றாற் பரதன் நாடாளவும், மற்றொன்றால் இராமன் பதினைந்து ஆண்டு காடேகவுங் கேட்ப அவர் மனங்கலங்கி வாளா திருப்பவும் அவளே இராமன்பாற் சென்று "ஆழிசூழுல கெல்லாம் பரதனே யாள நீபோய்த், தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு, பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி, யேழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச' னென்றளாக அவனும் 'மின்னெனிர் கான மின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்' என்று தன் பட்டாபிஷேகத்திற்குக் குறித்த அந்நாள் அயோத்தி விட்டு நீங்க அது கேட்டுப் பொருத தசரதர் உயிர் நீத்தார்.

[இஃது இராமாயணத் துளது].

83-ஆம் அதிகாரம்: கூடாநட்பு

காய்தீண்டத் தூசுடுத்துச் சாலெனுஞ்சொற் றீதென்று
நீய சுயோதனற்குச் சோமேசா—வாயதனல்
கட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும். (அஅ)

அஃதாவது பகைமையான் அகத்திற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுமளவும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.

83. (இ-ள்) சோமேசா—! தூய சுயோதனற்கு—மனக்களங்க மற்ற துரியோதனனுக்கு, காய்—அன்னையாகிய காந்தாரி, தீண்ட தூசு உடுத்து சார் எனும் சொல்தீது—(அன்னை) தீண்டுதற்கு ஏதேனும் ஓராடை உடுத்திக்கொண்டு செல்வாய் என்ற சொல் தீமையுடைத்து, என்றால்—என்று சொன்னாள்,—ஆயதனல்—அதனால்,—நட்டார் போல் நல்லவை சொல்லினும்—நட்டார் போன்று நன்மை பயக்குஞ் சொற்களைச் சொன்னாயினும், ஒட்டார்சொல் ஒல்லை உணரப்படும்—பகைவர் சொற்கள் (அது பயவாமை) அச் சொல்லிய பொழுதே அறியப்படும் (எ-று).

சொல்லினும் எனவே, சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலிற் தீமை பயத்தல் ஒருதலை என்பார் 'ஒல்லை யுணரப்படும்'

என்றார். 'சுயோதனன்' என்னும் வடமொழிப் பெயர்க்கு 'நல்ல புத்தத்தை யுடையவன்' என்பது பொருள்.

கதை:—துரியோதனன் தாயாகிய காந்தாரி ஒருநாள் அவனை நோக்கி 'நீ நிருவாணமாய் என்பால் வருக. யான் உனது உடம்பு முற்றும் தடவுவன்; அதனால் உனது உடம்பு வயிரவுடம்பாம்' என்றாள். அவன் அதற்கொருப்பட்டிருக்குந் தறுவாயிற் சகுனி அஃதறிந்து "அஃது ஆடாது. தாய் சொல்லினும் அவளிடம் நீ கோவணமேனு மின்றிச் செல்லுதல் தகுதியன்று' என அச்

சொற்கள் நல்லவையெனக்கொண்டு அவனும் அவ்வாறே கோவண மொன்றுடன் செல்ல, அவள் தடவிப் பார்த்து 'ஆ! என்ன காரியஞ் செய்தனை! ஆடையுடுத்துச் சாரென்று உனக்கு யாரோ கூறிய மாற்றம் நீமை பயப்பதென் றறிந்தாயில்லையே! உனக்கு யான் கூறியபடி வயிர வுடம்பு பெறுதல் இனிக் கூடாதே!' என வருந்தினள்.

[இது பாரதத் துளது.]

---

84 – ஆம் அதிகாரம்: பேதைமை.

வன்சமணர் தம்பிரிவால் வாகீசர்க் கின்பமன்றித்
துன்பமென்ப தில்லையே சோமேசா—நன்காம்
பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்

பிழை தருவதொன் றில். (அச)

அஃதாவது யாது மறியாமை.

84. (இ-ள்) சோமேசா—! பிரிவின்கண் பிழை தருவது ஒன்று இல்—(பின்) பிரிவுவரின் அஃதிருவர்க்குந் தருவதொரு துன்பமில்லை, (ஆதலால்) பேதையார் கேண்மை பெரிது இனிது-அறிவிலிகள் (தம்முட்கொண்ட) நட்பு மிக இனிது, நன்கும் ஆம்—நல்லதுமாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)-வாசீசர்க்கு-திருநாவுக்கரசு நாயனர்க்கு, வன் சமணர் பிரிவால்—கொடிய சமணரது பிரிவினால், இன்பம் அன்றி—இன்பமல்லாது, துன்பம் என்பது இல்லை—துன்ப மெனப்படுவ தொன்றில்லை (எ-று).

நாடோறுந் தேய்ந்து வருதலிற் றுன்பந் தாராதாயிற்று-பேதையார் நட்டைப் புகழ்வார்போன்று பழித்தவாறு. 'என்பது' என்புழிப் 'படு' விகுதி தொக்கது.

கதை:—மேலே உரைத்தாம் [31-வது பாட்டுரை காண்க.]

சோமேசர் முதுமொழி வெண்பா 141

85 – ஆம் அதிகாரம் : புல்லறிவாண்மை.

இல்லான் மறுப்பவுஞ்சென் றேகிச் சலத்தான்றுன்
றெல்வலிபோய் மாண்டனனே சோமேசா—வல்லாமை
யவவுஞ் செய்கலான் றுன்றேறு னவ்வுயிர் [யால்
போழு மளவுமோர் கோய். (அஞ)

அது புல்லிய அறிவினை ஆளுதற்றன்மை யென விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் போறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற் கொள்ளாமை.

85. (இ-ள்) சோமேசா---! எவ்வும் வல்லமையால் செய்கலான்-(புல்லறிவாளன் தனக்கு உறுதியானவற்றை) அறிவுடையார் சொல்லவும் (தனக்கு) வன்மை யிருப்பதாகக் கருதலால் அவற்றைச் செய்யான், தான் தேறுன்-(அதுவன்றித்) தானுகவும் இவை செய்வனவென்று அறியான், அ உயிர் போழும் அளவும் ஓர் நோய்---அவ் வுயிர் உடம்பினின்றும் நீங்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம்,---(அதற்கு எடுத்துக்காட்டு)---சலந்தரன்-சலந்தராசுரன், இல்லாள் மறுப்பவும் சென்று ஏகதன் மனைவியாகிய பிருந்தை தன்னைத் தடுக்கவுஞ் சென்றணைந்து, தொல்வலிதோய்ப் மாண்டனன்---பழமையான வலியழிந்து இறந்தான் (ம-று).

உயிர் தான் உணர்தற்றன்மையாயிருந்தும் நின்ற உடம்பின் வயத்தான் மருடற்றன்மைத்தாய் வேறுபடுதலின் 'அவ் வுயிர்' என்றும், உடம்பொடு கூடியபொழுது எவச்செய்தல், தானுக அறிதல் ஆகிய இரண்டு மின்றி இருந்த உயிர்க்கு அதனின் நீங்கிய பொழுதே அவ் விரண்டனுள் ஒன்றுகிய தானுக அறிதல் கூடுதலிற் 'போ ஓ மளவும்' என்றும், எட்டுக்குலமலை முதலியன பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவவுடம்பு பெரும் பொறையாப்த் தன்பஞ்

செய்தலின், 'ஓர் நோய்' என்றுங் கூறினர். இக் குறள் நன்னூல் விருத்தி யுரையிற் கோபத்தின் வருந் தீமைவழுவமைதிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டதறிக. 'சென்று எகி' ஒருபொருட் பன்மொழி எனக்கொண்டு 'விரைந்து சென்ற' எனினுமாம்.

கதை:—மேலே உரைத்தாம் [28-வது பாட்டுரை காண்க].

---

86 - ஆம் அதிகாரம்: இகல்.

எத்திறத்துங் கெட்டா னிகலாற் சுயோதனன்சீர்
துய்த்தனனட் பாற்றருமன் சோமேசா—மொய்த்த
இகலானு-மின்னுத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு. (அசு)

அஃதாவது இருவர் தம்முட் போர்செய்து வலிதொலைதற் கேதுவாகிய மாறுபாடு.

86. (இ-ள்) சோமேசா—. மொய்த்த இகலான் இன்னுத எல்லாம் ஆம்—நெருங்கிய மாறுபாடொன்றான் தீயன வெல்லாம் உண்டாம், நகலான் நல்நயம் என்னும் செருக்கு ஆம்—நட்பொன்றான் நல்ல நீதியென்னும் பெருஞ் செல்வம் உண்டாம்,-(அதற்கு எடுத்துக்காட்டு)—சுயோதனன்—துரியோதனன், இகலான்—மாறுபாட்

டான், எ திறத்தும் கெட்டான்—எல்லாவிதத்திலும் அழி வடைந்தான், தருமன்—தருமபுத்திரன், நாட்பால்—நட்பான், (எத்திறத்தும்) சீர் துய்த்தான்—(எல்லா விதத்திலும்) மேன்மை யடைந்தான் (எ-று).

இன்னுதன—வறுமை, பழி, பாவமுதலாயின. நகல்-மகிழ்தல்; ஈண்டு அதற்குக் காரணமாகிய நட்பிற்காயிற்று. செருக்கு-களிப்பு; இதுவும் அதற்குக் காரணமாகிய பெருஞ் செல்வத்திற்காயிற்று. இவை யிரண்டுங் காரிய வாகுபெயரென்க. இனி, நல்ல நீதி காரணமும் பெருஞ் செல்வங் காரியமுமாக, 'நன்னயமென்னுஞ்

செருக்கு' எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். 'எத் திறத்தும்' என்பதனைச் 'சீர் துய்த்தான்' என்பதனோடுங் கூட்டுக.

கதை:—துரியோதனன் ஆதி தொட்டு அந்தம் வரையும் தருமபுத்திரன் முதலிய பாண்டவர்களிடத் தீராத பகைமையே கொண்டு மன மொழி மெய்களாற் செய்யக்கூடிய பல தீங்கு செய்து தன் சேனையும் வலியும் அழித்து பழி பாவங்களைடைந்து இறந்துபட, தருமபுத்திரன் ஒத்துவாழ வேண்டு மென்கிற கருத்தே கொண்டு நேர்ந்தபோ தெல்லாம் அவனுக்கும் அவனைச் சேர்ந்தார்க்கும் பல நன்மைசெய்து எல்லாச் செல்வங்களையும் புகழ் புண்ணியங்களையும் பெற்று வாழ்ந்தான்.

[இது பாரதத் துளது].

87- ஆம் அதிகாரம் : பகைமாட்சி.

எனையர்பால் வெற்றிகொண்டா னின்னே டெதிர்த்நிறக்
துாகறும்பூ வாளியான் சோமேசா—மானம் [தான்
வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. (அள)

அஃதாவது அறிவின்மை முதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப்படுத்தல்.

87. (இ-ள்) சோமேசா—! மானம் வலியார்க்கு மாறு எற்றல் ஓம்புக-கொண்டாட்டத்தையுடைய (தம்மின்) வலியார்க்குப் பகையா யெதிர்தலை ஒழிக, மெலியார்மேல் பகை ஓம்பா மேக—(ஏனை) மெலியார்க்குப் பகையாதலை யொழியாது விரும்புக,—இஃதென்னை யெனின்,—துாகறு பூ வாளியான்—பரிசுத்தமான நல்ல பூ வம்புடைய மன்மதன், ஏனையர்பால் வெற்றி கொண்டான்—மற்றவர்க

ளிடத்தில் வெற்றி யடைந்தான், நின்னோடு எதிர்த்து இறந்தான்—உன்னோடு எதிர்த்து இறந்தனன் (எ-று).

வலியா ரென்புழித் துணைவலியு மடங்கலின், மெலியா ரென்புழித் துணைவலியின்மையுங் கொள்ளப்படும். அத் துணையாவது

படை பொருண் முதலிய வேற்றுமைத் தூணையும் கல்லறிவுடைமை நீதிநூல் வழி யொழுகன் முதலிய ஒற்றுமைத் தூணையுமென இரண்டாம். அவ்விரண்டு மில்லாரை வெல்வார்க்கு வலி தொலை யாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது.

கதை :—மேலே உரைத்தாம் (78-வது பாட்டுரை காண்க).

88-ஆம் அதிகாரம் : பகைத்திறந்தெரிதல்.

சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசர்-பத்ததமும்
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (அஅ)

அஃதாவது மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற் குற்ற முடும், முன் ஆகி நின்ற பகையுள் ஊட்பாக்கற்பாலதும் மோதுமலாக் கற்பாலதும், அவற்றின்கட் செப்பலதும், வினைக் கலைதற்பாலதன் கட் செய்வனவும், கலையும் பருவமும், கலையாக்காற் படு மிழுக் கும் என்று இத் திறங்களை ஆராய்தல்.

88. (இ-ள்) சுந்தரம் சேர்—அழகு அமைந்த, தென் குளத்தூர் சோமேசர்—தென்குளத்தூரில் எழுந்தருளி யிருக்கிற சோமேசனே! சந்ததமும்—(ஒருவன்) எப் பொழுதும், வில் ஏர் உழவர் பகை கொளினும்—வில்லே ராகவுடைய உழவரோடு பகை கொண்டானுயினும், சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க—சொல்லே ராக வுடைய உழவரோடு பகை கொள்ளா தொழிக, அஃ

பான், கலம்பகத்தால் மாண்ட கதை—(தன் தம்பி யியற்றிய வகை நூலாகிய) கலம்பகத்தினால் இறந்த வரலாற்றை, நாடு அறியும்—உலகத்தார் அறிவார்கள் (எ-று).

சொல் ஆகுபெயரான் நீதிநூன்மே னின்றது. வில் வர் உழவர்—வில்லை வராகக் கொண்டு பகையாகிய புலத்தை உழுபவர்; அஃதாவது வீரரென்க. வீரம் சூழ்ச்சி என்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரொடு பகை கொண்டாற் கேடு வருதல் ஒருதலை யன்று, வந்ததாயினும் தனக்கேயாம்; சூழ்ச்சியுடையாரொடு பகைகொண்டாற் றன்வழியினுள்ளார்க்குந் தப்பாது வருதலின் அது கொள்ளாதும் இது கொள்ளற்க வென்றார். கொளினும் என்புழி உம்மை எதிர்மறையும்மை; அதுவும் ஆகாதென்னும் பொருள் படுதலின். இரண்டு முடையாரொடு பகைகொள்ளாகாமை சொல்லவேண்டா வாயிற்று. இதனை வடநூலார் கைமுதிய நியாயத்தாற் பெறுதும் என்ப. வில்லேருழவர், சொல்லே ருழவர் என்பன உருவக விசேடம். 'வர்' என்றாரேனும் மற்றைக் கருவிகளையும் 'ஒருமொழியொழி தன்னினங் சொளற் குரித்தே' என்னும் விதிபற்றிக் கொள்க. இன்னனம் கொள்ளுதலை, உபலக்ஷணத்தாற் கொள்ளுத லென்பர் வடமொழி வாணர். கலம்பகம் என்பது ஒருவகைப் பிரபந்தம்; அது குறம், மறம் முதலிய பதினெட்டுறுப்புக்களையுடைய தென்க.

நந்திபோத வர்ம னென்பான் இற்றைக்கு 1146 ஆண்டுகளுக்குமுன் 50 ஆண்டளவு தொண்டைநாட்டை அரசுபுரிந்த

பல்லவராசனென்றும், இவன் தெள்ளாறு என்னும் இடத்திற் பாண்டியன் முதலிய மன்னர்களுடன் பொருது அவர்களைப் புறங் கண்டனனென்றும், இவன் பெயர் நந்திவர்மன், நந்திபோதராசன் எனவும் வழங்கப்பெறுமென்றும், இவன் பல்ல வல்லனென்னும் பட்ட முடையனென்றும் இவன் இராணிய வர்மராசனது குமார னென்றும், இவன் கல்வியின் மிக்க பிரிய முடையனாய்ப் பல புல வர்களைத் தன் அருகின் வைத்து ஆதரித்தமையிற் 'பண்டிதரா லயன்' எனச் சிறப்பித்துக் கூறப்படுவனென்றுங் கூறுவர்.

10

146 சோமேசர் முதுமொழி வெண்பா

கதை:—நந்தித் தொண்டைமான் தனது தந்தைக்கு அபிமான ஸ்திரீயினிடம் பிறந்த பிள்ளை. இவன் தந்தைக்குப் பட்ட மகிஷியினிடம் பிறந்த பிள்ளை இருக்கவும், இவன்மாட்டு வைத்த ஆசையால் மூத்தவ னெனக்கூறி இவனுக்கு முடிசூட்டி அறிவிற் சிறந்த கம்மிய னொருவனை மந்திரியாக அமைத்தான். குடிகள் இச் செயல் கண்டு தரியாது நந்தியைக் கொல்ல முயன்றார்கள். இதனை அறிந்த கம்மியனாகிய மந்திரி சூழ்ச்சியால் தன்மீது படுத்திருப்ப வர் உறங்கும்போது ஒலி செய்வதும் விழிக்கு நிலையிற் சும்மா விருப்பதுமான ஒரு கட்டில் அமைத்து அரசன் அதிலேயே படுத் துறங்குமாறு செய்தான். இச் சூழ்ச்சி யுணராத பகைவர்கள் ஒரு நாள் நள்ளிரவில் அரசனது படுக்கையறைச் சுவரிற் கன்னகமிட்டுக் கட்டிலின் ஒலிகேட்டு அரசன் விழித்திருக்கின்று னென்று வாளா விருந்தார்கள். அரசன் ஆ ளரவங் கேட்டு விழித்துக் கன்னகமிட் டிருத்தலைக் கண்டு உடைவாளை யுருவிக் கன்னகவாயிலின் பக்கத்

தில் நின்றான். அப்போது கட்டிலின் ஒலி நின்றது. பகைவர் அரசன் உறங்கினனென நினைத்து ஒவ்வொருவராய்க் கன்னக வாயிலுள் நுழைந்தார்கள். அங்ஙனம் நுழைந்தவர்களையெல்லாம் அரசன் உடை வாளால் தலை துணித்தனன். உள் நுழைந்தவ ரொருவரும் மீளாமை கண்ட குலமகன் ஒரு மூங்கிற் றண்டின் நுனியில் ஒரு களிப்பானையைக் கவிழ்த்து அக் கன்னக வாயிலுள் நுழைக்க, அரசன் அதனையும் ஒரு தலையென்று கருதி வாளால் தாக்க அவ் வொலி கேட்ட வளவில் உள் நிகழ்வது இன்னதென அறிந்த குலமகன் ஓடிவிட்டான். பின்னர் நந்தி புறத்தில் வந்து பார்த்து ஒருவரையுங் காணாது நிகழ்ந்தன யாவும் மந்திரிக்குக் கூற அவன் முன்னையிலும் மிக்க காவலா யிருந்தான். ஓடிப்போன குலமகன் அரசனைக் கொல்லுதற்கு வேறோருபாயமுங் காணாது அவன்மீது வசைநூலாக ஒரு கலம்பகம் பாடி அதனை அரச னவையில் அரங்கேற்றக் கொணர்ந்தான். வஞ்சனை யறிந்த மந்திரி அதனை அரசனுக்குக் காட்ட லாகாதென்று அவனைத் தடுத்துப் பின் அந் நாட்டில் ஒருவரு மதனை ஓதலாகாதெனப் பறை சாற்று வித்தான். அது நிற்க. நந்திக் கலம்பகம் பாடிய அக் குலமகன்

தான் நாடோறும் இரவிற் செல்லும் வேசை வீட்டிற்கு ஒருநா ளிரவு காலந் தாழ்ப்ப, அவன் வரவை எதிர்பார்த்து நின்ற வேசை யும் அயர்ந்து வீட்டின் இடைவழியில் உறங்கினளாக, ஊர்காவலன் அவ் வீட்டு வாயிற் கதவு திறந்திருத்தல் கண்டு பதிவிருந்தனன். சிறிதுபோது கழிந்த பின்னர்க் குலமகன் அங்குப் போந்து வேசை

இடைவழியில் உறங்குவது கண்டு சந்தனக் குழம்பை அவண்மீ தெறிந்து ஒருபுறம் ஒதுங்கினான். அவள் விழித்து நின்று அங்கு ஒரு வரையுங் காணாது மயங்கி 'இது செய்தார் யாவர்?' எனத் திகைக் கும்போது குலமகன் எதிர் நின்று 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சேதச், சந்தனமென் முரோ தடவினர்' என்னும் நந்திக் கலம்பகப்பா வடிகளைக் கூறக் கேட்ட ஊர் காவலன் அவ னைப் பிடித்து அரசனிடங் கொண்டு சென்றான். அவ் விரண்டடி களைக் கேட்ட நந்தி 'மற்றை இரண்டடிகளையுஞ் சொல்லுக' என, இளவல் 'பைந்தமிழை, ஓய்கின்ற கோனந்தி யாகந் தழுவா மல், வேகின்ற நெஞ்சே விளைந்து' என்றது கேட்டு அவன் பாடிய கலம்பக முற்றுங் கேட்க விரும்பி அதனை அறிவிக்க, அதற் கவன் 'அந்நூலை இம் முறையிற் கேட்டல்வேண்டும். நீ பல்லக் கேறி இடுகாடுசேர்ந்து சந்தன விறகுகள் கொண் டடுக்கிய சிதை யின்மீது இருந்து கேட்டல் வேண்டும்' என்றான். அமைச்சன் பலவாறு தடுத்துங் கேளாது அரசன் 'வருவது வருக, நூல் கேட் டலே துணிவு' என்றுரைத்து அவ்வாறே இருந்து கேட்குமள வில் வாவாத் தாதுக்கள் ஒடுங்கிவந்து நூல் முற்றிய வளவில் தன் கணையாழியைக் கழற்றிக்கொள்ளும்படி தம்பிக்குச் சமிக்கை செய்து சாய்ந்து பட்டான்.

இனி, அவன் சொற்படி தான் காட்டிற்கும் அரண்மனைக்கும் நடுவில் வரிசையாய்த் தொண்ணூற்றொன்பது பந்தர் இட்டு ஒவ் வொரு பந்தரில் நின்று ஒவ்வொரு கவிகேட்டு அப் பந்தர் ஒவ் வொன்றும் உடனுக்குடன் வெந்துபோவதைக் கண்கூடாகக் கண் டும் நந்தித் தொண்டைமான் கலியின்பத்தையே வியந்து முற்றக் கேட்டு மீண்டனனென்பர் ஒரு சிலர். அரசன் இறந்தபின் கலம்

பகம் பாடிய அவன் தம்பியாகிய குலமகன் கொல்லாபுரிச்சந்திர னென்பான் முடிசூட்டத் தொண்டைநாட் டரசனுயினன்.

"பொள்ளா நுழைவழிப் பொய்த்தலை நீட்டும் புலவன்முன் சொல், கள்ளாருஞ் செஞ்சொற் கலம்பக மேகொண்டு காயம் விட்ட, தெள்ளாறை நந்தி யெனுந்தொண்டை மான்கலி தீர்ப்ப தற்கு, வள்வார் முரச மதிர்த்தாண் டதுந்தொண்டை மண்டலமே,' வெல்லாமல் வென்றுதற் சந்தனக் காட்டத்தின் மேலிருந்து, நல் லாறை நந்தி கலம்பகங் கேட்டபி னற்றுணைக்குக், கொல்லா புரி சந்தான் மாமுடி சூட்டக் குடைகவித்து, மல்லார் புரித்தொண்டை மானனை துந்தொண்டை மண்டலமே' என்னுந் தொண்டைமண் டல சதகப் பாட்டுக்களும், 'வானுள மதியை யடைந்ததுன் வதனம் வையக மடைந்ததுன் கீர்த்தி, காணுறு புலியை யடைந்ததுன் வீரங் கற்பக மடைந்தவுன் கரங்கள், தேனுறு மலரா ளரியிடஞ் சேர்ந்தாள் செந்தழல் புகுந்ததுன் மேனி, யாளுமென் கவியு மெவ்விடம் புகுவே மெந்தையே நந்திரா யகனே' என்னும் நந்திக் கலம்பகப் பாட்டும் இங்கு நோக்கத்தக்கவை.

89-ஆம் அதிகாரம் : உட்பகை.

மாற்றுர் முடியும் வளைமையுங்கொண் டேகுகலக்
தோற்றுன் வழுதிமகன் சோமேசா—ஆற்றலிலா
எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு

முட்பகை யுள்ளதாங் கேடு. (அக)

அஃதாவது புறப்பகைக்கு இடனாக்கிக் கொடுத்து அது வெல்லுங் துணையும் உள்ளாய் நிற்கும் பகை.

89. (இ-ள்) சோமேசா-! ஆற்றல் இலா-வலியின்றி, உட்பகை—எள் பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்—(அரசனது) உட்பகை (அவன் பெருமையை நோக்க) எள்ளின் பிளவை பொத்த சிறுமை யுடைத்தே யாயினும், கேடு—(பெருமை யெல்லாம் அழியவருங்) கேடு, உள்ள

தாம்—அதன் அகத்ததாம், —(அதற்கு எடுத்துக்காட்டு) —வழுதிமகன்—வீரபாண்டியன் மகன், மாற்றார்—பகைவர், முடியும் வளமையும் கொண்டு ஏக—தனது முடியையும் செல்வத்தையுங் கவர்ந்துகொண்டு செல்ல, நலம் தோற்றான்—பெருமை இழந்தனன் (எ-று).

மிகப் பெரிதாகிய கேடு தனக்கு எல்லைவருமளவும் மிகச்சிறிய உட்பகையுள் அடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டு நிற்குமென்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறினர்., வழுதிமகன் என்பது 'சுடப்பட்டுயிருய்ந்த சோழன் மகனும் என்புழிப்போலப் பாண்டியன் முடிசூட்டப் பெறுத சிறுவன் என்னும் பொருட்டாயிற்றென்க.

கதை :—வீரபாண்டியற்குக் காமக்கிழத்தியர்பால் பல மைந்தர்கள் பிறந்தும், அவனும் அவன் தேவியும் பல விரதங்களை நோற்றுச் சுந்தரேசப்பெருமான் திருவருளால் ஒரு மைந்தனைப்

பெற்றார்கள். பெற்ற சில நாளைக்கெல்லாம் வீரபாண்டியன் வேட்டைமேற் சென்று காட்டிற் புலிக்கோட்பட்டான். இதனை யறிந்த காமக்கிழத்தியர் மைந்தர்கள் சோர்வு நோக்கிப் பண்டாரத்தி லுள்ள செல்வத்தையும் கிரீடத்தையும் கவர்ந்தார்கள். மந்திரிமார் குலமகனைக்கொண்டு வீரபாண்டியற்குச் செய்யவேண்டிய கடன் யாவும் நிரப்பிய பின்னர் அவனுக்கு முடிசூட்ட எண்ணிப் பண்டாரத்தைத் திறந்தார்கள்; அங்கு நவமணி மகுடத்தைக் கண்டா ரில்லை. அதனால் 'என் செய்வோம், வேறுமுடி அமைத்தற்கு ஏற்ற மாணிக்கமில்லையே' என்று வருந்தி மைந்தனை அழைத்துக் கொண்டு மதுரேசன் சந்நிதி புகுவார் கோபுரவாயிலில் மாணிக்க வியாபாரியாகிய ஒரு வணிகன் வரக் கண்டார். அவ் வணிகனும் அவர்கள் குறையை விசாரித்தறிந்து தான் அவர்களுக்கு வேண்டிய நவரத்நந் தருவதாகக் கூறிப் பல ரத்நங்களை எடுத்துக்காட்டி அவற் றின் தோற்றம், செயல் குண முதலியவற்றை விளக்கி மணிமுடி யமைத்தற்கு வேண்டிய ரத்னங்களைத் தெய்வம் பரவி ஆசீர் வதித்துத் தாமைந்தனும் அவற்றை இரண்டு கைகளையும் விரித்தேற்

றான். அப்போது வணிகன் மைந்தனையும் மந்திரிகளையும் நோக்கி 'இம்மணிகளான் முடியமைத்துச் சூட்டுக. மைந்தனை அபிடேக பாண்டியனென் றழைக்க' என்றான். அதன்பின் மந்திரிகள் அவ் வணிகற்கு விலைகொடுக்க வேண்டிப் பொன் கொணர்ந்து பார்க்க அவனை அங்குக் கண்டாரில்லை. அங்ஙனமே விடையின்மேல் உமையாளோடு பெருமான் திருக்கோயிலிற் புகக் கண்டனர். வந்த

வணிகன் பெருமானென்று அவன் கருணைத்திறத்தை வியந்து துதித்து அவன் பண்ணத்தண்ணமே திருமுடியமைத்து மகுடந் தரித்தனர். 'மற்ற வேலகா மக்கிழத் தியர்பெறு மைந்த, ரற்ற நோக்கியீ தமையமென் ருனமா வாதி, யுற்ற பல்பிற பொருணிதி யொண்கல லேடுங், கொற்ற மௌலியுங் கவர்ந்தனர் கொண்டு போய் மறைந்தார்' என்னும் புராணப்பாட்டைக் காண்க.

[இது திருவிளையாடற்புராணத் துளது].

90 – ஆம் அதிகாரம் : பெரியாரைப் பிழையாமை.

கொன்படைக ணீருகக் கோசிகனுர் சாபத்தாற்
றுன்பமுற்றுர் கால்வேந்தர் சோமேசா—இன்புதவும்
ஏந்திய கொள்கையார் சிறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (கூ0)

அஃதாவது பெரியாராயினுரை அவமதித்து ஒழுகாமை.

90. (இ-ள்) சோமேசர்—! இன்பு ஈதலும் ஏந்திய கொள்கையார்—(எல்லா வுயிர்கட்கும்) நன்மையைச் செய்கின்ற சிறந்த விரதங்களை யுடையாராகிய' பெரியோர், சிறின்-வெகுள்வாயின், வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும்—இந்திரனும் இடையே தன் பதம் இழந்துகெடும், (அதற்கு எடுத்துக்காட்டு)—கோசிகனுர் சாபத்தால்—கோசிக முனிவரது சாபத்தால், கால்வேந்தர்—நான்கு ஆசர்கள், கொன் படைகள் நீறு ஆக துன்பம் உற்றுர்—

பெருமையுடைய (தமது) சேனைகள் சாம்பராய் அழிந்து போகத் (தாங்களுந்) தன்பமடைந்தார்கள் (எ-று).

வேந்தன் என்பது இந்திரனென்னும் பொருட்டாதலி 'வேந்தன் மேய தீம்புன லுலகமும்' என்னுந் தொல்காப்பியத்தானு மறிக. சுகுடனென்பான் நூறு அசுவமேத முடித்து இந்திரபதம் பெற்றுப் பெருங்களிப்போடு சிவிகையேறிச் செல்கின்ற காலத்து இந்திராணிமேல் வைத்த காதன் மிகுதியால் தன் சிவிகை தாங்கிச் சென்ற எழுமுனிவருட் குறுமுனிவராகலின் மெல்லென நடந்த அகத்தியரை நோக்கி, 'ஸர்ப்ப, ஸர்ப்ப (ஓடு, ஓடு)' என்று கூறினனாக, அகத்தியர் வெகுண்டு 'நீ ஸர்ப்பமாகுக' என்று சபிக்க, அதனால் அப் பதம் இழந்து உடனே பாம்பாகி நிலத்தில் விழுந்தனனென்னும் வரலாற்றை யுட்கொண்டு இவ்வாறு கூறினர். இதனை, 'சுகுடஞ்சேர் பரிமகநூ றியற்றிவா னரசுகன்னல் சுவைபோற் பெற்றான், சகுடம்போ லவன்மனதிற் சகிகாமம் பிடித்தலைப்பத் தலைகீ ழாக, மகுடம்போய் வானகம்போய் வையகம்போ யரசு போய் மலைப்பாம் பாக, நகுடன்போ யிறந்ததையறியாயோ தெரியாயோ நவினத் தாரோய்' என்னுந் திருக்குற்றாலப் புராணச் செய்யுளானு மறிக. கொன்—அச்சமுமாம். உம்மை உயர்வு சிறப்பு.

கதை:—கௌசல தேயத்தரசனை கௌசிகனென்னும் அரசற்கு அயை முதலிய நான்கு புத்திரிகளிருந்தனர். அவர்கட்குப் பருவம் வந்தவளவில், கௌசிகன் சுயம்வரங் கோடித்து எல்லாத் தேயங்கட்குஞ் செய்தி தெரிவிக்க வந்து கூடிய அரசர்களுள் கேடதேயத்தரசனை மகேந்திரனையும், காம்போசதேயத்தரச

னன சானந்தனையும், அங்கதேயத்தாசனன கீர்த்திமாலியையும், கொங்கணதேயத்தாசனன விசால நேத்திரனையும் அந் நான்கு மங்கையரும் முறையே தமது விருப்பின்படி மாலைசூட்டி மணம் புரிந்தனர். அந் நான்கு அரசர்களும் சில நாள் அங்குத் தங்கி மாமனரிடம் விடை பெற்றுத் தேரேறிச் சேனைகள் சூழத் தத்தம் நகர்நோக்கிப் புறப்படுகையில், கோசிக முனிவர் எதிர்ப் பட்டு அவர்களை அழைக்க வாத்திய கோஷத்தாலும் சேனையின்

ஆரவாரத்தாலும் அவ் வொலி கேளாராக, முனிவர் தம்மை அவமதித்தாரெனக் கொண்டு சீறி நோக்கிய வளவிற் சேனைகள் யாவும் வெந்து சாம்பராயின. அதுகண்ட அரசர்கள் முனிவரை அணுகித் தம்பாற் குற்றமின்மை கூறவும் அவர் சினந் தணியாராய் அவர்களை நோக்கி 'உங்கள் கண்கள் காணுதனவாக நீங்கள் மாதரொடு சேரிற் றலைவெடித்திறக்க ; நாடுகடந் தூறந்து வனஞ்சென்று வருந்துக' என்று சபிக்க அவர்கள் அவ்வாறே பெருந் துன்பமடைந்தார்கள். வாம்பரித்தடந் தேருறை மன்னரு மனையார், தேம்பு சிற்றிடைத் தேவியார் நால்வரும் நீரக், கூம்பு டைக்கொடித் தேர்முதற் சேனையுங் குழுவுஞ், சாம்ப ராயின வருந்தவன் கடுஞ்சினத் தழலால்,' 'தெளித்த மாதவக் கோசிக னடுசினத் தீயாற், களித்த யானையுஞ் சேனையுஞ் சாம்பராய்க் கழிய, வெளிப்படும்புல னிழந்திரு செவிப்புலன் வீயக், குளிர்த்த கல்லரு லிப்பனங் குறுகின ரிவர்கள்' என்னும் புராணச் செய்யுள் காண்க.

[இஃது உபதேசகாண்டத் தினது].

---

91 - ஆம் அதிகாரம் : பெண்வழிச் சேறல்.

கற்பின்மை யில்லாள்பாற் கண்டுமய லுற்றழிந்தான்
சொற்புண்ட ரீகாக்கன் சோமேசா—பொற்பெண்ணி
இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும். (கூக)

அஃதாவது தன் வழி ஒழுகற்பாலளாகிய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்.

91. (இ-ள்) சோமேசா—! இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை—ஒருவன் மனைவிமாட்டுத் தாழ்தற்கேது வாகிய அச்சம், நல்லாருள் நாணு ஞ்ஞான்றும் தரும்—அஃதிலாய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும்,—(அதற்கு எடுத்துக் காட்டு)—சொல் புண்டரீகாக்கன்—புகழுடைய புண்டரீ

காக்ஷனென்னும் வைணவ அந்தணன், இல்லாள்பால் கற்பு இன்மை கண்டும்—தன் மனைவிமாட்டுக் கற்பில்லாமையைக் கண்டு வைத்தும், பொற்பு எண்ணி மயல் உற்று அழிந்தான்—(அவள்) அழகை நினைத்து மயக்கங் கொண்டழிந்தான் (எ-று).

அவள் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின் அவளை அஞ்சுதல் இயல்பின்மையாயிற்று. அங்ஙனம் அஞ்சி ஒழுகுதலின், அவளை நியமிப்பாரில்லையாம்; ஆகவே, எல்லாக் குற்றமும் விளையுமென்பது நோக்கி 'எஞ்ஞான்றும் நாணுத் தரும்' என்றார்.

கதை:—கோமேதகத் தீவின்கண் வாழ்ந்த விசிட்டனென்னும் அந்தணற்கும் சுவேதை யென்னும் குலபத்தினிக்குஞ் சித்திரரேகை என்னும் பெண் பிறந்தாள். இவள் மிக்க வடிவழகுடையாள். இவளை அத் தீவிற் பூச்சக்கரமென்னும் ஒரு நகரத்தில் வாழ்ந்த அரிசன்மன் மகன் புண்டரீகாக்ஷன் மணந்தான். இவன் வைணவத்தலைமை பூண்டோன்; இடைவிடாது லக்ஷ்மீகாந்தனைத் தியானிக்கும் பெற்றியோன். ஆயினும், தன்மாட்டிளமைமீதூர்ந்தமையானும் மனைவி பேரழகினளாதலானும் அவள் போகத்தையே சிலநாள் விரும்பிக் கிடந்தான். மனைவி பேரழகுடையளேனும் அவண்மாட்டு மாட்சி யில்லை. தன் நாயகனுடைய மாணக்கனென்றும் நண்பனென்றும் பிறனென்றும் பாராது வியபசரித்தாள். இங்ஙனம் நிகழ்வுழி ஒருநாள் புண்டரீகாக்ஷனிடத் துருவாசமுனிவர் வர அவரைக் கண்டு அவன் நன்குபசரித்து இல்ல மழைத்துச் சென்று ஆசனத்திருத்திப் போசனத்திற்குத் தங்கும்படி வேண்டி மனைவியைச் சமைக்க ஏவினன். அவளுஞ் சமைத்தான பின் முனிவர் தனித்திருந்த இடத்திற் சென்று அவர் பெருமை யறியாது கலவியை விரும்பித் தழுவ அவர் விழித்துப்பார்த்த வளவில் அஞ்சி ஓடி ஓர் ஆலமரத்தடியில் ஆட்டுமந்தை யிடையி லொளித்தாள். முனிவர் யோகபலத்தால் அவளிருந்த விடத்தை யறிந்து வைணவத் தலைவனை நோக்கி 'உனது மனைவி இன்ன ஆலமரத்தடியில் ஆட்டுமந்தை யிடையிலிருக்கின்றனள். அவளை அம் மரத்துச்சியில்

வற்றுவாய்' என்று கட்டளையிட அவனுஞ் சென்று அங்கு அவளைக் கண்டு அவளைப் பிடித்து அவ்வாலமரத்துச்சியி லேற்றினன்.

அவள் அங்குச் சினைகளாடுந்தோறும் மனம் வருந்தி அலறினாள்; கொம்பைப் பிடித்துக்கொண்டு குலுங்கினாள். அந்தணன் அவள் பிரிவாற்றாது கலங்கித் திருவாசரை யடைந்து "அடிகளே! எனது மனைவியை யான் பெற விரும்புகிறேன். அவள் ஆலமரத்தைவிட்டிறங்கிவரும்படி திருவருள் செய்யவேண்டும் என்று குறையிரப்பத் திருவாசமுனிவர் அதுகேட்டு வியப்புற்று "அங்ஙனமாயின், அவ்வாலடி சென்று 'மனைவி ! வருக என்க' என்றார். அந்தணனும் அங்குச் சென்று அங்ஙனங் கூறியவளவில் அவள் நான்கடி இறங்கினாள். அந்தணன் மறுபடி ஓடிவந்து நிகழ்ந்தது கூறி வருந்தினான். அப்போது முனிவர் " அவனிடத்து இன்பந் துய்த்த ஆடவர் யாவருஞ் சென்று 'இறங்கு' எனக் கூறின் இறங்குவள் " என்றார். அதற்கிணங்கி அத்தகைய ஆடவர்களே எவ அவர்கள் 'இறங்கு' எனக் கூறியபோதும் பாதிமரம் இறங்கினாள். அதனையும் அறிவித்து வேண்ட முனிவர் 'உன் மாணைக்கர் யாவரும் அங்ஙனங் கூறின் இறங்குவள்" என்றார். அவர்கள் அவ்வாறு அழைத்தபோது அடிக் கலைவக்கு வந்தாள். அந்தணன் அது கூறி அழ முனிவர் 'அவள் தன்பால் இன்பநுகர்ந்தார் பெயர்களே எல்லாம் கூறின், இறங்குவள்' என்றார். அதனை அந்தணன் அவளுக்கு அறிவிப்ப அவள் ஆசை நாயகர் பெயர்களே எல்லாங் கூறினாள். அப்போது அவள் கிழ்க்கலைவக்கு வந்து தங்கினாள். அதன்பின் முனிவரும் அவ் வாலடிசென்று அந்தணனைப் பலவாறு இகழ்ந்து கூறி " நீ சைவனுகாது புறச்சமயத்தவனாய்ப் போக " என்றும், அவன் மாணைக்கரை நோக்கி " நீங்கள் குருபத்தினியைக் கூடினதால் உங்கள் மனைவிமார் வேசையராகுக " என்றும், அவளை

நோக்கி "எம்மை மேல்விழுந்து தீண்டலாலும் ஆட்டுமந்தையில் ஒளித்தலாலும் நீ அசாகுலத்தில் ஆட்டு முகத்துடன் பிறக்க" என்று சபித்தார்.

[இஃது உபதேசகாண்டத் தளது].

சோமேசர் முதுமொழி வெண்பா 155

92-ஆம் அதிகாரம் : வரைவின் மகளிர்.

வேண்டு முருப்பசியைப் பார்த்தன் வெறுத்தனனே
தூண்டு மறைப்பரியாய் சோமேசா—யாண்டும்
பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர். (கூஉ)

அஃதாவது தந்நலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்ப தன்றி அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவிலாத மகளிரது இயல்பு.

92. (இ-ள்) தூண்டு மறை பரியாய்—செலுத்து கின்ற வேதமாகிய குதிரையுடையாய்! சோமேசா—! யாண்டும்—எக்காலத்தும், மதி நலத்தின் மாண்ட அறி வி னவர்—இயற்கையாகிய மதி நன்மையான் மாட்சிமைப் பட்ட செயற்கை அறிவினையுடையார், பொது நலத்தார் புன்மை நலம் தோயார்—(பொருள் கொடுப்பார்க் கெல் லாம்) பொதுவாகிய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—பார்த்

தன்–அருச்சுனன், வேண்டும் உருப்பசியை வெறுத்தனன் —(தன்னை) விரும்பிய ஊர்வசியை வெறுத்தான் (எ–று).

மதி–நன்மை—முற்பிறப்பிற் செய்த நல்வினைகளான் மனந் தெளிவுடைத்தாதல். அதனாலன்றிக் கல்வி யறிவு மாட்சிமைப் படாமையின் 'மதிகலத்தின் மாண்ட வறிவினர்' என்றும், அவ் வறிவுடையார்க்குப் பொதுமகளிரது ஆசையின் பொய்ம் மையும் மெய்ந்நலத்தின் பொதுமையும் விளங்கித் தோன்றலின் "தோயார்" என்றுங் கூறினர்.

கதை:—அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற பின் இந்திரன் தோன்றி அவனைக் கற்பகநாட்டிற்கு அழைத்துச் சென்று கொலு மண்டபத்தின்கண் அவனோடு ஓ ராசனத்திருந்து ஊர்வசியை நடிக்க ஏவினன். அருச்சுனன் அந் நாடகத்தைக் கண்டு மிக மெச்சி

னன். சூரியாஸ்தமனமானபின் இந்திரன் அருச்சுனனை ஒரு மாளி கையி லிருக்கச்செய்து தன்னகம் புக்கனன். அருச்சுனன்பால் மோகங்கொண்ட ஊர்வசி அன்றிரவு அவன் இருந்த மாளிகைக்கு வர அருச்சுனன் அவள் தன் தந்தையாகிய இந்திரற் குரியவளாக லின் தாயென்னு முறைபற்றி அவளடிகளில் வீழ்ந்தான். அப்போது ஊர்வசி கோபங்கொண்டு "யான் உனது தோள்களைத் தழுவுதற்கு வர இவ்வாறு பழித்தனையாகலின், நீ பேடியாகுக" வென்று சபித் தாள். அருச்சுனன் மனம் நொந்து ஒரு வத்திரத்தான் உடம்பை

மூடிக்கொண்டான். போது விடிந்தது. இந்திரன் ஒரு கந்தருவனை அருச்சுனனை அழைத்து வரும்படி விட, அவன் அருச்சுனற்கு நேர்ந்தமை கூற, இந்திரன் வருந்தி மைந்தனை அணுகி ஒருவாறு தேற்றி ஊர்வசியை யடைந்து அவன் வேண்டும்போது அப் பேடியுருவம் வருமாறு அருளவேண்டு மென்ற வரம் பெற்றனன்.

[இது பாரதத் துளது].

93-ஆம் அதிகாரம்: கள்ளுண்ணாமை.

தக்கன்பான் ஞானத் தநிசியுப தேசமெல்லாந்
தொக்கதனு லானதென்னே சோமேசா—மிக்குக்
களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. (கூஅ)

அஃதாவது கள்ளினை யுண்ணாமை.

93. (இ-ள்) சோமேசா—! மிக்கு களித்தானை காரணம் காட்டுதல்—மிகக் கள்ளுண்டு களித்தா னொருவனை (இஃதாகா தென்று பிறனொருவன்) காரணங்காட்டித் தெளிவித்தல், கீழ் நீர் குளித்தானை தீ தூரீஇ அற்று—நீருண் மூழ்கினை னொருவனைப் பிறனொருவன் விளக்கினுல் தேடுதலை ஒக்கும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—ஞானம் தநிசி உபதேசம் எல்லாம் — ஞானத்தையுடைய தநிசி

முனிவரது உபதேசமெல்லாம், தக்கன் பால் — தங்கு னிடத்தே, தொக்கதனுல் ஆனது என் — ஒன்று கூடியதனு லாகிய பயன் என்ன? ஒன்றுமில்லை (எ-று).

களித்தானை என்பது வேற்றுமை மயக்கம்; நான்காவதன் உருபு நிற்கவேண்டியவிடத்தில் இரண்டாவதன் உருபு நிற்றலின். நீருள் விளக்குச்செல்லாத வாறுபோல அவன் மனத்துக் காரணஞ் செல்லா தென்பதாம்.

கதை:—தக்கன் தான் மாமன் என்னும் மதத்தாற் சிவபிரானை இகழ்ந்து அவனை நீங்கி ஓர் யாகஞ் செய்ய எண்ணி யாகசாலை ஒன்றமைத்துத் தேவர் முனிவர் முதலியோர்க்குத் தூதரைவிட மற்றியாவரும் யாகத்திற்கு வர இசைய அகத்தியன், ஸனகாதியர், அத்திரி, வசிட்டன், பிருகு, கதீசி, பாசான் ஆகிய இவர்கள் வாரோமென் றறிவித்தார்கள். அதைக் கேட்டுத் தக்கன் வெகுண்ட வளவில் கதீசி முனிவர் அங்கு எழுந்தருளி அவற்குச் சிவபரத்வ முதலியவற்றை இனிது உபதேசித்தும் அவன் அம் முனிவர் மொழியாற் சிறிதும் பயன் எய்திலனில்லை.

[இது கந்தபுராணத் துளது].

94-ஆம் அதிகாரம்: சூது.

மூற்பணையத் தாற்றின்னு மூண்டிழந்தார் சூதொடு
சொற்படுஞ்சூ தாடினோர் சோமேசா — அற்பமாம்
மூன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு மூண்டாண்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு. (கூசு)

அஃதாவது அறம் பொருள் இன்பங்கட்குத் தலையாகிய சூதாடல்.

94. (இ-ள்) சோமேசா—! சூதொடு—சூதாடல் வல்லாரோடு, சொற்படும் சூது ஆடினோர்—(நூல்களான் மறுத்துச்) சொல்லப்படுஞ் சூதாட்டத்தை ஆடினவர்கள்,

முன் பணயத்தால்—முன்வைத்த பந்தயப் பொருளைப் பெறுதலால், பின்னும் மூண்டு — மேலும் (ஆடுதற்கு) ஊக்கங்கொண்டு, இழந்தார்—(கைப்பொருள்யாவும்) இழந்தார்,—அதனால்,—அற்பமாம் ஒன்று எய்தி—(தூண்டிற் பொன்போன்ற) அற்பமாகிய தொரு பொருளை முன் பெற்று, நாறு இழக்கும் சூதர்க்கும்—(இன்னும் பெறுதும் என்னுங் கருத்தால்) நாற்றினை இழந்து வறியராஞ் சூதர்க்கும், நன்று எய்தி வாழ்வது ஓர் ஆறு உண்டாங் கொல்—பொருளால் அறனும் இன்பமும் எய்தி வாழ்வ தொரு நெறியுண்டாமோ? ஆகாது. (எ-று).

ஒன்றற்கு நூறாகப் பொருள் விழுந்தே வருதலின், அதனால் எய்தும் பயனும் அவர்க் கில்லை யென்பதாம். சொற்படும்—என்பது 'செய்தக்க' என்றாற் போல நின்றது.

95—ஆம் அதிகாரம் : மருந்து.

நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெங்கோய்
சொல்லரசர் தீர்த்துய்த்தார் சோமேசா—புல்லிய
கோய்காடி கோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்காடி வாய்ப்பச் செயல். (கூடு)

அஃதாவது பழவினையானும காரணங்களானும் மக்கட்கு வாத முதலிய பிணிகள் வரும்; அவற்றுட் பழவினையான் வருவன அதன் கழிவின்க ணல்லது தீராமையின் அவை யொழித்து, எனைக் காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் நிறம். காரணங்களாவன உணவு செயல்களது ஒவ்வாமை யாகலின், பிணி களுங் காரணத்தான் வருவன வாயின.

95. (இ-ள்) சோமேசா—! சொல்லரசர்—திருநா வுக்கரசு நாயனார், நல்ல திலகவதியார் மொழியை நம்பி—
சோமேசர் முதுமொழி வெண்பா 159

நன்மையுடைய திலகவதியார் என்னும் தமது தமக்கையார் வார்த்தையை நம்பி, வெம் நோய்—கொடிய சூலை நோய், தீர்ந்து உய்ந்தார்—நீங்கிப் பிழைத்தார்,—அதனால்—புல் லிய தன் நோய் நாடி—(இடையிற்) சேர்ந்த தனது நோயை அதன் குறிகளால் இன்னதெனத் துணிந்து, நோய் முதல் நாடி-பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய் நாடி—பின் அது தீர்க்கும் உபாயத் தினை அறிந்து, வாய்ப்ப செயல்—(அதனைச் செய்யுங்காற்) பிழையாமற் செய்க (எ-று).

காரணம்-உணவு செயலென முற்கூறிய விரண்டும். அவற்றை ஆயுள்வேத முடையார் நிதான மென்ப. அவை நாடுதற்பயன்— நோயினையும் வாயினையும் ஐயமறத் துணிதல். மருந்து செய்தல், உதிரங் களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு 'அது தணிக்கும் வாய்' என்றார். வாய்—வழி; புற நானூற்றிலும் "கழுவாயுமுள" என்றிருத்த லறிக. பிழையாமை-பழைய மருத்துவர் செய்து வருகின்ற முறை தவறாமை. 'நல்ல' என்பதனை 'மொழியை' என்பதனோடு முடிப்பினுமாம்.

கதை:—திருநாவுக்கரசு நாயனார் சைவசமயத்தை விட்டுச் சமணசமயத்தை மேற்கொண்டு அச் சமயநூல் முண்பொருளுணர்ந்து அச் சமயத்தார்க்குக் குருவாய் இருக்கையில் ஒரு நாள் நாயனாரது தமக்கையாராகிய திலகவதி யம்மையார் நிருவதிகை வீரட்டானேசரை வணங்கி வழிபடுவார், தமது தம்பியாரை நினைத்துப் 'பெருமானே! என் தம்பியைச் சமணப் படுகுழியினின்றும் எடுத்தருளல் வேண்டும்' என்று பிரார்த்திக்கப் பெருமானும் 'அம்மை! அஞ்சல்! யான் உனது தம்பிக்குச் சூலை நோய் தந்து ஆட்கொள்வன்' என் றருள்புரிந்தார். உடனே நாயனாருக்குச் சூலைநோய் கண்டு வரவர வலி மிக்கது. சமணர்கள் என்ன என்னவோ பரிகாரங்கள் செய்தார்கள்; செய்யச் செய்ய நோய் பொறுக்க முடியாதாயிற்று. அதன்மேல் நாயனார் தம் தமக்கை

யார்பாற் சென்று நோயின் கொடுமை கூற, அவ் வம்மையாரும்

'திருவதிகை வீரட்டானேசர்க்குத் திருத்தொண்டு செய்க' என்று கூறித் திருநீறிட்டுக் கோயிற்கு அழைத்துச் செல்ல, அங்குப் பெருமான் சன்னிதி புக்கதும் நாயனார்க்குப் பாமாலை சாத்தும் ஞானமுண்டாக, அவர் 'கூற்றாயின வாறு' என்று தொடங்குந் திருப்பதிகமோதினார். உடன் நோய் நீங்கிற்று.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

96-ஆம் அதிகாரம் : குடிமை.

மங்கலியம் விற்றும் வழுதுபணி செய்துவந்தார்
துங்கமறை தேர்கலையர் சோமேசர்—வங்கண்
வழங்குவ துளவீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. (கூசு)

அஃதாவது உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை. உயர் குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் உரிய தென்றறிக.

96. (இ-ள்) சோமேசர்—! பழங் குடி—தொன்று தொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார், அங்கண்—அப்போது, வழங்குவது—(தாங்) கொடுக்கும் பொருள், உள்வீழ்ந்தக் கண்ணும்—(பண்டையிற்) சுருங்கிய விடத்தும், பண்பின் தலைப்பிரிதல் இன்று—தம் பண்புடைமையின் நீங்கார்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—துங்கம் மறை தேர் கலையர்—உயர்ச்சியுடைய வேதம் வல்ல கலை நாயனார், மங்கலியம் விற்றும—(தமது மனைவியாரது) மங்கலியத்தை

விற்றும், பணி வழாது செய்து வந்தார்—தமது குங்கிலிய தூபமிடுந் திருப்பணியைத் தவறுதுசெய்துவந்தனர்(எ-று).

தொன்று தொட்டு வருதல்—சேரசோழபாண்டிய மென்றாற் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு

வறுமையாவது வழங்குவது உள்விழ்வதாகலின் அதனையே கூறினார்.

கதை:—சோழநாட்டில், திருக்கடவூரில் அந்தணர் குலத்திற் கலயனார் என்பார் பெருமானுக்குக் குங்கிலியதூப மிடுகின்ற திருப்பணி செய்து வருகையில் வறுமை வந்தெய்தவும் மனஞ் சோராது நிலம் அடிமை முதலிய யாவும் விற்றுத் தமது திருப்பணியை நடத்தி இனி விற்பதற் கொன்றுமில்லையாக, மக்களுஞ் சுற்றமும் வலுனின்றி வாடினமை கண்டு தமது மனைவியார் நெற் கொணர்ந்துத் தந்த அவர் மங்கலியத்தை விற்கப் புக்கு எதிரிற் குங்கிலியப் பொதி கண்டு அம் மங்கலியத்தைத் தந்து அதை வாங்கி ஆலயஞ் சென்று அதைப் பண்டாரத்திலிட்டு அங்கிருந்தார். அவர் வீட்டின் மனைவி மக்கள் பசி பொறாது உறங்கிலர்கள். அப்போது பெருமான் நாயனார் வீடு முழுவதும் பொன்னும் நெல்லும் பிறவளமும் நிறைத்து அவர் மனைவியார் கனவில் எழுந்தருளி அதனை அறிவித்தார். மனைவியார் விழித்தெழுந்து பல வளமுங் கண்டு மகிழ்ந்து தமது கணவர்க்கு அழுது சமைக்க முயன்றார். அதன்மேல், பெருமான் கலயநாயனருக்குத் தோன்றி 'வீடு சென்று பாலும் அடிசிலும் உண்டு பசி தீர்க' என, அவ் வாணையை மறுக்க வஞ்சி நாயனார் வீடு புகுந்தார்; நிதிகளைக் கண்டார். அன்று முதல் சிவனடியார்க்குத் திருவமுது செய்வித்து மகிழ்ந்து வாழ்ந்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

97-ஆம் அதிகாரம் : மானம்.

அச்சுவத்தா மாப்பட்டா னென்ன வமர்துறந்தான்
துச்சி துரோணனென்பான் சோமேசா—நச்சு
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின். (கூள)

அஃதாவது எக்காலும் தம் நிலையிற் ருழாமையும், ஊழாற் ருழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்.

11

162 சோமேசர் முதுமொழி வெண்பா

97. (இ-ள்) சோமேசா—! நச்சும் மயிர் நீப்பின் வாழா கவரிமா அன்னர்—(தான்) விரும்புகிற (மயிர்த் திரளின்) ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானையொப்பார், மானம் வரின்—(உயிரை நீத்தலான்) மானம் (எப்தும் எல்லை) வரின், உயிர் நீப்பர்—(அவ்) வுயிரைத் தாங்காது இறப்பர்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—துச்சில் துரோணன் என்பான்—ஒதுங்கியிருந்த துரோணன் எனப்படுவான், அச்சுவத்தாமா பட்டான் என்ன—(தருமபுத்திரன்) அச்சுவத்தாமா இறந்தான் என்று சொன்னவளவில்,

அமர் குறைந்தான்—போரை விட்டு உயிர் நீங்கினான்(எ-று).

'நீப்பின்' என்புழி இழிவு சிறப்புமை விகாரத்தாற் றொக்கது. உயிரும் மானமும் உடன் நில்லாதபோது, பின்னும் போவதாய உயிரை நீத்து என்றும் நிலைபெறுவதாய மானத்தை எய்துவ தென்பதாம். உவமை அவர்க்கு அபிநியமென்பது விளக்கி நின்றது. மரீசி அகத்தியன் முதலிய முனிவர்கள் வந்து 'போராண்மை அரசர்க்குரியது; உமக்குக் கோபம் வேண்டா; மனத்தை ஒரு நிலைப்படுத்துக' என்றகூற, அவ்வளவில் போரில் ஆசை கடவாது மனம் ஒடுக்கம் எய்துதலின் 'துச்சில் துரோணன்' என்றார்.

கதை:—பதினைந்தாம்போரில் திருட்டத்துய்மன் துரோணனை எதிர்த்து நிற்கையில் கண்ணன் போதனையால் தருமபுத்திரன் அச்சுவத்தாமா என்னும் யானையொன்று இறக்குந் தறுவாயில், 'அச்சுவத்தாமா றத: குஞ்ச:' என்று கூறத் தன் மகன் அச்சுவத்தாமா இறந்தானென்று கொண்டு வில்லையும் அம்பையும் இட்டுத் துரோணன் உயிர் துறந்தான்.

[இது பாரதத் தொளதி].

---

98 - ஆம் அதிகாரம்: பெருமை.

தண்டி யடிகளிரு தாளிணைபே ணாதழிந்தார்
தொண்டராம் பேய்ச்சமணர் சோமேசா—மிண்டுஞ்
சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. (௯௮)

அஃதாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங் கூறாமை என்றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை.

98. (இ-ள்) சோமேசா—! பெரியாரை பேணி கொள்வேம் என்னும் நோக்கு—பெரியாரை வழிப்பட்டு அவர் இயல்பினை யாம் கொள்ளுதும் என்னுங் கருத்து, மிண்டும் சிறியார் உணர்ச்சியுள் இல்லை—மதத்தாற் பிழைக்குஞ் சிறியராயினார் மனத்தின்கண் உளதாகாது,—(அதற்கு எடுத்துக்காட்டு)—தொண்டர் ஆம் பேய் சமணர்—அடியாராகிய பேய் போன்ற சமணர்கள், தண்டியடிகள் இருதாள் இணை பேணாது அழிந்தார்—தண்டியடிகளையனாரது இரண்டு ஒப்பற்ற திருவடிகளை விரும்பாது அழிந்தார்கள் (எ—று).

குடிமை, செல்வம், கல்வி என்றிவற்றது உண்மை மாத்திரத்தில் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கு இயல்பென்று அமைந்திருப்பாரை வழிப்பட்டு அஃதுடையராதல் கூடாதென்பதாம். சமணமுனிவ ராகலின், 'தொண்டராம்' என்றும், பிறரை உண்மயக்குதலிற் பேய் போறலின்' 'பேய்ச்சமணர்' என்றுங் கூறினார்.

கதை:—சோழநாட்டில், திருவாரூரிற் பிறவிக் குருடரும் அகக்கண்ணால் அறவாழி யந்தணனாகிய தியாகேசப் பெருமானைக்

கண்டு பூசிக்கிறவருமான தண்டியடிகணாயனார் திருக்கோயிலுக்கு மேலைத்திசையிலுள்ள திருக்குளக்கரை யெங்குஞ் சமணர் பாழிகள் நெருங்கிய தறிந்து திருக்குளத்தைப் பெருக்கல் வேண்டிக் குளத்தி னுள் ஒரு தறியும் அதன் கரைக்கண் ஒரு தறியும் நட்டு இரண்டிற்

கும் ஒரு கயிறு கட்டி அதைத் தடவிச் சென்று மண்ணைக் கல்லிக் கொணர்ந்து கரையிற் கொட்டி வருநாளிற் சமணர் பொறாது மறுக்க அதற்கு அவர் செவி சாய்த்தாரில்லை. "கண்கடா மில்லை. செவியு மில்லையோ?" என்றவர் பரிகசித்துக் கூறி மண்வெட்டியை யுங் குறித்தறிகளையும் பிடுங்கி எறிந்தனர். அடிகள் மனம் நொந்து பெருமானைப் பிரார்த்திக்கப் பெருமான் சோழனது கனவில் எழுந் தருளி 'அடிகள் குறைமுடிப்பாய்' எனப் பணிக்கச் சோழன் விழித்தெழுந்து அடிகள்பாற் போந்து குறையறிந்து சமணர்களை அழைப்பித்து வினவ, 'அவர் தமது கண் பெறலும் எமது கண் கெட லுஞ் செய்வாரானால் யாங்கள் இவ்வூரை விட்டுச் செல்லுவம்' என் றார்கள். அடிகள் பெருமான் றிருவருளால் அவ்வாறே செய்ய அவர் கள் அவ்வூரை விட்டுச் சென்றார்கள். சோழன் அமண் பாழிகளை இடித்துத் திருக்குளத்தின் கரையைக் கட்டி நாயனார் திருவடி களைப் பணிந்து சென்றான்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது.]

99-ஆம் அதிகாரம்: சான்றாண்மை.

வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்

நுன்மை நெறித்தருமன் சோமேசா—பன்முறையும்
இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. (கூக)

அஃதாவது பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந் தற்றன்மை.

99. (இ-ள்) சோமேசா—! பன் முறையும்—பல காலும், இன்னு செய்தார்க்கும்-(தமக்குத்) தன்பமானவற்றைச் செய்தார்க்கும், இனிய செய்யாக்கால்—(சால்புடையார்) இன்பமானவற்றைச் செய்யாராயின், சால்பு என்ன பயத்தது-அச் சால்பு என்ன பயனையுடைத்து(ஒரு பயனையுமுடைத்தன்று),—(அதற்கு எடுத்துக்காட்டு)—தொன்மை

நெறி தருமன்—தொன்று தொட்ட அறவழியின்கண் நின்ற தருமபுத்திரன், வன்மை சுயோதனற்கும்—மனக் கடுமையுடைய துரியோதனனுக்கும், வானோர் சிறை மீட்டான்—தேவர்களது சிறையை மீட்டுதவினன் (எ-று).

இன்னு செய்தார்க்கும் என்புழி உம்மை இழிவு சிறப்பும்மை. அது அவர்கள் இன்னு செய்யப்பெறுதற் கேற்றவராதல் விளக்கி நின்றது. ஓகாரம் அசை. என்ன பயத்தது என்னும் வினா எதிர்மறைப் பொருட்டு. தாமும் இன்னு செய்வாராயின், சால்பாலொரு பயனுமில்லை என்பதாம்.

கதை :—பாண்டவர் சூதாடித்தோற்றுக் காடுறையும் நாளில், துரியோதனன் தன் பெருமையை அவர்களுக்குக் காட்ட வெண்

ணிக் குடும்பத்துடன் அக் காடு புகுந்து அவர்கட்கு எதிரில் தன் ராஜ போகத்தை யெல்லாம் அநுபவித்துக் காட்ட, இந்திர னேவலாற் சித்திரசேன னென்னுங் கந்தருவ மன்னன் சில தேவருடன் வந்து துரியோதனாதியரைக் கயிற்றாற் கட்டி வானத்திற் றூக்கிச் செல்ல முயல, அது கண்ட கண்ணன் முதலியோர் அவர்களுடன் பொருது தோற்றோடத் தருமபுத்திரர் கண்டு வீமார்ச்சுனர்களை விட்டு துரியோதனாதியரைச் சிறைமீட்டார்.

[ஞாதிகள் தமக்குட் பகைமை யிருப்பினும் பிறர்க்கிட்டா ரமற் சமயத்திற் சேர்ந்து கொள்ளுதலைக் குறித்து மீமாஞ்சையி லும் "குருபாண்டவ நியாயம்" என்றொரு நியாய மிருத்தல் காண்க].

[இது பாரதத் துளது].

100-ஆம் அதிகாரம்: பண்புடைமை.

உன்பணிக்கென் றோதிகள்கார்ச் செல்வ முதறியுறத்
துன்பமுற்றூர் சால்வணிகர் சோமேசர்—வன்புமிகும்
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ னன்பால்
கலத்தீமை யாற்றிரிக் தற்று. (கூ00)

166 சோமேசர் முதுமொழி வெண்பா

அஃதாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந் தொத்தொழுகுதல். பண் பெனப்படுவது பாடறிந்தொழுகல்' என்றார் கலித்தொகையினும்.

100. (இ-ள்) சோமேசா—! அன்புமிகும் பண்பி லான்—அன்புமிக்க தன்மையில்லாதவன், பெற்ற பெருஞ் செல்வம்—(முன்னை நல்வினையினு) லெய்திய பெரிய செல் வம் (ஒருவர்க்கும் பயன் படாது கெடுதல்), நன்பால்–நல்ல ஆவின்பால், கலம் நிறையால்—(எற்ற) கலத்தின் குற்றத் தால், நிரிந்தற்று —(இன்சுவைத் தாகாது) கெட்டாற் போலும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—நால் வணிகர்—நான்கு வணிகர்கள், உன் பணிக்கு என்று ஒதி—உனது திருப்பணிக்குத் தருவே மென்று சொல்லி, நல்கா செல் வம்—தாராத செல்வம், உதநி உற துன்பம் உற்றார்—கட லில் மிழத் துன்ப மடைந்தார்கள் (எ-று).

கலத்தினை என்பது மெலிந்து நின்றது. தொழிலுவமை யாகு விற் பொருளின்கண் தொழில் வருவிக்கப்பட்டது. செல்வத் தைப் படைக்கும் ஆற்றலிலாமைதோன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப் பயனும் கொள்ளுதற்கேற்ற இடமுடைமை தோன்றப் 'பெருஞ் செல்வம்' என்றுங் கூறினர். உற—காணப் பொருட் டில் வந்த செயவெனெச்சம்.

கதை :—யவன தேசத்தில் ஆதித்த புரத்தில் விச்சுவதத் என்பான் ஒரு வணிகன் இருந்தனன். அவற்கு நால்வர் மக்கள். அவர்கள்பால் ஆதித்தேச்சுரற் கடிமை பூண்ட அந்தணனொருவன் பன்னாள் நடந்தான். பெருமான் திருப்பணிக்குப் பொருள் தரு வதாகக் கூறி ஏமாற்றினர். அதனால் அவன் மனம் புழுங்கி மீண் டான். அதன்பின் அவர்கள் நால்வரும் கலத்திற் சரக்கேற்றிக் கடலோடினர். கலம் வழி தவறிச் சென்று சூழல்காற்றடிக்கக் கடலி லாழ்ந்தது.

101-ஆம் அதிகாரம் : நன்றியில் செல்வம்.

எல்லா மறையவர்க்கீக் தேவறியன் போலானுன்
சொல்லாருங் கீர்த்திரகுர் சோமேசா—கல்லதே
சிருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து. (கடை)

அஃதாவது தேடினவர்க்கும் பிறர்க்கும் பயன் படுதலில்லாத செல்வத்தினது இயல்பு.

101. (இ-ள்) சோமேசா—! நல்ல சிர் உடை செல்வர்—நன்மைமிக்க புகழுடைத்தாய செல்வத்தினையுடையாரது, சிறு துனி—நிற்குங் காலஞ் சிறிதாகிய வறுமை, மாரி வறம் கூர்ந்த (து) அனையது உடைத்து—(உலகத்தையெல்லாம் நிலைநிறுத்தும்) மேகம் வறுமை மிக்காற் போல்வதோ ரியல்பினை யுடைத்து,-(அதற்கு எடுத்துக்காட்டு)—சொல் ஆரும் கீர்த்தி ரகு—சொன்னிறைந்த புகழினையுடைய இரகு வென்பான், எல்லாம் மறையவர்க்கு ஈந்தே—(தன்னிடத்தவாய) பொருள்க ளெல்லாவற்றையும் அந்தணர்கட்குத் தந்தே, வறியன் போல் ஆனுன்—தரித்திரனைப்போல ஆயினுன் (எ-று).

துனி—வெறுப்பு; வறுமை அதனைச் செய்தலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் வறியான லிடத்

தும் அவ் வறுமை விரைவி னீங்குதலிற் பின்பு செல்வராய்ப் பயன்படுவ ரென்பது உவமையாற் பெற்றும். நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாதென்பதாயிற்று. எகாரம் தேற்றம்.

கதை :—சூரியவமிசத்திற் பிறந்த இரகு வென்னும் அரசன் ஒரு வேள்வி செய்து முடித்துத் தன் பண்டாரத்திலுள்ள பொருளை எல்லாம் அந்தணர்க்குத் தானஞ் செய்தான்.

[இஃது இரகுவமிசத் துளது].

---

168 சோமேசர் முதுமொழி வெண்பா

102–ஆம் அதிகாரம் : நாணுடைமை.

புண்ணே டுயிர்வாழு நாணியுயிர் போக்கினுன்
றுண்ணெனவே வாளிழுனஞ் சோமேசா—எண்ணியிடில்
நாண லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணண்டுறவார் நாணுள் பவர். (கூ)

அஃதாவது மேற் சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களா லுயர்ந்தோர் தமக் கொவ்வாத கருமங்களில் நாணுடைமை தான் தன்மை.

102. (இ–ள்) சோமேசா—! எண்ணியிடின்—ஆராயின், நாணுள்பவர்–நாணினது சிறப்பறிந்து அதனை விடாதொழுகுவார், நாணல் உயிரை துறப்பர்—(அந் நாணும் உயிருந் தம்முண் மாறுய விடத்து) நாண் சிதையாமற்

பொருட்டு உயிரை நீப்பர், உயிர் பொருட்டால் நாண் துறவார்—உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார், —(அதற்கு எடுத்துக்காட்டு)—வாலி—(வானாத் தலைவ னுய) வாலி, முன்னம்—முன்னுளில், புண்ணெறு உயிர் வாழ நாணி—(இராமபிரான் அம்பு தைத்த) புண்ணேறு உயிர் வாழ்தற்கு நாணி, துண்ணென—விரைவின், உயிர் போக்கினன்—உயிரை நீத்தான் (எ—று.)

உயிரினும் நாண் சிறந்த தென்பதாம். துண்ணென என்ப தினுண்டு விரைவுக் குறிப்பிடைச் சொல் என்க.

கதை :—கிட்கிந்தைக்காசனுன வாலிக்கு அஞ்சி அவன் வர லாகாத ரிசியமூக் பர்வதத்தில் வசித்திருந்த அவன் தம்பி சுக்கிரீவ னுடு இராமபிரான் நட்புக்கொண்டு சுக்கிரீவனை வாலியைப் போர்க்கு அழைக்கும்படி ஏவி, வாலி போர்க்கு வந்து சுக்கிரீவனேடு பொருகையில் வாலி சுக்கிரீவர்க்கு உருவில வேற்றுமை காணுது அது காணச் சுக்கிரீவனைக் கொடிப்பூச் சூடிச் செல்ல வென்று தாம் மறைந்து நின்று வாலிமீது அம்பெய்தார். வாலி தன் மார்பிற்

றைத்த அவ் வம்பைப் பிடுங்கி அநிதி ராமபிரான் அம்பென் றறிந்து மேல் உயிர் வாழ நாணி உயிர் நீத்தான்.

[இஃது இராமாயணத் துளது].

103–ஆம் அதிகாரம்: குடிசெயல்வகை.

மற்றிருத ராட்டிரன்சந் தானமெலா மாய்ந்ததே
சுற்றுநீர்த் தென்குளத்தூர்ச் சோமேசா—பற்றும்
இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளில்லாத குடி. (௧௦௩)

அஃதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம்.

103. (இ–ள்) நீர் சுற்று தென்குளத்தூர் சோமேசா!- நீர் சூழ்ந்த தென்குளத்தூரில் எழுந்தருளிய சோமேசா! நல் ஆள் இலாத குடி—பற்றாவன கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், பற்றும் இடுக்கண் கால் கொன்றிட—கைக்கொள்ளுந் துன்பமாகிய கோடரி புகுந்து தன் முதலை வெட்டிச்சாய்க்க, வீழும்—ஒரு பற்றின்றி வீழாநிற்கும்,–(அதற்கு எடுத்துக்காட்டு)–மல் திருதராட்டிரன்—மற்போரையுடைய திருதராஷ்டிரனது, சந்தானம் எலாம் மாய்ந்தது—சந்ததி எல்லாம் அழிந்தது (எ-று).

முதல்—அக் குடியின் வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெறின் வளர்ந்து பயன்படுதலும் பெறாக்காற் கெடுதலுமுடைமையின் மரமாக்கினார். இடுக்கணைக் கோடரியாகவும் குடியை மரமாகவும் அடுத்தூன்றும் என்ற குறிப்பான் அறிய உருவகஞ் செய்தலின், இது

குறிப்புருவகவணி. சுற்று நீர் என்பது வடநூன் முடிபு.

கதை:—திருதராஷ்டிரன் தனது மகன் துரியோதனனுக்கு

நன்மதி கூறிப் பாண்டவர்களுக்குத் தாயபாகந் தரும்படி செய்யாமையின், துரியோதனனுகி றறறவரும் சந்ததியுடன் மாண்டார்கள்.

[இது பாரதத் தினது]

104-ஆம் அதிகாரம்: உழவு.

வேள்வித் தொழிற்கு முழுதொழின்முன் வேண்டுமாம்
சூழிசூழ் தென்குளத்தூர்ச் சோமேசா—வாழும்
உழவினர் கைம்மடங்கி னில்லை விளைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. (கடை)

அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தான உழுதற் றொழில். பிறரும் இதனைச் செய்விக்க உரியர்.

104. (இ-ள்) சூழி சூழ் தென்குளத்தூர் சோமேசா—குளங்கள் சூழ்ந்த தென்குளத்தூரில் எழுந்தருளிய சோமேசா—! வாழும் உழவினர் கை மடங்கின்—வாழ்கின்ற உழவர்களுடைய கை (உழவுத் தொழிலைச்) செய்யாது மடங்குமாயின், விழைவதூஉம்—யாவரும் விரும்பு முணவும், விட்டேம் என்பார்க்கு நிலை—யாதுறைந்தோ மென்பார்க்கு அவ்வறத்தின்கண் நிற்றலும், இல்லை—உண்டாகா; வேள்வித் தொழிற்கும்—உழுதொழிற்கு இன்றியமையாத மழைக்குக் காரணமாகிய வேள்வித் தொழிற்கும், உழுதொழில் முன்வேண்டும்—உழுதொழின் முன்னே வேண்டும் (எ-று).

'நிலை' என்பதனோடு உம்மை வந்தியைந்தது. உணவின்மையால் தாமுண்டலும் இல்லாதுஞ் செய்தலும் யாவர்க்கும் இல்லையாயின. இல்லறஞ் செய்யாமையின், துறந்தோ மென்பார்க்கு அத் துறவறநெறிக்கண் நிற்றலுமில்லை யாயிற் றென்க. அவருமப்பு

மாத்திரமாகிய கை வாளாவிருப்பின் உலகத்துக்கு இம்மை, மறுமை, வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். 'வேள்வி தற் பயன் வீழ்புன லாவது' எனப் பெரியாரும் பணித்தலின் மழைக்கு வேள்வியே காரணமாத லறிக. அம் மழையின்றி உழுதொழில் நிகழாதென்க. எனவே, உழுதொழிற்குப் பரம்பரைக் காரணமாகிய வேள்விக்கும் உழுதொழில் வேண்டும் என்பதாயிற்று.

'முன்' என்றார் பின் அதனைத் தருதலின்.

105-ஆம் அதிகாரம் : நல்குரவு.

கற்றருமன் வெற்றியினை நாடி விராடனெதிர்
சொற்றமொழி சோர்ந்ததே சோமேசா—கற்றறிவால்
நற்பொருளை நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (கo நு)

அஃதாவது நுகரப்படுவன யாவு மில்லாமை.

105. (இ-ள்) சோமேசா—! கற்ற அறிவால்-கற்றநூலறிவினால், நல் பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும்—மெய்ப்பொருளைத் தெளிய வறிந்து சொன்னாயினும், நல் கூர்ந்தார் சொல்—வறியர் (சொல்லுஞ்) சொல், பொருள் சோர்வுபடும்—பொருளின்மையைத் தலைப்படும், (அதற்கு எடுத்துக்காட்டு)—நல் தருமன்-நற்குணமுடைய தருமபுத்திரன், வெற்றியினை நாடி—(நிரைமீட்சிப்போரில்) வெற்றியை ஆராய்ந்தறிந்து, விராடன் எதிர்—விராட மன்னற் கெதிரில், சொற்ற மொழி—(போர் வென்றவன் பெடியே என்று) சொல்லிய சொல், சோர்ந்தது—பயனில் சொல்லாய் முடிந்தது (எ-று).

பொருளின்மையைத் தலைப்படுதல் பயனில் சொல்லாய்

முடிதல்.

கதை :—நிரைமீட்சிப் போரில் தன்மகன் உத்தரன் வென்ற னென்று தூதர் சொல்லக்கேட்டு மகிழ்ந்த விராடன் தன்னிடம் கங்கபட்டனென்கிற பெயரோடு புரோகிதராயிருந்த தருமபுத்திர ரைச் சூதாடற் கழைத்துச் சில ஆட்டங்களாடித்தோற்று அவரை நோக்கி, 'இந்த ஆட்டத்தில் உத்தரன்முன் பகைவர் சேனை அழிந்ததுபோல நீர் அழிவீர்' என்றான். அதுகேட்ட தருமபுத்தி ரர் பகைவர் அழிய வென்றவன் நின் மகனல்லன்; பிருகந்நளை என்னும் பேடியே. அவனைப் பேடி யென்று நினையற்க. அவனை கண்டவ ரெரித்தகாலை' என்ன, விராடன் 'அந்தணீர்! அரசன் சொல்லை அவன்பாலுள்ளார் மறுத்துப் பேசலாமோ?' என்றான். அப்போதுத் தருமபுத்திரர் 'துரோணர் பீஷ்மர் அசுவத்தாமர் முதலியவர்களை நின்மகன் வெல்ல வல்லனேனே?' எனக் கோபங் கொண்டு சூதாடு கருவியா லெறிந்தான்; அஃதவர் நெற்றியிற் பட்டது.

[இது பாரதத் துளது].

---

106 - ஆம் அதிகாரம் : இரவு.

கஞ்சாறர் சோபனப்பெண் கூத்தல் கடிதனிக்கத்
துஞ்சு மகிழ்ச்சிகொண்டாய் சோமேசா—நெஞ்சின்
இகழ்தென்னா நீவாளைக் காணின் மகிழ்தும்னா

முள்ளு ளுவப்ப துடைத்து. (க0சு)

அஃதாவது மானந்தீரா இரவின் திறம்.

106. (இ-ள்) சோமேசா—! நெஞ்சின் இகழ்ந்து எள்ளாது ஈவாரை காணின்—மனத்தின்கண் (தம்மை) அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால், உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து —அவ் விரப்பாரது உள்ள மகிழ்ந்து உள்ளுள்ளே யுவக்குந் தன்மையுடைத்து,-(அதற்கு எடுத்துக்காட்டு)—கஞ்சாறர் —மானக்கஞ்சாற நாயனார், சோபனப் பெண்—கல்யாணப்

பெண்ணினது, கூந்தல் கடிது அளிக்க—கூந்தலை விரை வின் அன்பொடு கொடுக்க, துஞ்சு மகிழ்ச்சி கொண்டாய்— நிலைபெற்ற மகிழ்ச்சி கொண்டாய் (எ-று).

'இகழ்ந் தெள்ளாது' எனவே நன்கு மதித்தலும் இனி யவை கூறலும் பெறப்படும். வறுமைத் துன்பங் கெடுதலளவே யன்றி ஐம்புலன்களானும் பேரின்ப மெய்தினாராகக் கருதலான் 'உள்ளுளுவப்பதுடைத்து' என்றார்.

• கதை:—கஞ்சாறூரில் வேளாளர் குலத்தில் அவதரித்த மானக்கஞ்சாற நாயனார் என்பார் சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்தவராய் வாழ்கையில் மக்கட்பே றின்றிப் பெருமானை வழி பட்டு ஒரு பெண் மகவு பெற்றெடுத்தார். அப் பெண் மணப்பருவ மடைந்தபோது சில பெரியோர் அவளை ஏயர்கோன் கலிக்காம

நாயனாருக்கு மணம் பேசி முடித்தனர். குறித்த சுபதினத்தில் எயர்கோன் கலிக்காம நாயனாரும் மணக்கோலங் கொண்டு உற்றார் சுற்றார்களுடன் கஞ்சாறூர்க்குப் புறப்பட்டார். அவர் அவ்வூரை யடைவதற்கு முன், பெருமான் மாவிரதசமயத்தார் போலக் கோலங்கொண்டு மானக்கஞ்சாற நாயனார் இல்லிற்கு வர அவர் அன்புட னெதிர்கொண்டழைத்து முகமன்கூறி வணங்கினர். வந்த பெருமான் 'என்ன விசேஷம்?' என்று வினவ, நாயனார் என் மகள் மணம் நடக்கப்போகிறது என விடை பகர்ந்தார். பெருமான் 'உமக்குச் சோபனம் உண்டாகும்' என்று ஆசி கூற நாயனார் தமது மகளை அழைத்து வந்து அவர் பாதத்தில் வீழ்வித்தார். அப்போது பெருமான் 'இப் பெண்ணின் கூந்தல் நமது பஞ்சவடிக்கேற்கும்' என, உடனே நாயனார் அப்பெண் கூந்தலை அரிந்து நீட்டினர். மாவிரத சமயத்தாராய்நின்ற பெருமான் விடைமேல் உமையொடு காட்சி தந்து மறைந்தார். பின் பெருமான் அருளால் கூந்தல் வளரப்பெற்ற மகளை எயர்கோன் கலிக்காம நாயனார் மணந்து வாழ்ந்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் தலது.]

---

17. சோமேசர் முதுமொழி வெண்பா

107 - அம் அதிகாரம் : இரவச்சம்.

எண்ணெயிரப் பஞ்சியுட லேவருத்தித் தீபமிட்டார்
துண்ணென் கணம்புல்லர் சோமேசா---கண்ணியிடில்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த நில். (கடை)

அஃதாவது மானந் தீரவரு மிரவிற்கு அஞ்சுதல்.

107. (இ-ள்) சோமேசா—! கண்ணியிடில்—ஆராயுமிடத்து; ஆவிற்கு—(தண்ணீர் பெறுது இறக்கு நிலைமைத் தாயதோர்) ஆவினைக்கண்டு, நீர் என்று இரப்பினும்—(அறமெனக்கி) இதற்குத் தண்ணீர் தரல்வேண்டு மென் றிரந்து சொல்லுங்காலும், நாவிற்கு இரவின் இளிவந்தது இல்—(அவ்விரவு போல ஒருவன்) நாவிற்கு இழிந்தது பிறிதில்லை,— (அதற்கு எடுத்துக்காட்டு) — துண்ணென் கணம் புல்லர்—அச்சமுற்ற கணம்புல்ல நாயனர், எண் ணெய் இரப்பு அஞ்சி—எண்ணெய் இரத்தற்கு அஞ்சி, உடலே வருத்தி தீபம் இட்டார்—(தமது) உடம்பையே வருத்தித் திருவிளக்கிட்டார் (எ-று).

ஆவைக் காத்தோம்பல் போறமாகலின் 'ஆவிற்கு' என்றும், பொருள் கொடுத்துக் கொள்ள வேண்டா எளிமைத்தாதலின் 'நீர்' என்றும், இரக்கின்றானுக்கு இழிவு அச் சொல்லளவே யாகலின் 'நாவிற்கு' என்றும், அதுதான் எல்லா இழிவிலும் மேற்படுதலின் 'இளிவந்ததில்' என்றுங் கூறினர். இதனால் அறமும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க என்பது கூறப்பட்டது. ஏகாரம் பிரிநிலை. துண்ணென் என்பது அச்சக் குறிப்பிடைச்சொல்.

கதை:—வடவெள்ளாற்றிற்குத் தென்கரையிலுள்ள இருக்கு வேளூராலயத்திற் கணம்புல்ல நாயனார் என்பார் திருவிளக்கெரித்து வருநாளில் வறுமை மேலிடத் தில்லோகர் புக்குச் சபாபதியைத் தரிசித்து நிலம் புலம் மாடு வீடு முதலிய எல்லாவற்றையும் விற்று

அங்குள்ள திருப்புலீச்சுரமென்னும் ஆலயத்தில் அத் திருவிளக் கெரிக்குத் திருத்தொண்டு வழாது செய்துவந்தார். பொருள் யாவும் விற்றொழித்த பின், கணம்புற்களை அறுத்து விற்றுத் திருத் தொண்டை நடத்தி வந்தார். ஒரு நாள் அப் புல்லும் விற்றிலதாக, அப் புற்களையே திரித்து விளக்கெரித்தார். அது போதாமையால் தந் திருமுடியைப் போன்போடு மடித்து எரித்தார்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

---

108 – ஆம் அதிகாரம்: கயமை.

எற்ற துரோணனையன் றெள்ளித் துருபதன்றன்
றேற்றுவிச யற்களித்தான் சோமேசா—போற்றிடினும்
சீர்ங்கை விதிரார் கயவர் கொடி றுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு. (கo அ)

அஃதாவது கீழோரது தன்மை.

108. (இ-ள) சோமேசா—! போற்றிடினும்-புகழ்ந் தாலும், கயவர்—கீழ்மக்கள், கொடிறு உடைக்கும் கூன்

கையர் அல்லாதவர்க்கு—நெரிப்பதாக வளைந்த கையினை யுடைய வல்லாதார்க்கு, வர்க்கை—தாமுண்டு பூசிய கையை, விதிசார்—(தெரிக்கல் வேண்டுமென்றிருந்தாலும்) தெரி பார்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—துருபதன்—பாஞ் சாலன், எற்ற துரோணனை—வேண்டு மென்றிருந்த துரோணனை, அன்று எள்ளி—அந்நாள் இகழ்ந்து, பின் தோற்று—பின்னர்த் தோல்வியடைந்து, விசயற்கு அளித் தான்—அருச்சுனற்குத் தன் மகளைத் தந்தான் (எ-று).

வளைந்த கை—முறுக்கிய கை. மெலியார்க்கு யாதுங்கொடார் வலியார்க்கு எல்லாங் கொடுப்ப ரென்பதாம்.

கதை:—பாஞ்சாலனுந் துரோணனும் தாளிரிபன்பாற் கல்வி பயின்ற மாட்களி லொருநாள் பாஞ்சாலன் துரோணனை நோக்கி

'யான் அரசனுயின் எனது பூமியிற் பாதி யுனக்குத் தருவன்' என்றான். பின் துரோணன் வறுமையால் வருந்தித் தன் மகற்குப் பால் வேண்டியபோது பாஞ்சாலனை யடைந்து 'ஒரு பசு வேண் டும்' என, அவன் "நீ யாவன்? உன்னை யானறியேன். உனக்கு ஒன்றுங் கொடேன்." என்றான். அது கேட்டுத் துரோணன் மிக்க வருத்தத்தோடு 'போரில் உன்னைத் தேரொடு கவர்வேன்' என்று வஞ்சினங் கூறிப் பீஷ்மனிடம் வர அவன் பணித்து துரி யோதனுதியர்க்கும் பாண்டவர்க்கும் வில்வித்தை பயிற்றும்படி வேண்ட அங்ஙனமே பயிற்றி அருச்சுனனைப் பாஞ்சாலன்மேற்

போர்க் கேவ அவன் சென்று போர்புரிந்து பாஞ்சாலனை வென்று தேரிற் கட்டிக் கொணர்ந்தான். தன் வஞ்சின முடித்து மகிழ்ந்த துரோணன் பாஞ்சாலனை விடுத்தான். பாஞ்சாலன் நாணமடைந்து "துரோணன் தலை துணிக்க ஒரு மகனையும், அருச்சுனற்குத் தர ஒரு மகளையும் பெறுவேன்" என்று கூறி உபயாசன், யாசன் என்னும் முனிவரரைக் கொண்டு வேள்வி புரியத் திருஷ்டத் துய்மன் என்னும் மகனுந் திரௌபதி என்னும் மகளுந் தோன்றினர். திரௌபதி பின் அருச்சுனனுக்கு மாலை சூட்டினள்.

(இது பாரதத் துளது).

109–ஆம் அதிகாரம் : தகையணங்குறுத்தல்.

வாய்ந்ததம யந்தியுரு மாணலங்கண் டின்புற்றான்
றோய்ந்தபுக ழாளுநளன் சோமேசா—ஆய்ந்துரைக்கின்
உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. (க௰௯)

அஃதாவது பொழில்விளையாட்டு விருப்பான் மகளிர்கூட்டம் நீங்க அவ்விடத்துத் தனித்து நின்றவளை வேட்டை விருப்பால் இளைஞர் நீங்கத் தனித்து வந்து கண்ட தலைவன் அவள் அழகு தனக்கு வருத்த முண்டாக்குதலைச் சொல்லுதல்.

109. (இ-ள்) சோமேசா—! ஆய்ந்து உரைக்கின்—

ஆராய்ந்து சொல்லின், அடு கூறு—காய்ச்சப்பட்ட மது வானது, உண்டார்கண் அல்லது—தன்னை யுண்டார் மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது, காமம் போல — காமம் போல, கண்டார் மகிழ் செய்தல் இன்று—கண்டார் மாட்டு மகிழ்ச்சியைச் செய்தலுடைத்தன்று,—(அதற்கு எடுத் துக்காட்டு)--தேய்ந்த புகழ் ஆரும் நளன்—பொருந்திய புகழை யாள்கின்ற நளன், வாய்ந்த தமயந்தி உரு மாண் நலம் கண்டு இன்புற்றான் — (எல்லா விலக்கணங்களும்) அமைந்த தமயந்தியினது வடிவின் மாட்சிமைப்பட்ட அழகைக் கண்டு மகிழ்ந்தான் (எ-று).

காமமென்றது கண்டு அது நுகர்தற்கிடனாகிய மகளிரை என்க. 'கண்டார்' என்புழிக் கண் என்னும் ஏழனுருபு இயைபிக் கட் டொக்கது மகிழ் செய்தற்கட் காமம் கூறலினுஞ் சிறந்தமை யெனினும் இவள் குறிப்பாராய்ந் தறியாமையின் யான் அது பெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித் துரைக்க.

கதை :—நிடத தேசாதிபதியாகிய நளனது வடி வழகையுங் குண நலத்தையுஞ் செல்வப் பெருக்கையும் பற்றிப் பல அறிஞர் சொல்லக் கேட்ட விதர்ப்ப தேசாதிபதியாகிய வீமன் மகளாகிய தமயந்தி அவன் மீது காதல்கொண்டிருப்ப, நளனும் அவளது பேரழகையும் பெற்றியையும் கேட்டு அவள் மீது காதல் கொண்

டிருப்புழி வேனிற் காலத்தி லொருநான் மதன் கணைக் காற்றது மாதர் கூட்டத்தொடு பொழில் புக்கான். அங்கு ஓர் அன்னப் பறவையைக்கண்டு மாதர்களை ஏவிப் பிடிக்கச் சொன்னான். அவர் களும் அதைப் பிடித்து வந்து அவன் முன்னர் வைத்தார்கள். அஃதவனைக் கண்டு கலங்க அவன் 'அன்னமே! அஞ்சற்க' என, அன்னம் அரசனை நோக்கி "வீமன் மகளாகிய தமயந்தியை உன் புயத்தில் வைகுவிப்பேன்" என்றது. அது கேட்டவுடன் நளன் அன்னத்தை விட்டான். அது விதர்ப்பதேச மடைந்து குண்டினபுரம் புகுந்து தமயந்தி கன்னிகா மடத்தினுட் செல்ல அவள்

கண்டு தன் லீலையாட்டை நிறுத்தித் தனியே வந்து "செய்தி ஏதேனும் உண்டோ?" என்றாள். அதற்கு அன்னம், "ஆம்; நளனென்பா னொருவ னுளன். அவனே உனக்குத் தக்க வரன்" என்ன, "எனது நிலைமையை அவர்க்குத் தெரிவிப்பின் யான் உயிர் பெறுவேன்" என்ற னளவள். அன்னமுஞ் சென்றது. வீமன் தன் மகள் நெற்றி மீது கீர் அரும்ப நிற்பதைக் கண்டு அவளுக்கு மண முடிக்கவேண்டுமென்று நினைத்து அரசர்களுக்கெல்லாம் சுயம்வர வோலை போக்கப் பல தேயத் தரசரும் குண்டினபுரம் மடைந்தார்கள். தமயந்திபால் தூது சென்ற அன்னம் திரும்பி வந்து நளற்கு அவள் நிலைமையைச் சொல்லுகையில் தமயந்தி சுயம்வர விசேஷத்தை அறிவிக்க வீமனிடமிருந்து அவன்பால் தூதர்கள் வந்து சேர்ந்தார்கள். சுயம்வரமா னறிந்த நளனும்

உடனே புறப்பட்டுக் குண்டினபுர மடைந்தான். அங்கிலையில் நாரதமாமுனிவர் இந்திரனை யடைந்து தமயந்தியைப் பலபடி புகழ்ந்து கூறி அவள் சுயம்வரத்தைப் பற்றித் தெரிவிக்க அவனும் வருணன், இயமன், அக்கி ஆகிய இம்மூவரு—னும் குண்டினபுரம் வந்து நளனைக் கண்டு "எம் பொருட்டுத் தமயந்தியின்பால் நீ தூது சென்று எப்படியாவது எங்களி லொருவர்க்கு அவள் மனமாலை சூட்டுமாறு செய்தல் வேண்டும். ஒருவரும் உன்னைக் காணார். நீ கன்னிகா மாடத்துள் பயமின்றிச் செல்லலாம்" என்ன, நளனும் அதற் கொருப்பட்டுச் சென்று தமயந்தியின் அழகைக் கண்டு மகிழ்ந்தான். 'நாடிய நோக்கண்ட தோன்றல் செங்கமலக் கண்ணன், மேதகு செல்வ மிக்க விதர்ப்பர்கோன் றவத்திற் றோன்று, மாதர்மென் னோக்கி னுடன் வடிவினி லழுந்திப் பின்னு, மாதரம் பெருகி யின்ப வாரியி னழுந்த வன்றே' என்னும் கைடதச் செய்யுள் நோக்குக.

[இக் கைடதத்தும் பிருண்டு முளது].

110-ஆம் அதிகாரம் : குறிப்பறிதல்.

காங்கேயன் வேண்ட வெறுத்துரைத்தாள் கானவர்மின்

.ரங்கா வளக்குளத்தூர்ச் சோமேசா—ஆங்கண்
உறுஅ தவர்போற் சொலினுஞ் செறுஅர்சொ
லொல்லை யுணரப் படும். (கசo)

அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பறிதலும் தோழி குறிப்பறிதலும் அத் தோழி அல்லிருவர் குறிப்பறிதலுமாம்.

110. (இ-ள்) தூங்கா வளம் குளத்தூர் சோமேசா—! குன்றுத வளத்தையுடைய குளத்தூரி லெழுந்தருளி யிருக்குஞ் சோமேசா—! ஆங்கண்—அப்பொழுது, உறுஅத வர் போல் சொலினும்—புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொற் சொன்னாயினும, செறுஅர் சொல்—அகத்துப் பகையாதவர் சொல் (பின் பயன் படுதல்), ஒல்லை உணரப்படும்—குறை யடைந்தவரால் விரைவின் அறியப் படும்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—காங்கேயன்—அறு முகன், வேண்ட—இரந்துகூற, கானவர் மின்—வேடப் பெண்ணுரிய வள்ளிநாயகி, வெறுத்து உரைத்தாள்—வெறுப்போடு பேசினாள் (எ-று).

செறுஅரொனவே அருளுடைமை பெறப்பட்டது. அறுமுகன் கங்கைக்கண் அவதரித்தமையின் 'காங்கேயன்' என்றார்.

கதை:—விஷ்ணுவின் மக்களாகிய சுந்தரி, அமுதவல்லி என் பார் வேலவனை மணக்கச் சரவணத்தின் முன்பு அரிய தவத்தைச் செய்ய முருகன் அவர்கட் கெதிரிற் றோன்றி, 'அமுதவல்லி! நீ இந்திரன்பா லடைக்கலப்பாய். சுந்தரி! நீ புலியின்கண் ஒரு முனிவர்பாற் றோன்றி வேடர் சார்பில் வளர்குவாய்" என்றருளினன். அவ்வாறே அமுதவல்லி இந்திரன்பா லணைந்து நாற்கோட்டி

தான். சுந்தரி என்பான் அக்கி வளர்த்து மூழ்கிச் சூக்ம சரீரத் தோடு மேற்பாடிக்கனுள்ளா வள்ளிமலைச் சார்பில் தவஞ்செய்து ன்றான். அக்காலை அங்குத் தவஞ் செய்திருந்த சிவமுனி என் பான் தன் எதிர்வந்த தொரு பெண்மானைக் கண்டு கண்ணுற் கலவி தூய்ப்ப அதுகண்டு அச் சுந்தரி அம் மான் கருவிற் புகுந்தாள். அம் மான் கருவுடைந்த மகவை வெள்ளிக்கிழங்கு கொண்டிய குழியி ன்று காடு புக்கது. அம் மலைக்கண் வாழ்ந்த வேடர் தலைவனுகிய நம்பி என்பான் அம் மகவைக் கண்டு வியப்புக்கொண்டு தன் மனை யிற் றா அவன் மனைந்தோற்றப் பாராட்டிச் சீராட்டி வளர்த் தான். வேட முதியோர் அம் மகளிற்கு 'வள்ளி' என்ற பெயர் வைத்தார்கள். வள்ளி விளையாட்டுப் பருவமடைந்தவுடன் அவ ளைத் தினைப்புனச் சாவலில் வைத்தார்கள். அவளுங் கிளி முதலிய பறவைகள் கடிந்து தினைப்புனங் காத்தாள். ஒரு நாள் தணிகை வரையிற் கந்தனைத் தரிசிக்கச் செல்லும் நாரதமாமுனிவர் வழியில் வள்ளியைக் கண்டு அறுமுகப்பெருமானுக்கு இப் பெண்மணியை மணமுடிக்கும்படி கூறல் வேண்டுமென்று கொண்டு தணிகைமலை சென்று பெருமானைத் தரிசித்தவுடன் இப் பெண்ணரசியின் இயலை உள்ளவாறு கூறி அவளை மணமுடிக்க வேண்டினர். இளைய பிள்ளையாரும் வற்புறுமென் றப்பொழுதே வள்ளிமலை சேர்ந்து ஒரு வேடர் தலைவனுகத் திருவருக்கொண்டு வள்ளி எதிர் நின்று காதல் மொழி பல கூறுங்கால் அவள் தந்தையாகிய நம்பி வேடர் களுடன் அங்கு வர அப்போது வடிவேல் ஒரு வேங்கைமரமாய்

அங்கு நின்றான். நம்பியுடன் வந்த வேடர்கள் அதுகண்டு முன் பில்லாத வேங்கை மரமொன்று இங்கிருத்தல் மாயமா மென்று நினைத்து அதனை வெட்டிச் சாய்க்க வேண்டு மென்றார்கள். நம்பி அவர்களைக் கையா னமைத்து வள்ளியா லணுகி, "ஈதென்ன? இம் மரம் இங்கு எப்படி வந்தது?" என்று கேட்ப, அவள் 'ஐய! யானும் அதனை இப்பொழுதே கண்டேன். எனக்கும் அதனைப் பற்றி ஒன்றுந் தெரியாது' என்றாள். நம்பி இதை வேடர்களுக்கு அறி வித்து 'அம்மரத்தை ஒன்றுஞ் செய்யாதீர். அதனால் ஒரு குறை

யும் வாராது' எனப் பணித்து வள்ளியை நோக்கி 'இம் மரம் குன்றுதோ றாடுங் குமரவே ளருளாற் பொருந்தியது போலும். அஃதுனக்குத் துணையாகுக' வென்று சென்றான். அதன் பின் செல்வேள் வேங்கைமரத்திற் றன்னொரு கூற்றைக் குலவவைத்துத் தானொரு விருத்தனாகத் திருவுருக்கொண்டு நம்பியை எதிர்ப்பட்டு விபூதி தர, அவன் அதனை ஆதரத்தொடு ஏற்றணிந்து 'அடிகள் வந்த காரணந்தெரிய வில்லையே!' என்றான். அதற்கு விருத்தன் 'நுமது வரைக் குமரியாட வந்தேம்' என்று இரண்டு பொருள் படக் கூறினான். அது கேட்டு அவனை அழைத்துச்சென்று வள்ளி நாயகியிடம் விட்டு அவளை அவ் விருத்தற்கு வேண்டிய செய்யும் படி ஏவினான். நம்பி அகன்ற பின் விருத்தன் பசியான் மெலிந்த வன்போல நடிக்க வள்ளி தேனும் தினைமாவுந் தந்தாள். அவற் றைக் கொண்டு நீர் வேட்கை பெரிதெனக் காட்டி வருந்தினான். வள்ளி நீர் வேட்கை தணிக்க நினைத்து அடுத்ததொரு சுனைக்கண் அழைத்துச் செல்ல அங்கு நீர் பருகியவுடன் வள்ளியை நோக்கி 'இந்தச் சுனை நீரைப் பருகியதும் எனக்கு உன்மீது மோகமிக்கது,

அதனைத் தணிக்க வேண்டும்' என்று குறை யிரந்து கூறினான் விருத்தன். இம்மொழி செவிப்பட்டதும் வள்ளி சினங்கொண்டு அவனைப் பலபடப் பழித்து அகலச் சென்றாள். அப்பொழுது விருத்தனாகிய முருகன் றனது தமையனை நினைக்க அவன் யானை யாய் வர, அவ் யானையைக் கண்டு வள்ளி அஞ்சி ஒதுங்க முருகன் முன் அவனை எதிர்ப்பட்ட காளை வடிவோடு குறுக்கிட்டு 'அஞ்சற்க' என்று ஒரு திருக்கரத்தால் வள்ளியை அணைத்து மற்றொரு திருக் கரத்தால் யானையை எதிர்ப்பவன் போல அத் திருக்கரத்தைச் சிரமேல் வைத்துக் கும்பிட, வேட மைந்தனை அஞ்சியதுபோல யானையுஞ் சென்றது.

மேலா கியதவத்தோர் வேடந் தனைப்பூண்டிங்
கேலா தனவே யியற்றினீர் யார்விழிக்கும்
பாலாகித் தோன்றிப் பருகினா ராவிகொள்ளு
மாலால நீர்மைத்தோ வைய ரியற்கையதே'

182 சோமேசர் முதுமொழி வெண்பா

'நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமிலீர்
ரெத்துக்கு முத்தீ ரிழிகுலத்தேன் றன்னைவெஃகிப்
பித்துக்கொண் டார்போற் பிதற்றுவீ ரிவ்வேடர்
கொத்துக்கெ லாமோர் கொடும்பழியைச் செய்தீரே'

[கந்த புராணம்]

'உரைத்தமொழி நாவினை யொறுப்பலெழி னோக்கும்
புரைத்தவிழி சூன்றிடுவல் புந்திதுயர் மூழ்க
விரைத்திரு கரத்தலம் விழுத்துவ லனைத்து

மரைத்திடுவ லெங்குமிசை யாக்கிடுவ லின்னே'
'தேவரி னொருத்தனலை திண்புவி புரக்குங்
காவலர்க டம்மிலொரு காளையனு மல்லை
யாவதெ னுறுப்பறையி னார்த்தரிய டர்ப்போன்'
சாவவிழு புன்னரி தடிந்ததிற னாமால்' [தணிகைப்புராணம்]
என்னுங் கவிகளா லவற் பழித்துரையாடலை யறிக.
[இது கந்தபுராணத்தும் பிறாண்டு முளது].

111-ம் அதிகாரம்: புணர்ச்சி மகிழ்தல்.

மெய்த்தவத்தைக் காசிபனும் விட்டொழிந்து மாயைபா
சுத்தமனம் வைத்தானே சோமேசா—இத்தலத்தில் [ற்
தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு. (ககக)

அஃதாவது அங்ஙனம் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப் புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல்.

111. (இ-ள்) சோமேசா—! இ தலத்தில்—இந்தப் பூமியினிடத்தில், தாம் வீழ்வார்—(ஐம்புலன்களையு நுகர் வார்க்குத்) தாம் விரும்பு மகளிர், மென்தோள் துயிலின்—மெல்லிய தோளின்கட் டுயிலுந் துயில்போல, தாமரை கண்ணான் உலகு—(அவற்றைத் துறந்த யோகிகளெய்துஞ்)

செங்கண் மாலுலகம், இனிதுகொல்—வருந்தாம லெய்த லாமோ, (ஆகாது),—(அதற்கு எடுத்துக்காட்டு)—காசி பனும் — காசிபமுனிவரும், மெய் தவத்தை—அழியாத தவத்தை, விட்டு ஒழிந்து—விட்டு நீங்கி, மாயைபால்—மாயையினிடத்தே, சுத்த மனம் வைத்தான்—பரிசுத்த மான மனத்தை வைத்தார் (எ-று).

ஐம்புலன்களையு நுகர்வார் என்னும் பெயர் அவாய் நிலையான் வந்தது. இத்தன்மைத்தான துயிலைவிட்டுத் தவயோகங்களான் வருந்த வேண்டுதலின் எம்மைப் போல்வார்க்கு ஆகாதென்னுங் கருத்தால் 'இனிது கொல்' என்றான். இந்திரனுலகென்பாரு முளர்; தாமரைக் கண்ணானென்பது அவனுக்குப் பெயரன்மை யின் அதைதுரை யாகா தென்க. உம்மை உயர்வு சிறப்பும்மை.

கதை:—சுரசை என்னும் அசுரேசன் மகள் சக்கிரபகவா னிடம் மாயவித்தை யெல்லாங் கற்று வல்லவளாகி அவன் கூறிய வாறே காசிபமுனிவர் தபோவனத்தை யடைந்து அவரெதிரிற் பேரழகுடையவளாய் நிற்க அவளை அம் முனிவர் கண்டு மயங்கித் தமக்கு இணங்குமாறு பலவாறு வேண்டியும் 'நில்லும்' என்று சொல்லி மறைந்தாள். அவர் அவளைக் காணாது வருந்திப் புலம்பு கையில் அவள் மறுபடி தோன்றி அவர்க் கிணங்கிச் சூரபத்மன் முதலிய மக்களைப் பெற்றாள்.

[இது கந்தபுராணத் துளது].

112- ஆம் அதிகாரம் : நலம்புனைந்துரைத்தல்.

என்றுன் நிலோத்தமையை யிச்சிக்கி லாங்கவண்மெய்
தோன்றுமெழி லென்சொல்வேன் சோமேசா—வான்ற
முகிமேனி முத்த முறுவல் வெறிசாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. (கக2)

184 சோமேசர் முதுமொழி வெண்பா

112. (இ.ள்) சோமேசா—! வேய் தோள் அவட்கு-மூங்கில் போலுந் தோளினையுடையவட்கு, ஆன்ற மேனி முறி—(அழகு) மிக்க நிறந் தளிர் நிறமாயிருக்கும், முறுவல் முத்தம்—பல்லு முத்தமாயிருக்கும், சாற்றம் வெறி—(இயல்பாய) சாற்றம் கறுஞாற்றமாயிருக்கும், உண் கண் வேல்—(மை) யுண்ட கண்கள் வேலாயிருக்கும், என்றுன்-பெற்றோனுகிய பிரமன், நிலோத்தமையை இச்சிக்கில்—நிலோத்தமையை விரும்பினுல், அவள் மெய் தோன்றும் எழில் என் சொல்வேன்—அவளுடைய உடம்பிற் றோன்றிய அழகினை என்னை (படித்தென்று) சொல்லுவேன் (எ-று).

'வேய்த்தோள்' என்னும் பெயரடையாலும் தெரியக் கூறப்பட்டது. முறி, முறுவல் என்பன ஆகுபெயர். உருவக வணியாற் கூறினமையின் புகழ்ச்சியை யாயிற்று.

கதை :—பிரமன் எல்லா வுலகங்களிலுமுள்ள மங்கையர் அத

கையும் எடுத்துத் திலோத்தமையைப் படைத்தனன். படைத்தவுடன் அவள் அழகைக்கண்டு தானே மயங்கி அவளைக் கைப்பற்ற முயன்றான்; அவள் ஒளித்துக்கொண்டாள். நாற்றிசையினும் தேடி அவன் அவளைக் கண்டு பிடிக்க அவள் பெண்மானாக வடிவெடுத்தோடினாள்; அவன் ஆண்மானாக வடிவெடுத்துத் தொடர்ந்தான். அதன்பின் அவன் பெண் கிளியாய்ப் பறந்தாள்; அவன் ஆண் கிளியாய்த் துரத்தினான். வேறொரு வழியுமின்றித் தான் தூரத்தே கண்ட திருவண்ணாமலையை யணுகி "அண்ணாமலையாரே யான் உமது அடைக்கலம்" என்று வீழ்ந்தாள். பரமபதி நான்கு வேதங்களும் நான்கு வேட்டை நாய்களாகத் தன்னைத் தொடரத் தான் வேடனாகி அம் மலையினின்று வெளிப்பட்டு 'வெற்பெனு முலையா டன்னை விதித்துநீ விரும்புந் தீமை, கற்பகோ டியினுந் தீரா தாயினுங் கருணை யாமித், தற்பர மலைகண் டாயே யாதலாற் றவிர்த்தோம் போ' வெனப் பணிக்கப் பிரமன் அஞ்சித் தன்னுலகு புகுந்தான். [இஃது அருணாசலபுராணத் துளது].

சோமேசர் முதுமொழி வெண்பா 185

113. ஆம் அதிகாரம்: காதற்சிறப்புரைத்தல்.

கானடந்துஞ் சீதைகலப் பாற்களித்தான் பின்னயர்ந்
[தான்
றாநீ ரயோத்தியர்கோன் சோமேசா—ஆனதனால்
வாழ்த லுயிர்க்கன்ன ளாயிரை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. (கக.௩)

அஃதாவது தலைமகன் தன் காதன் மிகுதி கூறல்.

113. (இ-ள்) சோமேசா—! தா நீர் அயோத்தியர் கோன்—பரிசுத்தமான நீர் சூழ்ந்த அயோத்தி மன்னனாகிய இராமன், கான் நடந்தும்—(பாலும் முள்ளும் பாராத) காட்டில் (மிதியடியுமின்றி அடிகளேனவே) நடந்தும், சிதை கலப்பால் களித்தான்—சிதையினது சேர்க்கையால் இன்புற்றான், பின்—(அச்சிதை பிரிந்த) பின்பு, அயர்ந்தான்—சோர்ந்தான், ஆனதனால்—ஆதலின், ஆயிழை—தெரிந்த ஆபரணத்தினையுடையாள், வாழ்தல் உயிர்க்கு அன்னள்—(எனக்குப் புணருமிடத்து) உயிர்க்குடம்போடு கூடி வாழ்தல்போலும், நீங்குமிடத்து—பிரியுமிடத்து, அதற்கு சாதல் அன்னள்—அவ்வுயிர்க்கு அவ்வுடம்பினின்றும் நீங்கிப் போதல் போலும். (எ-று).

எனக்கு என்பதும், புணருமிடத்து என்பதும் அவாய்நிலையான் வந்தன. உயிர் உடம்போடுகூடி வாழுங்காலத்து வேற்றுமையின்றி அதன் பின் நிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ் செய்தலானும் அவ்வற்றை அவற்றின் புணர்வு பிரிவுகட் குவமையாக்கினன். உம்மை இழிவு சிறப்பு.

கதை :—(82-வது பாட்டுரையிற் குறித்த கதையொடு பின் வருவனவற்றையுங் கூட்டுக).

அக்கனம் 'இன்றே போகின்றேன்' என்று சொல்லித் தன் தாய் கௌசலையினிடம் நிகழ்ந்ததுகூறி அரிதின் விடைபெற்றுச்

சுமித்திரையை யணுகி உற்றது தெரிவிக்க அவள் தன் மகன் இலக்குமணனை நோக்கி, 'ஆகாததன்றலுனக்கவ்வனமில் ஏயோத்தி, மாகாதலிராமனம்மன்னவன் வையமீந்தும், போகாயிர்த்தாயார்நம்பூங்குழற் சீதையென்றே, எகாயினியிவ்வயினீற் றலுமேதம்', 'மகனேயிவன்பின்செல்தம்பி, என்னும் படியன்று அடியாரினிலேவல்செய்தி, மன்னும்நகர்க்கேவந்திடின் வாவதன்றேல், முன்னம் மூழி' என்று கூறி உடன் செல்லுமாறு ஏவ அவனும் சிரை தரித்து உடன் நின்றான். அதன்பின் இராமன் சீதையைக் கண்டு 'நீ மாமியார்க்குப் பணி செய்துகொண்டிருக்க' என்ன, அது கேட்டவள் பொறாளாக அவளையும் உடனழைத்துச் சென்றான். தண்டகாரணியத்திற் பஞ்சவடியில் இலக்குமணன் அமைத்ததொரு பன்னசாலையில் இவர்கள் இருப்புழிச் சூர்ப்பணகை சீதையினழகைச் சொல்லக்கேட்ட இராவணன் மாரீசனைப் பொன்மானாக ஏவித் தான் ஏகதண்ட சந்நியாசியாய் அங்குவந்து இராம லக்குமணரைச் சீதையை விட்டுப் பிரித்துத் தான் சீதையைக் கவர்ந்தான்.

[இம்மீது இராமாயணத் தினது].

---

114 - ஆம் அதிகாரம்: நாணுத்துறவுரைத்தல்.

காமமிகவுழந்துங் தூதைக் கடிந்துவிட்டாள்
சோமநுதற்பாலை சோமேசா—வாமே

கடலன்ன காம முழுக்கு மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில். (ககச)

அஃதாவது. அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் தோழிக்குத் தன் ஆண் துறவுரைத்தல்.

114. (இ-ள்) சோமேசா—! கடல் அன்ன காமம் உழுந்தும் — கடல்போலக் கரையற்ற காமநோயினை யதுபவித்தும், மடல் ஏறும் பெண்ணின்—மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண் பிறப்புப்போல, பெருந்

தக்கது இல்—மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்தில் இல்லை, ஆம்—இஃது ஒக்கும்,—(இதற்கு எடுத்துக்காட்டு) —சோமன் நுதல் பாவை—(இளஞ்) சந்திரனையொத்த நெற்றியையுடைய பாவை நாற்சியார், காமம் மிக உழுந்தும்—காமநோயினை மிக வதுபவித்தும், தூதை—தூது வந்தவர்களை, கடிந்துவிட்டாள்—நீக்கிவிட்டார் (எ-று).

பிறப்பு விசேடத்தால் அப் படலம் எனக்கில்லை யாகின்றது, ஃ அஃதறிகின்றிலை யென்பதாம்.

கதை :—சுந்தரமூர்த்தி நாயனார் தம்மைப் பெருமான் மணஞ் செய்துகொள்ளாதபடி தடுத்தாண்டு கொண்டபின் திருவாரூர்த் தியாகேசப்பெருமானைத் தரிசித்து அங்கிருக்கையில் ஒருநாள்

ஆலயத்தில் பரவை நாய்ச்சியார் என்னும் கணிகையரைக் கண்டு காதல்கூர அந்த அம்மையாரும் அவர் அழகின் ஈடுபட்டு வருந்தினர். பின்னர்ப் பெருமான் அருளால் இருவருக்கும் மணமுடிந்தது. நெடிது நாட் சென்ற பின் நாயனார் சிவதல யாத்திரை செய்துகொண்டு வருகையில் திருவொற்றியூரை யடைந்து அங்குச் சங்கிலி நாய்ச்சியார்பாற் காதல்கொண்டு அவள் வேண்டியவாறு 'இனிப் பரவைபாற் செல்வதில்லை' என்று சத்தியஞ்செய்து அவளை மணந்து அங்கு இருப்புழித் திருவாரூர்த் தியாகேசரைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஆசை மீதூரத் தமது சத்தியத்தையும் மறந்து திருவொற்றியூரைவிட்டு வழிநடந்து திருவாரூரை யடைந்து பெருமானைத் தரிசித்துப் பரவை நாய்ச்சியார் தம்மிடங் கோபம் மிக்குடையா ரென்பதறிந்து பெருமானைத் தூதுவிடப் பெருமான் திருவாரூர்க் குருக்க ளொருவர்போல முதன் முறை சென்றக்கால் அவர் இசையாராக, இரண்டாவது முறையுஞ் சென்று தன் உண்மையுருக் காட்ட இசைந்தாள்.

[இது திருத்தொண்டர்புராணத் துளது].

---

188 சோமேசர் முதுமொழி வெண்பா

115–ஆம் அதிகாரம்: அலாறிவுறுத்தல்.

ஓர்நா ளகலியையை வேட்டின்று மும்பரிறை
சோராப் பழிபூண்டான் சோமேசா—ஆராயிற்
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்

அஃதாவது களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற அலர் தனக்காகின்றவாற்றைத் தோழிக் கறிவுறுத்தலும், மணத்தல் உடன்போதலாகிய இரண்டிலொன்று வேண்டிய தலைமகளுந் தோழியும் அவ்வலரை அவன் றனக் கறிவுறுத்தலுமாம்.

11ம். (இ-ள்) சோமேசா—! ஆராயின் — ஆராயுமிடத்து, கண்டது ஒருநாள்—கண்ணுறப்பெற்றது ஒரு நாளே, அலர் திங்களைப் பாம்பு கொண்டற்று—அதனாலாகிய அலர் (அவ்வளவிற்றன்றித்) திங்களைப் பாம்புகொண்ட அலர்போலப் பரந்தது,—(அதற்கு எடுத்துக்காட்டு)—உம்பர் இறை—தேவர்கோனாகிய இந்திரன், அகலிகையை யுள்ளான் வேட்டு—அகலிகையை ஒரு நாளே விரும்பிச் சேர்ந்து, இன்றும் சோரா பழியுண்டான்—இன்றளவும் நீங்காப் பழி யடைந்தான் (எ-று).

அலராகிய காரியத்தைக் காரணமாக வுபசரித்துப் 'பாம்பு கொண்டற்று' என்றுள். காரிடத்தும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சி யின்றியும் அலர் பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, மணத்தல் வேண்டுமென்பதாம்.

கதை :—கௌதம முனிவன் பத்தினியாகிய அகலிகையினிடம் மோகங்கொண்ட இந்திரன் ஒருபாயத்தால் கள்ளிரவி லவளிடத்தினின்று முனிவனைப் பிரித்து அம் முனிவனது வடிவந் தாங்கி அவளொடு இன்ப நுகருங்கால் அவள் இந்திரனென் றறிந்தும் தாம

தித்திருக்க முனிவன் திரும்பிவர இந்திரன் நடுங்கிப் பூனையாக உருக்கொண்டு சென்றான். நிகழ்ந்த துணர்ந்த முனிவரன் 'ஆயிர மாதர்க்குள்ளவறிகுறி யுனக்குண் டாக' என்று சபித்தான். அச்சாப மொழிகேட்ட இந்திரன் 'மருவொரு குறியு ளாரும் வான் பெரும் புடைவை கொண்டு, பெருகுறச் குழ்ந்து சூழ்ந்து பெருந் திரோ தானஞ் செய்வார், ஒருவற வுடம்புமுற்று முளகுறி பல்ல வென்னில், இருமைமிக் குடையேன் யாதா லெங்ஙன மறைத்து வாழ்கேன்' எனக் கூறி வருந்தச் 'சிந்தையின் முனிவு தீர்ந்து சிறந்தவா யிரங் கண்' ணாக்கினன். அதன்பின் அகலிகையை நோக்கி 'விலைமக ளனைய நீயுங், கல்லிய லாதி' என்று சபித்துப் பின் அச்சாபம் இராமபிரான் காற்றுகள் படின் நீங்குமென் றருள் செய்தான். 'அலர் மன்னுந் திங்களைப் பாம்பு கொண்டற்று' என்றதற் கேற்பக் கம்பரும் 'மாயா, நிரந்தர முலகினிற்கு நெடும் பழி பூண்டா ணின்றாள்' என்றது கண் டறிதற்பாலது.

[இதே இராமாயணத்தும் பிறாண்டு முளது].

116- ஆம் அதிகாரம்: பிரிவாற்றாமை.

வாழ்விழந்த வின்னலீனும் வாசவர்கோன் மிக்குநொந்
[தான்
சூழ்சரியை முன்பிரிந்து சோமேசா—வீழ்வார்கட்
கின்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு. (ககசு)

அஃதாவது மணமுடிந்தபின் தலைமகன் அறம் பொருளின் பங்களின் பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து செல்வழி அப்பிரிவினை ஆற்றுமை.

116. (இ-ள்) சோமேசா—! வீழ்வார்கட்கு—(ஒருவரை யொருவர்) விரும்புந் தலைவர் தலைவியர்களுக்கு, இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது—தங்குறிப் பறிவாரில்லாத வேற்றூரின்கண் வாழ்தல் துன்பத்தைத் தருவதாம், இனியார் பிரிவு அதனினினும் இன்னாது—தமக்

கினியவரைப் பிரிதல் அதனையுங் காட்டில் துன்பத்தைத் தருவதாம்,-(அதற்கு எடுத்துக்காட்டு)—வாசவர்கோன்.. தேவர்க்கரசனுகிய இந்திரன், வாழ்வு இழந்த இன்னலினும்-(சூரபன்மற்கு அஞ்சி) தனது சுவர்க்கலோக வாழ்க்கையை இழந்ததனுலாகிய துன்பத்தினும், சூழ்ச்சியை முன் பிரிந்து மிக்கு கொந்தான்—(தன்னை இடைவிடாது) கூடி நின்ற இந்திராணியை முன்னெருகாற் பிரிந்து அதிகமாகத் துன்பமுற்றான் (எ—று).

'இழந்த' என்பது காரணப் பொருட்டில் வந்த பெயரெச்சமென்க.

கதை:—சூரபன்மனுக் கஞ்சிப் பொன்னுடு நீங்கி மண்ணுடு புக்குச்சோழியின்கண் இந்திராணியுடன் ஒளித்திருந்த இந்திரனைத் தேவர்கள் அணுகித் தங்கள் குறைகளை எடுத்துக்கூறி, 'இனித்

துன்பத்திற் காற்றேரும். எங்களை எவ்விதத்திலாயினும் பாது காப்பது உமதுகடன்' என்று குறையிரப்ப, அதற்கு இந்திரன் 'என்னலாவது ஒன்றுமில்லை. நாமெல்லாருங் கைலையை யடைந்து பெருமானிடம் நமது துன்பத்தை விண்ணப்பித்தா லவன் அருள் புரிவன்' என மொழிய அவர்களும் அதற் கொருப்பட அவன் அவர்களை நிறுத்தித் தான் தனியே இந்திராணி இருந்தவிடஞ் சென்று தான் கைலை செல்ல வேண்டி யிருத்தலைக்கூறிப் பிரி வுணர்த்த அவள் பிரிவிற் காற்றாளாய்• மயங்கி வீழ்ந்து அறிவற் றுக்கிடப்ப, அவளை ஒருவாறு தேற்றிப் பிரிந்து மிக வருந்தினன்.

[இது கந்தபுராணத் தளது].

117-ஆம் அதிகாரம்: படர்மெலிந்திரங்கல்.

இன்பமுற்றான் மாயைதோ டோய்ந்துபின் னெண்மடங்கு
துன்பமுற்றான் காசிபன்றான் சோமேசா—அன்புடை
நின்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற் [யார்க்
கும்ப மதனிற் பெரிது. (கஎ)

சோமேசர் முதுமொழி வெண்பா 191

அஃதாவது பிரிவாற்றுமையாகிய துன்பத்தினை எப் பொழுதும் நினைத்தலின் அந் நினைவான் மெலிந் திரங்குதல். படர் மான் மெலிந்திரங்கல் என விரிக்க.

117. (இ-ள்) சோமேசா—! அன்புடையார்க்கு—காதலுடையார்க்கு, காமம் இன்பங் கடல்—காமம் புணர்

வாலின்பஞ் செய்யுங்கால் அவ்வின்பங் கடல்போலப் பெரிதாம், அஃது அடுங்கால் துன்பம் அதனின் பெரிது—அதுதானே பிரிவாற் றுன்பஞ் செய்யுங்கால் அத்துன்பம் அக் கடலினும் பெரிதாம்,—(அதற்கு எடுத்துக்காட்டு)—காசிபன்—காசிப முனிவன், மாயை தோள் தோய்ந்து இன்பமுற்றான்—மாயையைப் புணர்ந்து இன்பமடைந்தான், பின்—(அதன்) பின்பு, எண்மடங்கு துன்பமுற்றான்—(அவளைப் பிரிந்து) எட்டதனை துன்பமடைந்தான் (எ-று).

'அடுங்கால்' என வந்தமையின் 'இன்பஞ் செய்யுங்கால்' என மறுதலை எச்சம் வருவிக்கப்பட்டது. பெற்ற இன்பத்தொடு ஒத்துவரின் ஆற்றுதல் கூடும்; துன்பம் அவ் வின்பத்தினது அளவன் றென்பது கருத்து. தான்—அசைநிலை.

கதை :—111-வது பாட்டுரையிற் கூறியபடி, சுக்கிரன் சூழ்ச்சியின் மாயை என்பாள் காசிப முனிவரை மயக்கி அவரோடு கூடிச் சூரபன்மன் முதலிய மக்களைப் பெற்றனபின் 'யான் எனது மக்களைப் புறந்தரல் வேண்டுமாகலின் உம்மை விட்டுச் செல்கின் றேன். நீர் வருந்தாதீர்' என்று கூறி மறைந்தாள். முனிவர் அவள் உருக்காணுது அறிவு மயங்கி அழுது புலம்பி உயிர் நீங்கின வுடம்புபோல நின்றார். அதுகண்டு பிரமன் அவர்முன் தோன்றிக் காமத்தின் தீமைகளை எல்லாம் பலவாறு எடுத்துக் கூறித் தவத்தை மேற்கொள்ளுமாறு செய்தனன்.

[இது கந்தபுராணத் தனது].

118-ம் அதிகாரம் : கண்விதுப்பழிதல்.

தாதையன்றித் தானேதுச் சந்தனைச்சேர்ந் தின்ன
சூதில் சகுந்தலைதான் சோமேசா—வோதிற் [லுற்றுள்
கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுகதத் தக்க துடைத்து. (கக-அ)

அஃதாவது கண்கள் தாங்காட்சி விதுப்பான் வருந்தல். காட்சி விதுப்பாவது தலைமகனைக் காண்டற்கு விரைதல்.

118. (இ-ள்) சோமேசா—! ஓதின்—சொல்லுமிடத்து, கதுமென தாம் நோக்கி—கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி, தாமே கலுழும் இது—இன்றுந் தாமேயிருந் தழுகின்ற விது, நகத்தக்கது உடைத்து—(நம்மாற்) சிரிக்கத்தக்க வியல்பினையுடைத்து, —(அதற்கு எடுத்துக்காட்டு)—சூது இல் சகுந்தலை—வஞ்சனையில்லாத சகுந்தலை, தாதை அன்றி-தனது தந்தையாலன்றி, தானே துச்சந்தனை சேர்ந்து—தானே துஷ்யந்தனைக் கூடி, இன்னல் உற்றுள்—துன்பமடைந்தாள் (எ-று).

'கண்கள்' என்பது அதிகாரத்தான் வந்தது. 'இது' என்

றது முன்னே வருவதறிந்து அது காவாதார் அது வந்தவழிப் பொறுத்தலுஞ் செய்யாது வருந்துதலாகிய கழிமடச்செய்கையை. அச் செய்கை வருமுன்னர்க் காப்பார்க்கு நகை விளக்கு மாகலான் 'நகத்தக்கதுடைத்து' என்றுள்.

கதை:—கண்ணுவ முனிவன் ஒருபெண் குழந்தை வயற்புறத்திற் சகுந்த பக்ஷிகளாற் காக்கப்படுதலைக் கண்டு அக் குழந்தையை எடுத்து வளர்த்தனன். சகுந்த பக்ஷிகளாற் காக்கப்பட்டமையான், 'சகுந்தலை' என்கிற பெயர் வைத்து அன்போடு வளர்த்துவர அவள் பருவமடைந்தாள். துஷ்யந்தன் என்னும் மன்னர் மன்னன் வேட்டையாடித் தெய்வ கதியாய்க் கண்ணுவ முனிவன் ஆச்சிரமத்தினருகிற் போந்து போழ்தியாகிய அப் பெண்மணியைக் கண்டு

காதல் கொண்டு தன் கருத்தை யறிவிக்க முனிவன் அங்கு அப் பொழுது இல்லாமையால் அவன் சம்மதம் பெறாது சகுந்தலை அதற்கு உடன்பட்டாள். துஷ்யந்தன் ஞாபகார்த்தமாக மோதிரம் ஒன்று தந்து சின்னாளில் அவளைத் தான் அழைப்பித்துக் கொள்வதாகக் கூறித் தன் நாடடைந்தான். சகுந்தலை பிரிவாற்றாது அவனையே நினைத்து ஏங்கி நிற்கையில் துருவாச முனிவன் அங்கு வர அவனை வரவேற்றலின்றி இருந்தாள். அது கண்ட அம் முனிவன் 'நீ யாரைப்பற்றி நினைக்கின்றாயோ அவன் உன்னை இக் கணந் தொட்டு மறக்க' என்று சபித்தனன். இச் செய்தியை அறிந்த அவள் தோழியர் அச் சாபத்தை நீக்கும்படி முனிவனை வேண்ட, அவன் 'அவன் தந்த மோதிரத்தைக் காட்டினால், அவன் மறப்

பொழிக' என்று சாபத்தை ஒருவாறு மாற்றினான். தோழியர் இச் செய்தியைச் சகுந்தலைக்குக் கூறினரில்லை. சிலநாட் சென்ற பின் கண்ணுவ முனிவன் ஆச்சிரமம் வந்து சகுந்தலை மணச்செய்தி கேட்டு 'மன்னர் மன்னனை மணந்தமைக்கு மகிழ்ந்தேன். இவள் மகன் நன்கு விளங்குவன்' என்றனன். பன்னாட்கள் கழிந்தன; துஷ்யந்தனிட மிருந்து ஒருவரும் வந்திலர். முனிவன் சில முனிவரையும் கௌதமி என்னும் தவமுதியாளையுங் கூட்டி அவர் களோடு சகுந்தலையைத் துஷ்யந்தனிடஞ் செலவிட்டனன். இடை வழியில் ஓாற்றில் நீராடுகையில் துஷ்யந்தன் தந்த மோதிரம் கழன்று அதன்கண் விழுந்தது. அதைச் சகுந்தலை அறிந்தாளில்லை. எஞ்சிய வழியும் நடந்து துஷ்யந்தன் அரண்மனை சேர்ந்து யாவரு மவனைக் கண்டார்கள். துருவாச முனிவன் சாபமுண்மையால், துஷ்யந்தன் வந்தவள் இன்னாளென்று அறியவில்லை; கொள்ளவு மில்லை. ஆகலின், சகுந்தலை கண்ணுவன் கண்ணீருமாய்க் கலங்கி வெளிச் செல்கையில் ஒரு தேவதை தோன்றி அவளை உடன் கொண்டு சென்றது. சிலநாள் கழிந்தபின் வலைஞனொருவன் அரண்மனைக்கு ஒரு மீன் கொண்டுவர அதன் வயற்றில் ஒரு மோதிரமிருக்கக்கண்டு எவ்வாளர் துஷ்யந்தனிடம் அதைக் காட்டினர்கள். உடனே அவற்குச் சகுந்தலை ஞாபகம் வந்தது. தூதரை ஏவி அவளைத் தேடுவித்தான். அவள் எங்கும் அகப்பட்

டிலள். ஆண்டுகள் சில சென்றன; சகுந்தலை மகனும் வளர்ந்து விட்டான். ஓரிடத்தில் இம் மகன் ஒரு சிங்கத்துடனும் அதன்

குட்டியுடனும் விளையாடிக்கொண் டிருக்கையில், துஷ்யந்தன் கண்டு அவளோடு சொல்லாடி அவன் தன் தாயினிடம் அழைத்துச் செல்ல அவன்பின் சென்று சகுந்தலையைக் கண்டு பின் அவளுடன் இனிது வாழ்ந்தான்.

[இது பாரதத் துளது].

119-ஆம் அதிகாரம் : பசப்புறுபருவரல்.

கேழ்வரைச் சேடியர்சொல் கீழ்மைக் கியற்படுஞ்சொற்
சூழ்பமின்னூர் துன்பத்துஞ் சோமேசா—தாழ்வில்
பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
கல்காமை தூற்று ரெனின். (ககசு)

அஃதாவது பசப்புறுதலாலுகிய வருத்தம். பசப்பாவது பிரி வாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. பசப்புற்ற பருவர லென விரிக்க.

119 (இ-ள்) சோமேசா—! மின்னூர்—தலைவியர், கேழ்வரை சேடியர் சொல் கீழ்மைக்கு—(தமது தலைவ ரைத்) தோழியர் சொல்லும் இயற்பழிக்குஞ் சொற்கு (மாறுக), இயற்படுஞ் சொல்—இயற்பட மொழிதற்குரிய சொல்லை, துன்பத்தும் சூழ்ப—தாம் துன்புற்ற விடத்தும் ஆராய்வர்,—ஆகலின், நயப்பித்தார்—தமது குறைகளை விரும்பி யேற்குமா று சொல்லிக் கூடினவர்க்கு, கல்காமை —அருளாமையை, தூற்றுரெனில்—(கட்டோர்) தூற்று

ராயின், பசப்பென பேர் பெறுதல் நன்று—(பசுப்புற்று ளென வேற்றுமையானன்றிப்) பசப்புத்தா னுயிருளென ஒற்றுமையாற் றுஞ்சொல்ல அப்பெயரைப் பெறுதல்

எனக்கு நன்று, தாழ்வு இல்—எனக்கு ஒரு தாழ்வு மில்லை (எ-று).

நட்டாரென்பது அவாய் நிலையான் வந்தது. இயற்பழித்தல் பொருது புலக்கின்றுளாகலின், இகழ்ச்சிக் குறிப்பாற் 'பசப்பெனப் பேர் பெறுதனன்று' எனக் கூறினுள். அவரை அருளில ரென்னுது இன்னும் பசந்தாளிவளென்கையே யான் ஆற்றும் வழி என்பதாம். கேள்வர் எனற்பாலது ளகர ழகர ஒற்றுமைபற்றிக் 'கேழ்வ' னென நின்றது. இயற்பட மொழிதலாவது தலைமகன் றன்மை (உள்ளவாறு) தோன்றக் கூறுதல்.

120-ஆம் அதிகாரம்: தனிப்படர்மிகுதி.

பன்முகிவர் புன்னியர்கள் பண்டுன்னைக் காமுறவுத்
துன்னியருள் செய்திலையே சோமேசா—வன்னதே
காங்காதல் கொண்டார் கமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. (கூ0)

அஃதாவது தன்பமிகுதி தலைவன்கணன்றித் தன் கண்ணதே

யாதல். அறமும் பொருளு நோக்கிப் பிரிதலின், அவன்கண் இல்லையாயிற்று. தனியாகிய படர் மிகுதி என விரிக்க.

120. (இ-ள்) சோமேசா—! நாம் காதல் கொண்டார்—நம்மாற் காதலிக்கப்பட்டவர், நமக்கு எவன் செய்ப—நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர், தாம் காதல் கொள்ளாக்கடை—அவ்வாறே தாமும் நம்மிடங் காதல் செய்யாவழி, அன்னது—(இஃது) அப்படித்து, பண்டு—முற்காலத்தில், பல் முனிவர் பன்னியர்கள்—பல முனிவர்களது மனைவியர்கள், உன்னைக் காமுறவும்—உன்னைக் காதலிக்கவும், தன்னியருள் செய்திலை-(நீ காதலிப்) பொருந்தி அவர்கட்கு அருள் செய்தாயில்லை (எ-று).

'தாம்' என்புழி எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அக் காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம். 'பன்னி' என்பது 'பத்தி' என்னும் வடமொழிச் சிதைவு.

கதை:—தாருகாவன முனிவர்கள் சிவபெருமானிடம் அன்பு சிறிது மின்றிக் கருமத்தான் முத்தி யெய்தலாமென்று சற்கருமங்களை வளர்த்துத் தம்மைப்போல ஒழுக்கமுடை யாடவரும் தமது மனைவியர்களைப்போலக் கற்புடை மகளிருமில்லை யெனத் தருக்கியிருப்புழிப் பெருமான் திருமாலை அழைத்து அவரை மோகினியுருக்கொண்டு முனிவர்களை மயக்கும்படி ஏவித் தாம் நிருவாணமாய்ப் பலி பாத்திரமுஞ் சூலமுங்கொண்டு அவர்கள் பன்னிய நிருந்

தழிச் செல்ல, முனிவர்கள் மோகினியைக் கண்டு மயங்கிச் சால் பழிந்தனர்; பிக்ஷாவைக் கண்ட பன்னியர் யாவரும் மதிமயங்கி உயிர் பதைத்துக் காதலென்னும் ஆழ்நிரைப் பட்டனர்.

'இன்னவர் பலருஞ் சூழா வீண்டுபு கலையுஞ் சங்குந்
தன்னிய கலனு நாணுந் துறப்பருங் கற்புஞ் சிந்தி
மன்னுயி ரொன்றுந் தாங்கி மால்கொடு தொடர வெங்கோன்
பொன்னடிக் கமலஞ் சேப்பப் புனிதமா மறுகிற் போனான்'

என்னுங் கந்தபுராணப் பாவினை ஈண்டறிக.

[இது கந்தபுராணத்தும் பிரண்டு முளது].

121-ம் அதிகாரம்: நினைந்தவர் புலம்பல்.

தன்னையே யுன்னுந் தமயந்தி மாதைகளன்
றுன்னர்போ னீத்திருந்தான் சோமேசா—அன்னதே
தக்கெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் காஞ்சிகொ
லெக்கெஞ்சத் தேர்வா வரல். (கஉக)

அஃதாவது முன் கூடிய நான் இன்பத்தினை நினைந்து தலைமகன் தனிமை யெய்தலும், பாசறையின்கண் தலைமகன் தனிமை யெய்தலுமாம். புலம்பல்—தனிமை. பாசறை—போர்மேற் சென்ற ரூர் முறைவிடம்.

121. (இ-ள்) சோமேசா—! தம் நெஞ்சத்து எம்மை கடி கொண்டார்—தம்முடைய நெஞ்சின்கண்ணே (யாஞ் செல்லாமல்) எம்மைக் காவல்கொண்ட காதலர், எம் நெஞ்சத்து ஓவா வரல்—(தாம்) எம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலே, நாணுர் கொல்—நாணுரோ, அன்னது —(இஃது) அப்படித்து, நளன்—நளசக்காவர்த்தி, தன் னையே உன்னும் தமயந்தி மாதை—தன்னையே நினைக்கும் தமயந்தி யென்னும் மனைவியை, துன்னூர் போல்–பகைவர் போல, நீத்திருந்தான்—விட்டுப் பிரிந்திருந்தான் (எ-று).

ஒருவரைத் தங்கண் வருதற்கு ஒருகாலும் உடம்படாது தாம் அவர்கட் பலகாலுஞ் செல்லுதல் நாணுடையார் செயலன்மை யின் 'நாணுர்கொல்' என்றார். ஏகாரம் பிரிநிலை.

கதை:—(109-வது பாட்டுரையிற் குறித்த கதைத் தொடர்ச்சி).

அதன்பின் உண்மை தவருமை வேண்டித் தன் வரலாற்றைத் தெரிவித்தான். தமயந்தி அது கேட்டு 'மன்னர் மன்னரே! உம்மை யான் காதலித்தேன். ஆகவே, உம்மையே மணப்பேன்' என்றாள். அதற்கு நளன் 'பெண்மணீ! அஞ்சியலாது. சுயம் வேண்டி நிற்ப நாலெருவனை எப்படி மணப்பாய்? அவர்களி லொருவனை நீ மணந்துகொள். என்னை மணப்பின் அவர்க ளென்னைச் சபிப்பார்கள்' என்றான். 'சுயம்வரத்திற்கு எத்தனையோ மன்னர்கள் வருகிறார்கள். நீரும் வாரும். எப்படியாவது யான் உமக்கே மாலை யிடுவேன்' என்றாள். அதன்மேல் நளன் போய் இந்திரன் முதலிய தேவர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித் தான். சுயம்வர தினம் வந்தது. அரசர்களெல்லாம் சுயம்வர

மண்டபம் வந்து திரண்டனர். ஐவர் நளனுருவொடு நின்றனர். அவர்களில் உண்மை நளன் இன்னனென்று அறிவதெப்படி? தெய்வத்தைச் சிந்தித்தாள் தமயந்தி. உடனே அவர்களில் நால்வர்க்கு உருவம் நீழல் அளியாமையும் கண்கள் இமையாமையும் மாலை வாடாமையும் வெயர்வை கூடாமையும் கால் தோயாமையும்

கண்டு உண்மை நளனுக்கு மாலை சூட்டினாள். இந்திரனும் வருணனும் நளனை ஆசீர்வதித்து அவன் வேண்டும்போது வருவதாகக் கூறினர். மணமுடிந்தது; இரண்டு குழந்தைகளும் பிறந்தன. நால்வர் தேவர்கள் திரும்பித் தமது இருக்கை செல்வுழி வழியில் கலியைச் சந்தித்தார்கள். கலி அவர்களை நோக்கி 'யான் தமயந்தியை மணக்கப்போகிறேன்' என்றான். 'சுயம்வரம் ஆயிற்று' என்றார்கள் அவர்கள். கலி சிலநாள் காத்திருந்து சமயங்கண்டு நளனைப்பற்றிப் புஷ்கரனை யடைந்து நளனொடு சூதாடுவித்து அச் சூதில் நளன் தோற்கும்படி செய்தான். நளன் அவ் வாட்டத்தில் தன் நாட்டைத் தோற்றதனாற் காடு புக வேண்டியதாயிற்று. மக்களை விதர்ப்பதேயஞ் செலவிட்டுத் தானும் தமயந்தியும் காடு புகுந்தனர். அங்கு ஊணின்றி ஒற்றைத் துகிலோடு வருந்துகையில் ஓரிரவு ஒரு பாழ்மண்டபத்தில் தமயந்தி நித்திரை செய்யுஞ் சமயமறிந்து ஒற்றைத் துகிலைக் கிழித்துக்கொண்டு அவளைத் தனியே விட்டுச் சென்றான். அவள் தந்தையை யடைந்து நெடுங்காலம் நளனைத் தேடுவித்து அவன் ருதுபர்ணனுக்கு மடையனா யிருத்தலறிந்து இரண்டாவது சுயம்வரஞ் சாற்றி ருதுபர்ணனை விதர்ப்ப

தேசத்திற்கு வருவித்த வரையும் அவன் நீங்கி இருந்தான்.

122-ஆம் அதிகாரம்: கனவுநிலை யுரைத்தல்

அல்லமனை மாயை கனவி லணைந்ததனற்
சொல்லரிய வின்பமுற்றாள் சோமேசா—கல்ல.
கனவினுற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. (கூஉ)

அஃதாவது தலைமகள் தான் கண்ட கனவின் நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல்.

122. (இ-ள்) சோமேசா—! நல்ல கனவினுல் கண்டதூஉம் இனிது ஆங்கே—முன் நல்ல கனவின்கண் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பந்தானு மினிதாயிற்று அப்

பொழுதே, கனவும் கண்டபொழுதே இனிது—இன்று கனவின்கட் கண்டு நுகர்ந்த இன்பமும் அக் கண்ட பொழுதே இனிதாயிற்று, (அதனுன் எனக்கு இரண்டு மொத்தன),—(அதற்கு எடுத்துக்காட்டு)—மாயை-மாயையானவள், அல்லமனை—அல்லமதேவனை, கனவில் அணைந்ததனுல்—கனவின்கட் கூடியதனுல், சொல் அரிய இன்பம் உற்றாள்—சொல்லவொண்ணாத இன்பத்தை யடைந்தாள் (சு-று).

இனி தென்பது முன்னுங் கூட்டப்பட்டது. கனவு ஆகு பெயர். முன்னும் யான் பெற்றது இவ்வளவே, இன்னும் அது கொண் டாற்றுவன் என்பதாம்.

கதை:—ஸ்ரீ கைலாசகிரியின்கண் அரசாட்சி மண்டபத்துள் மாணிக்கவேதிகையின் மீது சந்திரமௌலி உமாதேவியொடு வீற் றிருக்க ஒரு மகாசபை அங்குக் கூடிற்று. அப்போது உமையம்மை பெருமானை நோக்கி 'நாயக! இத்தனை உயிர்களும் பிறப் பிறப் புக்களிற் சுழலாது வீடு பெறுமோ அல்லது அவற்றிற் சுழலு மோ?" என்று வினவினாள். அதற்கு ஐயன் "நாயகி! நாப ரூபப் பிராந்தி யுள்ளவரையும் பிரம விஷ்ணுவாதி தேவர்களும் வீடடையார். சுஞ்ஞானியும் நிராங்காரனும் எல்லையில்லாத தவத் தைச் செய்ய எமது உண்மை வடிவத்தோடு 'அல்லமன்' என் னும் மைந்த னுளனும். அவ் வல்லமனைக் காண்பது உனக்கும் அரிது" என்றான். அது கேட்ட உமை யம்மை 'எனக்கும் அரிய தொன் றுண்டோ! யான் அவனைக் காண்பேன்' என்று சூளு ரைத்துத் தன் தமோகுண வடிவமாகிய மாயையை அழைத்து 'நீ மண்ணுலகு புகுந்து அல்லமனைக் கண்டு வருதி' என் றேவினாள். அம் மாயை விளவல தேயத்தில் வனவசை நகரத்தின்கண் மமகார ராஜனுக்கும் மோகினிக்கும் மகளாய்ப் பிறந்து பருவமடைந்து பெருமானைப் பூசிக்கையி லொருநாள் அல்லமன் மத்தளிகன் போல வடிவங்கொண்டு வந்து மத்தளமுழக்க அம் முழக்கங் கேட்டு மயங்கி அவனை அழைப்பித்து சரிற் கண்டு அவன் அழகான் அறி

வழிந்து அவன் புணர்ச்சியை வேண்டி வருந்தத் தோழியர் அவனை

இசைவித்துக் கொணர்ந்து சயனத்தின் விட அவள் அணையும் போதெல்லாம் அணையமாட்டாது அயர்ந்து உறங்கி அவனை யணைந்ததாகக் கனாக்கண்டு மகிழ்ந்தாள்.

'விண்ணினைக் குத்திக் கையினைப் பவர்போல் வேனெடுங் கண்ணியங் கிருந்த, வண்ணலைத் தழுவித் தழுவிமெய் வருந்தி யவசமுற றணைமிசை யுறங்கி, யெண்ணுறு நினைவா லவன்புணர்ந் ததுபோ லின்கன வொன்றுகண் டெழுந்தாள், கண்ணக னிலத்தி னிருள்குடிப் பவனுங் கருங்கடன் முகட்டினி லெழுந்தான்.

'காலையின் மாலை வார்குழன் மாதர்க் கண்டுரை செய்வளல் லமன்றன், கோலமென் சொல்வேன் விழியெதிர் தோன்றிக் குறுகி லென் கைப்படா னதனுந், சாலவு நைந்து துயின்றனன் கனவிற் றடமுலை குழைந்திடப் புல்வி, மேலுநல் லருள்செய் தன்னைநா னென்றும் விடுகிலே னென்றன னென்னுள்' என்னும் பாக்கள் காண்க.

[இது பிரபுலிங்கலீலையி லுளது].

123-ஆம் அதிகாரம் : பொழுதுகண்டிரங்கல்.

வானவர்கோன் காமகோய் மாலைவர மிக்கதே
தூநீர்ப் புனைனத்திற் சோமேசா—வானதே
காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிக் கோய். (கஉங)

அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமக னிரங்குதல்.

123. (இ-ள்) சோமேசா—! இந்நோய்—இக்காம நோயாகிய பூ, காலை அரும்பி—காலைப் பொழுதின்கண் அரும்பி, பகல் எல்லாம் போதாகி—பகற்பொழுதெல்லாம் போரும்பாய், மாலை மலரும்—மாலைப் பொழுதின்கண் மலராநிற்கும், ஆனதை—நிகழ்ந்ததை,—(அதற்கு எடுத்

துக்காட்டு)—வானவர்கோன்—இந்திரனது, காமம் நோய்-காமநோயானது, தூ நீர் புனைனத்தின்—சுத்தமான நீரினிடையுள்ள மணற்றிடரில், மாலைவர மிக்கது—மாலைப் பொழுதுவர மிகுந்தது (எ-று).

தயிலெழுந்த பொழுதாகலிற் கனவின்கட் கூட்ட நினைத்தாற்றுதல் பற்றிக் 'காலை யரும்பி' என்றும், பின் பொழுது செல்லச் செல்ல அது மறந்து பிரிவுண்மை யாற்றுளாதல் பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' என்றும், தத்தந் துணையை யுள்ளி வந்து சேரும் விலங்குகளையும் மக்களையுங் கண்டு தான் அக்காலத்தில் நுகர்ந்த இன்ப நினைத் தாற்றுமை மிகுதி பற்றி 'மாலை மலரும்' என்றுங் கூறினாள். பூப்போல இந்நோய் காலவயத்ததாகாநின்ற தென்பது உருவகத்தாற் பெறப்பட்டது. இஃதேகதேச வுருவகம்.

கதை:—குமரேசன் தேவகிரியினின்றும் போந்து அளவற்ற பூதப்படையோடு குமாரபுரியிலெழுந்தருளி யிருக்கையில், சிகாழியி லிருந்து அத் தலத்து வனதேவதை தன்னிடம் இந்திரன் தந்து

வைத்த கிழியைக் கொணர்ந்து கொடுத்து 'நீ சிகாழியில் இருந்த போது என்பால் வைத்த இதனைக் கொள்க' என்று சென்றது. இந்திரன் அக் கிழியை அவிழ்த்து இந்திராணியின் அணிகலங்களைக் கண்டவுடன் அவளைக் கண்டதுபோலக் காமாக்கி சுடத் தட்பம் வேண்டிப். பூஞ்சோலை யொன்றை அடுத்துள்ள புளினத்திற் புக மாலை வந்தது. நீலவுத்தீப் படவே அப் புளினம் வெப்ப மிகச் செய்தது.

'ஒளியிழை யுழத்திய மொளிமென் கூந்தலி, னளியின நறவு துய்த் தலரிற் கண்படு, நளியிரும் தண்டலை ஞாங்கர்ப் பொங்கிய, புளினமொன் றதன்மிசைப் புக்கு வைகினென்.' 'நீந்தழல் வெங்க திர் திளைத்த வாறென, நீந்தருங் கங்குலி னிலவுத் தீப்படப், பூந் துணர் பாவிய புளினம் பொன்னகர், வேந்தனுக் காற்றவும் வெம்மை செய்ததே' என்றிருத்தலறிக.

[இது கந்தபுராணத்தினது].

124-ஆம் அதிகாரம்: உறுப்புநலனழிதல்.

ஓதாரா லோதுகலை யொத்திளைத்தாள் சிதையென்றுன்
சூதாரா வான்மீகி சோமேசா—கோதில்
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். (கஉசு)

அஃதாவது தலைமகளது அவயவங்கள் தம் அழகழிதல்.

124. (இ-ள்) சோமேசா—! துணை நீங்கி---(அன்றுந்) தந்துணைவர் நீங்குதலான், தொல்கவின் வாடிய தோள்—(அவாற் பெற்ற செயற்கை யழகேயன்றிப்) பழைய வியற்கையழகு மிழந்த இத்தோள்கள், கோது இல் பணை நீங்கி---(இன்று அதற்கு மேலே) குற்றமில்லாத தம் பெருமை யிழந்து, பைந்தொடி சோரும்—வளை கழலா நின்றன (இவை இப்படிச் செய்யத்தக்கன), அதற்கு மேற்கோள்,—சூது ஆர வான்மீகி—வஞ்சனையோடு பொருந்தாத வான்மீகி முனிவன், சிதை---சீதாபிராட்டி, ஒதா நாள் ஒதுகாலை ஒத்து இனைத்தாள்—(இராமபிரானது பிரிவாற்றாது) ஒதலாகாத நாளில் ஒதிய வித்தையைப்போல இனைத்தாள், என்றான்—என்று (தனது இராமாயணத்துட்) சொற்றனன் (எ-று).

பெருமை யிழத்தல்—மெலிதல். பைந்தொடி—பசிய பொன்னாற் செய்த தொடி. சோரும் என்னும் வினையினது தொழில் தோளின்மேனின்றது. ஒதா நாள்—பிரதமை; இதனை 'அட்டமியி லோதினு லாசாலுக் காகாது, சிட்டருக்குப் பன்னன்கு நீதாகும்—கெட்டவுவா, வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற், பித்தரும் பேசார் பிழை' என்ற பாட்டானு மறிக. 'பிரதிபத்பாடவலீலஸ்ய வித்யேவ தநுதாங்கதாம்' என்பதன் பொருள் ஈண்டுக் குறிக்கப்பட்டதென்க; அது 'பிரதமையிற் பாடம் படித்தவன் வித்தையைப் போலச் சீதையின் அங்கம் அழிந்தது' என்பது.

125-ஆம் அதிகாரம்: நெஞ்சொடுகிளத்தல்.

அன்பன் றுறப்பவு நாளா யனிதேடித்
துன்பந் தலைக்கொண்டாள் சோமேசா—முன்பே
இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பிரிந்துள்ளல்
பைதனேய் செய்தார்க ணில். (கஉரு)

அஃதாவது ஆற்றுமை மேலிடத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன் நெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல்.

125. (இ-ள்) சோமேசா—! நெஞ்சே! இருந்து—(அவர்பாற்செல்லாதும் இங்கு இறந்துபடாமலும்) இருந்து, உள்ளி—(அவர் வரவு) நினைந்து, பரிதல் என்—நீ வருந்துகின்ற தென்னை? பைதல் நோய் செய்வார்கண்—இத் துன்ப நோயைச் செய்தாரிடத்து, பிரிந்து உள்ளல்—நமக் கிவ்வாறு வரக் கருதுதல், இல்—உண்டாகாது,—(இதற்கு எடுத்துக் காட்டு)—நாளாயனி—நாளாயனி என்னுங் கற்புடைமாது, அன்பன் துறப்பவும்—தனது அன்பிற் கிடமாகிய மௌத்கல்ய முனிவன் நீங்கிச் செல்லவும், தேடி—(அவனைத்) தேடி, துன்பம் தலைக்கொண்டாள்—துன்ப மிகுந்தாள் (எ-று).

நம்மாட்டரு ளுடைய ரன்மையிற் றுமாக வாரார், நாஞ் செல்லு

தலே இனித் தருவது என்பதாம். 'தலே' என்பது தமிழுபசர்க்க மென்ப நாளாயனி என்பது தத்திதம்; நளாயனன் மகள் ஆத லின்.

கதை:—மௌத்கலிய முனிவன் நாளாயனியை மணந்து அவள் கற்பைத் தெரிந்து தெளிதல் வேண்டித் தன் குட்ட நோயை நாளுக்கு நாள் மிகுமாறு செய்து வந்தும் அவள் அருவருப் பின்றி நடத்தலேக்கண்டு தன் அழுகிய விரலே உண் கலத்துள் வீழ்விக்க் அதனையும் நீக்கி மிச்சிலே நுகர்ந்தமை கண்டு வியந்து

அவள் வேண்டியவாறு பற்பல வருவெடுத்து அவளோடு இன்பம் நுகர்ந்து வெறுப்படைந்து தவமேற்கொண்டு கதி புக்கனன். அப் போதும் அவள் ஆசை யடங்காது தேடி வருந்தி நொந்து தானும் சிவபெருமானே நோக்கித் தவஞ்செய்து அப் பெருமான் எதிர் தோன்ற ஐந்து முறை 'வர' வென்ன, நீ ஐவர்க்கு மனைவியாக என்றனன். இவளே திரௌபதியாய்ப் பிறந்தாள்.

[இது பா. தத் தளது].

126–ஆம் அதிகாரம்: நிறையழிதல்

கோற்றொடிவிற் பாய்போன்று கூடல் வணிகமின்னுர்
தோற்று நிறையழித்தாய் சோமேசா—சாற்றுங்காற்
பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றேகம்
பெண்மை யுடைக்கும் படை. (கஉசு)

அஃதாவது தலைமகள் மனத்தின்கண் அடக்கப்படு மவைகளை ஆசைமிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல். "நிறையெனப் படுவது மறை பிறரறியாமை" என்றார் கலித்தொகையுடையாரும்.

125. (இ-ள்) சோமேசா—! சாற்றுங்கால்-சொல்லு மிடத்து, நம் பெண்மை உடைக்கும் படை—நமது நிறை யாகிய அரணை அழிக்கும் படை, பல் மாயம் கள்வன் பணி மொழி யன்றே—பல பொய்களை வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றே,—(அதற்கு எடுத்துக்காட்டு) கோற்றொடி விற்பாய் போன்று—திரண்ட வளையலை விற் பவனைப்போல, கூடல் வணிக மின்னார் தோற்று நிறை—மதுரைக்கணிருந்த வாணிகப்பெண்களது (மிக்குத்) தோன் றின நிறையை, அழித்தாய் (நீ) அழித்தாய் (எ-று).

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தால் கூடக்கடவேமென்றும், கூடிநுல் அவன் சொற்களானுஞ் செயல் களானும் அவ்வூடல் நீங்கேமென்றும் இவைமுதலாக எண்ணிக்

கொண்டிருந்த யாவுங் காணுது கலவியிற் றன்னினும் யான் முற் படும்படி வந்து தோன்றினை னென்பாள் 'பன் மாயக் கள்வன்' என் றான். பணிமொழி—நம்மினுந் தான் அன்பு மிக்குடையனைச் சொல்லுஞ் சொற்கள். அவன் அத்தன்மையனாக, சொற்கள் அவையாக நமது நிறையழியா தொழியுமோ' என்பதாம். தொடி-வளை கழலாதபடி முன் கையி லணிவது என்ப. விற்பாய்—வினை

யாலணைந்த பெயர். தோற்று என்பது ஈண்டுத் தன்வினை.

'கதை:—(120-வது பாட்டுரையிற் குறித்த கதைத் தொடர்ச்சி).

அங்ஙனம் கற்பழிந்த தமது பன்னியர்களை முனிவர்கள் "மங்கைமீர்! நீர் கருத்துத் திரிந்தபடியால் கூடல் வணிகர் கன்னியராய்ப் பிறப்பீராக' என்று வெகுண்டு கூறினர்கள். அது கேட்டுப் பன்னியர்கள் நடுநடுங்கி 'அந்நிலை எப்பொழுது நீங்கும்?' எனா, முனிவர்கள் 'சோமசுந்தரக் கடவுள் உமது கை தீண்டுங்கால் அந்நிலை நீங்கும்' என்றார்கள். முனிவர்கள் மொழிப்படியே பன்னியர்கள் கூடல் வணிகர் கன்னியர்களாய்ப் பிறந்தார்கள். அவர்கள் மங்கைப் பருவமடைந்தவுடன் சுந்தரேசப்பெருமான் வளையற் கோவைகளைத் திருத்தோளிற் சுமந்துகொண்டு மதுரை வீதியின் கண் விற்று வாக்கண்ட கன்னியர்கள் வளையலிடத் தம்மை அழைக்கத் தாமவர்களைத் தனையிலிடச் சென்று அழகான் மயக்கி உள்ள வளையுங் கழல்வித்து மறைந்து உமாதேவியாருடன் விடைமேற் றோன்றினர். நகரத்தார் யாவரும் அதனைக் கண்டு களித்தார்கள். பெருமான் தமது கைகளைத் தொட்டு வளையிட்டமையால் அக் கன்னியர்கள் கருப்பமடைந்து மகப்பெற்றுச் சில நாளிருந்து சிவனடிப்பேற்றைப் பெற்றார்கள்.

[இது திருவிளையாடற்புராணத் தாளது].

127-ஆம் அதிகாரம்: அவர்வயின் விதும்பல்

சந்திரசே னன்வரவு நோக்கியியுர் தாங்கினளாற்
சுந்தரசீ மந்தனிதான் சோமேசா—முந்தும்
உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றூர்
வரனசைஇ யின்னு முளேன். (கஉஎ)

அஃதாவது தலைமகனைக் காணுதற்கு விரைதல்.

127. (இ-ள்) சோமேசா—! முந்தும் உரன் நசைஇ—(இன்ப நுகர்தலை விரும்பாது) முற்படுதற் கேதுவாகிய வெற்றியை விரும்பி, உள்ளம் துணையாக சென்றூர்—(நாம் துணை யாதலை இகழ்ந்து) தம் ஊக்கந் துணையாகப் போயினர், வரல் நசைஇ—(அவற்றை இகழ்ந்து) வருதலை விரும்புதலான், இன்னும் உளேன்—யான் இவ் வெல்லையினும் உளேனையினேன்—(அதற்கு எடுத்துக்காட்டு)—சுந்தரம் சீமந்தனி—அழகினையுடைய சீமந்தனி என்பாள், சந்திரசேனன் வரவு நோக்கி—சந்திரசேனனென்னும் தனது நாயகன் வருதலை எதிர்பார்த்து, உயிர் தாங்கினள்—உயிரை வைத்திருந்தாள் (எ-று).

உரன்—ஆகுபெயர்; வலியின்பெயர் ஈண்டு அதனுனும் வெற்றிக்காகலின். அவ் விருப்பா லுயிர்வாழ்கிறேன், அஃதில்லையாயின் இறந்து படுவனென்பதாம். உயிர் பாரமாயினமை தோன்றத் 'தாங்கினள்' என்றார்.

கதை:—ஆரியவர்த்தமென்னும் நாட்டரசனுகிய சித்திரவர்மன் சில ஆண்மகப் பெற்றும் பெண்மக லின்மையாற் பல பகல் அருந்தவம் புரிந்து ஒரு பெண்மகப் பெற்றுச் சோதிடர்களைக் கூவிச் சாதகமெழுதிப் பயன் கேட்க ஒரு சோதிடன் 'உன் மகள் பதினுயிரம் ஆண்டு கணவனேடு இனிது வாழ்வள்' என்றான்; மற்றொருவன் 'பதினுன்காவது பிராயத்திற் கணவனை இழப்பள்' என்றான். சித்திரவர்மன் அவற்றைக்கேட்டு 'யாவுஞ் சிவன்

செயல்' என்றிருந்தான். உரிய பருவத்திற் சிமந்தனி என்னும் அப்பெண்மணி இரண்டாஞ் சோதிடன் கூறியதைக் கேள்வியுற்று ஒருதவ மூதாட்டியை யடைந்து அதனை விண்ணப்பிக்க அவள் 'நீ சோமவார விரத நோற்பாயாயின், உனக்கொரு குறையும் நேராது' என்றாள். அவ்வாறே இவளும் அவ் விரதத்தை மேற்கொண்டாள். அவளை நிடத தேயத்தரசனுகிய இந்திரசேனன் மகன் சந்திரசேனன் என்பான் மணந்து வாழ்கையில் ஒருநாள் அவன் தன் நண்பர் சிலருடன் யமுனையாற்றி னூடை மேறிச் சென்றான். அவ்வோடங் கவிழவே அவன் நண்பர்கள் யாவரும் முதலைவாயினகப் பட்டனர். தா னொருவனே பாதலம் புகுந்து நகுஷன் என்னும் நாகராஜனை யுபசரிக்கப்பெற்று அவனிடம் விடைகொண்டு பூதலந்

திரும்பினன். அதற்குள் மூன்று வருஷங்களாயின. திரும்பி வந்து தன் தந்தை நாட்டைப் பகைவர்கள் கைப்பற்றி அவனைச் சிறையிட்டமை யறிந்து விரைந்து சென்று பகைவர்களை ஓட்டித் தந்தையைச் சிறையினின்றும் மீட்டுப் பழையபடி அரசனாக்கிச் சீமந்தனியை இரண்டாமுறை மணந்து இனிது வாழ்ந்தான்.

[இது பிரமோத்தரகாண்டத் துளது].

128-ஆம் அதிகாரம்: குறிப்பறிவுறுத்தல்.

சங்கிலிபர லாரூர ரூழிகணந் தானாகத்
துங்கமிகு மன்புவைத்தார் சோமேசா—பொங்கப்
பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. (கஉஅ)

அஃதாவது தலைமகன் தலைமகள் தோழி என்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க் கறிவுறுத்தல்.

128. (இ-ள்) சோமேசா—! பொங்க பெரிது ஆற்றி—(காதலர்வந்து தம்பிரிவினானாகிய துன்பத்தினை) மிகப் பெரிது செய்து, பெட்ப கலத்தல்—நாம் மகிழும் வண்ணங் கலக்கின்ற கலவி (இருந்தவாற்றான்), அரிது ஆற்றி—

(மேலும் அத் துன்பத்தினை) அரிதாகப் பொறுத்திருந்து, அன்பின்மை சூழ்வது உடைத்து—அவ ரன்பின்மையை

நினையுந்தன்மை யுடைத்து,—(அதற்கு எடுத்துக்காட்டு)—ஆரூர்—நம்பியாரூரனென்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனார், கணம் ஊழி ஆக—ஒரு கணப்போது ஓர் ஊழிக் காலமாகத் தோன்றுமாறு, சங்கிலிபால் தங்கம் மிகும் அன்பு வைத்தார் — சங்கிலிநாய்ச்சியாரிடத்தே உயர்ச்சிமிக்க அன்பு வைத்தனர் (எ—று).

பிரிதற்குறிப்பினாற் செய்கின்ற கலவியாதலின் முடிவில் இன்னாதாகாநின்ற தென்பதாம். கணம்—க்ஷணம்.

கதை:—மேலே உரைத்தாம் (114-வது பாட்டுரை காண்க).

129-ஆம் அதிகாரம்: புணர்ச்சி விதும்பல்.

யோசனை கந்திமினைக் காண்டலும்பே ரோகைகொண்
[டான்
றாசனையாச் சந்தனுத்தான் சோமேசா—நேசமுடன்
உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. (கஉசு)

அஃதாவது புணர்ச்சியின்கண்ணே விரைதல்.

129. (இ—ள்) சோமேசா—! நேசமுடன் உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்—அன்பொடு நினைந்த வளவிலே களிப்பெய்தலும் கண்ட வளவிலே மகிழ்வெய்தலும்,

கள்ளுக்கு இல்—கள்ளுண்டார்க் கில்லை, காமத்திற்கு உண்டு—காமமுடையார்க் குண்டு,—(அதற்கு எடுத்துக் காட்டு)-துசு அணையா சந்தனு—குற்றஞ் சோராச் சந்தனு வென்னு மன்னன், யோசனை கந்தியினை காண்டலும் —(யோசனை யெல்லையினும் தன் உடம்பின் மணம்

வீசப் பெற்ற) பரிமளகந்தியைக் கண்ட வளவில், பேர் ஓகை கொண்டான்—மிக்க களிப்படைந்தான் (எ-று).

களித்தல்—உணர் வழியாதது. மகிழ்தல்—உணர் வழிந்தது. இவ் விரண்டும் உண்டுழியல்ல நின்மையிற் 'கள்ளுக்கில்' என்னார். களித்தலும், மகிழ்தலும் என்னு மீரிடத்தும் சென்றியைந்து பொருளை விளக்குதலின் 'உண்டு' என்பது இறுதி விளக்கு; இதனைக் கடை நிலைத் தீபகாலங்கார மென்ப வடமொழிவாணர். அீப்பெற்றித்தாய் காமமுடைய யான் புலத்தல் யாண்டைய தென் பதாம்.

கதை :—சந்தனு வென்னுங் குருகுலமன்னன் வேட்டை யாடுதல் குறித்துக் காளிந்திநதிக் கரையை யடைந்து அங்குத் தாசர்குலத் தலைவன் பெற்ற பரிமள கந்தியைக் கண்டு மோகித்து அவளை 'நீ யார்?' என்று வினவ, அவள் அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நின்று காங் குலித்து 'எனது தந்தை எவனிலும் ஓடம் விடுவன் யான்' என்றாள். மன்னன் அவள் தந்தைபா லணுகிப் பாகனைக் கொண்டு தன் எண்ணத்தை அறிவித்தான். அவள் தந்தை 'பாராளப் பாகீரதி மைந்தனுளன்; என் மகள் மைந்த னென் செய்

வன் ?' என்றான். அஃதறிந்து முகஞ் சாம்பித் திரும்பினன் மன்னன். தன் தந்தை முகஞ் சாம்பி யிருத்தலை அறிந்த பாரோதி மைந்தனாகிய தேவவிரதன் அத் தாசர் தலைவன்பாற் சென்று யான் மணம் புரிந்து கொள்ளேன். எனது தாதுவும் மூலாக்கியுடன் மேலெழுந் தன்மைத் தாயிற்று' என்று உறுதி மொழி கூறி அவனை இசைவித்தான்.

'பாசறைப் முழுது மொருபெருங் கடவுட் பரிமள மொல்லெனப் பரப்பி, யோசனை யளவுங் கரையிரு மருங்கு முயிர்க்கு மெல் லுயிர்ப்பெதி ரோடித், தாசர்தங் குலத்துக் கதிபதி யளித்த தையலைத் தாணிபர்க் கெல்லா, மீசனு முருகிக் கண்டனங் களியா விலங்கிழை யார்கொனீ யென்றான்' என்னும் பாவினைக் காண்க.

[இது பாரதத் துளது].

---

210 சோமேசர் முதுமொழி வெண்பா

130-ஆம் அதிகாரம் : நெஞ்சொடு புலத்தல்.

விக்கிரமன் மற்றொருத்தி வேட்கையுற்றுந் தேடிகொந் [தாள்

தொக்க வுருப்பகிமின் சோமேசா—வொக்கும்
அவர்கெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது. (கஙo)

அஃதாவது காரணமுண்டான விடத்தும் புலக்கக் கருதாது புணர்ச்சி விரைகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தல்.

130. (இ-ள்) சோமேசா —! நெஞ்சே!— அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும்—அவருடைய நெஞ்சு (நம்மை நினையாது) அவர்க்காய் நிற்றல் கண்டு வைத்தும், நீ எமக்கு ஆகாதது எவன்—நீ யெமக்காய் நில்லாது அவரை நினைத்தற் காரணம் யாது, ஒக்கும்—இஃதொக்கும், தொக்க உருப்பசி மின்-(அழகியாவும் ஒன்று) கூடிய ஊர்வசி என்னும் அரம்பை மாது, விக்கிரமன் மற்று ஒருத்தி வேட்கை உற்றும்—புரூரவா வென்னும் குருகுல மன்னன் ஒளசீநரி என்னும் தன் மனைவியி னிடத்தே ஆசை வைத்திருப்பவும், தேடி நொந்தாள்—(அவனைத்) தேடி வருந்தினாள் (எ-று).

அவர்க்காதல்—அவர் நினைத்தற் குடம்படுதல். ஒரு கருமத்தைத் தாமாக அறிந்துசெய்ய மாட்டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர், நீ யதுவுஞ் செய்கின்றிலை யென்பதாம். ஒளசீநரி என்பது தத்திதம்.

கதை :—ஊர்வசி என்னும் தேவமாது பொழில் வினையாட்டயர்கையில் அசுரர் அவளைக் கவர்ந்து விசும்பி னேகினர். அது கண்டு தேவர்கள் அஞ்சி ஒன்றுஞ் செய்ய மாட்டாது நிற்பப் புரூரவா என்னுங் குருகுல மன்னன் தன் தேரை அவர்மீது கடவிப் புறங்கண்டனன். ஒளசீநரி என்னும் மனைவியொடு கூடி

இனிது வாழ்த லறிந்தும் ஊர்வசி அவன் மீது காதல் கொண்டு

அவனைத் தேடி வருந்தினள்.

[இது விக்கிரமோர்வசிய நாடகத் துளது].

131-ஆம் அதிகாரம்: புலவி.

கொண்ட பரவை கொடும்புலவி யெல்லாம்வன்
றொண்டர்க்குப் போழுகே சோமேசா—தண்டா
கலத்தகை கல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து. (கஙக)

அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஊடுதல்.

131. (இ-ள்) சோமேசா—! தண்டா கலத்தகை நல்லவர்க்கு ளளர்—நீங்காத நற்குணங்களாற் றகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது, பூ அன்ன கண்ணார் அகத்து புலத்தகை—(தம்) பூவன்ன கண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலனி மிகுதியன்றே,—(அதற்கு எடுத்துக்காட்டு)—வன்றொண்டர்க்கு—சுந்தரமூர்த்தி நாயனாருக்கு, பரவை கொண்ட கொடும் புலவி எல்லாம்—பரவை நாய்ச்சியார் கொண்ட கொடிய பிணக்கு யாவும், போழ் அழகே—மிக்க அழகே யாயிற்று (எ-று).

நல்லவர்க்கு என்புழிச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான் 'நலத்தகை நல்லவர்க்கும்' என்றான். அழகு—இன்பமாகிய பயனை அடைதல். தான்

நுகர்ந்த இன்பத்திற் கேத்வாகிய புலவியை வியந்து கூறியவாறு.

கதை:—மேலே உரைத்தாம் [114-வது பாட்டுரை காண்க.]

132-ஆம் அதிகாரம்: புலவி நுணுக்கம்.

சிவகன் மஞ்சரியைத் தாழ்த்துரைப்பச் சீறினளே
தூவாய்க் குணமாலை சோமேசா—வாவகையே
தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரின்னீ ராகுதி ரென்று. (கஙூ)

அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற் காரணமில்லையாகவுங் காதல் கைம்மிகுதலான் நுண்ணிய தோர் காரண முளதாக வுட்கொண்டு அதனை அவன் மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தின் நுணுக்கங் காரியத்தின்மே னின்றது. புலவியது நுணுக்கமென விரிக்க.

132. (இ-ள்) சோமேசா—! தன்னை உணர்த்தினும் காயும்—இவ் விதத்தான் ஊடிய தன்னை யான் பணிந்துணர்த்துங்காலும் வெகுளாநிற்கும், பிறர்க்கு நீர் இந்நீர ஆகுதிர் என்று—பிறமகளிர்க்கும் அவர் ஊடிய வழி இவ்வாறே பணிந்துணர்த்து நீர்மையுடையீ ராகுதி

சென்று சொல்லி, ஆவகையே–அவ்வாறே, தூவாய் குண மாலே—குற்ற மற்ற வாய்ச்சொற்களை யுடைய குணமாலை, சிவகன் மஞ்சரியை தாழ்த்து உரைப்ப—சிவகனென் பான் சுரமஞ்சரியை இழித்துக்கூற, சிறினள்—சீற்றங் கொண்டாள் (எ-று).

இவள் தெளிவித்தவழியுந் தெளியாளென்பது பற்றி என் மேலேற்றியவற்றை உடம்பட்டுப் பணிந்தேன், பணிய அது தானும் புலத்தற் கேதுவாய் முடிந்தது, இனி இவண்மாட்டுச் செய் யத் தகுவது யாது என்பதாம்.

கதை:—சிவகன் சுரமஞ்சரியை மணந்து திரும்பி வந்து தன் மனை புகுந்து தன்னையே நினைத்து அழுது புலம்பி யுருகிக்கொண் டிருந்த சுநந்தையையுங் கந்துக்கடனையுங் கண்டு குணமாலை இல் லம் புக்கு அவருக்கு மங்கலவணிசெய்து கூட்டம் வேண்டி

அவளைத் தீண்ட, அவள் அதற்குடம்படாளாய் மறக்கச் சுர மஞ்சரியை இழித்துக் கூறி அவளைப் புகழவும் ஊடல் தீர்ந் திலள்.

‘அன்னமென் னடையு நோக்குஞ் சாயலு மணியு மேரு
மின்னிலுண் ணுசுப்பும் வெய்ய முலைகளு முகமுந் தோன்ற
வென்மனத் தெழுதப் பட்டா யாயிலு மரிவை கேளா
யுன்னையான் பிரிந்த நாளோ ரூழியே போன்ற தென்றான்.

133–ஆம் அதிகாரம்: ஊடலுவகை.

காயும் புலவியில்வன் றொண்டர் கடைப்பட்டுத்
தோயுமின்பின் மேலானூர் சோமேசா—ஆயுங்கால்
ஊடலிற் றோற்றவர் வென்று ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும். (கங்கு)

அஃதாவது ஊடலாற் றமக்குக் கூடலின்பஞ் சிறந்தழி அச் சிறப்பிற் கேதுவாகிய அவ் வூடலைத் தலைமகளுவத்தலும் தலைமக னுவத்தலுமாம்.

133. (இ-ள்) சோமேசா—! ஆயுங்கால்—ஆராயு மிடத்து, ஊடலில் தோற்றவர் வென்றூர்—(காம நுகர் தற் குரிய இருவருள்) ஊடலின்கட் டோற்றவர் வென்று ராவர், அது கூடலில் காணப்படும்—அஃதப்பொழுதறி யப்படாதாயினும் பின்னைப் புணர்ச்சியின்கண் அவரா லறியப்படும்; (அதற்கு எடுத்துக்காட்டு),—வன்றொண் டர்—சுந்தர மூர்த்தி நாயனார், காயும் புலவியில் கடைப் பட்டு—வெறுக்கின்ற ஊடலின்கட் டோற்று, தோயும் இன்பின் மேலானூர்—நுகரும் புணர்ச்சி யின்பத்தின்கண் மேம்பட்டார் (எ-று).

214 சோமேசர் முதுமொழி வெண்பா

தோற்றவர்—எதிர்த்த லாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்

சிக்கட் பேரின்ப மெய்தலின் வென்ற ராயினர். மன்னும், உம்மும் அசைநிலே. யான் அதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம் பெற்றே னென்பதாம்.

கதை:—(மேலே உரைத்தாம்) 114-வது பாட்டுரை காண்க.

சோமேசர் முதுமொழி வெண்பா
முற்றிற்று.

சிவஞான யோகிகள் சேவடி வாழ்க.
திருவள்ளுவ நாயனார் திருவடி வாழ்க.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.

பாட்டு முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.

அ

அச்சுவத்தா ... 161
அத்திரவாக்கால் ... 9
அப்பூதி ... 119
அல்லமனே ... 198
அற்காவமண் ... 80
அன்பரைக்கண் ... 35
அன்பன் ... 203
அன்றமணர் ... 76

உ

உளுக்கூன் ... 72

எ

எண்ணெயிரப் ... 174
எத்திறத்துங் ... 142
எத்திறநும்மயர்கோன் 78
எல்லாமறையவர் ... 167
எல்லாமுணர்த்தும் ... 28
என்றுமொரு .. 107

ஆ

ஆக்கையு மாயிர
ஆங்காரியம்
ஆர்வீடணனே
ஆன்றவெழிற்

இ

இல்லாண்
இல்லாளோப்
இல்வாழ்தருமன்
இன்சொலிராமன்
இன்பமுற்றான்

ஈ

ஈசர்த்தலையான்
ஈன்றான்

உக்கிரஞர்
உன்பணிக்கென்

ஏ

... 61
... 137
... 91
... 31

ஐ

... 141
... 135

ஒ

... 13
... 23

ஓ

... 190

ஏர்மணநல்லூர் ... 50
ஏற்றதுரோணனே ... 175
ஏனையர்பால் ... 143

ஐவரில்லாளழுத ... 95

ஒட்டலன்செய் ... 33

	ஒதாஞாளோது	... 202
... 77	ஓர்சங்கத்	... 120
... 183	ஓர்ஞாளகலியை	... 188

க

... 128	கஞ்சாறர்	... 172
... 165	கற்பின்மை	... 152

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
கா		செ	
காங்கேயன்	... 179	செவ்வேளே	... 11
காட்டுமுயலுங்	... 84	சே	
காமமிவ்வுழந்துஞ்	... 186	சேக்கிழார்	... 39
காயும்புலவியில்	... 213	த	
காரிகையோரை	... 64	தக்களூர்வேள்வி	... 11
கால்சேய்	... 108	தக்களூனெயெள்ளி	... 112
கானடைந்துங்	... 185		

த

குற்றேருருவர்க் ... 41

கூ

கூற்றுவர்மூவேந்தர் ... 106
கூனியிராமன் ... 38

கே

கேழ்வரை ... 194

கொ

கொண்டபாவை ... 211
கொன்படை ... 150

கோ

கோற்றொடிவிற் ... 204
கோவணமொன் ... 62

ச

சக்காத்தை ... 82
சங்கிலிபா ... 207
சந்திரசேனன் ... 206
சம்பந்தர்நாவரசர் 69

சா

சானகியை ... 81

சி

சிற்கொளிறை ... 4
சிவகன் ... 212

தக்கன்பான் ... 156
தண்டியடிகளிரு ... 163
தன்றயர ... 116
தன்னேயே ... 196

தா

தாதையன்றி ... 192
தாய்கருவில் ... 65
தாய்தீண்டத் ... 139

தீ

தீயனவேசொல்லுஞ் ... 29

தே

தேசிகனுக்கொண்ட ... 89
தோருமானந்தனே ... 86

தோ

தோன்றுவகை ... 19

ந

நந்திகலம்பகத்தான் ... 144
நல்லநிலகவதி ... 158
நற்றருமன்வெற்றி ... 171

நா

நாய்வாற்களவினன் ... 54

நி

நித்தியத்துவம் ... 110
நின்னபிடே ... 86

செய்யுள்.	பக்கம்.
நீ	
நீகைப்ப	... 129
நே	
நேயபுகழ்த்	... 7
ப	
பண்டைநினை	... 42
பல்லவர்கோன்	... 57
பன்முகிவர்	... 195
பன்னுமசதி	... 24
பா	
பாடினர்மூ	17
பார்சிதை	... 68
பி	
பின்னையார்	... 59
பின்னையுட	... 55
பு	
புண்ணே	... 168
பொ	
பொன்மகேயின்	... 105
பொன்னனையாள்	... 21

செய்யுள்.	பக்கம்.
மா	
மாமணு	... 118
மாயனன்வேடம்	... 52
மாலான்முதல்	... 98
மாற்றூர்முடியும்	... 148
மீ	
மீனென்	... 44
மு	
மூப்புரத்தோர்	... 92
மூற்பணையத்	... 157
முன்னாமண்	... 67
மூ	
மூர்த்திபால்	... 47
மூவர்தடுப்பவுங்	... 15
மெ	
மெய்த்தவத்தை	... 182
மெய்த்தநிரு	... 71
மே	
மேல்வளமெ	... 125
மை	
மைந்தனெனுமல்	... 94
யோ	

போ

போசன் ... 46
போற்றுஞ்சுலேன் ... 133

ம

மங்கலியம் ... 160
மச்சஞ்சுமந்து ... 48
மதுவளரும் ... 1
மற்றிருதாட்டிான் ... 169
மன்மதனின் ... 130
மோசனைகந்தியினை ... 208

வ

வல்லதிகன் ... 127
வன்சமணர் ... 140
வன்மைச்சுபோ ... 164

வா

வாக்காசர் ... 132
வாய்ந்ததமயந்தி ... 176
வாழ்வாதவூர் ... 127

செய்யுள். பக்கம்.

வா

வாழ்விழந்த ... 189
வானவர்கோன் ... 200

வி

விச்சிரமன் ... 210

வீ

வீமனவை ... 83

வெ

வெங்கரியைப் ... 103
வெய்துரையால் ... 97
வெள்ளிவெற்பை ... 114

வே

வேண்டுமுருப்பசி ... 155
வேதனில்லாள் ... 100
வேதியன் ... 25
வேந்துமகற் ... 60
வேள்வித்தொழிற்கு ... 170